# நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்



இளைஞர் நாவல்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்

## இளைஞர் நாவல்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

புத்தகத்தின் பெயா : நெருங்கின பொருள் கைப்படவேண்டும்
அனுமதிப்பத்திர இலக்கம் : கநுவெ/2/8739
நூலாசிரியர் : ச. அருளானந்தம்

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமான அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய மொழி இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரசுரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2010.10.08
கல்வி அமைச்சு இசுருபாய பத்ரமுல்ல
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி : 2015.08.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்

ஆசிரியர் : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)

வகை : இளைஞர் நாவல் இலக்கியம்

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப் படம் : ச.அ.அருள்பாஸ்கரன்

முதற்பதிப்பு : 07-09-2010

வெளியீடு : அருள் வெளியீட்டகம்
37 / 7, மத்திய வீதி, உவர்மலை-
திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2221507.

கிடைக்குமிடம் : லங்கா புத்தகசாலை.
F. L.14.1. டயஸ் பிளேஸ்.
குணசிங்கபுரம்.
கொழும்பு-12.
தொ.பே. இல: 011- 2341942

ISBN : 978-955-52086-8-0

விலை : ரூபாய் 200/=

**சமர்ப்பணம்**

**என் அன்னை**

**செல்லம்மாவின்**

**பொன்னடிக்கு**

**இந்நூல்**

**சமர்ப்பணம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத்து இலக்கிய நாவலாசிரியர் வரிசையில் தனக்கென தனியானதொரு இடத்தினை வகித்துக் கொண்டு எழுதி வருபவர் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள். சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், சிறுவர் இலக்கியங்கள் என இதுவரை நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர்.

சாதாரண ஆசிரியராகக் கல்வியுலகில் புகுந்த இவர், தனது முயற்சியினால் பட்டதாரியாகி, அதிபர் பரிட்சையில் சித்தியடைந்து அதிபராகச் சேவைசெய்தார். இலங்கை அரசின் கல்வி நிர்வாக சேவைத் தேரிவில் சித்தியடைந்து, வட்டாரக் கல்வி அதிகாரியாகவும், மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், மாகாணக் கல்வி அமைச்சில் ஆரம்பக்கல்விப் பிரிவுக்கும், முன்பள்ளிக் கல்விப் பிரிவுக்கும், வடக்கு கிழக்கு பதிப்பகத் திணைக் களத்தின் பணிப்பாளராகவும் தனது சேவையினைத் திறம்படச் செய்தார். புவியியலிலும், முன்பள்ளிக் கல்வியிலும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர் எழுதுவதில் ஆத்ம திருப்தி பெறுவதாய்க் கூறுவார்.

ஒரு எழுத்தாளனது பார்வைக்கும், சாதாரமனிதனது பார்வைக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதை அவதானிக்கலாம். ஒரு கவிஞனாக, சிறுகதை. நாவல் எழுத்தாளர்களாக இருப்பவர்களுக்கு தமது கண்ணில் படுகின்ற ஒவ்வொரு நிகழ்வும் அவர்களின் ஆக்கங்களுக்குக் கருவாகவும், களமாகவும் அமைந்து விடுவதுதான் உண்மை. அவ்வகையில் திரு.ச.அருளானந்தம் அவர்களும் தனது கவிதைகளிலும், கதைகளிலும், நாவல்களிலும், தான் கண்ட, கேட்ட, நேரடியாக அனுபவித்த நிகழ்வுகளைப் பதிவு செய்கிறார். அதனாலேயே அவரது படைப்புக்கள் படிப்போரது உள்ளங்களில் ஒட்டிக் கொள்கின்றன.

'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்னும் இந்நாவல் கல்வி அமைச்சின் நூலபிவிருத்திச் சபையினால் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது திரு.ச.அருளானந்தம் அவர்கள் ஆசிரியர் பயிற்சியின் பின் சேனையூர் மகாவித்தியாலயத்தில் கடமையைத் தொடர்ந்தார். தினமும் ஆலங்கேணியில் இருந்து பல கிராமங்களைக் கடந்து அதிகாலையிலேயே வந்துவிடுவார். கட்டைபறிச்சானையும், அதன் அயற்கிராமங்களையும் நன்கறிந்தவர். அத்துடன் அக்கிராம மக்களோடு ஒன்றித்து அவர்களது பழக்கவழக்கப் பாரம்பரியங்களை அறிந்து வைத்திருந்தார். பாடசாலையில் கற்பிக்கும்போது அவருள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள், ஊரவர்களையும் இவர் மறக்கவில்லை.

இவ்வகையில் இந்நாவலின் களம் கட்டைபறிச்சான் கிராமம் அவர் கண்ணில் காட்சியாகிறது. கட்டைபறிச்சான் கிராமத்தைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். 1984க்குப் பன் 30 வருடங்களுக்கு மேலாக நாடுபட்ட அல்லோல கல்லோல நிலைக்குப் பிற்பாடு. கட்டைபறிச்சான் பகுதி மக்கள் இடம்பெயர்ந்தமையையும், திருக்கோணமலை நகரில் வாடகை வீடுகளில் அமர்ந்து வாழ்ந்ததையும், அங்கு வீட்டுச்சொந்தக்காரர்கள் நடத்தும் அட்டகாசங்களையும், இந்நாவலில் குறிப்பிடத் தவறவில்லை. இவர் ஒரு சிந்தனையாளர். அனைவரையும் மதிப்பவர். எந்த விடயத்தையும் ஆக்கபூர்வமாக முடித்து விடும் செயற்திறன் மிக்க சாதனையாளர்.

பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர், பல்கலைக்கழக அனுபவங்களை நன்கு அறிந்திருப்பவர். "றாக்கிங" என்னும் பகிடிவதையை இந்நாவலில் சாடியிருக்கிறார். பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற மூவரை இந்நாவலில் தொடர்பு படுத்தி நாவலை மிகுந்த உயிரோட்டமுள்ளதாக நகர்த்திச் சென்றிருக்கிறார். வாசிக்கும்போது, அடுத்த கட்டமென்ன என்று அறியும் ஆவலைத் தூண்டும் வண்ணம் உள்ளது. 2006ல் மக்கள் இடப்பெயர்வும். மக்கள் பட்ட துன்பங்களும் எம்மனக்கண்முன் நிழலாடும் வண்ணம் நிறுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைபறிச்சான் கிராமத்தின் இயற்கைவளம் எடுத்துரைக்கும் திறனில் அவருக்கு நிகர் அவரேதான். அவர் நேராகக் கதைப்பது போலவே அவரது வசனங்களும் அமைவு பெற்றிருப்பது நாவலுக்கு மேலும் அழகுதருகிறது. கட்டைபறிச்சான் கிராமத்தில் வாழை, கமுகு, மரக்றிவகைப் பயிர்கள், கிழங்கு வகைகள், வானுயர்ந்த தென்னைகள் முதலானவையும், ஆற்றில்படும் திரவியங்களாக விளங்கும் இறால், நண்டு, மீன் முதலானவற்றையும் இந்நாவல் கூறிச்செல்லும் விதம் வாசிப்போருக்கு உண்மையாகவே இவ்வூரை ஒருதரம் போய்ப்பார்க்க வேண்டும் என்ற ஆவலை உண்டாக்குகிறது.

பல்கலைக் கழகப் பட்டமளிப்பும், பட்டதாரியான பின்பு வேலையில்லாமல் தவிக்கும் பட்டதாரிகளின் போராட்டங்களையும். இங்கு எடுத்துக்காட்டி 'இலங்கை அரசின் கல்வித்திட்டம்' பேப்பரை மடித்துக் கப்பல் செய்யவும் தகுதியில்லாத படிப்பு எனச் சாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகப் படிப்பை முடித்து வெளியேறிய பட்டதாரிகளுக்கு ஒரு சவாலாக அறிவுரை தரும் பொக்கிசமாக இந்நாவல் அமைந்திருக்கிறது.

படித்துவிட்டு உத்தியோகந்தான் வேண்டுமென இருக்கக்கூடாது. ஒரு மனிதன் மனதில் நிம்மதி உதயமானால் அது வீட்டைச் சந்தோசத்தில் ஆழ்த்தும், வீடு சந்தோசமாக இருந்தால் நாடு சந்தோசமாக இருக்கும். துன்னிறைவைத் தானே தேடிக்கொள்ளும், நெருங்கின பொருள் கைப்பட முயற்சி வேண்டும். என்ற தத்துவக் கருத்துக்களையும். சிந்தனைக் கிளறர்களையும், இந்நாவல் தருகிறது. படித்த இளைஞர்கள் சேர்ந்தால், திட்டமிட்டுச் செயற்பட்டால் எதனையும் சாதிக்கலாம். திரு.ச.அருளானந்தம் ஒரு செயற்திட்ட வீரர்.கதையிலே கூறப்படும் கருத்துக்கள் உண்மையானவை. மரவட்டைக்குளம் உண்மையில் அருமையான இடம். அங்கு நிறையக் காடுகள் உண்டு. அத்துடன் குளமும். செழிப்பான நிலமும் உண்டு. இளைஞர்கள்,யுவதிகள் செயற்பட்டால் இன்பபுரியாக மாறும். கயல்விழி. மங்கை, அருண். சுாந்தன் என்ற பாத்திரங்கள் யுத்தத்தால் பாழடிக்கப்பட்ட கட்டைபறிச்சான் கிராமத்தைச் செம்மைப்படுத்தி, பொருளாதார வளத்தினையும், மீளமைப்புச் செய்து, இழந்த கல்வியையும் மீளப்பெற்றுவிடக் கூடிய உத்தியை என்னவிதமாகக் கூறியிருக்கிறார். படித்து விட்டு வேலையற்று இருப்போருக்கு நல்லதொரு வித்தை இந்நாவலில் விதைத்திருக்கிறார்.

கட்டைபறிச்சான் கிராமத்தில் நடைபெறும் கோயிற் சடங்கு விழாக்களில் நடைபெறுவனவற்றை இந்நாவலை வாசிப்போர் நேரில் காண்பதுபோல் சித்தரித்துள்ளார். இது அவரின் எழுத்தாற்றலைப் பறைசாற்றுகிறது. அம்மன் சடங்கில் சாமி ஆடுவதும், சாட்டை வாங்குவதும், சிவம் என்ற ஒருவர் சாமியாடி வாழைப்பழச்சீப்பைக் கொண்டு வந்து கொடுப்பதும் இவர் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. இன்றும் நவராத்திரிக் கும்பம், கும்பத்துமால்கள் மிகவும் சிறப்பான நிகழ்வுகளாகக் கட்டைபறிச்சானில் நடைபெறுகின்றன. சாமி ஆடுவதும், படுகளம் போடுவதும். கும்பம் வீதியுலா வரும்போது வழி மறிப்புச் செய்வதும், படுகளம் போட்டுக்கிடப்பவர் மணித்தியாலக் கணக்கில் நிலத்தில் கிடப்பதும் ஆசிரியர் நேரில் கண்ட விடயங்களாகும். இதைத் தத்வரூபமாக எடுத்துக்கூறும் வேளையில் ஒன்றைக் கூறுகிறார். நாட்டுப் பிரச்சினையால் பழையன கழிந்து புதியன புகுந்து விட்டதால் ஒற்றுமை, ஒத்துழைப்பு, சிதறிவிட்டது. எனச்சாடுகிறார்.

நாவலில் காதல் உணர்வையும் எல்லை மீறாமல் நடத்திச் செல்கின்றார். இறுதியாக நெருங்கின பொருளையும் கைப்பட வைத்து நாவலை அழகுற முடித்திருப்பது இரசிப்புக்குரியது. இந்நாவலை வாசிப்பவர்கள் சிறந்ததொரு நாவலை வாசித்த உணர்வினைப் பெறுவார்கள் என்ற உறுதியான எண்ணம் என்மனதில் உருவாகியுள்ளது. இந்நாவலை உருவாக்கிய கலாநிதி ச.அருளானந்தம் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

கலாபூசணம். செ.விபுணசேகரம்
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்
மூதூர் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

பல்வேறுபட்ட இலக்கிய வகைகளை வாசித்துச் சுவைத்த எனக்கு நாவலையும் எழுதிப்பார்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. முதலில் சிறுவருக்கான நாவல்களை எழுதினேன். இதுவரை எட்டு சிறுவர் நாவல்களை எழுதியுள்ளேன். எனது 'பயங்கொள்ளலாகாது பாப்பா' சிறுவருக்கான நாவல் அகில இலங்கை சாகித்திய விருதினைப் பெற்றுத்தந்தது. 'மனதில் உறுதிவேண்டும்' என்ற சிறுவர் நாவலை தேசியகல்வி நூலக அபிவிருத்தி ஆவணவாக்கச் சேவைகள் சபை சிறந்த நாவலாக ஏற்றுப் பிரசுரிப்பதற்கான பரிசினை வழங்கியது. கல்வி அமைச்சின் நூலபிவிருத்திச் சபை இளைஞர்களுக்கான ஆக்கங்களைக் கோரியிருந்தது. 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற தலைப்பில் இளைஞருக்கான ஒரு நாவலை எழுதியனுப்பினேன். அது எனக்குப் பிரசுரிப்பதற்கான பரிசினைப் பெற்றுத்தந்து. பெருமையினையும் தேடித்தந்தது.

அத்துடன் அந்த நாவலை 'தோதன்ன நிறுவனம்' சிங்களத்தில் மொழிமாற்றம் செய்துள்ளது.. 2010 ல் அகில இலங்கைச் சாகித்திய விழாவில் இறுதிச் சுற்றில் மூன்று நாவல்களைத் தேர்வாளர்கள் தேர்ந்தெடுத்தனர். அதிலொன்று எனது 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற நாவலாகும். அண்மையில் கல்வி அமைச்சின் நூலபிவிருத்திச் சபை எனது 'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்ற நாவலை 'நூலகங்களில் பயன்படுத்தக்கூடிய தரமான நூல்' என்ற சான்றிதழைத் தந்துள்ளது. இந்த நாவல் படித்த இளைஞர் யுவதிகளைப் பற்றியது. படித்தால் அரசாங்கம்தான் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற விதியுள்ளதா? இல்லையே. படிப்பது நாம் நல்லவழியில் வாழ்ந்து சமூகத்துக்குச் சேவை செய்வதற்காகத்தானே? ஆனாலும் அரசு பாராமுகமாக இருந்தால் என்ன செய்வது?

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டங்களையிட்டுச் சிந்தித்தேன். நான் ஆசிரியராகக் கற்பித்த சேனையூர் மகாவித்தியாலயம் மிகத்தரம் வாய்ந்த பாடசாலையாக விளங்கியது. பண்பான, மிக அன்பான மக்கள் வாழ்ந்த பழமைமிகு கிராமம். கடந்த முப்பது ஆண்டுகளாக நாட்டின் கெடுபிடிகளால் சீரழிந்து மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து மீள்குடியேற்றம் நடைபெற்றபின் சென்று பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. மிகுந்த கவலை ஏற்பட்டது. அந்த உத்வேகத்தில் உதயமானதுதான் 'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்ற இந்த நாவல். மனம் வைத்து முயற்சித்தால் படித்தவர்களால் பல சாதனைகளைச் செய்து காட்டமுடியும் என்பதனை இந்நாவல் விளக்குகிறது.

ஈழத்திலும் நாவல் இலக்கியங்கள் படைக்கக் கூடிய வல்லவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்மவர்கள் அவற்றை வாங்கிப் படிப்பதில்லை. இந்தியப் பத்திரிகைகளைப் படித்து அதில் திளைத்தவர்களுக்கு உண்மையில் இந்திய இராஜதந்திரம் தெரியாது. நம்மவர்கள் நாட்டுப்பற்று அற்றவர்கள். நம்நாட்டு எழுத்தாளர்களின் ஆற்றலைப் புரியாதவர்கள். இந்திய நாட்டில் பிராந்திய மொழிகளில் நூல்கள் இறக்குமதிக்குத் தடையுண்டு. அதனை இந்தியத் தமிழர்களும் கண்டும் காணாததுபோல் இருக்கின்றனர். அதுவும் ஒரு இராஜ தந்திரம்தான். உலகத்தில் வாழும் தமிழர்களது ஆக்கங்களை தமது நாட்டுக்குள் இறக்குமதி செய்துவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நூல்களை வாங்குவது யார்?

இந்திய நூல்களுக்கு உலகத்துத் தமிழர்கள் வாழுமிடமெல்லாம் சந்தையாக விளங்குகிறது. இந்தநிலையை மாற்றவேண்டும். நமது நாட்டின் அமைச்சுக்களின் திணைக்களங்கள் தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதரிவசதிகள் உண்டு. ஆனால் நமது அரச அதிகாரிகள் நூல்கொள்வனவு செய்வதை யாரும் கண்டு கொள்வதில்லை. அவர்களும் இந்திய எழுத்தாளர்களது நூல்களைக் கொள்வனவு செய்வதன் மர்மத்தை உயர் அதிகாரிகளும். அரசியல் வாதிகளும் எப்போது புரிந்து கொள்வார்களோ தெரியாது. எமது நாட்டுப் பணத்தை அயல்நாட்டுக்கு ஏன் தாரைவார்த்துக் கொடுக்கவேண்டும்.?

1972 களில் இறக்குமதிக்கான தடையிருந்த காலத்தில் வீரகேசரி நிறுவனம் அற்புதமான நூல்களை வெளியிட்டது. சுமார் 79 நூல்களை வெளியிட்டுச் சாதனை படைத்தது. பல எழுத்தாளர்கள் எழுதினார்கள். அந்தநிலையை மாற்றியதால் ஈழத்து எழுத்தாளர்களது எழுதும் ஆற்றலில் மந்தநிலை தோன்றியது. இதனை எந்த அரசியல்வாதிகளும் கருத்தில் கொள்ளவில்லை.

தமிழார்வம் என்றும் தமிழ்த் தொண்டு என்றெல்லாம் பேசிவரும் நமது அரசியல்வாதிகளும். அரச அதிகாரிகளும் இவற்றைப் பற்றிக் கவனிப்பார்களா? பெரும்பான்மை இனம் ஆளுகிறது. அரசியல் உரிமைகள் இல்லையென்றெல்லாம் கூச்சலிடும் அரசியல் வாதிகளும், அரச அதிகாரிகளும் ஒதுக்கப்படும் நிதியைச் சரியாகப் பயன்படுத்தினால் ஈழத்து எழுத்தாளர்களது ஆற்றல் ஓங்கும் அல்லவா?

'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்ற நாவலை உங்கள் முன் தவழவிடுகின்றேன். படித்துச் சுவைத்தவர்கள் அதனைப்பற்றி எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். இந்த நூலை வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த - சிறப்பாக அணிந்துரை தந்துதவிய முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் கலாபூஷணம் திரு.செ.விபுணசேகரம், செவ்வை பார்த்துதவிய முன்னைனாள் அதிபர் கவிஞர் ச.தவராசா, பதிப்புரையோடு விற்பனைப் பொறுப்புக்களையும் ஏற்றுள்ள லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு.க.சதீஸ், அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த எனது மகன் ச.அ.அருள்பாஸ்கரன், அழகுற அச்சிட்டு உதவிய நிசான் பிறின்ரஸ் அலுவலர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்
37 / 7, மத்திய வீதி
உவர்மலை - திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள வாசகர்களே.....

நமது பிள்ளைகளைப் பற்றிச் சிந்திப்போமா? நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு வாசிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். அதேபோல் நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு எழுத முனைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். இதுதான் உண்மை. நமது பிள்ளைகளை நன்றாக வாசிக்கப் பழக்க வேண்டும். அந்தப் பழக்கத்தைப் பெற்றோர்கள்தான் வீட்டில் தொடக்கி வைக்க வேண்டும். பிள்ளைகளுக்குப் படிக்கும் நேரத்தை நீங்கள்தான் ஒதுக்க வேண்டும். அவர்கள் படிக்கும் நேரத்தில் தொலைக்காட்சியைப் பார்ப்பதைத் தவிர்த்து விடுங்கள். நீங்களும் வாசித்தால்தான் பிள்ளைகளும் உங்களைப் பின்பற்றி வாசிப்பார்கள்.

பெற்றோருக்கு அடுத்து நிற்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை வாசிக்கவும், எழுதவும் தூண்டவேண்டும். பெற்றோரினது சொற்களைவிடவும் பிள்ளைகளது மனங்களிலே ஆசிரியர்களது சொற்கள் எடுபடும். ஆழப்பதியும். பெரும்பாலும் மாணவர்கள் ஆசிரியர்களைத்தான் பின்பற்றுகிறார்கள். நீங்கள் சிறந்த வழிகாட்டிகள். ஆதலால் அவர்களை வாசிப்பில் ஈடுபட வைக்க வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். நல்ல நல்ல நூல்களை வாசிக்கும்படி அறிவுறுத்துங்கள். அதேபோல் நல்ல நல்ல நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்யவும் வேண்டும்.

பலபெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தமது செல்வங்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். தங்களையிட்டுக் கவலையில்லாது வாழ்பவர்கள்தான் நமது பிள்ளைகள். அவர்களை நல்லவர்களாக்க வேண்டிய பாரிய பொறுப்புப் பெற்றாரிடம் உள்ளது. நாங்கள் பல அறிஞர் பெருமக்களிடம் நல்ல நூல்களை எழுதும்படி கேட்டு அவற்றைப் பிரசுரம் செய்து தருகிறோம். இந்த நூலை எழுதியவர் ஆசிரியராக அதிபராகக், கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய எழுத்தாளர் திரு.ச.அருளானந்தம் ஆவார். இந்த நூலை இலங்கைக் கல்வி அமைச்சின் தேசிய நூலபிவிருத்திச் சபையினர் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கியுள்ளனர். இந்த நூல் பிள்ளைகளைச் சிந்திக்க வைக்கிறது. இதனை வாங்கி உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்துப் படிக்கத் தூண்டுங்கள். உங்களது பிள்ளைகளின் நல்வாழ்வு உங்கள் கைகளில்தான் உண்டு.

நன்றி
க.சதீஸ்
முகாமையாளர்.
லங்கா புத்தகசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

அந்திவானம் செம்மைசூடித் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது. மேற்கு வானம் வண்ணக்கோலம் பூண்டு பருவமங்கையாய் ஜொலித்தது. சூரியக்கதிர்கள் வெம்மை குறைந்து இதமான வெப்பத்தைத் தந்து கொண்டிருந்தது. வானம் நிர்மலமற்றதாய் பிரவாகித்தது. மனிதப் பருவத்தில் பதினெட்டுத் தொடக்கம் இருபத்தைந்து வயதுவரை இளமையின் இரகசியங்கள் துள்ளி நிற்கும் பருவம். இன்பச்சுரங்கத்தின் எழிலகம். செம்மஞ்சள் மாலைப் பொழுது அற்புதமானது. வேலைகளை முடித்துவிட்டுக் குளித்து வந்தால் உண்டாகும் சுகம் இருக்கிறதே இன்பமயமானது. இளவயதினர் சேர்ந்து கும்மாளமிடும் நேரமல்லவா இம்மாலைப் பொழுது?. இவ்வளவு நாட்களும் இந்த நேரத்தில் கலகலப்பாக இயங்கும் இளவட்டங்கள் இன்று வழமைக்கு மாறாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

அந்தப் பல்கலைக்கழகத்தில் ஒரு சோகம் குடிகொண்டிருந்தது. பல ஆண்டுகளாக வரவின்றிச் செலவு மட்டும் செய்து மகிழ்ந்திருந்த வாழ்க்கை ஒரு பகுதியினருக்கு முடிவுக்கு வந்து விட்டது. ஒன்றாகப் பழகியவர்களை விட்டுப்பிரிவது எல்லோருடைய உள்ளங்களிலும் இனங்காண முடியாத துயரப்போர்வையை மூடிவிட்டிருந்தது. ஒவ்வொரு வருடத் தொடக்கத்தில் பல்கலைக் கழகம் மாணவர்களை உள்வாங்கும். அதேபோல் ஒவ்வொரு வருடம் முடிவிலும் வெளியனுப்பும். இது மாறி மாறி வரும் ஒரு வாழ்க்கை வட்டம் போன்றது. ஒரு நியதியாகி விட்டது. பல்கலைக் கழகத்திற்கு வந்தால் தனது படிப்பை முடித்தவர்கள் போய்த்தான் ஆகவேண்டும்.

'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்'? என்ன அழகாக வள்ளுவர் கூறியிருக்கிறார். உயிரினங்கள் தோன்றிய காலத்தில் இருந்தே இந்த அன்பு தோன்றிவிட்டதோ? கயல்விழி தனிமையில் இருந்தவாறே சிந்தனையில் ஆழ்ந்தாள். நாளை அவள் தனது தோழிகளை விட்டுப் பிரியும் நாள். அவள் மட்டுமல்ல. அவளோடு பல்கலைக் கழகத்தில் ஒன்றாக சேர்ந்தவர்கள் அனைவரும் பிரிந்து செல்லவேண்டும். வந்த வேலை முடிந்ததும் வந்தவழியே செல்லத்தானே வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளாக ஒன்றாகப் பழகிய அனைவரும் ஒவ்வொரு திக்கில் கலைந்து விடுவார்கள். எங்கிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்களோ அங்கே திரும்பிப் போய்விடுவார்கள். இனிமேலும் இந்த இடத்தில் கூடியிருந்து கும்மாளம் அடிக்கமுடியாது. இந்த இடங்களில் புதியவர்கள் நிறைந்து விடுவார்கள். இதுதான் வாழ்க்கையின் ஆரம்பமா? எங்கெங்கு சந்திப்பார்களோ தெரியாது.

கயல்விழி அந்தப்பல்கலைக் கழகத்தில் காலடி எடுத்து வைத்த நாள்முதல் திருமங்கை அவளது உயிர்த் தோழியாய் ஆகிவிட்டாள். விடுதி அறையிலும் ஒன்றாகவே வாழ்ந்தார்கள். கயல்விழி உயிரியல் விஞ்ஞானம் கற்று இறுதிப் பரீட்சையையும் எழுதிவிட்டாள். திருமங்கை கலைப்பிரிவில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றாள். புல்நுனியில் ஒரு எறும்பு ஊருவதையும் உன்னிப்பாகக் கவனிக்கும் பண்பு இருவரிடத்தும் இருந்தது. அந்த ஒத்த இயல்பு இருவரையும் தோழிகளாக்கி விட்டது. ஒரு மாலைப் பொழுதில் இருவரும் உலாவந்தார்கள். ஒரு எறும்பு புல்நுனியில் ஊர்ந்து கொண்டிருந்தது. "மங்கை இந்த எறும்பு இருக்கிறதே, இதனிடம் மனிதன் கற்கவேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு". எறும்பைப் பார்த்தவாறே கயல்விழி விளக்கினாள்.

"அப்படி என்ன விஷேசம் அதனிடம் உண்டு"? மங்கை அவளைப் பார்த்தவாறே கேட்டாள். "நமது உடல் நமது கையால் எண்சாண்தான். அதேபோல் எறும்பும் தன்கையால் எண்சாண்தான். ஆனால் மனிதனைவிட அது ஆற்றல் மிக்கது. தனது எடையைவிட பல மடங்கு எடையைத்தூக்க வல்லது. எந்தநேரமும் சுறுசுறுப்பாக இயங்கும்". கூறிவிட்டு ஒரு துரும்பை எடுத்து எறும்பின் உடலைத் தீண்டினாள். அது தனது உடலில் பட்ட துரும்பை உணர்கொம்பால் உணர்ந்து கொண்டது. அது நெளிந்து அதற்கேற்பத் துலங்கியது. அந்த எறும்பைத் தொடர்ந்து பல எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. மற்ற எறும்புகளுக்குச் செய்தி பரவியதால் ஊர்வதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் அவை வேலைகளில் ஈடுபடத் தொடங்கின.

"ஒட்டகம் தனது சூழலுக்கேற்பத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தண்ணீரைச் சேமித்து வைக்கும். கங்காரு இனத்துக்குத் தமது குட்டிகளைப் பாதுகாப்பதற்கு ஒரு பையை இயற்கை கொடுத்துள்ளது. எறும்புக்கு வயிற்றில் இரண்டு அறைகள் உள்ளன. ஒன்றில் தனக்கென உணவினைச் சேர்த்துக் கொள்ளும். அதனை வேண்டியபோது பயன்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய அறையில் தனது சகபாடிகளுக்காக உணவினைச் சேர்த்துக் கொள்ளும். நன்றாக வேலை செய்த எறும்பு ஒரு நாளைக்கு ஏழு மணித்தியலங்கள் உறங்குமாம். வேடிக்கையாக இல்லை''? மங்கையைப் பார்த்து வினவினாள். மங்கை புன்னகைத்தாள்.

''மங்கை! நமது மனித குலத்தில்தான் ஆண்டான் அடிமை உள்ளதாக நாம் நினைக்கின்றோம். இந்த எறும்புகளின் வாழ்க்கையிலும் ஆச்சரியமான செய்திகள் அடங்கியுள்ளன. எறும்புகள் தங்களுக்கென கூடமைத்து வாழும். பெரிய கூட்டமே இருக்கும். இராணி எறும்புதான் தலைமைதாங்கும். பிறக்கும்போதே இராணி எறும்புக்குச் சிறகுகள் இருக்கும். வளர்ந்து பெரிதாகி தான் வாழ்ந்த கூட்டத்தைவிட்டு வேறாகச் சென்று தனதுகூட்டத்தோடு வாழும். அதன்பின்னர் சிறகுகள் விழுந்துவிடுமாம். போராளி எறும்புகள் கூட்டையும், மற்றைய எறும்புகளையும் பாதுகாக்கும். வேலையாட்கள் எல்லா வேலைகளையும் செய்யும். உணவு சேகரித்துவரவேண்டும். வாழும் கூட்டைச் சுத்தம் செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் எறும்புகள் வாழும் கூட்டைச் சுத்தம் செய்யும். தங்களுக்குப் போதிய வேலையாட்கள் இல்லாது விடின் பக்கத்தில் உள்ள எறும்புக் கூட்டை வேவுபார்க்கும். வேவு பார்ப்பதற்கென்றே எறும்புகள் உண்டு. எந்த எறும்புக் கூட்டில் முட்டைகள் உள்ளன, என்று வேவு பார்க்கும்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தனது படையுடன் சென்று முட்டைக்கூட்டைக் கவர்ந்து வரும். தமது கூட்டில் வைத்துப் பாதுகாத்து வளர்க்கும். குஞ்சுகள் பொரித்ததும் அவைகள்தான் இக்கூட்டின் வேலையாட்கள். இது எறும்புகளின் வாழ்க்கை முறை''. கயல்விழி விளக்கிக் கொண்டு போனாள். மங்கை அதிசயித்து நின்றாள். தனது குறிப்புப்புத்தகத்தை எடுத்தாள். பேனாவினால் கிறுக்கினாள். கயல்விழி அவளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ''நீ சொன்னதைச் சிறுவருக்குச் சொல்லவேண்டும். சிறுவருக்கான பாடல் இது. சரி, படிக்கட்டா''? மங்கை கேட்டாள். ''எங்கே படி பார்க்கலாம்.? கயல்விழி கன்னத்துக் கூந்தலை ஒதுக்கியவாறே சொன்னாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வண்ண உருவத்தில்
திரியும் எறும்பு தன்னைப்பார்
உன்னைப் போல உயிருண்டு
உழைக்கும் சக்தி அதற்குண்டு

வலிமை கொண்ட ஆறுகால்
விரைந்து செல்ல உதவுமாம்
எளிதில் பளுவைத் தூக்குமாம்
எடுத்துச் சுமந்து விரையுமாம்

வயிற்றில் இரண்டு அறையுண்டு
வயிற்றை நிறைக்க வழிகண்டு
அயரா துழைக்கும் எறும்புகள்
அபார மூளை கொண்டவை

உழைத்த களைப்பைப் போக்கவே
உறங்கும் ஏழு மணிவரை
பழமை வாய்ந்த எறும்பினம்
பரந்து எங்கும் வாழுமாம்.

"சா... அற்புதமான பாடல். இப்படி இசையோடு பாடினால் சிறுவர்கள் மெய்மறந்து இரசிப்பார்கள். சிறுவர்களுக்குத்தான் நாங்கள் சொல்லித்தர வேண்டும். அவர்கள்தான் இந்நாட்டின் வருங்காலத் தலைவர்கள். இந்தப் பாடலைத் தொலைத்து விடாதே. விரைவில் நாம் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுப்போம்". மங்கையைத் தழுவிப் பாராட்டிக் கூறினாள். மங்கை நெகிழ்ந்து போனாள். இப்படி இருவரும் பேசி மகிழ்ந்த நாட்கள் ஏராளம். ஒவ்வொன்றாக நினைவுக்குக் கொண்டு வந்து கடந்த காலத்தை அலசினாள்.

அவள் முதன்முதல் பல்கலைக் கழகத்தில் காலடி எடுத்து வைத்த நாள். அவளைச் சூழ்ந்து பலர் 'ராக்கிங்' செய்யத் தொடங்கினார்கள். அவள் அழுதே விட்டாள். ஊரில் நடந்த அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட அவளது உள்ளம் கொதித்தது. அவள் தனது அண்ணனை இழந்திருந்தாள். ஊரிலிருந்து விரட்டியடிக்கப் பட்டாள். அப்பா அம்மாவோடு ஓடிக் களைத்து திருகோணமலையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் குடியிருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் ஒடிந்திருந்தது. மனவடுவால் துவண்டு போயிருந்தாள். படித்தால் ஒரு விடிவு கிடைக்கும் என்ற ஆதங்கத்தில் பல்கலைக் கழகம் வந்தாள். ஆனால் இங்கே உலகத்தைப் பற்றிய கவலையற்ற படித்தவர்கள் ராக்கிங் செய்கிறார்கள். ஆவேசத்தோடு அவர்களைச் சாடினாள்.

"நாங்க வாழ்வதா சாவதா என்ற நிலையில் கிடந்து செத்து வாறம். நீங்க ராக்கிங் செய்யிறீங்களா? உங்களுக்கு நமது நாட்டில என்ன நடக்குது என்று தெரியாதா? நீங்கயெல்லாம் மனிதர்கள்தானா? இனிமேலும் 'ராக்கிங்' என்று வந்தால் புலிவேட்டை நடக்கும்". அவள் ஆவேசமாக நின்றாள். அவளது கையில் தோளில் தொங்கிய பை இருந்தது. வேட்டைக்குப் போகும் புலிபோல்தான் தெரிந்தாள். பல நாய்கள் ஒன்று சேர்ந்து ஒரு நாயைத் துரத்தும் போது ஓடும் நாய் திரும்பி வாலை பின்னங்கால்களுக்கு இடையில் வைத்துக் கொண்டு குந்தியிருந்தால் எந்த நாயும் கிட்ட நெருங்காது. அந்த நிலையில் இருந்தாள். கண்கள் சிவந்து கனல் பறந்தது. "ஏய் இவள் புலியாம். கிட்டப் போகாதீங்க". சுற்றி நின்றவர்கள் பரிகாசம் செய்தார்கள். அப்போதுதான் அருண் அந்தப் பக்கம் வந்தான். குழுமி நின்றவர்களே புலி என்று சொல்லி விபரீதத்தை உண்டு பண்ணிவிடுவார்கள் போல் தெரிகிறது. விரைந்து அவ்விடம் புகுந்து சூழ்ந்து நின்றவர்களிடம் கதை கொடுத்தான்.

"ஹலோ இஞ்ச பாருங்க, நாட்டு நிலை தெரியாமல் சத்தம் போடாதிங்க. இங்க பெரும்பான்மை இனத்து மாணவர்கள் இருக்கிறார்கள். நீங்க இப்ப சொன்னத அவர்கள் கேட்டால் என்ன நடக்கும்? நீங்களே உங்களக் காட்டிக் கொடுத்த மாதிரிப் போய்விடும். அவயின்ர நிலையை நீங்கள் யோசியுங்க. அகதியாக முகாமில இருந்து அவதிப்பட்டு படிக்கவேணும் என்ற எண்ணத்தோட வந்தவர்களுக்கு நாங்க உதவியாக இருக்க வேணும். அதைச் செய்யுங்க". அவன் பரிந்து பேசினான். "ஆமாடி. இவர் பெரிய இவர்". சொல்லிக் கொண்டு போனார்கள். அவன் அவள் பக்கம் போனான். கோபத்திலும் அவள் அழகாய்த்தான் இருந்தாள். "உங்கட பேரென்ன"? என்றான். அவளது ஆத்திரம் மெல்ல மெல்ல குறைந்து கொண்டு வந்தது. "கயல்விழி" என்றாள். "அழகான பெயர். ஆனால் அவை இப்போது கனல்விழிகளாக ஆகிவிட்டன. சரி இப்படி வாங்க.. அந்த கதிரயில் இருப்போம். கோபம் அடங்கியதும் உங்கள் அறைக்குப் போகலாம்." அவன் முன்னால் போய் அமர்ந்தான். அவள் பின்னால் சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எந்த ஊர்”? அடுத்த வினாவைத் தொடுத்தான். “திருகோணமலை”. சுருக்கமாகப் பதில் சொன்னாள். “நானும் திருகோணமலைதான். நடந்ததை மனதில வைக்காதீங்க. உடனே மறந்திடுங்க. உங்கட நோக்கத்த நிறைவேற்றப் பாருங்க. அது சரி.. நீங்க எந்தப் பீடம்”? அருண் கேட்டான். “உயிரியல் விஞ்ஞானம்” பதிலளித்தாள்.”எனது பெயர் அருண். நான் சமூகவியல் மூன்றாம் வருடம். கெதியாகப் படித்து முடித்து விட்டு அம்மாவுக்கு உழைச்சிக் கொடுக்க வேணும். ஏதும் தேவை என்றால் எனக்கு அறிவியுங்க. நான் உங்களப்பற்றி எங்கட சிரேஸ்ட மாணவரிடம் சொல்லி வைக்கிறன். நான் பிறகு சந்திக்கிறன்.” அவன் வந்த வழியே சென்றுவிட்டான். அதன்பின் எப்பொழுதாவது சந்தித்தால் “எப்படி கனல்விழியே நலம்.”? என்று நலம் விசாரிப்பான். அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை.

அவன் தமாசாகப் பேசுவான். எப்போதும் கலகலப்பாக இருப்பான். உதவி செய்வதற்கு முன்னிற்பான். இவை அவளுக்குப் பிடித்தவை. அதனால் அவன்மேல் ஒரு மதிப்பு இருந்தது. எப்படித்தான் அந்த நாட்கள் ஓடினவோ தெரியாது. நூலகத்தில் படிப்பில் ஆழ்ந்திருந்தாள். நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அருண் ஒரு மூலையில் இருந்து படித்துக் கொண்டிருந்தான். மழை விடுவதாயில்லை. அருண் வெளியில் வந்தான். நூலகத் தரையெங்கும் மாபிள் பதிக்கப்பட்டிருந்தது. நூலகத்துக்குள் வருகின்றவர்களின் குடையில் இருந்து வடிந்த மழைநீரினால் தரை ஈரமாக இருந்தது. பொதுவாக நூலகத்துக்கும் பாட்டா செருப்போடுதான் மாணவர்கள் வருவார்கள். அருண் நூலகவாசலுக்கு வந்தான். அவனைத் தொடர்ந்து கயல்விழியும் வந்தாள்.

அவனிடம் குடையில்லை. தனது குடையைக் கொடுக்க நினைத்தாள். ஆனால் அதற்கு இடம் கிடைக்கவில்லை. விடுதிக்கு ஓடுவதற்காக முனையும்போது செருப்பு வழுக்கி விட்டது. அப்படியே வழுக்கித் தூரத்தில் 'தொப்' என்று விழுந்தான். மாணவியர் ஓவென அலறினார்கள். கயல்விழி ஓடிச்சென்று அவனைத் தூக்கமுயன்றாள். மற்றவர்களையும் உதவிக்கு அழைத்துத் தூக்கி மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றாள். டாக்டரிடம் சொல்லி மருந்து கட்டி அவனது விடுதி அறையில் கொண்டு போய்விட்டாள். அவனது காலில் சுளுக்கு ஏற்பட்டிருந்தது. அடிக்கடி அவனைப் பார்த்துச் சுகம் விசாரிப்பாள். அவளை அறியாமல் அவன்மேல் ஒரு அனுதாபம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பரீட்சை முடிந்து பிரிந்து செல்லும்போது கயல்விழியிடம் வந்தான். அன்று இருவரும் ஆளையாள் பார்த்தபடி இருந்தார்கள். யார் முதலில் பேசுவது? எப்படிப் பேசுவது? ஊமைகண்ட கனவாக "நான் ஊருக்குப் போகிறேன். உங்கள வீட்டில சந்திக்க வருவன்." சொல்லிவிட்டுச் சென்றான். அவன் போனதும்தான் மனது வருந்தியது. "நான் ஏதும் கதைத்திருக்கலாம். நானொரு மடச்சி." தன்னைத்தானே திட்டிக் கொண்டாள். அவன் போகும்போது "நான் மனதில உள்ளத அவளிடம் சொல்லியிருக்கலாம். நான் சொல்லவில்லையே. சே.. நானொரு மடையன்." தனக்குத்தானே நொந்து கொண்டான். அதனை இன்று நினைந்து கொண்டாள்.

கதவில் ஒரு தட்டுக் கேட்டது. கதவைத் திறந்து கொண்டு மங்கை களைத்து வந்தாள். உற்சாகமின்றி வந்தவள் தன்னைக் கட்டிலில் தூக்கியெறிந்தாள். அவளை ஏந்திய கட்டில் இருமுறை மேலுயர்ந்து தாலாட்டியது. கயல்விழி மின்விசிறியைத் சுழலவிட்டாள். காற்றுத் தாலாட்டிவிட்டது.

கயல்விழி அவளையே பார்த்துக் கொண்டு இருந்தாள். எப்போதும் கலகலப்பாக இருக்கும் மங்கை ஏனின்று இப்படிச் சோர்வாக இருக்கிறாள். மெதுவாக எழும்பி மங்கையின் பக்கம் சென்று " மங்கை! என்ன நடந்தது? ஏன் சோர்வாக இருக்கிறாய்"? கேட்டவாறே அவளருகில் அமர்ந்தாள். கயல்விழியின் மடியில் தலையைப் புதைத்து விம்மத் தொடங்கினாள். அவளைப் பார்த்ததும் கயல்விழியின் கண்கள் பனித்தன. "என்னம்மா நடந்தது? சொல்". பதிலுக்காகக் காத்திருந்தாள். "கயல் இன்றுமட்டும் ஒன்றாக இருப்போம். நாளை மாலை நீ எங்கோ நான் எங்கோ இருப்போம். ஏன் நாம் தோழிகளானோம்? இப்போது நெஞ்சு வெடிக்கும்போல் இருக்கிறது"? அழுகையின் ஊடே சொற்கள் பறந்தன.

கயல்விழியின் உள்ளத்தில் தெம்பு பிறந்தது. தன்னைச் சதாகரித்துக் கொண்டாள். "மங்கை இதற்காகவா அழுகிறாய்? நீ என்ன சின்னப்பிள்ளையா? நாம் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். நாம் சந்திக்கமுன் எப்படி இருந்தோம்? இடையில் வந்த இந்த உறவு இடையில் போய்விடும். பல்கலைக் கழகக் காலநட்பு படலையோடு போய்விடும். இது உண்மை. ஆனாலும் நாம் மீண்டும் சந்தித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். நமக்கென்று கடமைகள் காத்திருக்கின்றன. நாம் போய் ஏதாவது வேலையைத் தேடவேண்டும். நம்மை நம்பியிருக்கும் ஏழைப் பெற்றோரை வாழவைக்க வேண்டும். நீ இதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே". அவளது மனதும் அழுதது. ஆனாலும் மங்கையைத் தேற்றவேண்டும் என்பதற்காக நடிக்க முயன்றாள். அவள் அப்படிப் பேசினாளேதவிர அவளது கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் பெருக்கெடுத்து உடைந்து சிதறின.

மங்கை அதனைக் கண்டு கொண்டாள். "கயல்விழி நீ என்ன சொன்னாலும், நீயும் அழுவது எனக்குத் தெரியும். எனக்கு ஆறுதல் சொல்கிறாய். ஆனால் நீ அழுவதை நான் கண்டு கொண்டேன். தோழி! இந்த நான்கு வருடங்களில் நாம் இணைபிரியாமல் இருந்தோம். நமது நட்பைத் தொடர்ந்து காப்பாற்றுவோம். என்ன"? இப்போது மங்கை கயல்விழியைத் தேற்றினாள். இருவரும் ஆளையாள் பார்த்து ஏங்கி அழுதார்கள். "சரி நாம் வளர்ந்து விட்டோம். இப்போது பட்டதாரிகளாக ஆகிவிட்டோம். இன்னும் ஒருமுறை பட்டமளிப்பு விழாவிலே இந்தப் பல்கலைக் கழகத்தில் மீண்டும் சந்திப்போம். இப்போது நமது தோழிகளைச் சந்தித்து வருவோம். முகத்தைக் கழுவிப் புறப்படு" கூறிவிட்டு கயல்விழி எழுந்தாள்.

டைனிங் ஹோல் கலகலத்தது. வண்ண விளக்குகள் அலங்கரித்தன. வெளிச்சங்கள் இருந்தாலும் ஆளையாள் அடையாளம் காணக்கூடிய வெளிச்சம் இல்லாதிருந்தது. அந்த விடுதி பெண்களுக்கானது. டைனிங் ஹோல் வழக்கமான சோபையை இழந்திருந்தது. அவர்களது உள்ளங்களைப் போல் டைனிங் ஹோலும் உற்சாகமில்லாது களைத்திருந்தது. தோழிகள் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாட முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை. கண்கள் ஒன்றோடு ஒன்று பேசிக்கொண்டன. கண்களைப் பார்க்கவிடாது கண்ணீர் பொங்கி மறைத்தது. சாப்பிட வேண்டும் என்பதற்காக வாயினுள் திணித்துக் கொண்டார்கள். கவலையுடன் தமது அறைகளுக்குத் திரும்பினார்கள். கயல்விழிக்கு இருப்புக் கொள்ளவில்லை. மங்கை அழுது கொண்டே இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

"அன்பு என்பதென்ன? மனதிலே உருவாகும் ஒரு உணர்வுதானே? அந்த உணர்வு எவ்வளவு பிணைப்பினை ஏற்படுத்தி விடுகிறது. மனித மனங்களைப் பிடித்து ஆட்டிப்படைக்கிறது. அன்புதான் பாசத்தின் அடித்தளமா? அன்புக்காக ஏங்கும் உள்ளங்கள்தான் எத்தனை? அன்பு கிடைக்கும்போது இன்பத்தால் உள்ளம் துள்ளுகின்றது. அன்பு கிடைக்காது விடில் அதன் பாதிப்பு அதிகமாகின்றது. மனித மனங்கள் இந்த அன்புக்காகத்தானே ஏங்கிக்கிடக்கிறன. அன்புதான் உயிர்களைப் பிணைக்கும் சக்தியா? அன்பின் நிமித்தம் ஒன்றாகப் பழகிவிட்டுப் பின் பிரியும் போது எவ்வளவு கவலையடைகிறோம். என்ன விசித்திரமான மனம்."? கயல்விழியின் உள்ளம் ஏதோ விசித்திரமான சிந்தனைகளில் சிக்கித் தவித்தது. கயல்விழி எப்போதும் மகிழ்ச்சியாகவே இருப்பாள். எந்தநேரமும் அவள் இதழ்களில் ஒரு கவர்ச்சிப் புன்முறுவல் இழையோடும். ஒருமுறை கயல்விழியைப் பார்த்தவர்கள் மீண்டும் ஒருமுறை பார்க்கத் தவிப்பார்கள்.

பல்கலைக்கழகத்தில் பேரழகியாக வலம்வந்தாள். அவள் உரையாடும்போது ஒரு கலையாடும். அவளது பேச்சில் பொருளிருக்கும். அனைவரோடும் அன்பாகப் பழகும் பக்குவம் வாய்ந்தவள். கலகலத்து உரையாடுவாள். அவளைச் சூழப் பல தோழிகள் இருந்தார்கள். அப்பொழுது மலர்ந்த செந்தாமரையாக ஜொலிப்பாள். சிரிக்கும்போது கன்னங்களில் கவர்ச்சியான குழிகள் உருவாகும். "ஏய் கயல்விழி! உண்மையில் நீ வடிவானவள்தான். எனது கண்களே பட்டுவிடும். உனக்குத் திருஸ்டி கழிக்க வேண்டும்."? சிரிப்போடு மங்கை கூறுவாள். "ஏய் மங்கை! உண்மையில் உன் பெயருக்கேற்றமாதிரி நீதான் அழகி. உன் அப்பாவுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்." கயல்விழி சொல்லும்போது மங்கை குறுக்கீடு செய்தாள். "எதற்கு"? என்று. "உனக்குக் பொருத்தமான 'திருமங்கை' என்று பெயர் வைத்ததற்கு". கலகலத்துச் சிரித்துக் கயல்விழி பதிலளிப்பாள். கன்னக்குழிகள் அவளது சிரிப்புக்காக காத்திருந்ததுபோல் ஓடிவந்து கன்னத்தில் குந்திக் கொண்டன. இருவரும் ஒரே சாயலில் இருந்தார்கள். இரட்டையர்கள் என்றே தோழிகள் அழைத்தார்கள்.

இரவு அவர்களுக்கு உறக்கமில்லை. அழுவதும் ஆளுக்காள் ஆறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதுமாகக் கழிந்தது. மங்கை மெதுவாகக் கண்களைத் திறப்பாள். "கயல்விழி உறக்கமா"? அவள் புரண்டு படுத்தபடி "இல்லை. என்ன மங்கை".? கேட்டாள். "ஒன்றுமில்லை. உண்மையில் உன்னை எனது தோழியாகப் பெற்றதற்காகப் பெருமைப் படுகிறேன்". அமைதியாகக் கூறினாள். "மங்கை நான் நினைத்ததை நீ சொல்கிறாய். நானுந்தான் நினைத்தேன்".கயல்விழி சிணுங்கினாள் "எப்படி"? மங்கை முணுமுணுத்தாள்.

"நீ எனக்குத் தோழியானது நான் செய்த புண்ணியம்தான். நம்மிருவருக்கும் நிறையவே ஒற்றுமை இருக்கிறது. நான் நினைப்பதையே நீயும் நினைக்கிறாய். எனக்கு விருப்பமான அத்தனையும் உனக்கும் விருப்பமாக இருக்கிறது. இருவரது குணங்களும் ஒரே மாதிரியாக இருப்பதால் நமக்குள் அன்புப் பிணைப்பு ஏற்பட்டு விட்டது". கயல்விழி விபரித்தாள்.

கதைத்தவாறே உறங்கிவிட்டார்கள். சரியாக ஐந்து மணிக்கு எலாரம் அடித்தது. எழுந்து கொண்டார்கள். குளித்து உடைகளை மாற்றிப் புறப்பட்டார்கள். தங்கள் உடைமைகளைப் பொதிகளாக்கி வைத்திருந்தனர். அனைத்தையும் எடுத்துக் கொண்டு முன் மண்டபத்துக்கு வந்தார்கள். தங்களது அறையின் திறப்பை முறைப்படி விடுதி மேற்பார்வையாளரிடம் கொடுத்தார்கள்.

"நாங்கள் போய்வருகிறோம். நாங்கள் பிழைவிட்டிருந்தால் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்". என்றார்கள்.

அவர்களது செயல் விடுதி மேற்பார்வையாளருக்குப் பெரிதும் பிடித்திருந்தது. அவர்களது கைகளைப் பற்றி

"நீங்கள் இருவரும் எனது பிள்ளைகள் மாதிரி. உங்கள் வாழ்க்கையில் நல்லாயிருப்பீர்கள். எனது வாழ்த்துக்கள்".

கண்கலங்க வாழ்த்துக் கூறி வழியனுப்பினார். வெளியில் வந்தார்கள். எங்கும் மாணவர்கள் கூட்டம். பலர் அழுதவண்ணம் நின்றிருந்தார்கள். பிரிய மனமில்லாது நின்றார்கள். அவரவர்கள் போகவேண்டிய வஸ் வண்டிகள் வந்ததும் ஏறிக் கொண்டார்கள். பிரிந்து தம்வழியே சென்றார்கள்.

திருமங்கை மட்டக்களப்பு வஸ்ஸில் ஏறிக் கொண்டாள். "கயல்விழி! போனதும் பக்கத்து வீட்டுக்குப் போன் பண்ணு. என்ன? நான் வாறன்". மங்கையின் வஸ் புறப்பட்டது. கயல்விழியின் கண்கள் குளமாயின. ஏதோ பறிகொடுத்துவிட்டதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வஸ்ஸில் ஏறிக் கொண்டாள். வீடு வரும்வரை அவளது மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனத்தது. பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்து விட்டது. இனி வாழ்க்கை என்ற பல்கலைக்கழகத்தில் கற்கவேண்டிய விடயங்கள் நிறையவே இருக்கிறன. இனித்தான் வாழ்க்கையைப் படிக்க வேண்டும். இந்த உலகத்தில் பிறந்து விட்டால் அனுபவிக்கத்தானே வேண்டும். வரும் சவால்களை ஏற்று வெற்றி கொள்ளத்தான் வேண்டும்.

அம்மாவை நினைத்துக் கொண்டாள். "என்னால எத்தனை பேருக்குத் தொல்லைகள்? அப்பா எனக்காக எவ்வளவு பாடுபட்டார். அவரது மனங்குளிர நல்லநிலைக்குக் கொண்டு வரவேண்டும். என் கண்முன்னால் அவர் தலைநிமிர்ந்து வாழவேண்டும். உழைத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். புதுத் தெம்பு வந்தது. உற்சாகமானாள். இந்தப் பிறவி எப்படி வந்தது.? இனி எந்தப் பிறவி வாய்க்குமோ? விலங்குகள் போல் வாழ்ந்தால் பிரச்சினை ஏதும் இல்லை. மனிதன் மட்டும் தனக்குத்தானே விலங்கினை மாட்டிக் கொண்டு தவிப்பதேன்?.

சமூகத்தில் வாழ்வதற்குச் சில சட்டதிட்டங்கள் வேண்டும்தான். ஆனால் சாதி, சமயம், ஏற்றத்தாழ்வு தேவைதானா? பணம் மட்டும் இருந்தால் போதுமா? பணந்தானா எல்லாம். பணத்துக்காக மனிதன் எதனையும் செய்யத் தயாராயிருப்பதேன்.? தனக்குத்தானே கேள்விக் கணைதொடுத்து, விடைதெரியாது தவித்தாள். திருகோணமலை வந்து விட்டாள்.

அப்பா வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தார். மகளைக் கண்டதும் அவரது கண்கள் அகல விரிந்து கொண்டன. சந்தோசம் பெருக்கெடுத்தது. அவளது பொருட்களை எடுத்துக் கொண்டார். அப்பாவை பாசத்தோடு பார்த்தாள். அவளது உள்ளம் உடைந்துபோனதுபோல் ஒரு பிரமை. அப்பா எவ்வளவு திடகாத்திரமான உடற்கட்டு உடையவர். இப்போது இப்படி மெலிந்து உடைந்து விட்டாரே. இந்த நாட்டில் நடந்து முடிந்த அழிவுகளை எண்ணிப்பார்த்தாள். அவளை அறியாமலேயே மூச்சுக் கனலாகப் பறந்தது. "அப்பா மெலிந்து விட்டீர்களே" சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அதனைச் சொல்லமுடியவில்லை.

"அப்பா எப்படி இருக்கிறீர்கள்"? மாற்றிச் சொன்னாள். "இருக்கிறனம்மா. வா வீட்டுக்குப் போய்க் கதைப்பம். அம்மா காத்திருப்பா"? கூறியவாறே ஆட்டோவை அழைத்தார்.

ஆட்டோவில் ஏறி வீட்டின் வாசலில் இறங்கினார்கள். அம்மா படலைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடோடி வந்து வரவேற்றார். அவளைப் பார்த்ததும்

"என்னம்மா கயல்! நேரத்துக்குச் சாப்பிடுவதில்லையா"? நல்லா மெலிந்து விட்டாய்". கவலையோடு மகளை வரவேற்றார்.

"அம்மா நான் மெலியல்ல. நீங்கதான் இரெண்டு பேரும் மெலிஞ்சிட்டிங்க". கவலையோடு சொன்னாள்.

"என்ன செய்யிறது. நாட்டு நடப்பு அப்படி. எப்ப நமது சொந்த ஊருக்குப் போகப்போறமோ தெரியாது. அங்க போனால்தான் நிம்மதி கிடைக்கும். இஞ்ச வாடகைவீட்டில் இருந்து கொண்டு வாழலாமா"? அம்மா புராணம் பாடினார். "இஞ்சார் தங்கம்! உன்ர புராணத்தப் பிறகு பாடு. இப்ப பிள்ள களைச்சி வந்திருக்கு. சாப்பிடக் குடு. மகள் கயல்! முகத்த அலம்பிற்று வந்து சாப்பிடம்மா. பிறகு கதைப்பம்". அப்பா உசார் படுத்திவிட்டு வெளியில் போனார்.

கயல்விழி சுறுசுறுப்பானாள். கிணற்றில் தண்ணீரை அள்ளி பெரியவாளிக்குள் ஊற்றினாள். முகத்தில் தண்ணீரை விசிறியடித்துக் கழுவினாள். தண்ணீர் பட்டதும் சில்லென்று இருந்தது. உடலையும் கழுவினாள். சுகமாயிருந்தது. துவாயை எடுத்துத் துடைத்துக் கொண்டு வந்தாள். அம்மா உணவோடு தயாராயிருந்தார். "வாம்மா சாப்பிடுவம்." அம்மா அழைத்தார். "அப்பா எங்க? அவர் சாப்பிட்டாரா"? கயல்விழி வினாக்களைத் தொடுத்தாள். சுந்தரத்தார் வந்துகொண்டே "இதோ வந்திற்றன் மகள். நீ சாப்பிடு". கூறிக்கொண்டு வாங்கி வந்த வாழைப்பழச் சீப்பைச் சாப்பாட்டு மேசையில் வைத்தார். "அப்பா! வாங்க எல்லோரும் ஒன்றாகச் சாப்பிடுவம்". கயல் அழைத்தாள். அவர்களும் சேர்ந்து சாப்பிட்டார்கள். அவளுக்கு ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தது. ஒருபுறம் துயரமாகவும் இருந்தது. மங்கையை நினைத்துக் கொண்டாள்.

"பாவம் மங்கை. இப்போது என்ன செய்வாளோ? அவள் சொன்னவை நடக்குமா"? மனதில் நினைத்துக் கொண்டாள். கடந்த நான்கு ஆண்டுகளாக இருவரும் ஒன்றாக இருந்ததை மீண்டும் எண்ணிக் கொண்டாள். பல்கலைக் கழகத்தில் முதல்நாள் சந்திப்பிலேயே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர். தங்களது குடும்பங்கள் பற்றிப் பரிமாறிக் கொண்டனர். திருமங்கையின் அப்பா நிரந்தர வேலையற்றவர். தினக்கூலி வேலைக்குச் செல்பவர். வறுமையில் வாழும் குடும்பம். ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசுப் பரீட்சையில் சித்தியடைந்தமையால் ஒருவாறு மேற்படிப்புப் படிக்க முடிந்தது. மகாப்பொல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமும் அவளுக்குக் கிடைத்தது. அதற்குள் சமாளித்துப் படிப்பை முடித்தவள். படிப்பிலும் கெட்டிக்காரி.

நல்ல குணம்படைத்தவள். பார்த்தவர்கள் அவளைப் பணக்கார வீட்டுப்பிள்ளை என்றுதான் நினைப்பார்கள். அப்படி அவள் நடந்து கொள்வாள். தனது வறுமையைக் காட்டமாட்டாள். அவள் தனக்குத் தோழியாகக் கிடைத்ததையிட்டுப் பெருமைப் பட்டுக் கொண்டாள். சாப்பிட்டதும் அப்பாவோடு அளவளாவினாள். நாட்டு நடப்பைக் கேட்டறிந்தாள். அரசியல் லாபம் தேடும் தலைவர்களால் நாடு குட்டிச் சுவராய் போனதையிட்டுக் கவலையாய் இருந்தது இந்திய சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட தியாகிகள் எண்ணிலடங்கா. இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக யார் பாடுபட்டார்கள்?. எத்தனைபேர் இரத்தம் சிந்தினார்கள்? சுதந்திரத்துக்காகப் போராடிய தியாகிகள் இலங்கையில் யாரும் இல்லை. இலங்கைக்குச் சுதந்திரம் தானாகத்தான் கிடைத்தது. அதனால் அந்தச் சுதந்திரத்தின் மகிமையை நம்நாட்டு மக்கள் மனப்பூர்வமாக உணரவில்லை.

நாட்டைக் கூறுபோட்டு இன மொழி ரீதியாகப் பிரித்து அரசியல் லாபம் தேடுகிறார்கள். நாட்டுப்பற்று இல்லாத தலைவர்களினால் நாடு சின்னாபின்னமாகி விட்டது. தமிழர் வாழும் பிரதேசங்களில் வன்செயல் அதிகரித்து விட்டது. மக்கள் இடம்பெயர்ந்து தவிக்கும்நிலை ஏற்பட்டு விட்டது. மக்கள் சுனாமியினாலும், வன்செயலினாலும் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். வடக்கு கிழக்கு மாகாணத்தின் கிராமங்கள் அழிவுற்றன. பொருளாதாரம் சூறையாடப் பட்டுவிட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர் துறந்தனர். பலர் காணாமல் போயினர். திருகோணமலை மாவட்டக் கிராமங்கள் சிதைந்தன. சில கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்து திருகோணமலை நகரில் வாடகை வீட்டில் வாழவேண்டிய சூழல் ஏற்பட்டது.

நகர்ப்புறங்களில் உயிர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாவிடினும் சற்றுப் பயம் குறைந்திருந்தது. ஷெல்லடி நகர்ப்புறத்தில் இல்லை. சுந்தரத்தார் குடும்பமும் வன்செயலினால் பாதிக்கப்பட்டு அகதியாகி முகாமில் தஞ்சமாகியது. பின்னர் வாடகை வீட்டில் வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் கிராமத்துக்குப் போகும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். கயல்விழிக்குப் பொழுது போவது கடினமாக இருந்தது. நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைபறிச்சான் கிராமத்தில் மீள்குடியேற்றம் என்றதும் சுந்தரத்தார் பலமுறை ஊரைப் போய்ப் பார்த்து வந்தார். அவரது வீட்டை அவராலேயே அடையாளம் காணமுடியவில்லை. இடையிடையே போய் வளவினைத் துப்பரவாக்குவார். வேலியைச் சரி செய்வார். பற்றைகளை அகற்றுவார். வீட்டைப் பார்ப்பார். அலுப்புத் தட்டும் வந்து விடுவார். சனங்கள் குடியேறிக் கொண்டிருந்தார்கள். சில நாட்களாக அவர் போகவில்லை.

கதவில் தட்டும் சத்தம் கேட்டது. சுந்தரத்தார் வாசலடிக்குச் சென்றார். கதவைத் திறந்தார். செல்லச்சாமி நின்றிருந்தார். அவரை வரவேற்று இருக்கையில் அமரச்செய்தார். "அண்ணன்! நாங்க நாளைக்கு ஊருக்குப் போறம். உடைஞ்ச வீட்டைத்திருத்த நிறுவனங்கள் வந்திற்று. வீடுகளைத் திருத்தி குடியேற்றம் நடக்குது. உங்கட வீட்டைப் பார்த்துச் செலவு விபரத்தைத் தயாரித்துப் போட்டாங்க. நீங்க வந்தாச் சரி. எப்ப வரப்போறிங்க"? செல்லச்சாமி விசயத்தை மெல்ல விட்டான்.

"அப்படியா, நாளைக்கு நானும் வாறன். போய் வளவை வெளியாக்குவம். இஞ்ச வீட்டு வாடகை கொடுத்துக் கட்டாது. வீட்டுக்காரரின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுபடேலாது. தவித்த முயலடிக்கும் சந்தர்ப்பவாதிகள். உழைப்பும் இல்ல. நாளைக்கு முதல் லோஞ்சிக்குப் போவம். என்ன"? சுந்தரத்தார் செல்லச்சாமியிடம் கூறிவைத்தார். அவரும் சரி யென்று ஏற்றுக் கொண்டார். ஊருக்குப் போவதையிட்டு விவாதித்தார்கள்.

## 3

கட்டைபறிச்சான் நல்ல அழகான கிராமம். கொட்டியாரக்குடாக் கடல் நிலத்தைக் குடைந்து சிற்றாறைத் தூதனுப்பி நிலம்பிடிக்க முயற்சிக்கிறதா? உப்புநீர் சிற்றாறு ஊரைச் சுற்றி ஓடுகிறது. வெண்கண்ணா மரங்களின் மூச்சுவேர் வெளிக்கிளம்பிக் குத்தீட்டிகளாக நிமிர்ந்து நிற்கும். கண்டல் கண்ணாவின் நீண்ட காய்கள் நீரிலாடி நீந்தி வரும். காய்கள் ஆற்றோரத்தில் அடைந்து அங்கேயே முளைவிட்டு நிமிர்ந்து நிற்கும். உச்சிக் கிளையில் மீன்கொத்திப் பறவைகள் காவலிருக்கும். கொக்குநிரை உப்புநீர் சிற்றாற்றின் கரையோரம் தவமிருக்கும். சிறு தோணிகள் உலாப்போகும். நீரின்மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதக்கும் மிதவைகளைப் பிடித்து இழுப்பார்கள். மீன் நண்டு வலையோடு வரும். இறால் மலிவாகக் கிடைக்கும். தோட்டம் நிறைந்து பயிர்கள் சிரிக்கும் இராசவள்ளிக் கிழங்கு நிலத்தடியில் அடைகாக்கும்.

வாழை, கமுகு மரக்கறிவகைகள் விளைந்து நிற்கும். சிறுகுளங்களில் இருந்து தண்ணீர் வாய்க்கால் வழி பாய்ந்து வயல்விளைந்து கிடக்கும். செல்வச்செழிப்போடு திளைத்த கிராமம். வந்தார்க்கெல்லாம் அள்ளிக் கொடுக்கும் மக்கள், இன்று யாரும் கிள்ளிக் கொடுத்தால் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு அகதிகளாக்கப் பட்டுவிட்டார்கள். கயல்விழியின் மனக்கண்முன் கட்டைபறிச்சான் கிராமம் படமாக விரிந்து ஓடியது.

இறால் பாலத்துக்கப்பால் இருக்கும் அம்மன்கோயிலில் வருசத்துக்கு ஒருமுறை வேள்வி நடக்கும். மடைபோட்டுச் சாமியாடி, பொங்கல் பொங்கி மக்கள் எல்லோரும் சேர்ந்து மகிழ்வார்கள். இளைஞர்களிடையே மந்திரப் போட்டிகள் நடக்கும். சிவம் சாமியாடி ஆசிரியர்களுக்கு வாழைப்பழங்களைச் சீப்போடு தூக்கி வந்து " ம்..இந்தா" என்று கொடுப்பார். பாடசாலைப் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம். இறால் பாலத்தில் தட்டையான கற்களைத் தண்ணீரில் சாய்வாக எறிந்தால் அது தெத்தித் தத்தித் தூரத்துக்குப் போகும். அதை ரசிப்பது வேடிக்கையாய் இருக்கும். அவற்றை நினைந்து மகிழ்ந்தாள். எல்லாம் பகற்கனவாய்ப் போய்விட்டது.

அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் சுந்தரத்தார் எழுந்து விட்டார். அவருக்கு அது பழக்கப்பட்டதுதான். தங்கம் வீடு வாசலைப் பெருக்கித் தேநீர் தயாரித்து விட்டார். கயல்விழி அதிகாலையிலேயே விழித்து விட்டாள். ஆனால் அவள் படுக்கையிலேயே இருந்தாள். அவளது எண்ணமெல்லாம் எதிர்காலம் பற்றியதாக இருந்தது. கிராமத்து மக்கள் அதிகாலையிலேயே எழுந்து விடுவார்கள். சுறுசுறுப்பாக வேலைசெய்வார்கள். உடல் உறுதியாக இருக்கும். மனம் தூய்மையாக இருக்கும். வன்செயல்களினால் அவர்கள் தளர்ந்து நொடிந்து விட்டார்கள். அவளது அசைவை தங்கம் உணர்ந்து கொண்டார். "கயல் தேநீர் தரட்டா பிள்ள". கேட்டவாறே ஒரு கோப்பைத் தேநீரைக் கொடுத்தார். எழுந்து அவளும் புறப்படத் தயாரானாள். பல்கலைக்கழகத்தில் இருந்து வந்து பலநாட்களாகிவிட்டன. திருமங்கையிடம் இருந்து செய்தியொன்றும் வரவில்லை.

சமதரையில் கிராமத்தில் காலாற நடந்து திரிந்தவளுக்குப் புறாக்கூட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வெறுத்தது. படிக்கும் வரைக்கும் தோழிகளோடு அரைட்டையடித்து மகிழ்ந்தவளுக்கு வாழ்க்கை 'போர்' அடித்தது. பகலில் நூல்நிலையம் செல்வாள். பத்திரிகைகளைப் புரட்டி வேலைவாய்ப்பு விளம்பரப் பகுதிகளில் கண்களைச் செலுத்துவாள். தெரிந்த முகங்களைத் தேடுவாள். குறிப்பாக அந்தப் பழகிய முகத்தைத் தேடுவாள். தேடும் பொருள் கண்களில் படாது. கவலையோடு திரும்புவாள்.

வீட்டில் அம்மாவுக்கு உதவிகள் செய்வாள். உணவின்பின் வீட்டில் அடைந்து கிடப்பாள். புத்தகங்கள்தான் அவளுக்கு தோழிகள். நல்ல நூல்களைத் தேடி வாசித்தாள். நல்ல புத்தகங்கள் சிறந்த நண்பர்கள் என்பதை உணர்ந்து கொண்டாள். வாழ்க்கையின் சுழிவு நெளிவுகளை படிப்படியாக அறிந்து கொண்டு வந்தாள். காற்று வசதியற்ற நகரத்து வாழ்க்கை அவளுக்கு அலுப்பைக் கொடுத்தது. தனது பொழுது வீணே கழிவதை உணர்ந்தாள். ஊருக்குப்போனால் பயனுள்ள வழிகளில், உற்சாகமாகப் பொழுதைக் கழிக்கலாம். ஒருமுடிவுக்கு வந்தாள்.

“அப்பா நானும் ஊருக்கு வரப்போறன். எனக்கு ஊரைப்பார்க்க ஆசையாய்க் கிடக்கு. நான் வந்தால் உதவியாகவும் இருக்கும்”. கயல்விழி ஆசையோடு கேட்டுக்கொண்டாள். மகளின் சொல்லைத் தட்டவும் மனமில்லை. “இஞ்சாருங்க. நானும் வாறன். எல்லாருமாய்ப் போய் வருவம். வீடுவாசலைப் பார்த்து துப்பரவு செய்தால் நிம்மதியாக போய்க் கிடக்கலாம்.” தங்கம் சொல்லிக் கொண்டே காலைச் சாப்பாட்டைத் தயாரித்தார். “எதுக்கும் கொஞ்சம் உண்டனச் சமையுங்க. பகலுக்கும் உதவும்.” சுந்தரர் முன்னெச்சரிக்கையாகச் சமிக்ஞை கொடுத்தார். தாய்க்குக் கயல்விழி உதவினாள். “நீ அங்கால போ பிள்ள. நான் ஒரு நொடியில செய்துபோடுவன். நீ வெளிக்கிடு”. கூறிக்கொண்டு தனது வேலையில் ஈடுபட்டார். சுந்தரத்தார் வேண்டிய பொருட்களை எடுத்துக் கொண்டார். “தங்கம்! சிலநேரம் வேலைகள் முடியாட்டி ஒரு நாளைக்கு நிற்கவேண்டி வரலாம். நான் நின்று வேலைய முடித்துத்தான் வருவன். நீங்க திரும்பிட வேணும்.” சுந்தரத்தார் சொல்லிக் கொண்டு ஆயத்தமானார்.

ஆட்டோவில் ஜெட்டிக்குப் புறப்பட்டார்கள். செல்லச்சாமி ஜெட்டியில் காத்திருந்தார். பெரிய கியு நின்றது. “இன்டைக்குச் சந்தோசமாயிருக்கு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கயல்விழியும் ஊருக்கு வாறதால லோஞ் இல்லை. கப்பல்சேவைதான் இருக்காம். அது எட்டு மணிக்குப் புறப்படுமாம்''. செல்லச்சாமி உற்சாகத்தோடு விளக்கினான். சுந்தரத்தாருக்கு உள்ளூரச் சந்தோசம். கப்பலில் போவது பயமில்லை. பாதாளமலைப் பகுதி சுழியுள்ள இடம். காற்றும் வீசும். பயங்கர அலையும் மோதும். லோஞ் நடுக்கடலில் அலைகளில் மோதுண்டு ஆட்டும். மகள் பயந்து விடுவாள். பயம் அவரை உறுத்தியது. பெற்ற மனம் பித்து என்பார்கள். மனித மனத்தின் இயல்புகள் அப்படித்தானே. அடையாள அட்டையைக் கொடுத்துப் பதிந்தார்கள். பணத்தைக் கொடுத்து ரிக்கட் எடுத்தார்கள். ஏறுவதற்கு வசதியாகக் கப்பல் ஜெட்டி ஓரத்தில் தரித்து நின்றது. அப்படியே கப்பலின் உள்ளே ஏறிப் பார்த்தார்கள். சுமார் இருநூறு பயணிகள் பயணிக்கலாம்.

கயல்விழிக்குக் கப்பல் பயணம் புதியது. லோஞ்சில் பயணம் செய்திருக்கிறாள். ஒவ்வொரு முறையும் பயணம் செய்யும் போதும் உயிர் போய் திரும்பி வரும் உணர்வைப் பெறுவாள். எனினும் பயணம் செய்யத்தானே வேண்டும். இன்று சற்று வித்தியாசமாக இருந்தது. கப்பலில் யன்னல் ஓரமாக இருக்கையில் இருந்தாள். அம்மா அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டார். யன்னலின் ஊடாகத் திருகோணமலையின் இயற்கைத் துறைமுகத்தைப் பார்த்த வண்ணம் இருந்தாள். பயணிகள் கப்பலில் ஏறிக்கொண்டனர். அப்பா முன்னால் இருக்கையில் இருந்தார். எட்டரை மணிக்குக் கப்பல் புறப்பட்டது. பிரச்சினைகள் தொடங்குவதற்கு முன் துறைமுகத்தின் வழியே பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன. அது குறுகிய தூரம். ஆனால் பிரச்சினை தொடங்கியதும் அவ்வழி மூடப்பட்டுவிட்டது. தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பது போல் இப்போது பிறிமா ஜெட்டிவரை சென்று மலைத்தொடரைச் சுற்றித் திரும்ப வேண்டும்.

கப்பல் நிறையப் பயணிகள் இருந்தனர். பலர் பெரும்பான்மை இனத்தவர்கள். நம்நாட்டுப் பிரசைகள். அவர்களுக்கு 'ரூறிஸ்ற்' அந்தஸ்த்துக் கொடுத்து ஒரு மாயையைத் தோற்றுவித்திருந்தனர். அவர்களும் வெளிநாட்டு மக்களைப் போல் தமது கலாசாரத்தை மறந்து சுற்றுலாப் பயணிகளாக கப்பலில் பயணம் செய்தனர். விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து நாட்டைமீட்டு விட்டோம். பயங்கரவாதம் முடிந்து விட்டது. நாட்டைக் கைப்பற்றி விட்டோம். என்ற அரச அறிவிப்புப் பரவியது. அதனைத் தொடர்ந்து ' இலங்கையின் வடக்குக் கிழக்கு' வேறொரு பிரதேசமாக விளக்கம் கொடுபட்டுள்ளது. வேறொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினைக் கைப்பற்றி வெற்றிகொண்டதாக ஒரு எண்ணம் பெரும்பான்மை மக்களிடம் இருந்தது. இப்போது திருகோணமலை உள்நாட்டுப் பெரும்பான்மை இன மக்களுக்குச் 'சுற்றுலா மையமாக' ஆகிவிட்டது. தினம் தினம் ஆயிரக்கணக்கான மக்கள் கப்பலில் பயணிக்கிறார்கள்.

கப்பல் ஆட்டம் இல்லாது சென்றது. பாதாளமலையடியில் அலைகள் ஆர்ப்பரித்து எழுந்தன. கப்பலும் மெதுவாக அசைந்தது. தொட்டிலில் இட்ட பிள்ளைகளாக பயணிகளும் அசைந்தனர். அலைகள் கப்பலில் மோதின. மோதிய வேகத்தில் அலை உடைந்து நீர்த்திவலைகள் மேலெழுந்து தூறலாய்ப் பரந்தது. நீலக்கடலில் பால்போல் நுரை பரவிச்சிரித்தது. கயல்விழி பார்த்து ரசித்தாள். பாளைச் சிரிப்பு உதிர்ந்தது. அவளது அதீத கற்பனை சிறகடிக்கத் தொடங்கியது. அவளது மனம் கட்டைபறிச்சானை நோக்கிப் பறந்தது.

சுந்தரத்தாரின் வீடு அழகானது. அவரது காணியின் கிழக்கெல்லையாக உப்பு நீர்ச்சிற்றாறு ஓடுகிறது. ஆறுதான் கிழக்கெல்லையின் வேலி. தென்னைகள் வரிசையாகக் காட்சி தரும். மா, பலா, வாழையென எங்கும் கனிதரு மரங்கள். 'தெங்கும் இளநீரும், தேமதுர முந்திரியும்' என யாழ்நூலில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் குறிப்பிடுவது போல, இரண்டு ஏக்கர் காணியில் அவரது இராச்சியம் அரசோச்சியது. சுற்றிவரத் தோட்டப்பயிர்கள் காய்த்துப் பூத்துக் கலகலக்கும். காணியில் ஆழமான கிணறு இருந்தது. நிலத்தடி நீர் பயிர்களுக்குச் செழிப்பூட்டியது. வீட்டைச் சுற்றிப் பூந்தோட்டம். வண்ண வண்ண ரோஜாச் செடிகளை கயல்விழி வளர்த்திருந்தாள். குரோட்டன் செடிகளைத் திட்டமிட்டுக் கச்சிதமாக நட்டிருந்தாள். பூஞ்செடிகள் பூத்திருக்கும். இடையிடையே கத்தரி, மிளகாய் கண்சிமிட்டும். கலப்புப் பயிர்ச்செய்கையில் நாட்டம் அவளுக்கு. மரவள்ளிச் செடிகள் ஒரே மட்டமாக அழகாக வளர்ந்திருக்கும். இராசவள்ளிக் கொடிகள் சிறு தடிகளைச் சுற்றிப் பின்னிப் படர்ந்திருக்கும். வீட்டுத்தோட்டம் மேலதிக வருவாயைக் கொடுத்தது.

கட்டைபறிச்சான் நாகதம்பிரான் கோயில் பெருமைவாய்ந்தது. உற்சவ காலங்களில் திருகோணமலை மாவட்டக் கிராமங்களில் இருந்து மக்கள் வருவார்கள். நேர்த்தி வைத்தவர்கள் பயபக்தியோடு விரதமிருந்து பொங்கலிடுவார்கள். இனசனங்கள் தங்கள் உறவுகளோடு சேர்ந்து கொள்ளும் நிகழ்வாக விளங்கியது. இரவு முழுவதும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். வீரசிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டு ஊரைக்கலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும். அன்னலக்சுமி, சந்தானலெக்சுமி குழுவினரின் இசைமழை உள்ளங்களைக் கவர்ந்தெடுக்கும். அந்தக்குழுவில் அம்பிகாவோடு கயல்விழியும் சேர்ந்து பாடுவாள். பல்லிசை விற்பன்னர் விபுணசேகரத்தின் பல்லிய வாத்தியக் கருவிகளின் இன்னிசை காற்றில் பரவும்.

'கத்தும் கடலும் கவிபாடித் தாலாட்டும்
முத்தம் எங்கள் மூதூர் பிரதேசத்தின்
கட்டைபறிச்சானில்
காலிடறும் பக்கமெல்லாம்
இசைபரந்து களிப்பூட்டும்.
இளந்தென்றல் பரவிவரும்
கட்டை பறிச்சானைத்
தழுவிவரும் பூங்காற்றுப்
பட்டாலே போதும்
பாட்டு வந்து கூத்தாடும்
காலாற வீதிகளில் கதைத்து நடந்தாலே
கொண்ட மனக்கவலை
குலைந்தோடிப் போய்விடுமாம்'

எனக் 'கேணிப்பித்தன் கவிவரி'களைக் கட்டைபறிச்சான் கனகசிங்கம் பாடி அசத்துவார்.

அந்தக் கவிதை வரிகளை அசைபோட்டுப் பார்த்தாள். என்ன அற்புதமான காலம். எல்லாம் கனவாகிப் போய்விட்டன. கிராமத்தின் வாழ்க்கை முறை 'கல்லெறிபட்ட தேன் கூடாகக்' கலைந்து போயிற்று. அவளது எண்ணத்தறி கப்பலின் அசைவால் சிதறியது. "அம்மா! இந்த இடத்தில்தான் லோஞ் புரண்டது. கனபேர் செத்தவங்கள்." கயல்விழி நினைவு கூர்ந்தாள். தங்கத்துக்குப் பயம். "அதையேன் நினைக்கிறாய். அந்தக் கோணேசரை நினைத்துக் கொள். ஒன்றும் வராது". அவளுக்கு உள்ளூரப் பயம். ஆனால் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாது மகளின் சிந்தனையை வேறு பக்கம் திசைதிருப்ப முனைந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

"கயல்! எப்படிப் படிப்பெல்லாம். சோதினைய நல்லாச் செய்தியா? எப்ப முடிவு வரும்.? நீயும் ஒரு வேலைக்குப் போனியெண்டா அப்பாக்கும் கொஞ்சம் பாரம் குறையும்". தங்கம் தனது பாரத்தை இறக்கினாள். கயல்விழிக்கு உயர்ந்த மலையிலிருந்து பாதாளத்துக்குத் தன்னைத் தள்ளிவிட்ட பிரமை ஏற்பட்டது. எதிர்பாராத பெரிய பிரச்சினையை அம்மா அறிமுக மாக்கிவிட்டார். 'வேலை தேடும் படலத்தைப் பார்' என அம்மா மறைமுகமாக எச்சரித்து விட்டார். படிக்கும்வரை பிரச்சினை இல்லை. படித்து முடித்தபின்தான் விலங்கு மாட்டப்படுகிறது. சமூகம் ஒரு மனிதனை எப்படி நோக்குகிறது. "பல்கலைக்கழகம் போனால் சோதனை பாஸ்தான். நமது நாட்டிலதான் படிக்கிறதுக்கு வாய்ப்புகள் குறைவு. நீ கவலப்படாத. றிசல்ட் இந்த மாதக்கடசியில் வந்திரும். பிறகு வேலைதேடுவம்". கடலைப் பார்த்தபடி கூறினாள்.

கயல்விழியின் மனம் பாதாளமலைக் கடலாக விரிந்தது. அதில் வீசும் அலைகளாக எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து, ஓங்கி ஆர்ப்பரித்துச் சிலிர்த்து மோதி உடைந்து சென்றன. பரீட்சை முடிவு வந்து விடும். அதன்பின் என்ன செய்வது? எங்களுக்கு முதல் சித்தியடைந்து வெளியேறிய பலருக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. நமக்கு எப்போது கிடைக்கும். என்ன கல்வித்திட்டம்.? வேலைக்கேற்ற படிப்பு இல்லை. படிப்புக்கேற்ற வேலையில்லை. வேலையில்லாப் பட்டதாரிகள் பெருகிவிட்டார்கள். எப்படி அப்பா அம்மாவைக் காப்பாற்றுவது? கேள்வி மேல் கேள்விகள் எழுந்த வண்ணம் இருந்தன.

. "வாழ்க்கை என்பது நாம் நினைப்பதுபோல் மலர்கள் பரப்பிய பஞ்சணைந்த படுக்கையல்ல. அது முட்கள் பரப்பிய கற்பாறைப் படுக்கை. பள்ளமும் படுகுழிகளும் நிறைந்த கரடுமுரடான பாதை. அது ஒரு பாம்புப் புற்று. புற்றுக்குள் என்ன, எது இருக்கும், எப்போது வெளிவரும்?. இவை புரியாத புதிராகவே இருக்கும். வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தால்தான் அதன் தாற்பரியம் புரியும். கோழைகளால் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் உங்களைப் போன்ற புத்திசாலிகளுக்கு அது எளிதாகிவிடும். நீங்களும் சவால்களைக் கண்டு பின்வாங்கினால் சமூகம் குட்டிச் சுவராகிவிடும்." பல்கலைப் பேராசிரியை பத்மா இறுதிப்பரீட்சை எழுதி வெளியேறும் மாணவியர்களுக்கு பேருரை நிகழ்த்தினார். அதனை நினைந்து கொண்டாள்.

சிறுவர்களாக இருந்திருந்தால் எப்போதும் கவலையை மறந்து சந்தோசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழலாம். பணக்கார வர்க்கத்துக்கும் பிரச்சினை குறைவு. அதேபோல் ஏழையாகப் பிறந்தவருக்கும் பிரச்சினைகள் குறைவாகவே இருக்கும். ஆனால் வசதியற்ற நடுத்தர வர்க்கத்தில் உள்ளவர்களுக்குத்தான் பிரச்சினைகள் அதிகம். கயல்விழியின் உள்ளத்தில் அடுக்கடுக்காகப் பல ஆராய்ச்சிகள் வந்து வந்து போயின. இந்த நாட்டில் அடுக்கடுக்காக வந்து போன பேரழிவுகளை நினைந்து கொண்டாள். சுனாமியின் தாக்கமும் அதன் விளைவுகளும் வந்து போயின. சுனாமி வந்தபொழுது விடுதலைப்புலிகள் சிங்களப் பகுதி மக்களுக்கு உதவி செய்ததையும் எண்ணிப்பார்த்தாள். அப்போது சமாதானம் வந்துவிட்டதாகவே எண்ணினாள்.

வலப்பக்கம் அவள் கண்கள் பார்வையைப் பரவவிட்டன. கொட்டியாரக் குடாக்கடலில் மகாவலியின் சங்கமம் தெரிந்தது. மத்திய மலைநாட்டில் உற்பத்தியாகிப் பல சிற்றாறுகளைத் தன்னோடு இணைத்துக் கொண்டு கடலோடு சங்கமிக்கிறது. சங்கமிக்கும் இடம் மிக ரம்யமானது. அது பாய்ந்து வரும் பாதையெல்லாம் எவ்வளவு செழிப்பாக இருக்கும். மகாவலி என்றும் வற்றாத ஜீவநதி. இலங்கையின் மிக நீண்டநதி. அதனூடாகக் கடலில் பாயும் தண்ணீரைத் தடுத்து நீர்த்தேக்கங்களை அமைத்தால் நமது நாடு சொர்க்கமாகும். இலங்கையில் ஓடும் நதிகளையிட்டு அவள் மனம் யோசித்தது. எல்லா நதிகளையும் ஒன்றோடு ஒன்றாக இணைத்து வலைபின்னல் ஏற்படுத்தினால் நமது மக்களின் வாழ்க்கை ஏற்றம் பெறும். இதையிட்டு எந்த அரசியல்வாதிகளும் நினைப்பதில்லை. இந்தநாட்டு நதிகளின் நீரைக் கடலுக்குள் விடாமல், பயிர் செய்நிலங்களுக்குப் பாய்ச்சி வளம் பெருக்கும் காலம் வருமா? கற்பனையில் மூழ்கினாள்.

“மரஞ்செடி கொடிகளும் பேசுமாமே. அவற்றின் மொழி எதுவாயிருக்கும்.? மரஞ்செடி கொடிகளாகப் பிறந்திருந்தாலும் நிம்மதியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் நான் மனிதகுலத்தில் பிறந்து விட்டேனே. நான் செய்த தவப்பேறா? இல்லை இவை யாவும் முன்னம் முற்பிறவியில் செய்த பாவச்செயல்களா?” அவளது சிந்தனை விரிந்தது. அவளது விழிகளில் தூக்கத்தின் தாக்கம் எள்ளளவும் இல்லை. யோசித்து யோசித்து எண்ணங்கள் மனக்கடலில் வந்து மோதி உடைந்து, பின்வாங்கி அப்படியே மறைந்து பின் புதிதாக உத்வேகத்தோடு வந்து மோதி உடைந்து போகும். “என்னைப் போல் எத்தனை பாவப்பட்ட ஜீவன்கள் இந்த உலகத்தில் இருக்கின்றனவோ?” அவள் மனம் சுழன்றடித்தது.

பாதாளமலையைக் கடந்து கப்பல் பயணித்தது. ஆட்டமில்லாது கப்பல் நீந்திக் கொண்டிருந்தது. உல்லாசப் பயணிகள் படு சந்தோசமாகக் காட்சியளித்தார்கள். கப்பலின் மேல்தளத்தில் இருந்து ரசித்துக் கதைத்தார்கள். சம்பூர் அவர்கள் வாயில் 'சாம்பூரா'கப் புகுந்து விளையாடியது. காலாகாலமாகத் தமிழ் மக்களின் பிரதேசங்களாகக் கிடந்த இடங்கள் இப்போது அழிந்து போய்க்கிடக்கின்றன. தமிழ் மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுவாசல்களையும் சொத்துப்பத்துக்களையும் இழந்து அகதிகளாகிவிட்டனர். சம்பூர் அதியுயர் பாதுகாப்பு வலயமாகிவிட்டது. சம்பூர் மக்கள் பலகிராமங்களிலும் சிதறிக்கிடக்கின்றனர். சம்பூருக்குள் இராணுவம் மட்டும் உள்ளது. சம்பூர் பத்திரகாளி அம்மன் கோயிலின் நிலை எவ்வாறு இருக்கும்? நினைக்கக் கவலையாக இருந்தது.

சொந்த ஊரைப் பலவருடங்களுக்குப் பின் பார்க்கப் போகிறாள். ஊர் எப்படிக் கிடக்கும்?. மக்கள் இல்லாத ஊர் காடாக இருக்கும். அவள் மனம் விரைந்தது. ஒரு இடத்தில் இருந்து கொண்டே இந்த மனம் உலகமெல்லாம் சுற்றி வருகிறதே. இந்த மனம் பொல்லாதது. எந்தத் தடை போட்டாலும் அவற்றையெல்லாம் தகர்த்துப் போய்விடும். கற்பனை எனும் தேரேறி கயலின் மனம் பறந்தது. அவள் இப்போது மேலே இருந்தவாறு தனது கல்லூரியைப் பார்க்கிறாள். தான் படிக்கும்போது கடமையாற்றிய ஆசிரியர்களைப் பார்க்கிறாள். தனது வகுப்பறைகளுக்கு விரைகிறாள். அந்தப்பரந்த வளாகத்தினைச் சுற்றி வலம் வருகிறாள். அதிபர் கதிர்காமத்தம்பி வேட்டியும் வாலாமணியுடனும் வளாகத்தை வலம் வருகிறார். எத்தனை ஆசிரியர்கள் கற்பித்திருந்தாலும் ஒருசிலர் மட்டுந்தானே மனதில் நிலைத்து நிற்கிறார்கள்.

சுற்றிவர வகுப்பறைக் கட்டிடங்கள். பாடசாலைக் கட்டிடங்களின் மத்தியில் பாடசாலைத் தோட்டம். தோட்டத்தில் பலவகைப் பயிர்கள். அதிகாலையில் அருளானந்தமும், தங்கராசாவும் வந்து வகுப்பெடுப்பார்கள். விபுணசேகரம் ஆசிரியர் வந்துவிடுவார். சில மாணவர்களும் வந்து தண்ணீர் இறைப்பார்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் சிறு நிலம் ஒதுக்கப்பட்டு அதில் பயிர்கள் நடப்பட்டிருக்கும். வகுப்புக்களுக்கு இடையே போட்டி. மாணவர்கள் தாமே இயங்கினார்கள். குரோட்டன் செடிகள் வகுப்பறைக் கட்டிடங்களுக்கு வெளியே நின்று அழகூட்டின. மூன்று ஜீவரத்தினங்கள் ஆசிரியர்களாக இருந்தார்கள். ஒரு ஜீவரத்தினம் உதவி அதிபராக இருந்தார். மற்றவர் மாணவர்களின் கட்டொழுங்கில் கவனமாக இருந்தார். அடுத்தவர் ஆங்கிலம் கற்பித்தலில் ஈடுபட்டார். அவர்களது வீடுகளும் கட்டைபறிச்சானில் இருந்தன.

கயல்விழியின் வீடும் அங்குதான் இருந்தது. காலையில் ஒன்று கூடலின்போது ஆசிரியர்களின் நற்சிந்தனை நடைபெறும். அதிபர் தலைமையில் மாணவர்கள் அணிவகுத்து நின்றார்கள். "கல்வி என்பது வெறும் புத்தகப்படிப்பு மட்டுமல்ல. அறிஞர்களுடைய அறிவுரைகள், படிப்பினைகள் புத்தகங்களில் நிறைந்துள்ளன. நாம் அவற்றைப் படித்து அதிலுள்ளவற்றை வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். படித்தவற்றை நடைமுறைப் படுத்தாவிட்டால் கற்றதன் பயனை அனுபவிக்கமுடியாது. படித்தவற்றை அனுபவமாக்க வேண்டும். படித்தபடி நடக்க முனையுங்கள்". அதிபர் கதிர்காமத்தம்பி கூறிய கூற்றுக்கள் கயல்விழியின் காதுகளில் ஒலித்தன. உயர்தரப் பரீட்சைக்காகப் படிக்கும்போதே நாட்டுப் பிரச்சினை தொடங்கிவிட்டது. பொதுவாக கிராமப் புறங்களே பாதிக்கப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களின் கண்மூடித்தனமான செயல்களால் கட்டொழுங்கு சிதைந்தது. படிக்கின்ற மாணவர்களை இயக்கங்கள் இழுத்தெடுத்தன. கட்டாயமாக இழுத்தெடுத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் விருப்பமில்லாது சென்றார்கள். அவர்களது உள்ளங்கள் மரத்துப் போய்விட்டன. ஒருவித விரக்தியுடன் வாழ்க்கையை எதிர்கொண்டார்கள். தங்களுக்கு மரணம் நிச்சயிக்கப் பட்டுவிட்டது. எதையும் செய்யலாம் என்ற துணிச்சல் பிறந்து விட்டது. நல்லது கெட்டது தெரியாத பருவத்தில் தாங்களாகவே முடிவெடுக்கத் தெரியாமலிருந்தார்கள். கற்றவர்களின் அனுபவங்களைப் பெறமுடியாத நிலையில் இருந்தார்கள். தலைமைப்பீடங்களின் கொள்கைகளைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியாத பருவத்தில் இருந்தார்கள். பல்லாயிரக் கணக்கான இளைய தலைமுறையினரின் உயிர்களை இயக்கங்கள் பலிகொண்டன.

"கயல்! என்னம்மா யோசிக்கிறாய்"? அம்மாவின் குரல் கேட்டுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். "இனி இறங்குவம். மூதூர் வந்தாச்சு. இப்ப வஸ் இருக்காம். இறங்கின கையோடு வஸ்சில போவம். இல்லாட்டி ஆட்டோவிலதான் போகவேணும். இருநூறு ரூபா கேப்பாங்க. கெதியாக இறங்கிப் போவம்." அம்மா துரிதப்படுத்தினாள். "கப்பல் பயணம் நல்லது. விரைவாக வந்து விட்டது. அம்மா இன்னும் கரைக்கு வரவில்லை. அவசரப்படாதிங்க. ஆறுதலாய் இறங்குவம்". தாயைச் சாந்தப்படுத்தினாள். கப்பல் கரையை அடையும் முன்னரே சனங்கள் இறங்குவதற்காக எழுந்து நின்றார்கள். இந்த மக்களுக்குப் பொறுமை என்பதே கிடையாது.

மூதூர் ஜெட்டியில் இறங்கினார்கள். ஜெட்டிப் பாலம் மரப்பலகைகளால் ஆனது. பரவியிருந்த தடித்த பலகைகளின் இடையில் அதிக இடைவெளிகள் தெரிந்தன. அந்த இடைவெளிக்குள் அம்மாவின் பாட்டா புகுந்து இடறச்செய்தது. கயல் அவதானமாக நடந்தாள். மூதூர் மாற்றம்பெற்றிருந்தது. ஓலைக்குடிசைகள் ஒழிந்து கல்வீடுகள் முளைத்திருந்தன. ஆனால் தெரிந்த முகங்களைக் காணமுடியவில்லை. இப்போது கெடுபிடிகள் தளர்ந்திருந்தன. உடலில் ஆயுதங்கள் இருக்கின்றதா, என ஆட்களைத் தடவிப்பார்ப்பார்கள். சிலர் தடவிப்பார்ப்பது போல் தழுவியும் பார்த்த ஈனச்செயல்கள் பாதுகாப்பு என்ற போர்வையில் நடந்தன. ஆட்களைத்தடவி விடும் தொல்லை இல்லாதிருந்தது. எங்கும் படைவீரர்கள்தான் நிறைந்திருந்தார்கள். வெளியில் வந்தார்கள். நிம்மதிப் பெருமூச்சுப் பறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

மக்கள் முண்டியடித்து வஸ்சில் ஏறினார்கள். கொண்டுவந்த பொருட்களை வஸ்சில் ஏற்றமுடியவில்லை. "எப்படிப் போகப்போறம். சரியான சனமாக்கிடக்கு. ஆட்டோவில போவம். பிள்ளையும் களைச்சுப் போனாள்." சுந்தரத்தார் யோசித்தார். தங்கத்தின் முகமும் ஆமோதித்தது. ஆட்டோவை அழைத்தார். பேரம்பேசி ஏறிக்கொண்டார்கள். ஆட்டோ குறுக்குச் சந்துகளால் புகுந்து புறப்பட்டது. குதிரைச் சவாரி செய்வது போலிருந்தது. வீதிகள் பள்ளம் படுகுழிகளோடு படுத்திருந்தன. கயல்விழிக்கு ஆச்சரியமாக இருந்தது. இது நான் பார்த்த மூதூரா? எவ்வளவு மாற்றம். தெரிந்த முகங்களைக் காணமுடியவில்லை. பற்றைக்காடுகள் மண்டிக்கிடந்த பகுதிகள் குடிச்செறிவுள்ள பகுதிகளாக மாறிவிட்டன. ஆனால் தமிழ் மக்களின் குடிச்செறிவினைக் காணமுடியவில்லை. ஜெட்டியிலும் தமிழ்க் கடைகளைக் காணவில்லை.

குறுக்கு வழி கட்டைபறிச்சான் ஆற்றுப் பாலத்தை இலகுவில் காட்டியது. ஆற்றுக்கப்பால் தமிழ் மக்களின் நடமாட்டம் தெரிந்தன. வீதியின் கரையோரம் பற்றைக் காடுகள். பல்வகைத் தாவரங்கள் நெடிதாக வளர்ந்திருந்தன. கண்டல் தாவரங்கள் செழித்திருந்தன. கட்டைபறிச்சான் கிராமம் இதுதானா? அடையாளம் காணமுடியாதுள்ளது. அழகான வீடுகள் எங்கே? சமதரையில் ஆங்காங்கே சில மரங்கள் மட்டும் தெரிந்தன. வேலிகள் இல்லை. தற்காலிகக் கொட்டில்களில் மக்கள் தஞ்சம் புகுந்திருந்தனர். பெய்த மழைநீர் வீதிகளிலும், தூர்ந்து போய்கிடக்கும் ஷெல்விழுந்த பள்ளங்களிலும் தேங்கிநின்றது. "அப்பா இது எந்தத் தெரு."? கயல்விழியால் அடையாளம் காணமுடியாதிருந்தது. அப்பாவிடம் கேட்டாள். சுந்தரத்தாருக்கும் தடுமாற்றமாகத்தான் இருந்தது. கற்பகவிநாயகர் கோயில் தெரிந்தது. அது உடைந்து கிடந்தது. அதனை அடையாளம் கண்டு கொண்டாள்.

விபுலானந்த வித்தியாலயம் விழுந்து கிடந்தது. அதனைத் தூக்கி நிறுத்த மக்கள் வந்து விட்டார்கள். ஆட்டோ சுந்தரத்தாரின் வீட்டுக் காணியில் நின்றது. பேசியவாறு பணத்தைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பினார்கள். மெதுவாக உள்ளே நடந்து சென்றார்கள். ஆளுயரத்துக்குச் செடிகள் வளர்ந்திருந்தன. வீட்டின் சிதைவுகள் எட்டிப் பார்த்தன. பலஆண்டுகளுக்குப் பின் தனது சொந்த வீட்டுக்கு வந்திருக்கிறாள்.

ஊரைவிட்டுப் போய் வருடங்கள் பல கழிந்து போயின. இப்போதுதான் மக்களைக் குடியேறுவதற்கு அனுமதித்து உள்ளார்கள். ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் ஆலயம் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு உதவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் இன்னும் வந்து சேரவில்லை. வந்தவர்களுக்கு வீட்டைத் திருத்துவதற்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது. பலர் திருத்த வேலைகளில் ஈடுபட்டுவிட்டனர். சுந்தரத்தாரும் வந்து விட்டார். கயல்விழிக்குப் புதியதொரு உலகில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. புதிதாகக் காடுகளை வெட்டிச் சேனைப்பயிர் செய்யும் உணர்வு பிறந்தது.

சுந்தரத்தார் வீட்டையும் திருத்துவதற்கு அனுமதி கிடைத்துவிட்டது. சுந்தரத்தார் திருத்த வேலைகளில் ஈடுபட்டார். வேலைக்கு ஆட்களைப் பிடித்தும், தானும் சேர்ந்தும் வளவினைச் சுத்தம் செய்து விட்டார். 'ஏரிக்கரை' அவரது ஓய்வு இல்லம். அதனைத் திருத்தி விட்டார். தற்காலிகமாகத் தங்குவதற்குக் கொட்டில் போட்டாகி விட்டது. செல்லச்சாமி கிணற்றை இறைப்பதற்குப் பம்செற் எடுத்து வந்தார். கிணற்றைத் துப்பரவு செய்தார்கள். கயல்விழியும் சேர்ந்து கொண்டாள். பல்கலைக்கழகத்தில் புத்தகங்களோடு கிடந்தவளுக்கு இங்கு அவற்றைத் துறந்து உடலுழைப்பில் ஈடுபடுவது சுகமாக இருந்தது.

"மகள் நீ அம்மாவோடு திருகோணமலையில் போயிரு. நான் இந்த வேலைகள முடிச்சிட்டு வாறன். பிறகு நமது சாமான்களை எடுத்துக் கொண்டு வருவம்." சுந்தரத்தார் கூறினாள். "அப்பா நானும் இங்கிருந்தால் நல்லது. நான் அங்க இருந்து என்ன செய்யிறது? இஞ்ச இருந்தால் உங்களுக்கு உதவியாக இருக்கும். இந்தச் சனங்களோடு பழகி வாழலாம். அழிந்த நாட்டில் புதிதாய்க் குடியேறுவது போலிருக்கிறது. இந்தத் தோட்டத்தை மாற்றியமைக்கப் போறன்". ஒரே பதிலாகச் சொன்னாள். சுந்தரத்தார் உலகையறிந்தவர். மகள் சொல்வதிலுள்ள உண்மையை உணர்ந்து கொண்டார். "தங்கம் நீ ஒருக்கா திருகோணமலைக்குப் போய் வீட்ட நல்லாப் பூட்டிப்போட்டு வந்தால் நல்லது". மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

"அதெல்லாத்துக்கும் ஏற்பாடு செய்து போட்டுத்தான் வந்தனான். பக்கத்து வீட்டு முத்தம்மாக்காட்டச் சொல்லிப்போட்டன். அவ பார்த்துக் கொள்ளுவா. தம்பிக்கும் சொன்னனான். அவரும் பார்த்துக் கொள்வார். நாங்க இந்த வேலைகளக் கெதியாச் செய்து முடிச்சிப்போட்டு இஞ்ச வந்திட வேணும்". தங்கம் சிதைவுகளை அப்புறப் படுத்திக் கொண்டே கூறினாள். தங்கள் வேலையைத் தாங்கள் செய்வதில் உள்ள திருப்தி மகத்தானது. அலுப்பில்லாது அயராது உழைத்தார்கள். முதலில் அடுக்களையைத் துப்பரவாக்கினார்கள். கிடந்த தடிகளை எடுத்துக் குசினியை திருத்தியமைத்தார்கள். பெரிய மண்டபத்தோடு கூடிய வீடு சிதைந்து கற்குவியலாகக் கிடந்தது. கற்களை அப்புறப்படுத்தினார்கள். நடு அறையின் சுவர்கள் தப்பியிருந்தன. சுவர்கள் வெடிக்கவில்லை. கூரையில்லாது இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அறையினைத் துப்பரவு செய்தார்கள். 'யூ.என்.எச்.சி.ஆர் அலுவலர்கள் கூடாரத்துக்குரிய படங்கு கொடுத்தார்கள். அதனை விரித்து அந்த அறையின் மேல் விரித்தார்கள். முறிந்து கிடந்த வீட்டுக் கைமரங்களைச் சுந்தரத்தார் பொருத்தினார். ஒரு நீளமான கைமரம் உருவாகியது. அதனை அறையின் மத்தியில் வைத்து உயர்த்திவிட்டார். பார்ப்பதற்குக் கூம்பு வடிவில் தெரிந்தது. "அப்பா இது பிரமிட் கூடாரம்" கயல்விழி சிரிப்போடு சொன்னாள். "அதென்ன பிரமிட் கூடாரம்'? ஆச்சரியமாக் கேட்டார்.

"எகிப்திய மன்னர்கள் இறந்தபின் அவர்களது உடல்களையும், அவர்கள் விரும்பிய பொருட்களையும் பாதுகாப்பாக வைத்து கூர்நுனிக் கோபுரங்களைக் கட்டுவார்கள். அதற்குள் இருக்கும் பொருட்கள் அழியாது பாதுகாப்பாக இருக்குமாம். அதனைப் போல்தான் நமது வீடும் இருக்கிறது." அவள் விளக்கமாகக் கூறினாள். அவர் கேட்டாரோ கேட்கவில்லையோ தெரியாது. தனது வேலையில் மும்முரமாக இருந்தார். படுக்கவும் இடந்தயாராகி விட்டது. கிணறும்தயார். குடியேறும் குடும்பங்களுக்குச் சமையலுக்கான பாத்திரங்களை ஒரு அரசசார்பற்ற நிறுவனம் வழங்கியது. தங்கம் அவற்றைப் பெற்று வந்தாள். தங்கத்தின் வழமையான கடமைகள் தொடங்கி விட்டன.

செல்லச்சாமி ஒரு பைநிறைய இறால் கொண்டுவந்தார். "அண்ணன் கயலும் வந்திருக்கு. அவளுக்கு இறால் பிடிக்கும். மலிவாகக் கிடச்சிது. வாங்கி வந்திருக்கிறன். கூறிக் கொண்டே கொடுத்தார். "சித்தப்பா இறால்பாலத்துக்குப் போகலாமா? போக விடுறாங்களா"? ஆச்சரியக் குறியோடு கயல்விழி கேட்டாள். அம்மன்நகரில சனங்கள் குடிவந்திற்றாங்கள். பாலத்தடியில 'ஆமிசெக் பொயின்ற்' இருக்கு. போறவாற ஆக்கள நோட்டம் விடுறாங்க. ஆனால் கரைச்சல் இல்ல. போய்வரலாம். பகல்நேரத்தில இறால் மீன் பிடிக்க விடுறாங்க". செல்லச்சாமி விளக்கினார். "ம்.... நமக்கு வந்த கேடு". தங்கம் புறுபுறுத்தாள்.

தங்கம் சுறுசுறுப்பானாள். இன்றைக்கு அவளுக்கும் ஒரு புத்துணர்வு ஏற்பட்டுவிட்டது. மூவரும் சேர்ந்து ஆளுக்கொரு வேலையைச் செய்தார்கள். ஆற்றோரத்தில் தேற்றாமரம் நிழல் பரப்பிநின்றது. அதனைச் சூழவுள்ள பகுதியை கயல் துப்பரவாக்கினாள். தங்கம் நிறுவனம் கொடுத்த பாயை விரித்து சாப்பாட்டுக்காகத் தயாரானாள். "முகத்தக் கழுவிக் கொண்டு வாங்க. சாப்பிட்டுப்போட்டு வேலை செய்யலாம்". அழைத்தாள். அப்போதுதான் கயல் பசியை உணர்ந்தாள். நல்ல பசியாய் இருந்தது. அம்மா சொன்னபடி செய்தார்கள்.

தேற்றாமரத்தின் நிழல் குளிர்ச்சியாய் இருந்தது. உணவு ருசித்தது. பசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருசியை அறியாது என்பார்கள். கயலுக்கு இன்று சாப்பாடு அருமையாகச் சுவைத்தது. "அப்பா இன்றைக்குத்தான் சாப்பாடு ருசி. இறால்கறி சுப்பர்". கூறிக் கொண்டு சாப்பிட்டாள். "அது நமது ஊர்த்தண்ணியின் விஷேசம்". அம்மா பெருமையாகச் சொன்னார். 'எந்த ஊர் என்றாலும் - அது நம் சொந்த ஊர் போல் வருமா' என்ற பாடல் கயலுக்கு நினைவில் தட்டியது. சிரித்துக் கொண்டாள். சுந்தரத்தார் அவர்களது உரையாடலைக் கேட்டுப் புன்னகைத்தார். உண்டமயக்கம் தொண்டருக்கும் உண்டாம். சுந்தரத்தார் களைத்திருந்தார். தேற்றாமரத்தின் வேர் புடைத்து நிலத்தின்மேல் தெரிந்தது. அப்படியே அந்த வேரில் சாய்ந்து கோழித்தூக்கம் செய்தார். கயல் அப்பாவைப் பார்த்தாள். கவலைகுடிகொண்ட அவரது முகத்தைப் பார்த்தாள். அனுபவ ரேகைகள் நெற்றியில் தடம் பதித்திருந்தன. "எங்களை வளர்த்தெடுக்க அப்பாவும் அம்மாவும் பட்டபாடு" நினைந்தாள். வந்த உறக்கமும், உற்சாகமும் காற்றில் பறந்தன. அவள் கண்கள் பனித்தன.

அப்படியே அப்பாவை அணைத்துக் கதறி அழவேண்டும் போலிருந்தது. அப்பா அன்று குலுங்கிக் கதறி அழுததை நினைந்து கொண்டாள். எதற்கும் கவலையடையாத அப்பா அன்று துடிதுடித்து அழுதார். அண்ணன் இளங்கோ கெட்டிக்கார மாணவன். க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான். பாடசாலை விட்டு வரும்வழியில் சில வாலிபர்களால் அழைத்துச் செல்லப்பட்டான். அவனோடு படிக்கும் பலரைக் கூட்டிச் சென்றார்கள். இயக்கம் இளைஞர்களைக் கடத்தி ஆயுதப்பயிற்சி வழங்குகிறார்களாம்.

எந்தப் பெற்றார் தங்கள் பிள்ளைகளைக் களப்பலி யாக்குவார்கள். ஊரே கலங்கி நின்றது. சுந்தரத்தார் உரியவர்களைக் கண்டு விசாரித்தபோது கிடைத்த பதில் 'நாங்கள் பிடிக்கவில்லை' என்பதுதான். அண்ணனை அவர்கள் அழைத்துச் சென்றபோது இராமனை இழந்த தசரதனைப் போல் ஆவிதுடித்து அரற்றிய காட்சியை நினைந்து உருகினாள். அன்று போனவன்தான். இதுவரை அவனது செய்தி கிடைக்கவில்லை. எப்படி இந்த அப்பாவினால் சகித்துக் கொள்ள முடிந்தது? அவள் மனம் அழுதது.

அண்ணனால் அப்பாவுக்கு ஏற்பட்ட துன்பங்கள் எத்தனை?. காவற்பகுதியினர் விசாரணை என்ற பெயரில் கொடுத்த தண்டனைகளையும், அவர் அனுபவித்த கொடுமைகளையும் எண்ணிப் பார்த்தாள். அவரை மீட்டெடுக்க அம்மா செய்த செலவுகளையும் நினைந்தாள். அண்ணன் போனபின் அப்பா தளர்ந்து உடைந்து போனார். அவள் கண்கள் பனித்தன. எத்தனை ஆயிரம் அப்பா அம்மாக்கள் இப்படிக் கண்ணீரோடு வாழ்கின்றனர். இத்தனை ஆயிரம் இளைஞர்களையும் பலி கொடுத்து கிடைத்த முடிவென்ன? சேர சோழ பாண்டியர்கள் சேர்ந்தொன்றாய் வாழ்ந்தார்களா? அவளது உள்ளத்தில் போராட்டம். அப்பா அசைந்து கண்களைத் திறந்தார். "அடட நித்திரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிட்டன். என்ன''? புன்னகைத்தவாறே எழுந்தார். அப்பாவுக்குத் தெரியாதவாறு கண்களைத் துடைத்துக் கொண்டாள். அம்மாவுக்கு ஓய்வே கிடையாது. அம்மாவைப் பார்த்தாள். அம்மா வேலைகளில் தன்னை ஈடுபடுத்தியிருந்தார்.

இந்த அம்மா எவ்வளவு துயரங்களைச் சுமந்து கொண்டு வாழ்கிறார்? கயல்விழி க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாள். திடீரெனச் செல்கள் வந்து விழுந்து வெடிக்கின்றன. சித்தப்பா. சித்தி பிள்ளைகள் ஷெல்லடியில் கண்முன்னால் சிதறுண்டு தசைப் பிண்டங்களாகக் கிடக்கின்றனர். மக்கள் விழுந்தடித்து காடுகளில் பதுங்குகிறார்கள். "கயல்விழி அம்மாவோடு ஓடு" குரல் கொடுத்துக் கொண்டே சுந்தரத்தார் பின்னால் ஓடினார். இப்படிப் பலதடவைகள் நடந்தன. வெடிச்சத்தங்கள் ஓய்ந்தபின் ஊர்ச்சனங்கள் சேர்ந்து ஈமக்கிரியைகளைச் செய்தார்கள். இந்த நிகழ்வுகள் அடிமனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்தன. அவற்றை மீண்டும் நினைத்துப் பார்க்க அவளுக்கு மனமில்லை. மெதுவாக எழுந்து அம்மாவிடம் சென்றாள்.

## 6

அம்மா அப்பா இப்போது யாருக்காக வாழ்கிறார்கள்.? இவர்களுக்குப் பிள்ளையாகப் பிறக்க நான் என்ன தவம் செய்தேன்? என்னால் இவர்களுக்கு என்ன கைமாறு செய்யமுடியும்? அவர்களைக் கடைசிவரை என்நிழலில் பாதுகாப்பதுதான் நான் செய்யக்கூடிய கைமாறு. மனதினிலே எண்ணியவாறு அம்மாவின் பக்கம் சென்றாள். வேலைகள் துரித கதியில் நடந்தேறின. இருள் கௌவிக்கொண்டு வந்தது. பரந்த வெளியில் நின்று செவ்வானத்தைப் பார்த்தாள். அந்தி வானம் செம்மை சூடி வண்ணம் பூசியிருந்தது. பார்க்கப் பார்க்கப் பரவசமாகியது. எவ்வளவு துன்பமாக இருப்பினும் காலம்தான் அதனைப் போக்கவல்லது. ஆற்றில் மாலைநேரம் தலைவெள்ளம் ஏறிக் கொண்டிருந்தது. மீன்களின் துள்ளல். நீந்திக் களைத்த மீனினம் நீரின் மேல்வந்து மூச்சுவிட்டுப் போயின. அவற்றின் அசைவினால் நீரலைகள் உருவாகிக் கரையில் மோதி உடைந்தன.

ஒரு காரியத்துக்கு ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது. கண்டல்களில் பதுங்கியிருந்த இருள் இப்போது வெளிவரத் தொடங்கியது. பாலைக்காய்ச்சி ஒரு அளவான சூட்டில் உறைமோரை விட்டால் அது ஊர்ந்து பாலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிராக்கும் அதேபோல் இருள் பரவி எங்கும் கும்மென்றிருந்தது. செல்லச்சாமி நீண்ட வயர்களுடனும், மின்குமிழ்களுடனும் வந்தார். சில மின்குமிழ்களைப் பொருத்தினார். நீண்ட தடியினைப் பயன்படுத்தி வயர்களை மின்சாரக் கம்பிகளில் கொழுவினார். வளவெங்கும் மின்சார வெளிச்சம் பரவி களைகட்டியது. கயலுக்கு ஆச்சரியம். அவள் படிக்கும் காலத்தில் கட்டைபறிச்சானுக்கு மின்சாரம் வரவில்லை. குப்பிலாம்பிலும், அரிக்கன்விளக்கு வெளிச்சத்திலும்தான் படித்தாள். காலம் மாறிவிட்டது.

“இன்று அப்பா அம்மாவோடு எனது சொந்த வீட்டில் இருக்கிறேன். எவ்வளவு நிம்மதியாய் இருக்கிறது” மனதினுள் நினைந்து கொண்டாள். மெல்லிய காற்று வந்து அவள் மேனியை வருடிச் சென்றது. அது பட்டதும் அவள் மேனி சிலிர்த்தது. அப்பாவின் சிறிய ரேடியோவை முடுக்கி விட்டாள். இனிமையான பாடல்கள் ஒலித்தன. அந்த இசையில் மூழ்கியிருந்தாள். மாலையானதும் உறவினர்கள் வீட்டில் கூடினார்கள். தங்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். ஒரு இறுக்கமான பிணைப்பினை கயல் உணர்ந்தாள். எப்படித்தான் திருகோணமலை நகரில் இருந்தாலும் கிராமப் புறமக்களுக்கு அது ஒரு திறந்த சிறைதான். நகரத்தில் பல பிரதேச மக்களும் வந்து வாழ்கிறார்கள். அங்கே தாங்களுண்டு தங்கள் கடமையுண்டு என்றிருப்பார்கள். பக்கத்தில் என்ன நடந்தாலும் எட்டியும் பார்க்கமாட்டார்கள். கிராம அமைப்பு நட்புரிமையுடையது. அதனை நினைந்தாள். பகல் முழுவதும் வேலை. அதனால் உடல் அசதி. அன்று இரவு நிம்மதியாக உறங்கினாள்.

அதிகாலையில் கண்டல்களில் இருந்து விடியாலாக்கள் சத்தமிட்டன. கோழிகள் கூவித் துயில் எழுப்பின. பறவைகள் திருப்பள்ளியெழுச்சி பாடிக் குதூகலித்தன. இன்று கயலுக்கு வித்தியாசமான விடியற்பொழுதாக இருந்தது. சந்தோசத்தோடு கண்களைத் திறந்தாள். அப்பாவைக் காணவில்லை. அம்மா குசினியில் இருந்தார். மெதுவாக எழுந்து வெளியில் வந்தாள். இருள் இன்னும் கலையவில்லை. பனிபெய்து நிலம் குளிர்ந்திருந்தது. தாவரங்கள் பனிநீராடிச் சிலிர்த்து நின்றன. அப்பா அந்தக் குளிரிலும் மண்வெட்டியுடன் நின்றார். “அப்பா பனிக்குள்ள நின்று வேலை செய்யிறீங்களே. பிறகு செய்யலாம்தானே”? கயல் அன்போடு கேட்டாள். “அதிகாலையில் வேலை செய்வது சுகமாயிருக்கும்மம்மா. வெயில் ஏறினால் களைப்பு அதிகரிக்கும். நீ வீட்டுக்குள் போ.” வேலை செய்து கொண்டே சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தேநீரைக் கொடுத்தார். அப்பாவுக்கு எடுத்துச் சென்று கொடுத்தாள். அம்மாவும் தேநீரோடு வந்தார். அப்பா வெளியாக்கிய தரையில் குந்தியிருந்தவாறே குடித்தார்கள். அப்பா மண்வெட்டியினால் தரையைக் கொத்தி மண்ணைப் புரட்டிச் சமப்படுத்தி இருந்தார். பக்கத்தில் முதல்நாள் துப்பரவு செய்த கழிவுகள் வெயிலில் உலர்ந்து கிடந்தன. அவற்றுக்குத் தீயிட்டாள். அவை பற்றிக் கொண்டு எரிந்தன. பனிக்குளிருக்கு இதமாக இருந்தது. தனது கால்களைப் புதைத்து மணலால் மூடினாள். அது சுகமாக இருந்தது. சிறுபிள்ளையாக மாறியிருந்தாள். அம்மா அவளின் செயலைப் பார்த்தார். "இவள் உங்கட மகள். இன்னும் சின்னப் பிள்ளை மாதிரி விளையாடுறாள். பார்த்து ரசியுங்க". செல்லமாகத் தங்கம் கூறினாள். நீ சொன்னாலும் சொல்லாட்டியும் அவ நமது செல்லப் பிள்ளைதானே. இப்ப பட்டதாரிப் பிள்ளை. அவளுக்கு எல்லாம் தெரியும்." ஒரு முறுவலோடு சொன்னார். கயலுக்குப் பெருமையாக இருந்தது.

வீடு திருத்தும் வேலைகள் தொடங்கப் பட்டுவிட்டன. கட்டுமானப் பொருட்கள் வந்திறங்கின. மேசன்மார் கட்டத் தொடங்கி விட்டனர். ஒரு லட்சம் ரூபாய்க்குள் திருத்தஞ் செய்யலாம். அதற்கு மேல் ஒரு சதமும் செய்யவியலாது என்று அந்த நிறுவனம் தீர்மானமாகச் சொல்லிவிட்டது. மேசன் கூலியை மட்டும் மேசனுக்குக் கொடுத்தார்கள். மேசனுக்கு வேண்டிய வேலைகளை வீட்டுக்காரர் செய்தால் அந்தக் கூலியை மிச்சப் படுத்தலாம். என்று அந்த அதிகாரி விளக்கினார். சுந்தரத்தாருக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காயாய் இனித்தது. தான் கூலி வேலையைச் செய்தார். கூலியாளுக்குரிய கூலியினைத் தானெடுத்தார். அதனை மற்றைய அறைகளைத் திருத்துவதற்குப் பயன்படுத்தினார்.

வீடு திருத்தம் முடிந்து விட்டது. நாட்கள் விரைந்தோடின. கயல்விழி நாட்கள் விரைந்ததை எதிர்பார்க்கவில்லை. திருகோணமலைக்கு வந்த கடிதத்தை செல்லச்சாமி கொண்டு வந்து கொடுத்தார். திருமங்கையின் கையெழுத்து அது. ஆர்வத்துடன் பிரித்துப் படித்தாள். இருவரும் விஷேட சித்தியினைப் பெற்றிருந்ததை எழுதியிருந்தாள். பட்டமளிப்பு விழாவுக்கான திகதியையும் அறிவித்திருந்தாள். இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே வந்து தனது வீட்டில் நிற்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தாள். அவளுக்குச் சந்தோசமாக இருந்தது. அப்பாவிடம் தெரிவித்தாள். அம்மா வாய்மலர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தார். இன்றுதான் அம்மாவின் முகத்தில் சந்தோசமான சிரிப்புத் தெரிந்தது.

பட்டமளிப்பு விழாவுக்குப் புறப்பட்டாள். அப்பாவையும், அம்மாவையும் கூட்டிச் சென்றாள். திருமங்கை அவர்களை வரவேற்றாள். பல மாதங்களுக்குப் பின் தோழிகள் சந்தித்தனர். வீட்டில் ஒரே கொண்டாட்டம்தான். திருமங்கையின் வீடு சிறியதொரு ஓலைவீடுதான். ஆனால் அவர்களின் மனம் மாளிகையாக ஒளிவீசியது. அன்பு கலந்த பாசம் வீட்டில் விளையாடியது. திருமங்கையின் அம்மா கற்பகம் தங்கத்தின் தோழியானார். சுந்தரத்தார் மங்கையின் அப்பா கந்தப்புவின் கூட்டாளி ஆகிவிட்டார். தனது வீட்டில் இருப்பது போன்ற உணர்வை கயல் பெற்றாள். மறுநாள் காலையில் பட்டமளிப்பு விழா இருந்தது. விடியவிடியக் கதைத்தார்கள். பட்டம் கிடைத்தபின் எதிர்காலம் எப்படி இருக்கும்? வினாக்கள் விடைதெரியாது மறைந்தன.

"கயல் நானும் உன்னோடு வந்து விடட்டா? எனக்கு எனது வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. படிச்சுப்போட்டு சும்மா இருந்தால் எப்படி? ஊர்ச்சனங்கள் வேடிக்கைப் பொருளாகப் பார்க்கிறாங்க. எங்கட மாமி வீட்டுக்காரர்தான் நெருக்கிறாங்க. தங்கட மகனுக்குக் கலியாணம் கட்டித்தரச் சொல்லி அம்மாவை நச்சரிக்கிறாங்க. என்ன செய்யிறதெண்டு தெரியாமல் தவிக்கிறன். அம்மா பாவம். அப்பா அதைவிடப் பாவம். அவங்களிட்ட கொஞ்சம் கடன் பட்டிருக்காங்க. அதையிப்ப தரச்சொல்லிக் கேக்கிறாங்க. இல்லாட்டி மகளைக் கட்டித்தா என்று நிக்கிறாங்க. சரியான குப்பைச் சனங்கள்". கண்கள் கலங்கியவாறு சொல்லிமுடித்தாள். கயல்விழி என்ன சொல்வதென்று தெரியாமல் தவித்தாள். "சரி அப்பா அம்மா என்ன சொல்லுறாங்க? அதைக் கேட்டியா"? அவளை உற்றுப் பார்த்தவாறே கேட்டாள்.

கந்தப்பரும் கற்பகமும் அப்பாவிகள். கடன்பட்டவர்கள் கதி கலங்கி நின்றார்கள். "முதலில் எங்கட புள்ள ஒருவேலையில சேரட்டும். பிறகு பார்ப்பம் என்று சொல்லிவாறாங்க. ஆனால் அவங்க விடாப்புடியாக நிற்கிறாங்க. சங்கரன் என்ர மச்சான்தான். அவன் படிக்கவும் இல்ல. வேலையும் இல்ல. எனக்கு விருப்பமும் இல்ல. அவனிட்ட நான் நேரில கதைச்சனான். எனக்கொரு போய்பிறன்ட் இருக்கு. அவரத்தான் கட்டப்போறன் என்று சொல்லிப் போட்டன்." மங்கை நிறுத்தினாள். கயல்விழி கலகலத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தாள். "ஏய் கள்ளி! யார் அந்த போய்பிறண்ட். சொல்லு. எனக்குத் தெரியாமல் லவ் பண்ணியிருக்கிறாயா? எங்க பல்கலைக் கழகத்திலா அல்லது வேறெங்கேயுமா"? சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தாள்.

"பிள்ளைகள் சிரிச்சிக் கதைக்குதுகள். பாவம். நாலஞ்சி மாதம் தனியக் கிடந்ததுகள்தானே? இன்டைக்குத்தான் சிரிக்குதுகள். இவள் மங்கை ஒரே உம்மென்றுதான் கிடப்பாள். புள்ளைக்கு ஒரு வேல வந்திற்றென்டால் கொஞ்சம் நிம்மதியாக்கிடக்கும்". பெற்றமனங்கள் பெருமூச்சுடன் கலந்து கொண்டன. "ஏய் கயல்விழி. உளறாதே. என்னை எவன்டி காதலிப்பான்.? சும்மா சங்கரனிட்டப் பொய் சொன்னன். அவன் நம்பிட்டான். அவன் இதப்பற்றிக் கதைப்பதில்லை. ஆனால் எங்கட மாமி பொல்லாதது. குத்துக்கதை சொல்லிக் கொண்டே இருக்கும். அம்மாவும் அப்பாவும் பேசாமல் கேட்டுக் கொண்டு இருப்பாங்க. பாவம். கெதியாக ஒருவேலை தேடவேணும். அவங்கட கடனையெல்லாம் அடைக்க வேணும். தம்பி தங்கைகளைப் படிப்பிக்க வேணும். இதுதான் என்ர லச்சியம்". கூறிக் கொண்டே போனாள்.

"கயல்விழி என்ர அண்ணன் இருந்திருந்தால் இந்தக் கஸ்ரத்தில விடுவானா? அவன் இயக்கத்துக்குப் போயிற்றான். அவன் விரும்பிப் போகல்ல. பலாத்காரமாகக் கூட்டிற்றுப் போனாங்க. கடைசியில் என்ன நடந்தது. ஆளுக்கொரு திக்கில போய் அழிஞ்சி போனாங்க. கஸ்ரப்படுறது நாங்கதானே. தமிழரின் தலைவிதியை யாராலும் மாற்றேலாது". அவள் சொல்லும்போது கண்ணீர் சொரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். "நமக்கு அரசியல் தேவையில்லை. நாங்கள் வாழப்பழக வேண்டும். நிமிர்ந்து நின்று நமது கஸ்ரங்களைப் போக்க வேண்டும்". மங்கை சொன்னாள். கயல்விழி அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் சொல்வது உண்மைதான். தமிழரை வழிநடத்தும் தலைமைகள் தவித்த முயலடிக்கும் சந்தர்ப்பவாதிகள். சுயநலக்கும்பல். இன்னும் சொல்லப் போனால் பதவிக்காக விலைபோகும் பேர்வழிகள். கயல்விழியின் உள்ளம் கொதித்தது.

எனினும் அதனைக் காட்டிக் கொள்ளவில்லை. மங்கையைச் சமாதானப்படுத்த முயன்றாள். "சரி எப்படி உன் போய்பிறண்ட். அவர் எங்கே இருக்கிறார். சொல்லு கேட்போம்". ஒரு முறுவலோடு கதையை மாற்ற முயன்றாள். "நீ அடுத்த லூஸ் கேஸ். எனக்கு எங்கேயடி போய்பிறண்ட் இருக்கு. சங்கரனுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்தான் சொன்னன். அவன் நம்பிட்டான். அவன் என்னைப் பார்ப்பதுமில்லை. பாவம். அவன் நல்ல பொடியன்". விளக்கிக் கொண்டு போனாள். "மங்கை! நம்மைச் சுற்றி எத்தனைபேர் வலம் வந்தார்கள். அவங்களிட்ட மாட்டுப்பட்டிருந்தால் வீதியிலதான் நிக்கவேணும். நாங்க இரண்டு பேரும் தப்பிச்சம். சிலர் மாட்டிக் கொண்டு தவித்ததையும் பார்த்தோம்தானே"? சொல்லும்போது கயலுக்கு அருணின் நினைவு எட்டிப் பார்க்கும். அது மெதுவாக மறைந்து போகும்.

பல்கலைக்கழகத்தின் நினைவுகளுக்கு மங்கையை இழுத்தாள்.
பல்கலைக்கழகத்தில் பொடியன்கள் பொழுது போக்குக்காகக் காதலிப்பார்கள். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடிந்ததும் ஊருக்குப் போய்விடுவார்கள். பிறகு சீதனத்தில் வந்து நிற்பார்கள். அவர்களையும் குறை சொல்லமுடியாது. அவர்களும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இவையெல்லாம் நாமே நமக்குப் போட்டுக் கொண்ட அவிழ்க்க முடியாத முடிச்சுக்கள். சமூகத்தை மாற்றவேண்டுமானால் அதற்கு மனித மனங்களை மாற்றவேண்டும். இப்போது கயல்விழியின் மனதுக்குள்ளே பெரிய புரட்சி சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. "மங்கை! இப்ப நித்திரை கொள்வோம். நாளை பட்டமளிப்பு விழா இருக்குதல்லவா"? கூறிக்கொண்டு புரண்டு படுத்தார்கள்.

## 7

கற்பகம்தான் எழுப்பினாள். "அதற்குள் விடிந்து விட்டதா"? கேட்டுக்கொண்டே எழும்பினார்கள். விரைவாகக் குளித்து ஆயத்தமானார்கள். அந்தக்கிராமத்தைச் சூழ்ந்து பலசிறிய கிராமங்கள் இருந்தன. பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள் ஒன்று சேர்ந்து வாகனம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். வாகனம் வந்ததும் ஏறிக்கொண்டார்கள். வாகனம் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்தது. தங்கள் பெற்றோர்களை உரிய இடங்களில் இருக்கையில் இருத்திவிட்டுச் சென்றார்கள். ஒலிவாங்கி நிகழ்வதை ஒலிபெருக்கிக் கொண்டிருந்தது. பட்டதாரிகள் அதற்கான உடைகளுடன் ஊர்வலமாக வந்தார்கள். வாழ்க்கையில் எல்லோருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகக் கல்வி கிடைப்பதில்லை. சமூகத்தில் ஒரு அந்தஸ்த்தைப் பல்கலைக் கழகக் கல்வி அளிக்கிறது.

தங்கள் பிள்ளைகள் பட்டப்படிப்பை முடித்து ஒரு பட்டதாரியாகப் பவனி வருவதைப் பார்த்து எத்தனை பெற்றோர்களது உள்ளங்கள் களிப்படையும்? அதேபோல் 'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்பதை அத்தனை பெற்றோரும் சான்றாக முறுவலோடு முகம் மலர்ந்து இருந்தனர். 'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்'. என வள்ளுவர் கூற்றுக்கிணங்க வந்து கொண்டிருந்தார்கள். முன்னால் பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கடைப்பிடித்து மேளவாத்தியங்கள் முழங்கி வந்தன. அவற்றுக்குப் பின்னால் பேராசிரியர்கள் புடைசூழப் பின்னால் பட்டதாரிகள் பவனி வந்தார்கள். சுந்தரத்தாருக்கு அது கண்கொள்ளாக் காட்சியாகத் தெரிந்தது. தங்கத்தின் கண்கள் கயலைத் தேடியலைந்தன. ஒவ்வொரு பெற்றமனமும் தத்தமது பிள்ளைகளிலேயே மொய்த்தன.

பெயர்களை அழைத்தார்கள். இப் பல்கலைக்கழகத்தில் கற்றுப் பரீட்சையில் சித்தியடைந்தமையினால் இப்பட்டத்தைப் பல்கலைக் கழகம் இவருக்கு வழங்குகிறது. எனப் பல்கலைக்கழகத் தலைவர் அறிவித்தார். பட்டத்துக்குரிய ஆவணங்களை உபவேந்தர் அளித்தார். ஒவ்வொருவராகச் சென்று தங்கள் பட்டங்களைப் பெற்றார்கள். பட்டத்துக்குரிய அழகிய மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் சான்றிதழ்ப் பட்டயத்தைக் குழாய்வடிவான உறையினுள் இட்டு வழங்கினார்கள். வைபவம் முடிந்ததும் அனைவரும் வெளியில் வந்து கலகலத்து உரையாடினார்கள். பல்கலைக் கழக வளாகம் பொலிவுற்றுத் திகழ்ந்தது. பட்டத்தைப் பெற்றவர்களின் கைகளில் ஒரு பட்டயம் இருந்தது. அது அவர்களின் அடிமைச் சாசனம். 'இனி நீ சமதாயத்துக்காக உழைக்க வேண்டும். நீ சார்ந்து வாழும் சமூகத்தின் உயர்வுக்காக உன்னை அர்ப்பணிக்க வேண்டும். உனது சந்தோசமெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிடு. பணம், பதவி, அந்தஸ்த்து என்று சதா உழைத்துக் கொண்டே இரு'. என்பதற்கான சாட்சிப் பத்திரம். இனி வரவில்லாது செலவில்லை. உழைத்தால்தான் உணவு. உழைப்பதெல்லாம் உனக்காக அல்ல. என்பதை உணர்த்தும் சாசனம் அவை. இவற்றை உணராமல் கலகலத்துச் சிரித்தபடி பட்டதாரிகள் நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மச்சான் இனிமேல்தான் நமக்கு இருக்குது ஆப்பு. தொழில் தேடும் படலம் இன்று முதல் தொடங்குகிறது. நமது எதிர்காலம் எப்படி அமையப்போகின்றதோ யாருக்குத் தெரியும்”? அவன் அமலன் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டான். “இன்று மட்டுந்தான் நமது நட்பு. இனியெங்கேயடா சந்திப்பது? அவனவனுக்கு ஆயிரம் கடமைகள் இருக்கும். அவற்றைப் பார்க்கவே நேரம் போதாது. என்றாலும் இப்ப செல்போன் இருக்குத்தானே? மறந்திராமல் தொடர்பு கொள்ளுங்க. நாங்க போய்வாறம்”. கூறிக்கொண்டு அந்த இளைஞர்கள் பிரிந்தார்கள். அவர்களின் உரையாடல் கயல்விழியின் செவிகளிலும் விழுந்தது.

“கயல்விழி நாங்க வந்த வாகனம் அதோ நிற்கிறது. அப்பா அம்மா அங்கேதான் நிக்கிறாங்க. நாங்க போவம்”. தோழிகளோடு கதைத்துக் கொண்டு நின்றவளை நினைவுக்குக் கொண்டு வந்தாள் மங்கை. ஏற்கனவே அப்பா அம்மா வாகனத்தின் பக்கம் காத்திருந்தார்கள். “ஐயய்யோ அப்பா அம்மா காத்திருப்பதை மறந்து விட்டோம் சரி போவோம்”. சென்றார்கள். வாகனம் மங்கையின் வீட்டுக்குச் சென்றது. இறங்கியதும் எல்லோருக்கும் நன்றி சொன்னார்கள். வந்தவர்கள் சென்றுவிட்டார்கள். உணவுக்குப் பின் எதிர்காலத் திட்டங்களை விவாதித்தார்கள். எதிர்காலம் சூனியமாகவே தென்பட்டது. தொழில் வாய்ப்பினைத் தேடுவதே நோக்கமாக இருந்தது.

கயல்விழி புறப்பட ஆயத்தமானாள். மங்கை கண்கலங்கி நின்றாள். “மங்கை எங்கட வீட்டு நிலை உனக்குப் புரியும் இன்னும் கொஞ்சநாளில் வீட்டு வேலைகள் முடிந்து விடும். நீ இங்கேயும் வேலையைத் தேடு. நானும் அங்கே முயற்சிக்கிறேன். இப்பதான் நாங்க மீள்குடியேறியுள்ளோம். நிறைய வீட்டு வேலைகள் உண்டு. அவற்றை முடிக்கவேணும். இனியென்ன நமக்கு? வேலைதேடும் படலம்தானே? நமது எதிர்காலத்தை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். இந்தா, இதனை வைத்துக் கொள். இது எனது அன்புப்பரிசு”. கூறிக்கொண்டு ஒரு புது கையடக்கத் தொலைபேசியைக் கொடுத்தாள். மங்கை பிரமித்துப் போனாள். அதனைக் கையிலெடுத்துப் பார்த்தாள். அது நவீன செல்போனாக இருந்தது. மங்கை அவசர தேவைகளுக்காக தோழிகளிடம் தொலைபேசியினைப் பெற்றுக் கொள்வாள். சொந்தமாக ஒரு கையடக்கத் தொலைபேசி வைத்துக் கொள்ளும் நிலையில் அவள் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல்தான் கயல்விழியும் இருந்தாள். பல்கலைக்கழகத்தில் கற்கும் போது வறுமை அவளை வாட்டியது. அப்பாவை வருத்துவதற்கு அவளுக்கு மனமில்லை. நான்கு வருடங்களைக் கழித்துவிட்டாள். கயல்விழியின் படிப்பு முடிந்து கட்டைபறிச்சானுக்கு வந்தபின்தான் மகளின் நிலையை உணர்ந்தார். படிக்கும்போதே பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கிறார்கள். தனது மகள் இதுவரை தன்னிடம் கேட்கவில்லை. அதனை வாங்கிக் கொடுக்கும் பொருளாதார வசதியும் இல்லை. ஆனாலும் அவரது மனதில் அது குடைந்து கொண்டிருந்தது.

சுந்தரத்தாரின் நண்பர் ஒரு கையடக்கத் தெலைபேசியைக் காண்பித்தார். "சுந்தரம் இப்ப கட்டைபறிச்சானில் இருக்கிறாய். அவசரத் தேவைகளுக்கு இது நல்லது. ஆறுதலாகக் காசைத் தா. உனக்கு உதவாட்டியும் உன்ர மகள் படிச்சவ. அவளுக்காவது உதவும்". சொல்லிக் கொடுத்தார். மகளின் பரீட்சை முடிவு வந்ததும் அவருக்குச் சந்தோசம். "இந்தா மகள். இது அப்பாவின் பரிசு". சொல்லிக் கொடுத்தார். அவள் மெய்மறந்து போனாள். ஆச்சரியத்துடன் அப்பாவைப் பார்த்தாள். அவர் புன்னகைத்தார்.

கயல்விழியிடம் ஒரு குணமிருந்தது. அளவோடுதான் செலவு செய்வாள். மிஞ்சும் சில்லறைக் காசு உண்டியலில் சேரும். மாதமுடிவில் எண்ணிப்பார்ப்பாள். அதனைத் தொடமாட்டாள். வங்கிக்குப் போகும்போது தனது சேமிப்புக் கணக்கில் வரவு வைத்து விடுவாள். பட்டமளிப்பு விழாவுக்குச் செல்லும்போது மங்கையை நினைத்துக் கொண்டாள். அவளின் தேவையை கயல் நன்கறிவாள். தனது சேமிப்பில் உள்ள பணத்தை அப்பாவிடம் கொடுத்தாள். தன்னிடம் உள்ள கையடக்கத் தொலைபேசிபோல் ஒன்றை வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டாள். அப்பா அதனை வாங்கிக் கொடுத்தார். அதனையே மங்கைக்குக் கொடுத்தாள்.

மங்கை மகிழ்ந்து போனாள். கயல்விழியைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். "உன்னைப் போல் தோழி கிடைக்க நான் என்ன தவம் செய்திருக்கிறன்". அவள் கண்கள் பனித்தன. அவள் கொடுத்த கையடக்கத் தொலைபேசியில் கயலோடுதான் முதன்முதல் பேசினாள். கயலைப் படமெடுத்துக் கொண்டாள். மாறிமாறி எல்லோரும் சேர்ந்து நின்று படமெடுத்துக் கொண்டார்கள். "மகள் நேரமாகுது. நாங்க போய் வாறம்". சுந்தரத்தார் நினைவு படுத்தினார். திருகோணமலை பேருந்து வந்தது. ஏறிப்புறப்பட்டார்கள். அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியனுப்பி விட்டுக் கண்கலங்க மங்கை நின்றாள்.

திருகோணமலை வாடகை வீட்டை விட்டுப் பறப்பட்டார்கள். சொந்த ஊரில் குடியிருப்பதில் ஒரு சுகமிருந்தது. எந்தநேரமும் சுறுசுறுப்பை ஏற்படுத்திவிடும். இடம்பெயர்ந்ததால் காடு பற்றி அழிந்து போன கட்டைபறிச்சான் கிராமம் புத்துயிர் பெற்று விட்டது. அகதிமுகாம்களில் அல்லலுற்ற சனங்கள் நிம்மதியைச் சிறிது சிறிதாக உள்வாங்கிக் கொண்டனர். ஆனாலும் இளசுகளின் எண்ணங்கள் விசித்திரமாய் தெரிந்தன. அவர்களது போக்கில் கலாச்சாரச் சீர்கேடுகள் தென்பட்டன. இளைஞர்களிடம் வித்தியாசமான பழக்க வழக்கங்கள் தென்பட்டன. கல்வியறிவு தொடரவில்லை. படிப்புத் துண்டிக்கப்பட்டு விட்டது. சினிமாப் போக்குகள் அவர்களை ஆட்கொண்டு விட்டன. அவர்களைச் சினிமா கதாநாயகப் போக்குகளில் சிக்கவைத்து விட்டது. அவர்களை எவ்வாறு மீட்டெடுப்பது? பெரியவர்களை மதிக்கத் தெரியாத பாரம்பரியம் உருவாகிவந்து கொண்டிருப்பதைப் பலரும் உணர்ந்தார்கள்.

பாடசாலைகளில் இடைவிலகல் அதிகமாகிவிட்டது. பாடசாலைக்கு ஏன்போகவேண்டும் என்ற எண்ணம் உருவெடுத்திருந்தது. வீட்டுத்தோட்டக் காணிகள் பற்றை பற்றிக்கிடந்தன. உழைக்க வேண்டும் என்ற எண்ணம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கிவிட்டிருந்தது. ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள். சுந்தரத்தார் வித்தியாசமான போக்குடையவராக இருந்தார். அவருக்கு உழைப்புத்தான் முக்கியம். நாம் பழைய நிலைக்கு வரவேண்டும் என்று பாடுபட்டார். பல இளைஞர்களும் யுவதிகளும் வேலையின்றிக் குந்தியிருந்தார்கள். நிலம் இருந்தும் முதலில்லாமல் பலர் தொழில்களைக் கைவிட்டார்கள்.

கயல்விழி வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிந்திருந்தாள். கல்வி அமைச்சின் அலுவலகத்தின் முன்னால் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ள சேதியைத் தெரிவித்து அதில் கலந்து கொள்ளுமாறும் செய்தி வந்தது. ஏதாவது கிடைக்கும் என்ற எண்ணத்தில் அவளும் இருந்தாள். மங்கைக்கும் செய்தி போனது. அவள் புறப்பட்டுவிட்டாள். வரும் திங்கள் முதல் சத்தியாக்கிரகம் நடைபெறவிருந்தது. சனிக்கிழமை பகல் கயல்விழியின் படலையில் மங்கை நின்றாள். கயல்விழிக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையைக் கண்டதும் அவ்வளவு சந்தோசம். சுந்தரத்தாரும் தங்கமும் அவளை வரவேற்றார்கள்.

கயல்விழியும் மங்கையும் மாலை கட்டைபறிச்சானைச் சுற்றிச் சைக்கிளில் வலம் வந்தார்கள். குடியேறிய மக்கள் தங்கள் வளவுகளைத் துப்பரவாக வைத்திருந்தனர். முடிந்தளவு பயிர்களை நட்டிருந்தனர். தென்னைகள் தலையை இழந்து நின்றன. பெரிய மரங்கள் தறிபட்டுக் கிடந்தன. பல வளவுகளில் பற்றைகள் வளர்ந்து செழித்திருந்தன. எங்கும் வீடுகளின் இடிபாடுகள் தென்பட்டன. கூரையில்லா வீடுகள் சிரித்தன. திருத்த வேலைகள் நடந்தன. பல கோயில்கள் அழிபாட்டுடன் பாழடைந்து காட்சிதந்தன. பொது வேலைகளுக்கான தேவைகள் இருந்தன. வீடுகளில் இளம்யுவதிகள் சோம்பிக்கிடந்தனர். பலதையும் பார்த்தவாறு உலாவந்தார்கள். நமது இனத்தவர்களை அடிமை வாழ்வு வாழ வழிப்படுத்திவிட்டார்கள். உழைக்காமல் உண்ணும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். இந்த நிலையை எவ்வாறு மாற்றியமைக்கலாம்? கயல்விழியின் உள்ளத்தில் ஒரு காட்சி உதயமாகத் தொடங்கியது.

உலாமுடிந்து வீட்டுக்கு வந்தார்கள். கயல்விழியின் தோட்டத்தில் கத்தரி, மிளகாய் போன்ற பயிர்கள் நேசறியில் உள்ள பிள்ளைகள் போல் துள்ளி வளர்ந்திருந்தன. நிரைநிரையாய் பூஞ்செடிகள் மொட்டுகளைத் தள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. ஓவ்வொரு செடியாய் தொட்டு அளைந்து வந்தாள். அவளது செயல்கள் மங்கைக்குப் பிடித்திருந்தன. அவளும் கயல் செய்வதைப் போல் செய்தாள். கயல்விழியின் கைகளைப் பற்றித் தடவினாள். பின் பூத்திருந்த ரோஜா இதழ்களைத் தடவிப் பார்த்தாள். புன்னகைத்தாள். "ஏன் மங்கை சிரிக்கிறாய்"? வினோதமாகக் கேட்டாள். "இல்லை இந்த ரோஜா இதழ்கள் மென்மையானவையா? அல்லது என் தோழியின் உள்ளங்கை மென்மையானதா என்று பரிசோதனை செய்தேன்"? பதிலளித்தாள். "எது மென்மையானது. ரோஜா இதழோடு நமது கைகளை ஒப்பிடலாமா....'. ம்..... சொல்லு". மெல்லக் குலுங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

"எனக்கு எனது தோழியின் கைகள்தான் மென்மையாகவும் மிருதுவாகவும் தெரிகிறது." மங்கை தான் தொட்டுணர்ந்ததைக் கூறினாள். பக்கத்தில் தொட்டாற்சிணுங்கி இரண்டு மூன்று பூக்களோடு படர்ந்திருந்தது. அதன் இலைகளை உசுப்பினாள். அச்செடி இலைகளைச் சுருக்கிக் கொண்டது. "மங்கை பார்த்தாயா .. மரஞ்செடி கொடிகளுக்கும் உயிருண்டு. அவை சந்தர்ப்பத்துக்கேற்றாற் போல் இசைவாக்கம் பெறுகின்றன. இவையாவும் இறைவன் கொடுத்த வரம். இல்லையா"? விளக்கிக் கொண்டு போனாள். பொழுது விரைந்தது. மாலை வந்து சூழ்ந்தது.

"மங்கை! மயக்கும் மாலைப் பொழுதென்று ஏன் சொன்னார்கள். நீதான் பெரிய கவிஞராயிற்றே. சொல்லேன். பார்ப்போம்". என்றாள் கயல்விழி. மங்கை சிரித்தாள். நீ உயிரியல் படித்தவள். அவற்றின் வாழ்வியல் புரிந்தவள். மானும் மயிலும் ஆடுவதையும் அதற்கான காரணங்களையும் தெரிந்தவள். மழைகாலத்தில் தவளைகள் சத்தமிடுவதேன் என்று விளக்கமும் சொல்பவள். இந்த உலகம் தொடர்ந்து இயங்குவதற்கான விபரங்களையும் புரிந்தவள். உனக்கு அதனையிட்டுத் தெரிந்தும் என்னிடம் கேட்கிறாய். இது ஞாயமா.."? சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"நம்மைப் போன்ற படித்த வேலையற்ற பட்டதாரிகள் வீட்டுக்கு வருவார்கள். வீட்டு நிலைமைகளைப் பார்ப்பார்கள். அந்தச் சூழல் அவர்களுக்கு மயக்கத்தைத் தருவதால் மயக்கும் மாலைப் பொழுது என்று சொல்வார்கள்". கயல்விழி சொல்லிவிட்டுச் சிரித்தாள். "கயல்விழி நீ சொல்வதுதான் சரியான விளக்கம். வேலையற்ற பட்டதாரிகளின் பரிதாபகர நிலையை நன்றாக விளக்கினாய். அதுதான் உண்மையான நிலை. இன்றைக்கு எத்தனை ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்று ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டு நமது நாட்டில் நடைப்பிணமாகக் கிடக்கிறார்கள். இவர்களுக்கு எப்பொழுது விமோசனம் கிடைக்கும்?. நாளை வேலையற்ற பட்டதாரிகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் என்று எல்லாப் பேப்பர்களிலும் வரும். பத்திரிகை நடத்துபவர்களுக்கு நமது தேவைகள் செய்தியாகி விடுகிறது. பிழைப்பு நடக்கிறது. நமக்கு வேதனையாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வது. நமது தலைவிதி"? சொல்லும்போது மங்கையின் கண்கள் பனித்தன.

"நமது கல்வித் திட்டத்தில் மாற்றம் வேண்டும். பிரித்தானியர் தமது கல்வி முறையை வலியுறுத்தித் திணித்தார்கள். அவர்களுக்கு உதவாத அல்லது பயனளிக்காத திட்டங்களை தமது பிடியிலிருந்த நாடுகளில் திணித்து விட்டார்கள். நமது கல்வி ஏட்டுச்சுரைக்காய்தான். நமது பட்டதாரிகளால் எதனைச் சாதிக்க முடியும். பேப்பரை மடித்துக் கப்பல் செய்யவும் தகுதியில்லாத படிப்பு. எனது படிப்புக்கு ஏற்ற வேலையென்றால் ஆசிரியத் தொழில் ஒன்றுதான் உள்ளது. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. ஆனால் நாட்டின் கணக்கெடுப்பின்படி மேலதிக ஆசிரியர்கள் இருக்கிறார்களாம். எப்படி நமது நாட்டின் ஆட்சிமுறை"?. மங்கையின் உள்ளம் பொங்கி எழுந்தது.

"சரி..சரி.. பொறுமை காக்க வேண்டுகிறேன். நமக்கும் காலம் வரும். காலம் கனியும் வரை காத்திருப்போம். நிதம் இப்படியேவா இருக்கப் போகிறோம்". கயல்விழி ஆறுதல் கூறினாள். "நாளையச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் என்ன நடக்கப் போகிறதோ தெரியாது. போய்ப்பார்ப்போம்". எழுந்து கிணற்றடிக்குச் சென்று முகம் கைகால் கழுவினார்கள். பக்கத்தில் கற்பக விநாயகர் ஆலயம் இருந்தது. சென்று இறைவனை வணங்கி வந்தார்கள். அம்மா வேலைகளை முடித்து ஆறுதலாக இருந்தார். அவர்களைக் கண்டதும் "பிள்ளயள் சாப்பிடுவமா? அப்பாவும் பசி என்றவர். வாங்க". சொல்லிக் கொண்டு ஆயத்தமானார். சுந்தரத்தாரும் காத்திருந்தார்.

உணவுக்குப்பின் உல்லாசமாகக் கதைத்தார்கள். பல்கலைக் கழக வாழ்க்கையை மீட்டுப் பார்த்தார்கள். அதன் சுகத்தை இனிமேல் அனுபவிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார்கள். ஆற்றில் மீன்களின் குதூகலிப்பு. "என்ன கயல் தண்ணீருக்குள் சத்தம் கேட்கிறது".? மங்கைக்கு அது புதினமாக இருந்தது. விசாரித்தாள். "கடலில் இருந்து தண்ணீர் பெருகி நீர் மட்டம் உயரும். அப்போது கடல்நீர் பரவி வெளியேறும். ஆறுகளுக்குப் பாயும். இப்போது பெருக்கு நேரம். தலைவெள்ளம் ஏறும்போது மீன்கள் துள்ளும். தண்ணீர்ப் பெருக்கோடு மீன்களும் பயணிக்கும். மீனுணவும் வெள்ளத்தோடு பரவி வரும். மீன்களுக்குக் கொண்டாட்டம். வீச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகாரருக்கும் கொண்டாட்டம்தான். நல்லா மீன்படும்". கயல்விழி விளக்கினாள். "நாங்களும் மீன்பிடித்து விற்கலாம். பட்டதாரிகள் மீன்பிடித்தால் என்ன குறையப்போகுது"? மங்கை விளையாட்டாச் சொன்னாள்.

"இந்த ஆற்றில சின்னப்படகில போய் மீன்பிடித்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும்". மங்கை உற்சாகத்துடன் சொன்னாள். "அப்படி ஒருகாலம் இருந்தது. ஆனால் இப்ப அப்படி இயலாது. ஆற்றில் பகலில் மட்டும்தான் மீன் பிடிக்க அனுமதியுண்டு. இரவில் போனால் தப்பிவரமுடியாது". சுந்தரத்தார் விளக்கினார்.

"நாங்க அந்தக் காலத்தில் செக்கல் பட தோணியில போவம். காய்ந்த தென்னோலைகளைச் சூழாகக் கட்டியெடுத்துக் கொள்வோம். ஆற்றில் தோணியில் இருந்து சூழைப் பற்றவைத்துப் பிடிப்போம். அந்த வெளிச்சத்தக் கண்டு மீன்கள் சூழ்ந்து கொள்ளும். ஒரு வீச்சில எக்கச்செக்கமான மீன்படும். இறால் எங்கட ஆற்றில் தொகையாகப் பிடிபடும்" இளமைக்காலத்தைச் சுந்தரத்தார் மீட்டெடுத்து வைத்தார்.

அதிகாலை புறப்பட்டு திருகோணமலை சென்றார்கள். நேரே மாமாவின் வீட்டுக்குச் சென்றார்கள். மாமா கச்சேரியில் காணிப்பிரிவில் கிளாக்கராகக் கடமையாற்றுகிறார். மிகவும் நல்ல மனிதர். அரசரத்தினக் கிளாக்கரைத் தெரியாதவர்கள் இல்லை. வருகிறவர்களுக்கு உதவி செய்வதில் முன்நிற்பவர். களங்கம் இல்லாத கை. கயல் வந்ததில் அவருக்குச் சந்தோசம். மாமாவில் அன்பும் பாசமும் கொண்டவள். பிரச்சினைகளின் போது கயல்விழி மாமா வீட்டிலேயே தங்கி இருந்து படித்தாள்.

மாமி ஒரு ஆசிரியை. மிகவும் அன்புள்ளவர். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். அவர்கள்தான் கயல்விழியின் தோழர்கள். அவர்களோடுதான் பொழுது போகும். அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவாள். இருவரும் பாடசாலைக்குச் செல்பவர்கள். கயலைக் கண்டதும் ஓடிவந்து மடியில் ஏறினார்கள். அவளை அக்கா என்றே அழைப்பார்கள். அவளைக் கண்டதும் எழுப்பும் முதல் கேள்வி 'எப்ப போவீங்க' என்பதுதான். இரண்டுநாள் நின்றுதான் போவேன் என்றால் சந்தோசத்தோடு துள்ளுவார்கள். நாளைக்கு என்றால் கதைக்கவே மாட்டார்கள். குழந்தைகளிடம் பெரியவர்கள் கற்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய விசயங்கள் நிறையவே உண்டு.

வஞ்சகம், சூது, கள்ளம் கபடம் ஒன்றுமே இல்லாத பிஞ்சுகள். பிரியா மூத்தவள். அடுத்து அவளது தம்பி குமணன். பிரியா ஐந்தாம் வகுப்புப் படிக்கிறாள். அவளுக்கு ஓய்வே கிடைப்பதில்லை. அப்பா மட்டும் கொஞ்சம் இரக்கங் காட்டுவார். அம்மா சதா படி என்று வற்புறுத்துவார். காலையில் இருந்து படுக்கைக்குப் போகும் வரை பிள்ளைக்கு ஓய்வே இல்லை. ஸ்கொலசிப் சோதனை என்று பிள்ளையை வாட்டி எடுக்கின்றார்கள். அப்போது மாமா வந்தார். அவரிடம் தாங்கள் வந்த நோக்கத்தைச் சொன்னார்கள். அவர் உன்னிப்பாகக் கேட்டறிந்தார்.

பத்து மணியளவில் கல்வி அமைச்சின் முன்னால் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் சூழ்ந்திருந்தனர். பலதொழிற் சங்கங்களும் ஒத்தாசை கொடுத்தன. படங்குகளால் பந்தலிட்டு அதற்குள் படங்குகளை விரித்து அமர்ந்திருந்தனர். பதாதைகள் காற்றில் அசைந்தவண்ணம் இருந்தன. அரசியல் தலைவர்களும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அனுதாபம் காட்டுவதுபோல் வந்து பார்த்துப் போனார்கள். திங்கள் தொடங்கிய போராட்டம் தொடர்ந்தது. பத்திரிகைகளுக்கு நல்ல தீனி கிடைத்தது. முன்பக்கமெல்லாம் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகி இருந்தன. பட்டதாரிகளின் படங்கள் பேப்பர்களை நிறைத்தன.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் நாவண்ணன் பட்டதாரிகளின் நிலையை நன்கு உணர்ந்தவர். அனுதாபமாகப் பார்த்தார். தனது அலுவலர்களை அழைத்தார். அரசியல் தலைவர்களையும் அழைத்தார். "நான் ஒரு அரசாங்கப் பணியாளன். என்னால் அரசாங்கம் முன்வைக்கும் கடமைகளைத்தான் செய்ய முடியும். பட்டதாரிகளுக்கு வேலை கொடு என்று அரசாங்கம் சொன்னால் உடனே கொடுக்கலாம். ஆனால் அரசின் எழுத்து மூல அறிவித்தல் இல்லாது செயல்பட முடியாதே. அரசியல் தலைவர்கள் இங்கு இருக்கிறீர்கள். நீங்கள் கேட்கலாம். பாராளுமன்றத்தில் அமைச்சர்களோடு வாதிட்டு உரிமையைப் பெறலாம். அதைச் செய்யுங்கள். வேண்டுமானால் நான் ஒன்றை மட்டும் செய்யலாம்." அமைதியாகச் சொன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

அவர் என்ன சொல்லப்போகிறார் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்."எனது வேலையை விட்டு விலகிச் செல்லலாம். அவ்வளவுதான் அரசாங்க அலுவலர் என்ற வகையில் என்னால் செய்யக்கூடியது. "இந்தப் பிள்ளைகள் எல்லாரும் இவ்வளவு காலமும் படித்துப் போட்டு வேலைக்காகப் போராட வேண்டிய நிலையில் இருக்குதுகள். என்ன கொடுமை. இதற்கு யார் பொறுப்புச் சொல்வது"? அவர்களிடம் தனது நிலையை விளக்கினார். அலுவலர்களுக்கு நிலைமை விளங்கியது. அரசாங்கம் எடுக்க வேண்டியவற்றை எப்படி ஒரு அரசாங்க அலுவலர் செய்ய முடியும்.? அவர்களே தமக்குள் பேசிக் கொண்டார்கள். கலைந்து சென்றார்கள்.

பட்டதாரிகளின் போராட்டம் தொடர்ந்தது. இரண்டு கிழமைகளாகியும் ஒருமுடிவும் இல்லை. கல்விச் செயலாளரால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாதிருந்தது. நேரே போராட்டத்தில் இருக்கும் பட்டதாரிகளிடம் வந்தார். எல்லோரையும் உற்றுப் பார்த்தார். தமிழர், முஸ்லிம் சிங்களவர் என்ற பேதமில்லாது பட்டதாரிகள் என்ற ஒரு குடைக்குக் கீழ் அனைவரும் இணைந்திருந்ததைக் கண்டு ஒருபுறம் அவருக்கு மகிழ்ச்சி. இளம் பட்டதாரிகள் தொடக்கம் முப்பத்தைந்து வயது வரையான வேலையற்ற பட்டதாரிகள் அமைதியாக அமர்ந்திருந்தனர். அவர்களைப் பாரத்ததும் அவரது மனம் கனத்தது. பசிக்கு முன்னால் இன மத மொழி வேறுபாடுகள் பொடியாகிவிடும்.

அவர் மிகவும் பணிவாக "உங்கள் உரிமைக்காக நீங்கள் போராடுவதை நான் பாராட்டுகிறேன். எனது நிலைப்பாட்டையும் உங்களுக்குச் சொல்லவேண்டிய கடமையுண்டு. உங்களை நான் ஏமாற்ற விரும்பவில்லை. நான் ஒரு அரசாங்கப் பணியாளன். வேலை கொடுப்பது எனது வேலையல்ல. அரசாங்கம் சொன்ன வேலையை மட்டும் என்னால் செய்ய முடியும். நமது பிரதேசத்தில் ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உண்டு. அதனை நான் மத்திய கல்வி அமைச்சுக்கு அறிவித்துப் போட்டன். மேலதிகமாக ஒன்றை உங்களுக்குச் சொல்லுறன். எங்கட நாட்டில கல்விக்கேற்ற வேலை வாய்ப்புகள் இல்லை. வேலைக்கேற்ற கல்வி இல்லை. இந்த நவீன காலத்தில் எங்களது கல்வித்திட்டத்தில் மாற்றம் வேண்டும். அதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வாதிகளும் கல்விமான்களும் செய்யவேண்டும்". சற்று அமைதியாக நின்றார்.

"நீங்கள் அனைவரும் இந்த நாட்டின் இளைஞர்கள். உங்களை நம்பி இந்த நாடு இருக்கிறது. கல்வி கற்றால் மட்டும் போதாது. அதனை வாழ்க்கையாக மாற்றம் வேண்டும். நம்மைச் சிந்திக்க வைப்பதற்கான அடிப்படையைக் கல்வி தருகிறது. அரசாங்கம் நீங்கள் படியுங்கள். வேலை தருவோம் என்று சொல்லியிருக்கிறதா? ஒரு பிணையில் கைச்சாத்திட்டுள்ளதா? இல்லையே. திருகோணமலையில் எத்தனையோ அமைச்சுக்களும், திணைக்களங்களும் இருக்கின்றன. கல்வி அமைச்சின்முன் மட்டும் ஏன் இவ்வகையான போராட்டங்களை நடத்துகிறீர்கள். உங்களுக்கு கல்வியை மட்டும்தான் தெரியும். பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் மட்டுந்தான் தெரியும். இந்த உலகம் விரிந்தது. நமது கல்வித்திட்டம் 'வைற் கொளர் யொப்' உடை நலுங்கா உத்தியோகத்தை மட்டும் மையமாகக் கொண்டது. அதனால் வந்தவினைதான் இது". காரின் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். இரண்டு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பகட்டான கார்களில் இருந்து இறங்கி வந்தார்கள்.

அவர் அவர்களை அலட்சியம் செய்யாது தொடர்ந்தார். "நாம் யார் கைகளையும் எதிர்பார்க்கக் கூடாது. முடிந்தவரை நமது கால்களில் நிற்க முனையவேண்டும். சுனாமியும், யுத்தமும் பேரிழப்புகளும் நம்மை வாட்டி வதைத்துள்ளன. இங்கு போராட்டம் நடத்துவது ஒருவகையில் நல்லது. உங்கள் பிரச்சினைகளை நீங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள். மற்றது அவற்றை உலகுக்கு உணர்த்துகிறீர்கள். இப்படிப் பிரச்சினைகள் உள்ளன என்பதைப் பத்திரிகைகளும் புரிந்து எழுதுகின்றன". அவர் பேசிக்கொண்டிருந்தார். அரசியல் வாதிகள் வந்து பட்டதாரிகளின் மத்தியில் அமர்ந்து கொண்டனர்.

"நான் உங்களைப் போல் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவன்தான். பட்டம் பெற்று இரண்டு வருடங்களின் பின்தான் எனக்கு வேலை கிடைத்தது. நான் சும்மா வெறுமனே சோம்பி இருக்கவில்லை. அந்த இரண்டு வருடங்களும் எங்கட வீட்டுக்குப்பின்னால் இருந்த தோட்டத்துக் காணியில புகையிலைத் தோட்டம் செய்தனான். பின்னேரத்தில் பொடியளுக்கு ரியூசன் கொடுத்தனான். போட்டிப் பரீட்சைகளுக்காகப் படித்தனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு இந்த நிலைக்கு வந்திருக்கிறன். சுயமுயற்சி தேவை. நமது நாட்டில் உள்ள வளங்களை உங்களால் பயன்படுத்த முடியாதா? முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. நமது கிராம மக்களின் உழைப்பை நினையுங்கள். அவர்களது முயற்சியைப் பெறுவதற்கு வழிகளைப் பாருங்கள். அவர்களை அணிதிரட்டுங்கள். ஒரு தீக்குச்சியைப் பாருங்கள். அது ஊருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கப் போதுமானது. அந்தத் தீக்குச்சி ஏன் நீங்களாக இருக்கக் கூடாது"? அவர் தொடர்ந்தார்.

"இன்றைக்கு உங்களத் தேடி அரசியல் தலைவர்கள் வந்திருக்கிறார்கள். இவர்கள் பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினைகளைக் கதைக்கவேண்டும். அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படத் தூண்டவேண்டும். அப்போதுதான் அது சட்டமாகி உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு வரும். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. எல்லோருக்கும் ஆசிரியர் பதவிகள் கிடைக்காது. கொஞ்ச நாளைக்குத் தொண்டர்களாகிப் பாருங்கள். படித்த படிப்புக்களைக் களத்தில் விதைத்துப் பாருங்கள். நீங்கள் இயங்கி மக்களை இயக்கும் சக்தியாக மாறிவிடுவீர்கள்." அவர் நிறுத்திக்கொண்டு வணக்கம் சொன்னார். அப்படியே சென்றுவிட்டார். கயல்விழியின் மூளையில் ஒரு தீப்பொறி பளிச்சிட்டது. அவளது மனத்திரையில் படமாக விரிந்தது. அவள் தீர்மானித்து விட்டாள்.

பட்டதாரிகளின் மூளையில் வெளிச்சம் படர்ந்தது. உண்மை புலப்படத் தொடங்கியது. இனித் தொடர்ந்தும் போராட்டம் நடத்துவதில் பயனில்லை என்பதைப் புரிந்து கொண்டார்கள். தூரத்தில் இருந்து வந்தவர்கள் கலையத் தொடங்கினார்கள். தருணம் பார்த்திருந்த அரசியல்வாதிகள் பேசத் தொடங்கினார்கள். வேறுவழியின்றி பட்டதாரிகள் பொறுமை காத்தார்கள். "உங்கள் பிரச்சினைகளை உரிய இடத்துக்குக் கொண்டு சென்று நல்ல தீர்வைத் தருவோம். நீங்கள் அமைதியாகக் கலைந்து வீடுகளுக்குச் செல்லுங்கள். அவர்கள் சொல்லுமுன்பே பட்டதாரிகள் கலையத் தொடங்கினார்கள்.

"கயல்விழி நமது நிலைப்பாடு புரிந்து விட்டது. நாங்கள் கப்பலையும் விட்டிற்றம். என்ன செய்வது"?. மங்கை கேட்டாள். "இன்றைக்கும் மாமா வீட்டில நிற்போம். நாளைக்காலை கட்டைபறிச்சான் போவம். நீ கொஞ்ச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு என்னோட நில். பிறகு நீ விரும்பினால் உன் வீட்டுக்குப் போகலாம். என்ன"? கயல் விளக்கினாள். "நீ என்ன சொன்னாலும் நான் தட்டமாட்டன். சரி அப்படியே செய்வோம்". கூறிக்கொண்டே மாமா வீட்டுக்குச் சென்றார்கள்.

மாமி வரவேற்றார். பிள்ளைகள் உற்சாகமின்றிக் காணப்பட்டனர். பிரியாவின் கண்கள் கலங்கியிருந்தன. முகம் வாடிக்கிடந்தது. சோர்ந்து போயிருந்தாள். "பிரியாக் கண்ணு என்னம்மா கண்கள் கலங்கியிருக்கு? ஏன் சோர்ந்திருக்கிறாய்"? கயல்விழி கேட்டாள். "அக்கா ஸ்கொலசிப் என்னைக் கொலசெய்யிது. அது ஸ்கொலசிப் இல்ல. எங்களக் கொலசெய்யிற 'கொலசிப்'. எங்கட ரீச்சர் அன்பு காட்டாமல் அடிக்கிறா. பிசாசுகள் என்று திட்டி ஏசுறார். விளையாடினா அடிக்கிறா. எனக்குப் பள்ளிக்குப் போக விருப்பமில்ல. என்னை கூட்டிட்டுப் போங்க. இல்லாட்டி வேற பள்ளியல சேர்த்துவிடச் சொல்லுங்க." அழுதழுது பிரியா கூறினாள். கயல்விழிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

குழந்தைகள் தெய்வத்துக்குச் சமனென்று சொல்கிறார்கள். அந்தத் தெய்வங்களை வதைப்பதா? நாம் அன்பைப் பிள்ளைகள் மேல் சொரிந்தால்தானே அன்பானவர்களை இந்த உலகில் உருவாக்கலாம். என்ன மனிதர்கள் இவர்கள்.? "பிரியாக்கண்ணு! நாளைக் காலை உன்னுடன் பாடசாலைக்கு வந்து ரீச்சருடன் கதைக்கிறன். சரியா.. இப்ப விளையாடுவமா"? கேட்டாள் "ஓம் வாங்கோ" என்றாள் பிரியா. சற்று நேரம் ஓடியொழிந்து விளையாடினார்கள். குமணன் கட்டிலில் பாய்ந்து ஓடியொளிந்து சந்தோசமாக விளையாடினான். பிரியா சந்தோசநிலைக்கு வந்து விட்டாள். "விளையாடியது போதும். மணி இப்போ ஆறரை. போய் முகம் கைகால் கழுவி வாருங்கள்". அம்மாவின் கட்டளை வந்தது. அவர்கள் பம்பரமானார்கள்.

மாமா ஓய்வாக இருந்தார். மாமியும் கலந்து கொண்டார். அவரோடு சற்று நேரம் அளவளாவினார்கள். அவர்களும் பட்டதாரிகளின் போராட்டம்பற்றித்தான் கதைத்தார்கள். "அரசாங்கம் சட்டமூலத்தை உருவாக்கி அதனைப் பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவை பற்றிய அறிவித்தல்கள் வர்த்தமானியில் பிரசுரமாகி வெளிவந்தால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை சாத்தியப்படும்." மாமா தெளிவாக விளங்கப் படுத்தினார். எதிர்காலம் சூனியமாகத் தெரிந்தது. "எனினும் இருக்கும் வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் தீர்மானிக்கலாம். அங்குகூட அரசியல்வாதிகளின் திருவிளையாட்டும் தில்லுமுல்லுகளும் தலைவிரித்தாடும். ஆளுங்கட்சி உறுப்பினர்களின் ஆக்களுக்குத்தான் செல்வாக்குண்டு. இதுதான் இன்றைய நிலை". மாமா அனுபவசாலி விளக்கினார்.

## 10

கயல்விழி காலை புறப்பட்டுப் பிரியாவுடன் அந்தப் பாடசாலைக்குப் போனாள். கூடவே மங்கையும் சென்றாள். பிரியாவின் வகுப்பு ரீச்சரைச் சந்திப்பதற்கு அதிபரின் அனுமதியைப் பெறச்சென்றாள். "கயல்விழி! வாவா. நான் இப்ப இங்குதான் இருக்கிறன். இங்க வந்து ஒருவருடமாகிறது. என்ன இந்தப்பக்கம்.? சுகமாக இருக்கிறாயா"? அவளைக் கதைக்க விடாது அதிபரே வினாக்களால் திணறடித்துக் கொண்டிருந்தார். அதிபர் முடிக்கும்வரை அமைதி காத்தாள். "மடம்! நான் நன்றாக இருக்கிறன். மாமாவின் மகள் பிரியா இங்குதான் ஐந்தாம் வகுப்புப் படிக்கிறாள். அவவின் வகுப்பாசிரியரிடம் கொஞ்சம் கதைக்க வேண்டும். அதுதான் வந்தேன்". என்றாள். "என்ன விசயம் கதைக்கப் போகிறாய். நான் ரீச்சரை இங்க வரச் சொல்லுறன். கதைக்கலாம். கூறிவிட்டு அழைப்பு மணியை அழுத்தினார். சிற்றூழியர் வந்தார். விசயத்தைச் சொன்னார். வந்தமாதிரி சிற்றூழியர் சென்றுவிட்டார்.

சற்று நேரத்தில் வகுப்பாசிரியர் சுமதி வந்தார். கயல்விழிக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன கயல்விழி அதிசயமாக இருக்கு. நான் இங்கிருக்கிறன் என்று எப்படித் தெரியும்?" கூறியவாறே ஆவலோடு ஓடிவந்து தழுவிக் கொண்டாள்.

"நீதானா ஐந்தாம் வகுப்பு ரீச்சர். நான் வேறொருவர் என்றல்லவா நினைத்து வந்தேன்". கயல்விழி அவளது விழிகளைப் பார்த்துக் கூறினாள். "இன்றிலிருந்து ஐந்தாம் வகுப்புக்கு நான்தான் பொறுப்பு. அதிபரின் அன்புக் கட்டளையை மீறமுடியாதுள்ளது". சுமதி அதிபரைப் பார்த்துக் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சிரித்துக் கொண்டார். "கயல்விழி நீ எதற்கு வந்ததென்று தெரியும். இப்படிப் பலர் வந்தார்கள். நான் யாருக்கும் மனம் நோகாது சில மாற்றங்களைச் செய்திருக்கிறன். நான் நேரில் பார்த்ததால்தான் இந்த முடிவை எடுத்தேன்". அதிபர் சிரிப்போடு கூறினார். இந்த அதிபருடன் இந்தச் சிரிப்பும் கூடவே பிறந்ததோ? கயல்விழி மனதில் வியந்து கொண்டாள். "மிகவும் நன்றி மடம்." நெக்குருகிக் கூறினாள். "சரி நீ சுமதியோடு கதைத்துவிட்டுப் போ. எனக்கு வேலையிருக்கு. கயல்விழி இங்கே உயிரியல் விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர் இல்லை. கொஞ்ச நாட்களுக்கு உதவ முடியுமா? அடுத்த கிழமை சொன்னால் போதும்." கூறிவிட்டு அதிபர் சென்றுவிட்டார்.

சுமதியிடம் தான் வந்தவிசயத்தைச் சொன்னாள். "இதனால்தான் அதிபர் என்னை இந்த வகுப்புக்கு மாற்றியிருக்கிறார். நீ கலைப்படாத. நான் கவனிச்சிக் கொள்வன். எதற்கும் வகுப்புக்கு ஒருக்கா வந்தால் பிரியாக்குச் சந்தோசமாக இருக்கும்". சொல்லி அழைத்துச் சென்றாள். வெளியில் இருந்த மங்கையும் சேர்ந்து கொண்டாள். வகுப்பறைக்குள் சென்றதும் பிரியா சந்தோசத்துடன் சிரித்தாள். "அக்கா இது எங்கட புது ரீச்சர். எங்களோட அன்பாக இருக்கிறா". ஓடிவந்து கயல்விழிக்கு முன்னால் சொன்னாள். "பிரியா! அக்கா போய்வாறன். ரீச்சர் அன்பாக இருப்பார். கவனமாகப் படி." என்றாள். சுமதி வழியனுப்பி வைத்தாள். இருவரும் வெளியில் வந்தார்கள். மாமாவின் வீட்டுக்குப் போனார்கள். மாமா வரும்வரை காத்திருந்தார்கள். அவர் பகலுணவுக்கு வந்தார். மாமியும் வந்துவிட்டார். அவர்களோடு சாப்பிட்டார்கள். பிரியாவின் விசயத்தைக் கூறினாள். அவர்கள் சந்தோசப் பட்டார்கள். இரண்டரை மணிக்குக் கப்பலுக்குப் புறப்பட்டார்கள்.

ஜெட்டிக்குச் சென்று கப்பலில் ஏறிக்கொண்டார்கள். மேல்தளத்தில் காற்று வீசும் பக்கம் இருந்தார்கள். கப்பல் புறப்பட்டது. இப்போதெல்லாம் உள்நாட்டுச்சுற்றுலாப் பயணிகள்தான் அதிகம். இலங்கைத்துறை 'லங்காபட்டுன' ஆகிவிட்டது. இலங்கைத்துறை முகத்துவாரத்தில் ஒரு உயர் குன்று இருக்கிறது. இதில் முருகன் கோயில் இருந்தது. அது இப்போது புத்தரின் புனிததலமாக மாறி வெற்றிச்சின்னமாகப் பெரும்பான்மையினருக்கு மாறிவிட்டது. லங்காபட்டுனவைப் பார்க்கத்தான் இவ்வளவு மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுத்துப் போகிறார்கள். இன்றும் வழமைபோல் சனங்கள் ஏறியிருந்தார்கள். மங்கை மறக்காமல் அன்றையத் தினசரிகளை வாங்கிக் கொண்டாள். கப்பலுக்குள் சென்றதும் எடுத்து விரித்தாள். பத்திரிகையைப் படித்ததும் தூக்கிவாரிப் போட்ட உணர்வு. 'பாராளுமன்றப் பிரதிநிதிகளின் தலையீட்டால் போராட்டம் நிறுத்தம்' என்றிருந்தது. கயல்விழிக்கு உண்மைக்காரணம் தெரியும். அவள் போலிகளை இனங்கண்டு கொண்டாள்.

"பதவிகளைத் தக்கவைக்கும் தலைவர்களால மக்களுக்கு நன்மை வருமா?" இரண்டு கிண்ணியா இளைஞர்கள் விவாதித்தது கேட்டது. கவனமாக உற்றுக்கேட்டார்கள். கிண்ணியா முஸ்லிம்களின் பேச்சொலி கேட்பதற்குச் சுவையாக இருக்கும். "என்னா பேப்பரில கெடக்கு"? ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கேட்டார். "நம்மட எம்பிமார் பெயித்துக் கதைச்சித்தானாம் பட்டதாரிப் பிரச்சினை தீர்ந்திருச்சாம் எண்டு கெடக்கு. என்னா கதச்சிருப்பாங்க. சனங்களோட கதைக்கத் தெரியாத இவங்க பாராளுமன்றத்தில என்னா கதைப்பாங்க எண்டு தெரியாதா? ஆருக்குக் கணக்கு விடுறாங்க? ". பேப்பரைப் படித்தவர் சொன்னார். "அவுங்களுக்கென்னா? நாம வோட்டுப் போட்டு 'யொப்பு' எடுத்துக் குடுத்தா இதுவும் செல்லுவாங்க. இன்னமும் செல்லுவாங்க." சிரிப்போடு கதைத்தார்கள். "கயல்விழி நன்றாகக் கவனித்தாயா? அவர்கள் கதையில் உண்மையிருக்கு. படிக்காத பாமர மக்களுக்கே அரசியல் தெரிந்திருக்கிறது. நாம் ஏமாந்த பேர்வழிகள்தான்". மங்கை பெருமூச்சுடன் கூறினாள்.

மங்கை! நான் ஒரு தீர்க்கமான முடிவோடு இருக்கிறன். தீக்குச்சி இருக்கிறதல்லவா? அது சும்மா இருந்தால் பற்றாது. அதனை தீப்பெட்டியின் ஓரத்தில் உரைசினால் பற்றிக் கொள்ளும். அந்தத் தீக்கொழுந்தால் ஆக்கவும் செய்யலாம். அழிக்கவும் செய்யலாம். நமது இளைஞர்கள் ஒவ்வொருவரும் தீப்பெட்டிக்குள் உள்ள தீக்குச்சி போன்றவர்கள். அவர்களை உரைசிவிட ஒரு ஆள் வேண்டும். அது ஏன் நாமாக இருக்கக் கூடாது. கட்டைபறிச்சான் கிராமத்தைச் சூழப்பல கிராமங்கள் உள்ளன. அதற்கப்பால் பலகுளங்கள் நல்ல விளைநிலங்களாகப் பரவிக் கிடக்கின்றன. மனித வளத்தை, இயற்கை வளத்தோடு இணைத்தால் அதன் பயன் உச்சம் பெறும். அதற்கான வழிகளைத் திட்டம் போட்டிருக்கிறன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதா நல்லதொரு யுவதி. புரடசிகரமான சிந்தனைகளைக் கொண்டிருக்கிறாள். அவளும் பல்கலைக் கழகப் பட்டதாரிதான். கெட்டிக்காரி. அவளுக்குப் பின்னால் பலர் இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்தி நல்லன செய்யப்போகிறன். அவளிடம் நிறையவே கதைச்சிப் போட்டன். ஒரு விசயத்தைக் கிராமத்தில் முன்னெடுக்கிறதென்றால் பாடசாலையை அல்லது கோயிலை மையமாகக் கொள்ள வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் சாரதா செய்கிறாள். இன்றைக்கு நமக்கு நல்ல வேலையிருக்கு. கோயிலில் முதற்கூட்டம் நடைபெறும். நீயும் என்னோட கொஞ்ச நாட்கள் இரு. எனக்கு ஒத்தாசையாக இருக்கும். வீட்டுக்கு அறிவித்துவிடு". கயல் கூறிக்கொண்டே இருந்தாள். அவளையே மங்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

கப்பல் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது. எத்தனை விதமான மனித மனங்களைச் சுமந்து செல்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை. நமது கவலையை நாம்தான் போக்க வேண்டும். ஜெட்டியை அடைந்ததும் கட்டைபறிச்சானுக்கு விரைந்தார்கள். சுந்தரத்தார் எதிர்பார்த்த வண்ணம் இருந்தார். பிள்ளைகளைக் கண்டதும்தான் அவருக்கு நிம்மதி.

"பிள்ளைகள் களைத்து வந்திருக்குதுகள்".சொல்லிக் கொண்டு தங்கம் தேநீரைக் கொடுத்தார். களைப்புக்குத் தேநீர் அமுதமாக இருந்தது. சற்று நேரத்தால் குளித்தார்கள். அப்படியே கோயிலுக்குச் சென்றார்கள். இன்று மக்கள் அதிகமாக இருந்தார்கள். சிறப்பாக இளைஞர்களும் யுவதிகளும் கூடியிருந்தார்கள். அடுப்பில் பானையிருந்தது. பொங்கல் வெந்து கொண்டிருந்தது. சாரதா சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

கயல்விழியும் மங்கையும் கோயிலை வலம் வந்தார்கள். கண்களை மூடியபடியே இறைவனைத் தியானித்தார்கள். கைகளைத் தலைமேல் குவித்து வணங்கினார்கள். தரையில் வீழ்ந்து கும்பிட்டார்கள். எழுந்து கண்களை விழித்துப் பார்த்தார்கள். அவர்கள் எதிரே சாரதாவோடு யுவதிகள் நின்றார்கள். "அக்கா உங்களைப் பார்ப்பதற்காக வீட்டுக்குப் போயிருந்தோம். நீங்க திருகோணமலைக்குப் போயிருப்பதாக அம்மா கூறினார். நீங்கள் சொன்னதுபோல் ஒழுங்குகளைச் செய்து விட்டோம்". மிகப்பணிவாகக் கூறினார்கள். "உங்கள் உதவி எப்போதும் தேவை. நமது கால்களில் நாம் நிற்க வேண்டும்? அதைச் செய்யுங்க". அவர்களைப் பார்த்தவாறே கயல்விழி கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா நமது ஊரின்நிலை உங்களுக்குத் தெரியும். வீடுகளில் பல கன்னிப் பெண்கள் சோம்பேறிகளாய் கிடக்கின்றார்கள். அவர்களை கோயிலுக்கு வரச்செய்ய வேண்டும். கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபடுத்த வேண்டும். நாங்கள் சொன்னால் வரமாட்டார்கள். நீங்கதான் உதவவேண்டும். இன்றைக்கு கோயிலில் நாங்கள் பொங்குகிறோம். பூசைநடக்கும். அதிகமானவர்கள் வருவார்கள். நீங்கள் சொன்னதுபோல் சங்கத்தை இன்றைக்குத் தொடங்குவம்.". தங்களது செயற்பாட்டை ஒப்புவித்தார்கள். கயல்விழிக்கு ஆச்சரியமாகவும் சந்தோசமாகவும் இருந்தது. ஒவ்வொருவர் மனதிலும் நல்ல விசயங்களுக்கான ஊற்றுக்கண் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைக் கண்டறிந்து திறந்துவிட்டால் உலகம் செழிக்கும்.

"நாங்க வீட்டுக்குப்போய் அப்பாவிடம் சொல்லிப்போட்டு வாறம். இதோ போறதும் வாறதும்தான்". கூறிப் போனார்கள். யுவதிகளுக்குச் சந்தோசம். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டார்கள். கயல்விழியும், மங்கையும் வந்தார்கள். இப்போது ஏராளமான யுவதிகள் வந்திருந்தனர். பூசை தொடங்கவிருந்தது. "பூசை முடிந்ததும் சங்கத்தைத் தொடங்குவோம்." என்றார்கள். தேவாரம் பாடுவதற்குப் பலர் தயங்கினார்கள். மங்கை அக்குறையைப் போக்கினாள். மங்கை இசை கற்றவள். அவளது குரலும் இனிமையானது. அவளது தேவார இசை அனைவரையும் காந்தம் போல் ஈர்த்து விட்டது. பூசை முடிந்ததும் பிரசாதம் வழங்கப்பட்டது. திருமணம் முடித்தவர்கள் வீட்டில் வேலையென்று சென்றுவிட்டார்கள்.

யுவதிகள் அனைவரும் பதினைந்து தொடக்கம் இருபத்தியைந்து வயதினர்கள். அவர்கள் கோயில் மண்டபத்து முற்றத்தில் அமர்ந்தார்கள். நமது பாரம்பரியம் போற்றப்பட்டுப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்து எல்லோரிடமும் இருந்தது. முற்போக்குக் கருத்துள்ளவர்கள் பலர் இருந்தார்கள். இவர்களை ஒன்றுதிரட்டி விட்டால் பல சாதனைகளைப் படைக்கலாம். அடுப்பூதும் பெண்களாக இருந்தால் நமக்கு விடிவு கிடைக்காது. கயல்விழி ஒருதீர்மானத்துக்கு வந்துவிட்டாள். சாரதாவை அழைத்தாள். சாரதா முதலில் நீங்க தொடங்குங்க. நான் சொன்னபடி நிகழ்ச்சிநிரல் தயாரா? அதையே பின்பற்றுவோம். சரி தொடங்குங்க." தொடங்கும்படி கேட்டுக் கொண்டாள். சாரதா சம்பிரதாயப்படி தேவாரம் பாடினாள். எல்லோரும் எழுந்து நின்றார்கள். "இது ஒன்றே போதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை ஒன்றிணைக்க." மனதில் உறுதி கொண்டாள். கட்டைபறிச்சானின் விடிவு பிறப்பதற்காகக் கிராமத்தின் பழமை பேசப்பட்டது.

"நாம் இங்கு கூடியிருப்பது நமது கிராமத்தை எழுச்சி மிக்கதாய் ஆக்குவதற்காக என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
இக்கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்படும். அவற்றை நடைமுறைப் படுத்தி வெற்றி காண்பதே இக்கூட்டத்தின் நோக்கம். நமது கிராமத்தில் இருந்து பல்கலைக்கழகம் போய் பட்டதாரியாகி நமது கிராமத்துக்கே அக்கா கயல்விழி வந்திருக்கிறார். அவரை உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவரது தலைமையில் நாம் ஒன்று திரண்டு, கிராமத்தை முன்னேற்றுவோம். நமது அக்கா கயல்விழி நாம் முன்னேறுவதற்கான திட்டங்களை விளக்குவார்கள்". சாரதா கூறிவிட்டு அமர்ந்தாள்.

கயல்விழி எழுந்தாள். வணக்கம் சொன்னாள். "அன்பான தோழிகளே! அருமைத் தம்பி தங்கையரே!" எல்லோரையும் பார்த்து விழித்தாள். "நமது கிராமம் அழிக்கப்பட்டது. அழிவின் காரணகாரியங்களை அலசுவதை விடுத்து அதிலிருந்து மீளவழிபார்க்க வேண்டும். ஏனென்றால் நாம் வாழவேண்டும். நமது சந்ததியினருக்கு நாம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். அதிலிருந்து தவறினால் நம்மை நமக்குப்பின் வரும் சமூகம் பழித்துச் சபிக்கும். நமது அனைத்தும் அழிக்கப்பட்டாலும் அதனை மீண்டும் கட்டியெழுப்புவோம். நமக்கு கல்வி மிகமுக்கியமானது. இவற்றையிட்டுக் கதைப்பதற்காகத்தான் இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது பல அனுபவங்களைப் பெற்றுள்ளேன். பல மக்களைப் பார்த்திருக்கிறேன். நாம் நினைத்தால் நமது கிராமத்தை மாற்றி அமைத்து விடலாம்". சற்று நிறுத்தித் தொடர்ந்தாள். அவளது பேச்சைக் கேட்டுக் கொண்டு இளைஞர் கூட்டம் அமர்ந்திருந்தது.

"நமது கிராமத்தில் உள்ள பலத்தையும், பலவீனத்தையும் பார்ப்போம். பாடசாலைகள் இரண்டு உள்ளன. படிப்பதற்கு மாணவர்கள் உள்ளனர். ஆனால் ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. படித்தவர்கள் உள்ளனர். ஆனால் வேலைவாய்ப்பு இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் தோட்டஞ்செய்யக்கூடிய காணி உண்டு. ஆனால் அதற்குரிய முதலில்லை. செய்யும் அக்கறையில்லை. தோட்டவேலை செய்யக்கூடிய மனிதவலு உள்ளது. அதற்குரிய ஆயுதங்கள் இல்லை. உடல்வலு உண்டு. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பல் விடுவதாக இல்லை. கடல் வளம் உண்டு. நாம் கண்டு கொள்ளாது இருக்கிறோம். நமது உப்பு நீர்ச்சிற்றாறு விதையாத வயலாக உள்ளது. அதன் பயனை அனுபவிக்காது இருக்கின்றோம். சின்னஞ்சிறார்கள் இருக்கிறார்கள், பாலர் பாடசாலைகள் இல்லை. பாலர்பாடசாலைகளில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க நிதிவசதியில்லை. கோயில் இருக்கிறது அதற்கெனப் பூசை செய்ய அர்ச்சகர் இல்லை. அவருக்குக் கொடுக்க நிதிவசதியும் இல்லை. வயல்நிலங்கள் உண்டு. அவை பற்றைக் காடுகளாக உள்ளன". இளைஞர்களைப் பார்த்தாள். அவர்கள் அமைதியாகப் புன்னகைத்தார்கள்.

## 11

"இங்கே பெண்கள் மட்டுமல்ல. நமது இளைஞர்களையும் காண்கிறேன். தம்பி தங்கைகளைக் காண்கிறேன். சொன்னால் செய்து முடிக்கும் ஆற்றல் உங்களிடம் உண்டு. நாளையில் இருந்து இல்லையில்லை. இன்றிலிருந்து நாங்கள் எல்லோரும் புதுமனிதர்களாவோம். எங்களால் முடியும். சாதித்துக் காட்டுவோம். நாம் ஒன்றென எழுவோம்". கனல் பறக்கக் கயல்விழி பேசினாள். கோயில் முற்றத்தில் திரண்டிருந்தவர்கள் அனைவரும் இளயவயதினர். எதனையும் சாதித்துக் காட்டும் சக்தி கொண்டவர்கள். அவர்கள் தோள்கள் தினவெடுத்தன. நிமிர்ந்திருந்தார்கள்.

"முதலில் ஒரு செயல்திறன்மிக்க தலைவரைத் தெரிவோம். செயலாளரைத் தெரிவோம். நல்லதொரு பொருளாளரைத் தெரிவோம். ஏழுபேர் கொண்ட செயற்குழுவைத் தெரிவோம். உடனடியாக அதனைச் செய்யுங்கள். ஐந்து நிமிடங்கள் பேசித்தீர்மானியுங்கள். அதுவரை காத்திருக்கிறேன்." அமர்ந்து கொண்டாள். மங்கை கயல்விழியின் செயற்பாடுகளைக் கண்டு பிரமித்தாள். "இவ்வளவும் உன் உள்ளத்தில் எப்படி உருவானது?" வியப்போடு கேட்டாள். "பல்கலைக் கழகத்தில் கற்கும்போது நமது மக்கள் படும் வேதனைகள் தந்த பாடங்கள். நீகூடச் சொல்வாயே. எப்படி நமது மக்களுக்குச் சேவைசெய்வதென்று. அதனைத்தான் இப்போது தொடங்கியுள்ளோம்". கயல்விழி கூறினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொடங்கியுள்ளோம் என்றால் நானுமா""?" ஆச்சரியத்துடன் மங்கை கேட்டாள். "ஆமாமாம் நீயில்லாமலா? நீதானே என்னை உன்னோடு கூட்டிச் செல்லென்று சொன்னாய். நமக்கு நல்லதொரு வேலை கிடைக்கும் வரை மக்களுக்குத் தொண்டாற்றுவோம். அவர்களை வலுப்படுத்தி அவர்களிடமே ஒப்படைப்போம். அதுவரை அவர்களை வழிநடத்துவோம்". கலகலத்துச் சிரித்தாள். மங்கையும் சேர்ந்து கொண்டாள். "சரி இத்திட்டம் நிறைவேறுமா""? மங்கை கேட்டாள். "முயற்சிப்போம். வெற்றி நிச்சயமே. ஜெயமுண்டு. பயமில்லை". இராகத்தோடு காதில் ஓதினாள்.

இளைஞர் பக்கமிருந்து குரல்கள் ஒலித்தன. உற்றுக் கேட்டாள் "அக்கா நாங்களும் இதில் பங்கு கொள்ளலாமா? எங்களையும் சேர்த்தால் எல்லோரும் சேர்ந்து தேரை இழுக்கலாம் வெற்றி கிடைக்கும். எங்களுக்குள்ளும் பட்டதாரிகள் இருக்கிறார்கள். ஏ.எல் படித்தவர்கள் இருக்கிறார்கள்.". இளைஞர்கள் சார்பில் சாந்தன் எழுந்து விண்ணப்பித்தான். "நீங்கள் இல்லாமலா? நாம் எல்லோரும் சேர்ந்துதான் நமது ஊரை அபிவிருத்தி செய்யப் போறம். அதுதான் நமது எல்லோரதும் அபிலாசைகளாகும். சரி நீங்களும் இப்படி வந்து அமருங்கள்." சொன்னதும் அமைதியாக வந்திருந்தார்கள். "முதலில் சபைக்குரியவர்களைத் தெரிவு செய்யுங்கள். தெரிவு செய்யும்போது தானாக முன்வந்து செயல்களில் ஈடுபடுபவர்களாக இருப்பது நல்லது". அவள் முடிக்கவில்லை. "செல்வி. கயல்விழி அவர்களை நாங்கள் ஏகமனதாகத் தெரிவு செய்கிறோம். அவர் எந்தவித மறுப்புமில்லாது ஏற்றுக் கொள்ள வேண்டும்." வேண்டுகோளோடு முன்மொழியப்பட்டதோடு வழி மொழிதலும் செய்தாகி விட்டது. அதேபோல் செல்வி சாரதாவை செயலாளராகத் தெரிவு செய்தார்கள். பொருளாளராக சாந்தனைத் தெரிவு செய்தார்கள்.

சாந்தன் எழுந்து "முதலில் பெண்களே இருக்கட்டும். பின்னர் நாங்கள் சேர்ந்து கொள்கிறோம். எப்போதும் உங்களோடு சேர்ந்து செயற்படுவோம்". என்றான். "செயற்குழுவில் "எல்லோரும் கலந்திருப்போம். அப்போதுதான் இணைந்து செயற்படலாம். எல்லோரும் பொறுப்புக் கூறுபவர்களாக மாறவேண்டும்". பெண்கள் பகுதியில் இருந்து குரல்கள் வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாளராக திருமங்கையை முன்மொழிந்தார்கள். திருமங்கை அதனை மறுத்தாள். " உங்கள் வளர்ச்சிக்கு எனது பூரணமான வாழ்த்துக்கள். நான் ஊருக்குப் புதுசு. சில நேரம் நான் எனது ஊருக்குப் போய்விடலாம். அதனால் உங்களில் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள்". மங்கை தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினாள். "திருமங்கைதான் நமது சங்கத்தின் இணைப்பாளராகச் செயற்பட இருக்கிறார். அவர் திட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பாளராக இருப்பார். அத்துடன் கல்விக்கும் பொறுப்பாக இருந்து நமக்காக உழைப்பார்". கயல்விழி விளக்கினார். "யாராவது தாங்களாகவே விரும்பிப் பொருளாளராக இருப்பதற்கு முன்வந்தால் சந்தோசமாக இருக்கும். முன்வாருங்கள்." என்றாள்.

"நான் வருகிறேன்." என்ற குரல் ஒலித்தது. சத்தம் வந்த திசையைப் பார்த்தார்கள். அங்கே ராகினி எழுந்து நின்றிருந்தாள். ராகினி கிராமத்தின் எழுச்சிக்காக உழைக்கக் கூடியவர். அத்துடன் அவர் ஒரு பட்டதாரி என்பதும் கயல்விழிக்கு நன்கு தெரியும். "மிகப் பொருத்தமானவர்." அனைவரும் ஆரவாரித்தனர். நல்லதொரு செயலாற்று சபையும் தெரிவாகியது. சபைக்குச் 'சேர்ந்துவாழ்' என்ற பெயரை ஏகமனதாகத் தெரிவு செய்தார்கள்.

கல்வி, கலாசாரக் குழு, முதலுதவிக்குழு, சுகாதாரக் குழு, சிரமதானக்குழு எனப்பல குழுக்களைத் தெரிவு செய்தார்கள். பெண்களை மட்டும் எழுந்து நிற்கும்படி கயல்விழி கூறினாள். அவர்கள் எழுந்தார்கள். "என்னைச் சுற்றி எல்லோரும் வட்டமாக நில்லுங்கள்." என்றாள். "நான் கைகளைத் தட்டிக் கொண்டே இருப்பேன். நீங்கள் ஒருவருக்குப் பின்னால் ஒருவர் வட்டமாக ஓடவேண்டும். ஓடிக்கொண்டே ஏதாவது ஒரு இலக்கத்தைச் சொல்வேன். அதனை நன்கு கேட்டுச் சோடி சேரவேண்டும். நான் இரண்டு சொன்னால் இருவராகச் சேரவேண்டும். ஐந்து சொன்னால் ஐந்து பேர் சேரவேண்டும்". விளக்கினாள். முதலில் ஓடும்படி கூறினாள். இலக்கம் இரண்டைக் கூறினாள். இருவராகச் சோடி சேர்ந்தார்கள். ஒவ்வொரு இலக்கமாகச் சொல்லி வந்தாள்.

விளையாட்டு சந்தோசத்தைக் கொடுத்தது. "பலவருடங்களுக்குப் பிறகு இன்றைக்குத்தான் சிரித்திருக்கிறோம். மனமெல்லாம் இறுக்கமாக இருந்தது. இப்போது இளகி இலகுவாகிறது. சந்தோசமாக இருக்கிறது" என்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமங்கையைப் பார்த்தாள். "கயல் உனக்கு மனவளக்கலை தெரியும் என்ன"? ஆச்சரியத்தோடு கேட்டாள். "நமது மக்கள் மனவடுவுக்குள்ளாகித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் பெரிய சுமையாக இருப்பதாக நினைக்கிறார்கள். இதற்கு மருந்து இவ்வகையான சின்னச்சின்ன செயற்பாடுகள்தான். இதனைத்தான் 'சைக்கோ சோஷியல் ரீட்மெண்ட்' என்று சொல்வார்கள். எதனை எதனால் தீர்க்கலாம் என்று யோசித்தால் விடை வந்தே தீரும். நமது 'சேர்ந்துவாழ்' சங்கம் மக்களை வாழ வளப்படுத்தும்" ஒரு புன்னகையோடு சொன்னாள்.

இப்போது நிறைவாக பத்து என்றாள். பத்துப் பத்துப் பேர்களாகச் சேர்ந்தார்கள். "சரி இன்னொரு தடவை விளையாடுவோம். அதன்பின் கடமையைத் தொடருவோம்." என்றாள். உற்சாகமானார்கள். இளைஞர்களுக்கும் விளையாட்டு வேண்டும் என்றார்கள். "உங்களுக்கும் தரப்படும்". என்றாள். விளையாட்டுத் தொடர்ந்தது. பல இலக்கங்களைச் சொன்னாள். விளையாடினார்கள். ஐந்து என்றாள். ஐந்தைந்து பேராக நின்றார்கள். சரி ஒவ்வொரு ஐந்து பேரும் ஒரு குழு. நீங்கள் உங்கள் குழு உறுப்பினர்களை எழுதிக் கொள்ளுங்கள். என்றாள். ஒவ்வொரு குழுவும் உங்கள் குழுவில் நமது ஊரில் உள்ள இன்னும் ஐந்து பேரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒருகுழுவில் பத்து அல்லது பன்னிரெண்டு பேர் இருக்கலாம். அதற்குமேல் ஒருகுழுவில் இருப்பது நல்லதல்ல". தொடர்ந்து விளக்கினாள்.

"ஒவ்வொரு குழுக்களும் இன்னும் ஐந்து பேரை அடுத்த கிழமைக்குள் சேர்த்து விடவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாயாவது சேமிக்க வேண்டும். ஒரு கிழமைக்குப் பதிநான்கு ரூபாய் இலகுவாகச் சேர்த்து விடலாம். ஒவ்வொரு குழுவும் உங்களுக்குள் ஒரு தலைவர், செயலாளர், ஒரு பொருளாளர் எனத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். இந்தக் குழுக்கள் ஒவ்வொருகிழமையும் சந்திக்க வேண்டும். மாதமொருமுறை குழுக்கள் கூடிச் சேர்ந்த பணத்தை வங்கியில் சேமிப்பில் இடவேண்டும். இந்தச் சேமிப்பு முறையை கட்டாயப் படுத்திக் கொள்வது உங்களது கடமையாகும்." சுற்று நிறுத்திவிட்டுத் தொடர்ந்தாள்.

"இளைஞர்களும் ஏனைய யுவதிகளும் நமது ஊரில் உள்ள வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனைக்கும் செல்லவேண்டும். கணக்கெடுப்புப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர், வயது, பால், கல்வித்தகைமை, செய்யும் தொழில், மாதவருவாய், வீட்டின் தன்மை, முற்றாக உடைந்துள்ளதா? கிணறு, மலசலகூட வசதி அனைத்தையும் பதிந்து தரவேண்டும். இவை இருந்தால் நமது கிராமத்தின் தேவைகளை விரைவில் இனம் கண்டு கொள்ளலாம். செயலாளர் சாரதா இதற்கான கொப்பிகளைத் தருவார். இரண்டு மூன்று பேராகச் சேருங்கள். ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து பதிவினை மேற்கொள்ளுங்கள். நான் சொல்வது விளங்குகின்றதா"? கேட்டாள். " ஓம்" பதில் வந்தது.

"இந்தப் பதிவின்படி யாருக்கு என்னதொழில் தெரியும் என்பது தெரிந்து விடும். பாலர் பாடசாலைகள் தேவை. அதனை தற்காலிகமாக பொதுவான இடத்தில் தொடங்குவோம். முதல் வேலையாக நாளைக் காலையில் இந்தக் கோயிலில் சிரமதானப்பணியைச் செய்வோம். உங்கள் ஒத்துழைப்பு இருந்தால் நீங்கள் பார்த்திருக்க நமது கிராமம் விழித்தெழும். நமது செயற்திட்டம் அழகானது. பயன்தரக்கூடியது. ஒரு தேன்கூடு கட்டுவதற்கு எத்தனை தேனீக்கள் பாடுபடுகின்றன. உயிரினங்கள் நமக்குத் தமது வாழ்க்கை முறையினூடாகக் கற்றுத்தரும் பாடங்கள் நிறையவே உண்டு. அவற்றைப் பின் பற்றுவோம். உங்கள் கருத்துக்களையும் கூறுங்கள்". என்றாள்.

சபையில் அமைதி நிலவியது. "என்ன பேசாமல் இருந்தால் எப்படி? அக்கா முன் வைத்த கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறோம். நல்லதொரு பொருளை அவர் நமக்குக் காட்டியுள்ளார். அந்தப் பொருளை நாம் அடையவேண்டும். அதற்கு உழைப்போம். நாங்கள் அதில் உறுதியாக இருக்கிறோம்". சாந்தன் உறுதியான முடிவினைத் தெரிவித்தான். அவனும் ஒரு பட்டதாரி. "அக்கா விபரிக்கும் போது நமது கிராமம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தேன். பாரதியை நினைத்துக் கொண்டேன். பாரதி 'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்று பாடினான். அதனையே இந்தக் கற்பக விநாயகரிடம் கேட்டு நிற்கிறோம். எங்கள் வாழ்வு சிறக்க அவன் அருளை வேண்டி நிற்கிறேன்". உணர்வுபூர்வமாக மலர்விழி தெரிவித்தாள்.

"அக்கா எங்களுக்கும் ஒரு விளையாட்டு" சாந்தன் கேட்டுக் கொண்டான். சரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பேர்வீதம் ஆயுத எழுத்து 'அஹ்கன்னா' அதாவது அடுப்புக்கல் போன்று நில்லுங்கள். இரண்டு பேர் கைகளை உயர்த்திக் கூரையாக நிற்க வேண்டும். அது வீடாகும். மற்றவர் அதன் கீழ் குந்தியிருக்க வேண்டும்." இருவரை அழைத்துச் செய்து காட்டினாள். "எங்கே செய்யுங்கள்." அவள் சொன்னபடியே செய்தார்கள். கயல்விழியின் சத்தம் மட்டும் ஒலித்தது. "இப்போது 'ஆடு' என்று சொல்வேன். குந்தியிருப்பவர்கள் தங்கள் வீட்டைவிட்டு ஓடிச் சென்று வேறு வீடுகளுக்குள் இருக்க வேண்டும். செய்து பார்ப்போமா"? கேட்டாள். "ஓம் "என்ற பதில் வந்தது. "ஆடு" சத்தமிட்டுச் சொன்னாள். சின்னப் பிள்ளைகள் போல் ஆரவாரித்துச் சிதறியோடினார்கள். வேறு வீடுகளுக்குள் சென்று குந்தினார்கள்.

"சரி. இப்போது 'வீடு' என்று சொல்வேன். வீடாக நிற்பவர்கள் கலைந்தோடி ஆடுகள் இருக்கும் இடங்களில் வீடாக நிற்கவேண்டும். விளங்கினதா"? கேட்டாள். "ஓம் "என்ற பதில் வந்தது. "வீடு" என்றாள். ஆரவாரித்துச் சிதறியோடினார்கள். முடிந்ததும் ஆடு, வீடு என்று மாறி மாறிச் சொன்னாள். கலகலப்பாகச் செய்தார்கள். சிரித்து மகிழ்ந்தார்கள்.

"இன்னுமொரு முறை கவனியுங்கள். இப்போது 'எல்லாம்' என்று சொல்வேன். அப்போது எல்லோரும் கலைந்து ஓடி முதல் நின்றது போல் நிற்கவேண்டும். ஆனால் ஒன்றாக நின்றவர்கள் மீண்டுமொரு முறை சேரக்கூடாது. கலந்து நிற்க வேண்டும். நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்". விளக்கினாள். புரிந்து கொண்டார்கள். சொல்லத் தொடங்கினாள். முதலில் "வீடு" என்றாள். செய்தார்கள். "ஆடு" என்றாள். செய்தார்கள். "எல்லாம்" என்றாள். கலகலத்தார்கள் சந்தோசமாய்ச் செய்தார்கள். மாறி, மாறிச் சொல்லிக் குதூகலிக்க வைத்தாள். கயல்விழியில் இருந்த மதிப்பு பன்மடங்காக அதிகரித்தது. "அக்கா நல்லாயிருந்தது. சந்தோசமாக இருந்தது." என்றார்கள்.

"நீங்கள் என்னைத் தலைவராகத் தெரிவு செய்துள்ளீர்கள். எங்களது பயணம் இன்றிலிருந்து தொடங்குகிறது. முதற்கட்டமாக கோயில் சிரமதானம். அடுத்து நீங்கள் இப்போது இருக்கும் உங்கள் காணியை நீங்களே துப்பரவாக்குகிறீர்கள். அதற்கு ஒரு கிழமைதான் அவகாசம். நமது காணியில் நடுவதற்குப் போதுமான பயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகள் ஒருகிழமைக்குள் வந்து சேர்ந்து விடும்". திடுதிப்பென்று அறிவித்தாள். அவர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. கிராமத்தின் எழுச்சி பற்றிய கனவில் மிதந்தார்கள்.

"அரசாங்கத்தை நம்பிப் பயனில்லை. எங்கள் கால்களில் நாங்கள் நிற்போம். எங்கள் வீடுதான் தற்காலிக அலுவலகமாகப் பயன் படுத்துவோம். உங்கள் அபிப்பிராயம் என்ன"? வினவினாள். "அதுதான் பொருத்தம்". ஏற்றுக் கொண்டார்கள். புதிய கனவுகளோடு கலைந்து சென்றார்கள். கூட்டம் கலைந்தது. கயல்விழி திருமங்கையுடன் புறப்பட்டாள். வீடுவரை தொடர்ந்து தொண்டர்கள் வந்தார்கள். கயல் "நாளை சந்திப்போம்" கூறிக்கொண்டு படலையைத் திறந்து கொண்டு சென்றாள். அவளோடு வந்தவர்கள் தமது வீடுகளுக்குச் சென்றார்கள்.

## 12

இந்தப் பறவையினங்களை யார் எழுப்பி விடுகிறார்கள். அவற்றுக்கு எப்படி நேரத்தைக் கணிக்க முடிகிறது?. சரியாகக் குறிப்பிட்ட நேரத்துக்கு அவை பாடத் தொடங்கி விடுகின்றன. சூரியனின் உதயங்காண அவற்றுக்கு எவ்வளது துடிப்பு. என்ன மகிழ்ச்சியாக அவை கூச்சலிடுகின்றன. கிழக்கே சூரியனின் வரவை எப்படி அறிகின்றன. கண்டல்களில் விடியாலாவின் முழக்கம். ஊர்களில் கோழிகளின் கூவல். குயில்களின் கெக்கலிப்புடன் கூடிய குரலிசை. கரிக்குருவியின் இன்னிசை. மையிருளைக் குழைத்து ஊதிவரும் காற்று. இவை யாவும் சேர்ந்து வந்து கயல்விழியின் காதில் ஊதின. அவள் விழித்துக் கொண்டு கனவு கண்டாள்.

"மங்கை! என்ன விசித்திரமான உலகம். இந்த உலகில் உயிரினங்களின் வாழ்க்கை அற்புதமானது. ஒவ்வொரு உயிருக்கும் வாழ்க்கை ஒரு போராட்டம்தான். இந்த உலகை உற்றுப்பார். ஒரு உயிரின் வாழ்க்கை இன்னுமொரு உயிரில் தங்கியுள்ளது. விலங்குகளின் வாழ்க்கைமுறையில் இருந்து மனிதன் வேறுபட்டாலும் அவனில் விலங்கின் உணர்வுகளும், வேட்கையும் இருக்கிறதல்லவா? மாமிச உண்ணிகள் மற்றவிலங்குகளை வேட்டையாடி உண்டு உயிர் வாழ்கின்றன. குரங்குகளைப் பார். மான்மரை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு, ஆடு இவைபோன்றவை தாவரங்களை நம்பி வாழ்கின்றன. மனிதன் இரண்டிலும் தங்கியுள்ளான்.'' தத்துவம் பேசிக்கொண்டிருந்தாள். மங்கை சிரித்தாள். ஆனாலும் கயல்விழி தொடர்ந்தாள்.

''மனிதனை ஆறறிவு படைத்தவன் என்று கருத முடியாது. அவனைவிடவும் விலங்குகள் மேலானவை. சிங்கம் புலி போன்ற விலங்குகள் பசித்தால்தான் வேட்டையாடும். மனிதன் பசிக்காத வேளையிலும் வேட்டையாடுவான். இது விசித்திரமாக இல்லை''. ஒரு சிரிப்போடு தனது சிந்தனைகளை வீசினாள். ''உன் சிந்தனைகளைத் தூக்கி மூலையில் போடு. சும்மா கிடந்த இளைஞர்களைத் தூண்டிவிட்டுப் போட்டு பொறுப்பில்லாமல் இருக்கிறாய். புறப்படு. இன்றைக்கு நிறைய வேலைகள் இருக்கு''. மங்கை கயல்விழியைத் துரிதப்படுத்தினாள். ''நீயிருக்க எனக்கென்ன பயம். நீதான் 'சேர்ந்துவாழ்' நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி. நேற்றே உனது கடமை தொடங்கி விட்டது. இந்த ஊர் இளசுகளை இயக்கும் சக்திதான் திருமங்கை''. சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

தங்கம் தேநீரோடு வந்தார். "என்ன காலையிலேயே கலகலப்பா இருக்கு. கோயிலடியில பெட்டையள் வேலை செய்யுதுகள். என்ன மந்திரப் பொடி போட்டனீங்களோ?" சொல்லிக் கொண்டே தேநீரைக் கொடுத்தார். மங்கை ஓடிவந்து பார்த்தாள். இளைஞர்களும் யுவதிகளுமாக எங்கும் பரந்து நின்றார்கள். ஒரே இடத்தில் இல்லாது பரந்து செயற்பட்டார்கள். அவர்களது கைகளில் மண்வெட்டி, குப்பைவாரி, கத்தி என ஆயுதங்கள் இருந்தன. சுறுசுறுப்பாக இயங்கினார்கள். கயல்விழி இதனை எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு நேரத்தோடு வேலைகளைத் தொடங்குவார்கள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. துள்ளியெழுந்தாள். அப்பாவை வழமையான வேலை செய்யும் இடத்தில் காணவில்லை.''அம்மா அப்பா எங்கே? கேட்டாள்.

''அப்பா கோயிலடியில் அவங்களோட வேலை செய்யிறார்''. அம்மாவின் பதில் அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது. அப்பா ஏசுவார் என்று பயந்திருந்தாள். அவரிடம் சிலவிடயங்களைச் சொன்னாலும் இப்படியான செயற்பாடுகளைச் சொல்லவில்லை. அவரே அங்கிகரித்து விட்டார். இனியென்ன? ''மங்கை புறப்படு. போவோம். நாங்க போகாட்டி நமது தொண்டர்கள் என்ன நினைப்பார்கள்''? விரைந்து புறப்பட்டார்கள். ''கயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே கோயிலடிக்குப் போகாமல் பாடசாலைப் பக்கம் போவோம்". அவசரமாகச் சென்றார்கள்.

பாடசாலையில சுலோசனா தலைமையில் சிரமதானம் நடந்து கொண்டிருந்தது. அவர்களைக் கண்டதும் சுலோசனா வரவேற்றாள். "அக்கா ஊர்ச்சனங்கள் எல்லோரும் வீடுகளில் இல்லை. வெயில் ஏறமுன் வேலை செய்தால் நல்லது என்று தொடங்கி விட்டார்கள். வீடு, வளவு, தெரு. ஒழுங்கைகள் என்று எங்கும் வேலை நடக்குது". சுலோசனா வேலை செய்து கொண்டே விளக்கினாள். கயல்விழிக்குச் சுலோசனாமீது அபார நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. "அக்கா பத்து மணிபோல வீடுகளில் பதிவினை எடுக்கத் தொடங்கி விடுவோம். அதற்கான ஏற்பாடுகளைச் சாரதா கவனிக்கிறார்". உற்சாகமாகப் பதிலளித்தாள். கயல்விழி மங்கையைத் திரும்பிப் பார்த்தாள். அவள் மண்வெட்டியுடன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

தானும் மண்வெட்டியை எடுத்து வேலையில் ஈடுபட்டாள். சாந்தன் சைக்கிளில் வந்தான். "அக்கா ஒருக்கா எங்கட பக்கத்தையும் வந்து பாருங்கவன். பொடியன்கள் பாவம்தானே". அழைத்தான். "நாங்க கொஞ்ச நேரத்தால வாறம். சுலேச்சனா நீங்க இந்த வேலைகளக் கவனியுங்க. நாங்க அங்கே போய்வாறம்". கயல்விழி சொன்னாள். "மங்கை வா. சாந்தன் வந்து தங்கட பக்கத்தையும் பார்க்கட்டாம். போய்ப் பார்த்து வருவம்". அழைத்தாள். சுலோச்சனா தனது சைக்கிளைக் கொடுத்தாள். இருவரும் ஏறி கட்டைபறிச்சான் பாலத்தடி வரையும் சென்றார்கள். போகும் வழியெங்கும் மக்கள் பரந்து வேலையில் ஈடுபட்டதைக் கண்டாள். சம்பூர் மக்கள் தற்காலிகக் கொட்டில்களில் இருந்தார்கள். அவர்கள் வாழும் இடம் படுமோசமாக இருந்தது. சாந்தன் அப்பகுதியில்தான் தனது சிரமதானத்தைத் தொடங்கியிருந்தான்.

மலசல கூடவசதியற்று மக்கள் அவஸ்த்தைப் பட்டார்கள். பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. இப்படியான பொதுச் சிரமதானத்தை யார் ஏற்பாடு செய்தார்கள்.? அவர்களுக்கே சவாலாக இருந்தது. அவர்கள் இப்படியான சிரமதானத்தை ஏற்பாடு செய்து களைத்தவர்கள். இருபது பேராவது வருவார்கள் என்று எதிர்பார்த்தால் ஏழு அல்லது எட்டுப்பேர் வருவார்கள். விசாரித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பதிலளித்தார்கள். அவர்களும் சேர்ந்து கொண்டார்கள். இன்றைக்கென்று காகம் இருக்கப் பனம்பழம் விழுந்ததுபோல் பிரதேசச் செயலாளர் கட்டைபறிச்சான் அகதிமுகாம் மக்களைப் பார்வையிட வந்தார். அகதி முகாம் மக்களும் சிரமதானத்தில் ஈடுபட்டுழைத்ததைப் பார்த்தார்.

கயல்விழியின் திட்டம் அவருக்கு உணர்த்தப் பட்டது. கயல்விழியைச் சந்திக்கவேண்டும் என்று விரும்பினார். பிரதேசச் செயலாளர் நல்ல மனம் படைத்தவர். அவரும் புதுமையில் நாட்டங்கொண்டவர். மக்களின் கஸ்டம் புரிந்தவர். தனது வாகனத்தில் ஊரைச்சுற்றி வந்தார். அவருக்கு அதிசயம் கலந்த ஆச்சரியம்.. அத்தனை மக்களும் ஒரே நேரத்தில் ஊரெங்கும் சிரமதானப் பணியில் ஈடுபட்டார்கள். அதனைக் கண்ணால் கண்டார். தனது அதிகாரிகளை அழைத்தார். "இந்த மக்கள் அடிமைப் பிடியில் இருந்து விடுபடத் துணிந்து விட்டார்கள். இவர்களுக்கு ஒரு கிழமைக்குரிய நிவாரணப் பொருட்களைக் கொடுப்போம். உடனே ஏற்பாடு செய்யுங்கள். இப்போது மணி ஒன்பது. பத்து மணிக்கெல்லாம் நிவாரணப் பொருட்கள் கொடுபட்டு விடவேண்டும்". பணிப்புரை விடுத்தார். "இந்த அரும்பெரும் செயலைத் தூண்டிவிட்டவர்களைச் சந்திக்கவேண்டும். யாரவர்கள்?" யோசித்தார்.

ஒரு குழு தங்களை மும்முரமாக ஈடுபடுத்தி வீதியைத் துப்பரவு செய்தது. அதில் சாந்தன் இருந்தான். சாந்தனைப் பிரதேச செயலாளருக்கு நன்கு தெரியும். அவனும் ஒரு பட்டதாரி. விரக்தியினால் முரட்டுச் சுபாவத்துக்கு உள்ளானவன். ஆனால் நல்லவன். அவனை அகதி வாழ்க்கையும், நாட்டு நிலையும்தான் இப்படி ஆக்கியதையும் உணர்வார். தான் ஒரு அரசாங்க அதிகாரியாக இல்லாவிட்டால் அவனைப் போன்ற நிலையில்தான் இருந்திருக்கலாம் என்று எண்ணிக் கொள்வார். அவனை அழைத்தார். "சாந்தன் நல்ல வேலை நடக்குது. எப்படி எல்லாருக்கும் இந்த எண்ணம் வந்தது"? கேட்டார். "ஐயா! எல்லாத்துக்கும் எங்கட கயல்விழி அக்காதான் காரணம். அதோ மண்வெட்டி பிடித்து வேலசெய்து கொண்டிருக்கிறா. அவதான்." பெருமையோடு சுட்டிக் காட்டினான்.

கயல்விழி ஒரு கருவிமட்டும்தான். ஆனால் அவளிடம் ஒரு இயக்க சக்தியிருந்ததைக் கண்டுகொண்டார். அவளிடம் சென்றார். ஒரு அரசாங்க அதிகாரியின் கடப்பாடுகளை கயல்விழி நன்கு தெரிந்திருந்தாள். அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சொல்கிறதோ அதை மட்டுந்தான் அவர்களால் செய்யமுடியும். அதைத்தான் அன்று கல்விச் செயலாளர் நாவண்ணன் தெளிவாக விளக்கினார். அரசாங்க அதிகாரிகள் நினைத்தால் நல்ல பல காரியங்களைச் செய்யலாம். ஆனால் அப்படி நினைத்துச் செய்பவர்கள் குறைவு. தன்னை நோக்கி பிரதேச செயலாளர் வருவதை உணர்ந்தாள். தனது வேலையை நிறுத்தி அவரை வரவேற்றாள். அவரோடு உரையாடினாள்.

“நல்ல காரியத்தில் இறங்கிய உங்களுக்கு எங்கள் பாராட்டுக்கள். என்ன உதவி செய்ய முடியுமோ அதனைச் செய்வேன். உங்கள் முயற்சி வெல்லும்”. என்றார். நன்றி சொன்னாள். தனது திட்டத்தை விளக்கினாள். “முதலில் வீட்டில் இருந்து எங்கள் பணி ஆரம்பிக்கிறது. வீட்டில் சந்தோசம் நிலவச் செய்தல்தான் முதற்பணி. தங்களைத் தாங்களே உணர்ந்து கொள்ளச் செய்கிறோம். ஒரு மனிதனின் மனதில் நிம்மதி உதயமானால் அது வீட்டை சந்தோசத்தில் ஆழ்த்தும். வீடு சந்தோசமாக இருந்தால் நாடு சந்தோசமாக இருக்கும். தன்னிறைவைத் தானே தேடிக்கொள்ளும் முயற்சிதான் இது.” தொடர்ந்தாள்.

“இங்கு 'சேர்ந்து வாழ்' என்ற மகுடத்தின் கீழ் செயற்படுகிறோம். சண்டை சச்சரவு இல்லாத, ஒற்றுமையாக வாழும் சமூகத்தை நோக்கிய பயணமாக இது இருக்கப் போகிறது. அரசாங்க உதவிகளைக் கேட்டுப் பார்ப்போம். கிடைத்தால் சந்தோசமாக ஏற்றுக் கொள்வோம். கிடையாதுவிட்டால் கவலைப்பட மாட்டோம். இவ்வளவு காலமும் இந்தச் சனங்கள் கஸ்டப் பட்டுக் கொண்டுதானே இருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளைக்கு கஸ்டப்படட்டும். பிறகு அவர்கள் தங்கள் கால்களில் நிற்பார்கள்”. அவள் விளக்கிக் கொண்டு போனாள்.

“நல்லாக் கதைக்கிறீங்க. ஆர்ர மகள் நீங்க? அப்பாட பேரென்ன”? கேட்டார். “சுந்தரத்தார்” என்றாள். “அடட .. அதுதானே பார்த்தன். அப்பாவும் இப்படித்தான் பொது வேலையில் ஈடுபட்டுழைத்தவர். போதாத காலம் சரியாகக் கஸ்டப்பட்டிட்டார். படிப்பெல்லாம் முடிஞ்சுதோ? அனுதாபமாகக் கேட்டார். “அதெல்லாம் முடிஞ்சி..இப்ப வேலைதேடும் படலம். இங்க இருக்கிறவங்க வேலையில்லாப் பட்டாளம். அவர்களிடம் உள்ள ஆற்றலைக் கண்டு கொண்டன். இனி அவர்கள் என்னை விடமாட்டார்கள். இந்த ஊருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்யமுடியுமோ அதனைச் செய்யுங்கள். உங்களின் உதவி தேவை. அரசாங்கத் திணைக்களங்களின் உதவிகளுக்குச் சிபார்சு செய்யுங்கள்". என்றாள்.

"என்ன உதவி செய்யமுடியுமோ அதனைச் செய்வன். இப்ப நிவாரணச் சாமான் வரும். அதனை மக்களுக்கு வழங்குங்கள். ஒரு கிழமைக்குரிய உணவுப் பொருட்கள் வரும். தொடர்ந்து மீள் குடியேற்றம் முடியும் வரை நிவாரணம் கிடைக்கும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறன். வேறேதும் உதவிகள் தேவையென்றால் சாந்தனிடம் சொல்லி விடுங்கள்." அவர் புறப்படத் தயாரானார்.

"ஐயா இங்க வீடு திருத்தும் வேலைகள் நடக்குது. வேலையாட்கள் வேறு இடங்களில் இருந்து வருவதை நிறுத்தினால், இந்த மக்களுக்கு உதவியாக இருக்கும். இஞ்ச மேசன், தச்சு வேலைகள் செய்யக்கூடியவர்கள் நிறையவே இருக்கிறார்கள். கூலித் தொழில் செய்ய ஏராளம்பேருண்டு. அதற்கு உதவினால் பயனாக இருக்கும்". இலகுவான உதவிகளைக் கேட்டாள். "நான் இப்பவே அதற்கான வேலைகளைச் செய்யிறன். ஆனால் அவர்கள் சொல்லுறபடி கெதியாக வேலையச் செய்து கொடுக்க வேணும்." பிரதேசச் செயலாளர் ஒப்புதல் செய்தார். அவர் சென்றுவிட்டார்.

## 13

இந்த மக்களிடம் உள்ள சக்தியை ஒன்றுதிரட்டிப் பார்க்க ஆசை. அவர்களின் அறியாமையைப் போக்கி விட்டால், தங்களை உணரும் சக்தியைக் காட்டிவிட்டால் தங்களில் தாங்களே தங்கியிருப்பார்கள். பிரதேசச் செயலாளர் சொன்னதுபோல் நிவாரணப் பொருட்கள் வந்தன. "கயல்விழி யார்"? லொறியில் வந்தவர்கள் கேட்டார்கள். கயல்விழி வந்தாள். "தங்கச்சி பிரதேசச் செயலாளர் உங்களிடம் இந்தப் பொருட்களைக் குடுக்கச் சொன்னவர். எங்க இறக்க வேண்டும்? சொல்லுங்க". அவர்கள் பதிலுக்காகக் காத்திருந்தனர். "சாந்தன், நீங்க இதற்குப் பொறுப்பு. எங்க இறக்கினால் வசதி."? கேட்டாள். "கோயிலடி பொருத்தமான இடம். அங்க இறக்குவம்". சாந்தன் கூறினான். "கோயிலடியில இறக்குங்க. சாந்தன் எல்லாத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பார்''. அனுப்பி வைத்தாள்.

சாந்தன் லொறிக்காரரோடு சென்றான். “ மங்கை நீ அங்க போய் மற்ற வேலைகளைக் கவனி. நான் பிறகு வாறன். சாரதாவையும் கூட்டிப்போ''. சனங்கள் வேலையில் ஈடுபட்டார்கள். நிவாரணப் பொருட்கள் வந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது. ஒரு குழப்பநிலை உருவாகியது. சாரதாவிடம் கயல்விழி செய்தியொன்றை அனுப்பியிருந்தாள். குழுத் தலைவர்கள் தங்கள் குழுக்களோடு பகல் மூன்று மணிக்கு வருமாறு அறிவுறுத்தியிருந்தாள். வரும்போது தங்கள் குடும்ப உறுப்பினர்களது பெயர் விபரங்களை எழுதி வரும்படி அறிவுறுத்தப் பட்டிருந்தது. செய்தி மக்களிடையே பரவியது. அவர்கள் மீண்டும் தமது கடமைகளில் மூழ்கினார்கள். பகல் பன்னிரெண்டு மணிக்கு வீடுகளுக்குத் திரும்பியிருந்தார்கள்

கயல்விழி கோயிலடிக்குச் சென்றாள். பொருட்களை சாந்தனின் குழு பொறுப்புணர்ச்சியோடு இறக்கி அடுக்கியிருந்தார்கள். பொருளாளர் ராகினியின் அறிவுறுத்தலுக்கேற்ப காவலுக்கு மூன்று இளைஞர்கள் இருந்தார்கள். சாந்தனுடன் பொருட்களைப் பகிர்வது பற்றி மங்கை உரையாடிக் கொண்டிருந்தாள். ராகினியும் உடனிருந்தாள். “கயல்! எல்லாம் ஒழுங்காக இருக்கு. சாந்தன் ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளார். ராகினி பகல் மூன்று மணிக்குச் சனங்களை வரச்சொல்லியிருக்கிறா. அவர்கள் வரும்போது தங்கள் குடும்ப விபரத்தையும் கொண்டு வருவார்கள். கொப்பியில் விபரங்களைப் பதிவதற்குச் சுலோச்சனா தலைமையில் ஒரு குழு இயங்கும். எல்லா எற்பாடும் தயார். இரண்டரை மணிக்கு நாம் வந்தால் சரி. இப்போது வீட்டுக்குப் போய் இந்த உடல் தன்னைக் கழுவிவிடச் சொல்லுது. வீட்டுக்குப் போவோமா''? மடமடவென்று சொன்னாள். இளைஞர்களிடம் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

அம்மா பிள்ளைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார். “வெயில் நல்லாச் சுட்டுப் போட்டுது. ரெண்டு பேரும் நல்லாக் கறுத்துப் போனிங்க. மேலக்கழுவிட்டு வாங்க சாப்பிடுவம். அப்பா காத்துக் கொண்டு இருக்கிறார்.'' தங்கம் கூறிக்கொண்டே தனது வேலைகளில் ஈடுபட்டார். இருவரும் கிணற்றடியில் தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்துக் கழுவினார்கள். தண்ணீர் பட்டதும் உடல் சிலிர்த்தது. சுகமாக இருந்தது. “தண்ணீருக்குச் சுவையில்லை என்று சொல்லுறாங்க. ஆனால் கட்டைபறிச்சான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீருக்குச் சுவையிருக்கிறது. தாகத்தை இந்தத் தண்ணீர் தீர்க்கிறது". மங்கை தண்ணீரை அள்ளிச் சுவைத்தவாறே கூறினாள்.

அப்பாவோடு சேர்ந்திருந்து சாப்பிட்டார்கள். சுந்தரத்தார் கட்டபறிச்சானுக்கு மீள்குடி ஏறியதும் மரக்கறி வகைகளை நட்டிருந்தார். அவை இப்போது பயனளித்தன. நல்ல இறால் கறி சுவையாக இருந்தது. "மகள் உங்க ரெண்டு பேரையும் பார்க்க எனக்குச் சந்தோசமாக இருக்கு. என்னோட பிரதேசச் செயலாளர் கதைச்சவர். உங்களப் போல்தான் உங்கட மகளும் பொதுத் தொண்டில இறங்கியிருக்கிறா என்று. நம்மட சனங்கள் நல்லதுகள். அவர்களிடம் ஆற்றல் தேங்கிக் கிடக்கு. நம்மட இளைஞர்கள் நல்ல கெட்டிக்காரர்கள். அதோட நல்ல விவேகிகள். நீங்கள் இரண்டு பேரும் அவங்கள்ற திறமையைக் கண்டு கொண்டியள். இதை அப்படியே பிடிச்சிங்கண்டா ஊரை முன்னேற்றலாம். அப்பாவின் ஆதரவு எப்போதும் உண்டு. பிள்ள மங்கை! வீட்டுக்கு அறிவிச்சுப்போடு. சரியா"? அவர் சாப்பிட்டுவிட்டு எழுந்தார்.

சரியாக இரண்டரை மணி. இருவரும் கோயிலடிக்குச் சென்றார்கள். ராகினியும் சுலோச்சனாவும் பொருள் விநியோகத்துக்கு ஆயத்தமாக நின்றார்கள். சனங்கள் ஒவ்வொருவராக வந்து சேர்ந்து விட்டார்கள். பதிவுகள் நடந்தன. கிராமத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்திருந்தார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் குழுக்கள் இருந்தன. குழுக்கள் தங்கள் பகுதிப் பதிவுகளைச் செய்தன. பதிவுகள் ராகினியிடம் சென்றன. சுலோச்சனா பதிவுகள் முடிந்ததும் பொருள் விநியோகப் பகுதிக்கு வழிகாட்டினாள். சாந்தன் தனது குழுக்களோடு பொருள் விநியோகத்தில் நின்றான். மிக அமைதியாகப் பொருள் விநியோகம் நடந்தது. கிராம சேவையாளர் அருமைராசா மேற்பார்வையில் ஈடுபட்டார். அவருக்கு வேலை இருக்கவில்லை.

தனது ஊர்மக்கள் இவ்வளவு கட்டுப்பாடாக இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார். மனிதர்கள் தாங்களாகவே திருந்த வேண்டும் அதுதான் நிரந்தரமானது. கயல்விழிக்குச் சந்தோசம். மங்கையை அழைத்தாள். சைக்கிள்கள் உரைச்சுற்றி வலம் வந்தன. ஊர் அழகாக பளிச்சென்று இருந்தது. அப்படியே அதிபரைச் சந்திக்கச் சென்றார்கள். அதிபர் பாடசாலையில் அலுவலக வேலையில் இருந்தார். பாடசாலை விட்டதும்தான் பாடசாலை தொடங்குகிறது. உள்ள ஆசிரியர்களைக் கொண்டு மேலதிக வகுப்புக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்திக் கொண்டு வருகிறார்.

தான் படித்த பாடசாலையை மங்கைக்குக் காட்டினாள். கயல் சின்னப் பிள்ளையாகி விட்டாள். பாடசாலைத் தோட்டம் பூத்துக் காய்த்துக் கலகலத்தது. என்ன பயிர் இல்லை.? உற்றுப் பார்த்தார்கள். வெங்காயம் சிலிர்த்து வளர்ந்திருந்தது. வெண்டி விரல்களை நீட்டி 'என்னைப் பறித்துச் சாப்பிடுங்கள்' என்று காய்களைத் தள்ளியிருந்தது. தக்காளிப் பழங்கள் கனிந்திருந்தன.

பாடசாலையைச் சுற்றிவிட்டு அதிபரின் அலுவலகத்தினுள் புகுந்தார்கள். அதிபர் இரத்தினசிங்கம் “வாங்க” என வரவேற்றார். “சேர் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் வேலை செய்வீங்க”? ஒருபுன்னகையோடு கேட்டாள். “பாடசாலை நேரத்தில் பாடங்களைப் படிப்பிப்பதில் ஈடுபடவேண்டும். ஆசிரியர் பற்றாக்குறை. அதனால் அலுவலக வேலைகளைப் பாடசாலை விட்டபின்தான் செய்யலாம். இது நமது பாடசாலை. எனக்கு முதல் இருந்தவர்கள் வழிகாட்டிச் சென்று விட்டார்கள். அவர்களைப் பின்பற்றி நான் செய்கிறேன்”. ஒரு அலுப்பில்லாது கதைத்தார். “இப்பவும் மேலதிக வகுப்புக்கள் நடக்கின்றன. நமது ஆசிரியர்களும் மிக நல்லவர்கள். நல்ல ஒத்துழைப்புத் தருகிறார்கள்”. கூறிக் கொண்டு போனார்.

“முக்கியமாக எந்தெந்தப் பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது”? வினவினாள். “விஞ்ஞான கணித பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. உயர்தர வகுப்பில் தமிழ், புவியியல் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை”. தனது பெருங்குறையை விளக்கினார். “சேர் உங்கள் அனுமதி கிடைத்தால் மங்கை தமிழ், புவியியல் பாடங்களை கற்பிக்க வருவார். நான் கணிதம் விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்க வாறன். காலையில் சொல்லியனுப்பினால் வருவோம். மற்றப்படி மாலை வகுப்புக்களை நாங்கள் நடாத்துகிறோம். உங்களுக்கும் நிர்வாகச் சிக்கல் இருக்காது”. கயல்விழி தனது திட்டத்தை விளக்கினாள். அதிபரின் முகம் மலர்ந்து பெரிய சந்தோசத்தில் திளைத்தார்.

“சேர், உங்களிட்ட ஒரு உதவி கேட்கலாமா”? மங்கை மெதுவாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள். "நமது சின்னப்பிள்ளைகளுக்குச் சிறுவர் பாடசாலைகள் இல்லை. நமது பாடசாலையில் பாவிக்காத வகுப்பறையொன்றைத் தந்தால் உதவியாக இருக்கும். எங்கள் தொண்டர்கள் கற்பிக்கத் தயாராய் இருக்கிறார்கள். நீங்கள் இடம் தாறதெண்டால் நாளைக்கே தொடக்கலாம் என்றிருக்கிறோம்". கேட்டிருந்தார்கள். "நல்ல விஷயங்கள் நடக்கிறதென்றால் அதற்கு யாரும் மறுப்புச் சொல்ல மாட்டார்கள். நீங்கள் நாளைக்கே தொடங்கலாம்." பதிலிறுத்தார். கயல்விழி மங்கையைப் பார்த்தாள். இருவரும் சந்தோசத்துடன் நன்றி சொன்னார்கள்.

"கீழ் வகுப்புக்களில் ஆசிரியர் பற்றாக்குறையுண்டு. பல பழைய மாணவிகள் ஜீ.ஏ.கியு செய்து போட்டு இருக்கிறார்கள். அவர்களது உதவிகளைப் பெறுவதற்கு உதவலாமா"? அதிபரே கேட்டார். "சேர் எத்தனை பேர் வேண்டும்."? கேட்டுநின்றார்கள். "கட்டாயம் ஐந்துபேர் வேண்டும்". பதிலிறுத்தார். நாளைக்கே அவர்கள் வருவார்கள். அத்துடன் நாளைக்கு சிறுவர் பாடசாலையையும் திறப்போம். நாங்களும் பாடசாலைக்கு வந்து பாடங்களைத் தொடங்குகிறோம். எதற்கும் நீங்கள் கல்விப் பணிமனையில் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள். வருமுன் காத்தல் தலைசிறந்தது. இல்லையா சேர்."? அறிவுரையாகக் கூறினார்கள். அதிபர் சிரித்தார். "அதைப்பற்றி கவலை வேண்டியதில்லை. இது 'அவசரக் காலக்கல்வி' என்ற திட்டத்தில் நடப்பது. நமது கல்விப்பணிப்பாளர் குணராசரத்தினம் ஏற்கனவே அனுமதி தந்து விட்டார்". சிரிப்போடு பதிலளித்தார்.

"நாற்று மேடையில் நிறையவே பயிர்கள் உள்ளன. நாங்கள் வீட்டுத்தோட்டத்தை கட்டாயப்படுத்தி முன்னெடுக்கப் போகிறோம். நீங்கள் வேண்டிய பயிர்க் கன்றுகளைத் தந்துதவினால் பேருதவியாக இருக்கும். இப்போது எங்களிடம் நிதிவசதி யில்லை. தரமுடியுமா சேர்."? மிகப் பணிவாகக் கேட்டார்கள். "நமது பிள்ளைகள் செய்த தோட்டம் அது அவர்களுக்கு உதவுமென்றால் எவ்வளவு சந்தோசம்?. இன்னும் மூன்று நாட்களால் கன்றுகளைப் பிரித்து நடலாம்." அதிபர் பதிலளித்தார். அதிபருக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டார்கள். சனங்கள் பொருட்களைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

சாரதா தகவல்களைச் சரிசெய்து கொண்டிருந்தாள். சிலர் தகவல்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிபார்த்தனர். எல்லோரும் இயங்கிக் கொண்டிருந்தார்கள். கயல்விழி கோயிலடியில் குந்தியிருந்தாள். பக்கத்தில் மங்கை வந்தாள். ராகினி, சுலோச்சனா வந்தார்கள். சாந்தனும் வந்து சேர்ந்தான். நாளை நடைபெறவுள்ள திட்டங்களை விபரித்தார்கள். செய்திகள் பரவின. சாந்தனின் குழு சைக்கிள்களில் பறந்து செயல்களில் ஈடுபட்டன. சிறுவர் பாடசாலையில் கற்பிக்க நான்கு பேர் முன்வந்தார்கள். பாடசாலையில் படிப்பிக்க ஐந்து பேர் தயார். முன்பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

ஆறரை மணிக்கு வேலைகள் யாவும் முடிந்தன. ஏழு மணிக்குக் கல்விக் குழுச் சந்திப்பு நடந்தது. "அதிபரோடு உரையாடியபடி நடவடிக்கைகளை மெற்கொள்வோம். ஒன்றை மட்டும் கவனியுங்கள். நமக்கு இப்போது நிதிவசதியில்லை. ஆனால் அதனைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இரண்டு பாடசாலைகளுக்கும் பத்துப் பேர் ஆசிரியர்கள் வேண்டும் ஆறு முன்பள்ளி ஆசிரியர்கள் வேண்டும். நமது 'சேர்ந்து வாழ்' நிறுவனத்தின் கடமைகளை செய்வதற்குப் பலர் வேண்டும். உங்கள் ஒத்துழைப்புத்தான் வேண்டும். அதுதான் நமது முதலீடு. உங்களை நம்பித்தான் பெரிய பொறுப்பை ஏற்றுள்ளேன். இனிமேல் நீங்கள்தான் எல்லாம்". பேசும்போது அவள் கண்கள் பனித்தன. சற்று நேரம் மௌனமாக நின்றாள்.

"அக்கா நீங்க ஒன்றுக்கும் கவலைப்படாதிங்க. நாங்கள் இருக்கிறம். நீங்க என்ன சொல்லுறிங்களோ அதனைச் செய்யத் தயாராய் இருக்கிறம். நாளை நீங்கள் சொன்னபடி எல்லாம் நடக்கும். சனங்கள் இப்ப நமது பக்கம் இருக்கிறாங்க. நமது பிள்ளைகளைப் படிக்க வைக்கவேணும். அதைச் செய்வம்". சாந்தன் பக்கபலமாக இருந்து கூறினான். நாளைய ஒழுங்குகளைத் திட்டமிட்டார்கள். முன்பள்ளி ஆசிரியர்களின் பெயர்களை மங்கை தயாரித்தாள். பாடசாலையில் கற்பிக்க முன்வந்தவர்களின் பெயர்களையும் எழுதிக் கொண்டாள். பெற்றார்களுக்கு முன்பள்ளி பற்றிய செய்தி அறிவிக்கப் பட்டது. ஒழுங்குகளை முடித்துவிட்டு வீடுகளுக்குக் கலைந்தார்கள்

மெல்லமெல்ல வானம் தெளிவானது. கிழக்கு வானில் வெண்ணிலவின் ஆட்சி. கருமேகக் கூட்டங்கள் கலைந்து விட்டன. மெலிதான கருமேகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலவைப் போர்த்திப் பார்க்கும் ஆசையில் ஈடுபட்டன. அவை மூடும்போது வெண்ணிலவின் ஒளி மெதுவாக மங்கலாகும். மேகம் அசைந்து சென்றதும் சந்திர ஒளி பிரகாசிக்கும். "இப்போது கருமேகம் மறைத்திருக்கிறது. மேகம் விலகத்தான் போகுது. நமக்கும் வாழ்வில் ஒளி வீசத்தான் போகிறது. வாழ்க்கை என்பது வீசுதென்றலல்ல. சுழன்றடிக்கும் சூறாவளி. நாணலாய் நின்று பார்ப்போம். முயன்று முயற்சிப்போம். முயற்சி வீண்போவ தில்லை." கயல்விழி எழுந்திருந்தாள். அவளுக்கு அந்த முரட்டுத் தைரியம் எங்கிருந்து வந்தது? அவளது தந்தை ஊட்டி வளர்த்த தைரியம். "கயல்விழி நீ வாழப்பிறந்தவள். இந்த உலகில் நீ ஒரு உதாரணமாக, வழிகாட்டியாக வாழ்ந்து காட்டவேண்டும்." அப்பா அடிக்கடி கூறும் தாரகமந்திரம். காதுகளில் ஒலித்தது. வாழ்ந்து காட்ட உறுதிபூண்டு விட்டாள்.

## 14

அதிகாலை கிராமம் குதூகலத்தில் ஆழ்ந்தது. கிராமத்தின் வீதிகள் கலகலத்தன. பாடசாலை நாட்களில் எந்த ஊரிலும் ஒரு களைகட்டத்தான் செய்யும். வீதிகள் வெள்ளை மலர்களால் நிறைந்தது போலிருக்கும். பாடசாலை தொடங்கப் போகும் நேரத்திலும், அது விடும் நேரத்திலும் கொள்ளை அழகு குடிகொண்டிருக்கும். வெள்ளைப் பூக்கள் வீதிகளில் உலாவரும். பாடசாலைக்குப் பிள்ளைகள் போய்க்கொண்டிருந்தார்கள். பலபக்கங்களில் இருந்தும் ஆசிரியர்களும் சென்றார்கள். பல தாய்மார்கள் தங்கள் சின்னஞ்சிறார்களை முன்பள்ளியில் சேர்ப்பதற்கு விரைந்து கொண்டிருந்தார்கள். தெருக்களில் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

அதிபர் ஒரு வகுப்பறையை முன்பள்ளிக்காக ஒதுக்கிக் கொடுத்தார். முன்பள்ளி ஆசிரியர்கள் வந்து விட்டார்கள். பெற்றாரும் நிறைந்திருந்தார்கள். பிள்ளைகளை வகுப்பில் சேர்த்து ஆசியுரையை அதிபர் வழங்கினார். நாற்பது பிள்ளைகள் சேர்ந்திருந்தனர். கல்விக்குழு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. கல்விக்குழு வீட்டில் பாடசாலைக்குப் போகாதிருக்கும் பிள்ளைகளின் குடும்பத்துக்கு நிவாரணம் குறைக்கப் படுமென்று அறிவித்திருந்தது. அதனால் பிள்ளைகள் வருகை கூடத்தொடங்கியது. முன்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் பணிகளைத் தொடங்கினார்கள். அதனைத் தொடர்ந்து கயல்விழியும், மங்கையும் அதிபரோடு பாடசாலைக்குச் சென்றார்கள். தொண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களாக ஐந்து ஆசிரியர்கள் வந்திருந்தார்கள்.

ஒன்று கூடல் தொடங்கியது. வழமையான செயற்பாடுகள் நடந்து முடிந்தன. அதிபர் புதிய ஆசிரியர்களை அறிமுகம் செய்து வைத்தார். சம்பளம் இல்லாது கற்பிக்க வந்தவர்கள் என்ற பேதம் தென்படவில்லை. ஆசிரியர்களோடு ஆசிரியர்களாக இருந்தார்கள். மங்கை உயர்தர வகுப்பில் புவியியலைத் தொடங்கி வைத்தாள். தமிழ் பாடத்தில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருந்தாள். அவளுக்கு இரண்டு பாடமும் தண்ணிபட்ட பாடம். அவளது கற்பித்தல் சிறப்பாக இருந்தது. முதல்நாளிலேயே பிள்ளைகளைக் கவர்ந்து விட்டாள். கயல்விழி விஞ்ஞான பாடத்தை அறிமுகம் செய்தாள். முதலில் பிள்ளைகளைத் தங்களுக்கு விரும்பிய செடியைப் பிடுங்கி வரும்படி கூறினாள்.

அன்றைய பாடத்திட்டத்தின்படி தாவரத்தின் பகுதிகள் கற்பிக்கப் படவேண்டும். அதனைப் பரசோதனை மூலம் கற்பிக்கத் துணிந்தாள். செடிகளின் பெயர்களைக் கேட்டு அறிந்து கொண்டாள். மாணவர்கள் கைகளில் குப்பைமேனிச் செடியிருந்தது. அதனை அனைவரும் தூக்கிக் காட்டியபடி இருந்தார்கள். கயல்விழியும் ஒரு செடியைப் பிடித்தபடி அதனை மாணவர்கள் தொட்டுணர்ந்து ஒவ்வொன்றாய் சொன்னார்கள். அவள் கேட்கும் வினாக்களுக்குத் தாங்களாகவே செடியைப் பார்த்துப் பதில் சொன்னார்கள். செடியைப் பார்த்து அதனை வரைந்து பெயர் குறித்தார்கள். பாடம் சுறுசுறுப்பாகவும் சந்தோசமாகவும் நடந்தது. மாணவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

இன்று ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர்கள் இருந்தார்கள். ஒழுங்காக வகுப்புக்கள் நடந்தன. அதிபருக்கு வேலைப்பளு குறைந்திருந்தது. அவர் ஒரு நாடகப்பிரியர். அரங்கச் செயற்பாடுகளில் ஆர்வம் உள்ளவர். கயல்விழி இடைவேளையின் போது அதிபரிடம் சென்றாள். "சேர், மாணவர் மன்றம் இருக்கிறது. ஆனால் அது இயங்குவதில்லை என்று அறிந்தேன். அதனை இயக்கலாமா"? தயங்கியவாறு கேட்டாள். "இதற்குக் கேட்கவேண்டுமா கயல். தாராளமாகச் செய்யலாம். இவற்றிற்கெல்லாம் ஆளில்லை என்பதால் நடக்கவில்லை. நல்லனவற்றைச் செய்வோம். புதுமைகளைக் காட்டுங்கள்". அவர் அனுமதி கொடுத்து விட்டார். மங்கை சிரித்தவாறே வந்தாள். அதிபரிடம் தான் அனுமதி பெற்றதையும் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தன் கயல்விழியைத் தேடி வந்தான். ஊர் மக்கள் தொடர்ந்து தங்கள் வளவுகளில் வேலை செய்வதைக் கூறினான். "அக்கா தோட்டம் செய்வதற்கு நிலம் தயாராய் இருக்கிறது. நாற்றுக்கள் இல்லை. என்ன செய்வோம்." வினாவியபடியே நின்றான். அதற்கென்ன அதிபர் தேவையான நாற்றுக்களைத் தரச் சம்மதித்துள்ளார். நாளைக்கு நடலாம். ஏற்பாடுகளைச் செய்யுங்கள். தம்பி இன்னுமொன்று. ராகினியிடம் கடிதம் இருக்கிறது. அதனைக் கொண்டுபோய் பிரதேசச் செயலாளரிடம் கொடுங்க. நீங்க இப்பவே கொடுத்தால்தான் அவர் சிபார்சு செய்து தருவார். அவர் தந்தால் வாங்கிற்று வாங்க. அல்லது அவரே அனுப்பியும் விடுவார். சரியா? வந்ததும் சொல்லுங்க". விபரித்தாள். அவன் சென்றுவிட்டான்.

"ரீச்சர் உங்கள அதிபர் வரட்டாம்" ஒரு மாணவன் வந்து அழைத்தான். அவள் அதிபர் அறையினுள் நுழைந்தாள். அதிபர் சிரித்தவாறே "கயல்விழி உங்களச் சந்திக்க கிராம அபிவிருத்தி அதிகாரி வந்திருக்கிறார். அவர் உங்களச் சந்திக்க வேணுமாம். ஆசிரியர் அறையில் இருக்கிறார். என்னவென்று பாருங்கம்மா". கூறிவிட்டுத் தனது வேலைகளில் மூழ்கிவிட்டார். கயல்விழி ஆசிரியர் அறைக்கு விரைந்தாள். உள்ளே சென்றாள். அவளைக் கண்டதும் "கயல் நீங்களா"? ஆச்சரியத்தோடு எழுந்து நின்றான் அருணன். அவளுக்கும் ஒரு திடீர் அதிர்ச்சி. "பிரதேச செயலாளர் கட்டைபறிச்சானுக்குப் போகச் சொன்னவர். அங்கே அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு பெண் தலைமையில் நடக்குது. என்னென்ன உதவிகள் செய்யமுடியுமோ அவற்றைச் செய்து கொடுக்கும்படி எனக்கு ஓடர்போட்டவர். உடனே போய்க் கவனிக்கவும் சொன்னார்". அவன் அழகாகக் கூறினான்.

"முதலில் இருங்க. நான் அதிபரையும் கூட்டி வாறன். கதைப்பம்". அவள் போகமுயற்சித்தாள். "கொஞ்சம் பொறுங்க. நான் வரும்போது ஊரை ஒருக்காச் சுற்றித்தான் வந்தன். போனமுறை ஒருக்கா வந்தனான். அப்போது பற்றைக் காடாய்ப் பாழடைந்து கிடந்தது. சனங்களும் குறைவு. இப்ப எவ்வளவு மாற்றம். கயல்விழியைச் சந்தித்தால் அவர் வேண்டிய தகவல்களைத் தருவார். அந்தக் கிராமத்தை முன்னேற்றவேண்டும். அதற்காக நாங்க என்ன செய்யலாமோ அவற்றைச் செய்ய வேணும். என்று செயலாளர் சொன்னவர். அவர் சொல்லும்போது அது நீங்கதான் அந்தக் கயல்விழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நான் நினைக்கல்ல. இப்ப பார்த்தபோதுதான் தெரியுது.'' சந்தோசமாகச் சொன்னான். "என்ன தெரியுது?" விழிகளை உயர்த்திக் கேட்டாள்.

"இல்ல அந்தக் கனல் விழிகளைக் காணல்ல. ஒரு புரட்சிகரப் பெண்ணாய் அப்போது தெரியல்ல. இப்போது அது தெரிகிறது.'' ஒரு முறுவலோடு சொன்னான். "அப்படியா? இருங்க அதிபரைக் கூட்டி வாறன்'' அவள் வெளியில் சென்றாள். சற்று நேரத்தில் அதிபரோடு வந்தாள். அதிபரிடம் பல வினாக்களைக் கேட்டான். அதிபர் திருப்தியான பதில்களைக் கொடுத்தார். பாடசாலை தொடக்கம் கிராமத்தின் தேவைகள் எவ்வாறு முன்னெடுக்கப் படுகிறது என்பதை விளக்கினார். அவனுக்குக் கயல்விழி மீது மதிப்பு ஏற்பட்டது. "சேர், நான் திருகோணமலையில் உள்ள அத்தனை திணைக்களங்களுக்கும் தெரிவிப்பன். அரச சார்பற்ற நிறுவனங்களையும் நேரில் சந்தித்து உரையாடுவன். சிறப்பாக 'யூனிசெவ்' நிறுவனத் தலைவரைச் சந்திப்பன். அடுத்த கிழமை அவரை இங்கு அழைத்துவர ஏற்பாடு செய்வன்''. அவனது உரையாடல் அதிபரை நெகிழச் செய்தது.

மாணவிகள் தேநீர் கொண்டு வந்து வைத்தார்கள். கூடவே மங்கையும் வந்தாள். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்ன இங்கேயும் இரட்டையரா''? சிரிப்பை உதிர்த்துக் குலுங்கினான். சேர்ந்து சிரித்தார்கள். "அருண் இவர்கள முதலிலேயே தெரியுமா? சிரிப்போடு கேட்டார். "இவங்க இரண்டு பேரும் பல்கலைக் கழகத்தைக் கலக்கியவங்க. ஒரு அணுவில நெகரிவ், பொசிற்றிவ் இருக்குதல்லவா அதப்போல இவங்க. சரி சேர்..நான் வந்தவேலை முடிஞ்சுது. இனிச் செய்ய வேண்டிய வேலைகள் அதிகமாக இருக்கு. அவற்றைக் கவனிக்க வேண்டும். நான் வரப்போறன்''. வெளிக்கிட்டான். "சேர் பாடசாலை விடும் நேரமாகிறது. அவர இருக்கச் சொல்லுங்க. வீட்ல சாப்பாடு ரெடி. சாப்பிட்டுப்போட்டுப் போகலாம்''. அவனைப் பார்த்தபடி அதிபரிடம் கூறினாள். அவளது முகம் கெஞ்சியது..

"தம்பி அருண். கயல் சொல்வதுதான் சரி. கயல் நீங்களும் மங்கையும் அருணோடு போங்க. இன்னும் ஐந்து நிமிசம்தானே இருக்கு''. அவர் கூறினார். "இல்ல சேர். இன்றுதானே முதல் நாள். பாடசாலை முடிந்ததும் போறம். அருண் கொஞ்சம் இருங்களன். நாங்க இப்ப வாறம்''. சொல்லிவிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தார்கள். பாடசாலை மணியொலித்தது. மாணவர்களின் கீதம் காற்றில் பரவி வந்து காதில் ஒலித்தது. வகுப்புக் கலைந்து வரிசையாக மாணவர்கள் சென்றார்கள். கயல்விழியும் மங்கையும் புறப்பட்டார்கள். அருண் மோட்டார் சைக்கிளில் வந்திருந்தான். "அருண் இப்படியே சென்றால் கோயில் வரும் அதில் நில்லுங்க. நாங்க வாறம்". வழிகாட்டினார்கள். அருண் முதலில் சென்றான்.

அவர்கள் விரைந்து சிறு ஒழுங்கையில் திரும்பினார்கள். அது நேரே வீட்டையடைந்தது. அருண் கோயிலடியில் நின்றான். அவனை அழைத்தார்கள். அருண் வந்தான். ஏற்கனவே அம்மாவிடம் செய்தி அனுப்பப்பட்டது. அதனால் சாப்பாடு தயாராய் இருந்தது. "அருண்! இந்தாங்க துவாய். அப்படியே முகத்தைக் கழுவிற்று வாங்க. சாப்பிடுவம் சாப்பிட்டுக் கொண்டே கதைப்பம்" துவாயைக் கொடுத்தாள். அருண் கிணற்றடியில் முகம் கழுவி வந்தான். கயலும் மங்கையும் உடைகளை மாற்றி முகம் கழுவி வந்தார்கள். அம்மா சாப்பாட்டைப் பரிமாறினார். சாப்பிட்டுக் கொண்டே கதைத்தார்கள்.

## 15

"பல்கலைக் கழகத்தில் சந்தித்தபின் இன்றுதான் உங்களைக் கண்டிருக்கிறன்." அருண்தான் தொடக்கினான். கயல்விழியின் அம்மா வந்தார் "அம்மா இதுதான் அருண். எங்களோட பல்கலைக்கழகத்தில் படித்தவர். ஆனால் எங்களுக்குச் சீனியர். இப்ப மூதூர் பிரதேச செயலாளர் கந்தோரிலதான் வேலை. இரண்டு வருசத்துக்குப் பிறகு இன்டைக்குத்தான் சந்தித்திருக்கிறம்". ஒரு புன்னகையுடன் அம்மாவுக்கு அறிமுகம் செய்தாள். அம்மா ஒரு சிரிப்போடு தன்னை அறிமுகப்படுத்தினார். "முதல் திருகோணமலையில் தானே இருந்தீங்க. எப்ப இங்க வந்தீங்க? அருண் தொடர்ந்தான். "அருண் இதுதான் எங்கட சொந்த ஊர். இங்கிருந்துதான் ஏ.எல் எடுத்தனான். பிரச்சினையினால் ஒருவாறு உயிர் தப்பி திருகோணமலையில் வாடைக்கு இருந்தோம். பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு அது முடியும் வரை திருகோணமலையில்தான் இருந்தோம். இப்ப இங்கு வந்திட்டம்". விளக்கமாகச் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க எப்படி இருக்கிறீங்க". அவனிடம் வினாவினாள். "எனக்கென்ன குறை. ராசா மாதிரி இருக்கிறன். அம்மா நல்லாச் சமைத்துத் தாறா. சாப்பிட்டுப் போட்டு ஊர்சுத்துறதான் வேலை. அதுக்கு அரசாங்கம் சம்பளம் தருது". பெரிய சிரிப்போடு சொன்னான். "கயல்! அருண் இன்னும் தமாசாத்தான் பேசுறார். ஒரு மாற்றமும் இல்ல." மங்கை சுட்டிக்காட்டினாள். "நான் உண்மையைச் சொன்னன். நான் சமூகவியலை ஒரு பாடமாக எடுத்ததால சமூகத்தோடு சேர்ந்து சேவை செய்யச் சந்தர்ப்பம் கிடச்சிது. ஆர்.டி.ஓ. அதாவது கிராம அபிவிருத்தி அலுவலராக வேலை செய்யிறன். எனக்குப் பொருத்தமான வேலை". சொல்லிக் கொண்டு சாப்பிட்டான். சாப்பாடு முடிந்ததும் மரநிழலில் கதிரைகளை எடுத்துச் சென்று அமர்ந்து கதைத்தார்கள்.

"அருண்! இப்ப வேலைகிடைப்பது மிகக்கஸ்டம். பட்டதாரிகள் பெருகி விட்டனர். நாட்டில பிரச்சினைகள் வந்து எல்லாம் தலைகீழாப் போச்சு. இனி நாங்க எங்கட காலிலதான் நிற்க வேணும். அரசியல்வாதிகளை நம்பி நமது இளைஞர்கள் படுகுழியில் விழுகிறார்கள். அவர்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வந்து எங்களால முடியும் என்று காட்டப் போறம். அதுதான் மங்கையும் என்னோட வந்திருக்கிறா. அவவுக்கு ஒரு வேலை கிடைக்குமட்டும் இங்கு என்னோட இருப்பா. அதுவரை நாங்கள் சமூக சேவை செய்யப்போகிறோம்". கயல்விழி மரக்கிளைகளைப் பார்த்தவாறே கூறினாள். "கயல் உங்களுடைய பாதை தெளிவானது. என்னால் உதவக்கூடிய வழிகளில் உதவக் காத்திருக்கிறன்." உறுதியுடன் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்டுச் சந்தோசப்பட்டாள். "நான் இப்ப மூதூர் போய் செயலாளரிடம் கதைச்சிப் போட்டு திருகோணமலை போவன். நாளைக்கு யூனிசெவ் அதிகாரிகளைச் சந்திப்பன். அத்தோடு அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்து ஊர்நிலைமைகளை விளக்கிக் கூறுவன். உங்கட போன் நம்பரைத் தாங்க. உங்களைத் தொடர்பு கொள்ள இலகுவாக இருக்கும்". அவன் கேட்டான். கேட்டதும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தாள். பெற்றுக் கொண்டு விடைபெற்றான். வாசல்வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து வழியனுப்பி வைத்தார்கள். புளுதியைக் கிளப்பிக் கொண்டு மோட்டார் சைக்கிள் போய்மறைந்தது.

கோயிலடியில் மக்கள் கூடியிருந்தார்கள். பிரதேச செயலாளர் கொடுத்த கடிதங்களைச் சாந்தன் கொண்டு வந்திருந்தான். 'சேர்ந்து வாழ்' நிறுவனத்தைப் பதியும் படிவங்களையும் எடுத்து வந்தான். ஒவ்வொரு கடிதங்களிலும் ஒவ்வொரு பிரதியையும் சேர்த்து அனுப்பியிருந்தாள். அக்கடிதங்களில் தனது சிபார்சினை எழுதி அனுப்பிப் பிரதிகளிலும் கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார். மோசடிகளும், தில்லுமுல்லுகளும் தலைவிரித்தாடும் அரச திணைக்களங்களில் பிரதேச செயலாளர் சிவநாயகம் ஒரு வித்தியாசமான பிறவிதான். அவர்தானே கிராம அபிவிருத்தி அதிகாரியை அனுப்பியிருந்தார். அவரை நினைந்து நெக்குருகினாள். மனதார நன்றி கூறினாள்.

நாட்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. சூரியன் மறந்தும் உதிக்காது விடுதில்லை. பகல் வரும். பொழுது பட்டு இரவு வரும். பூமிப் பந்து சுழலும் பருவகாலங்கள் நிகழும். வாழ்க்கை வண்டில் சக்கரம் போன்றது. அது சுழன்று கொண்டுதான் இருக்கும். அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள். அருணை நினைத்தாள். அவன் தன்னோடு பழகிய நாட்களை நினைந்தாள். மிகவும் மரியாதையாக நடந்து கொண்டான். எவரது மனமும் புண்படாத வகையில் பேசுவான். அவனை கயல்விழிக்குப் பிடித்திருந்தது. ஆனாலும் அது காதலல்ல. காதலிக்கும் எண்ணத்துக்கு நாட்டு நடப்புகள் இடங்கொடுக்கவில்லை. அவள் தனது அண்ணனை நினைந்து கொள்வாள். வாழ்க்கை வெறுமையாகத் தெரியும். அருண் வந்து போனதிலிருந்து அவள் மனம் படபடத்தது. அடிக்கடி நினைந்து கொள்கிறது. என்ன மனமிது. தனது மனதைக் கடிந்து கொண்டாள்.

கயல்விழியின் தொலைபேசி இசையோடு ஒலித்தது. “ஹலோ” சொன்னாள். “கயல் நான் அருண்” “அருண், இப்பதான் உங்கள நினைச்சனான்.” சொன்னாள். “அப்படியா? அதுசரி, நாளைக்காலை உங்கள் ஊருக்கு யூனிசெவ் அலுவலர்கள் வருகிறார்கள். ஆயத்தமாகி இருங்கள். அவர்களுடன் நானும் வரலாமா”? இடையில் ஒரு தமாஸ் விட்டான். “நீங்கள் கட்டாயம் வரவேண்டும். காத்திருப்பன்.” சொல்ல வாயெடுத்தாள். ஆனால் முடியவில்லை. “நீங்களும் வாறது நல்லதல்லவா? வாங்க.” ஒருவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாள்.

“கயல் இன்னுமொரு நல்ல செய்தி. அங்க எத்தனை வொலிபோல் ரீம் இருக்கு”. கேட்டான். “இன்னும் நாங்க தொடங்கல்ல. நெற்போல் ரீம் நான்கு இருக்கு. ஆனால் ஒரு உபகரணமும் இல்லை”. விபரத்தைச் சொன்னாள். “சரி நீங்க இளைஞரிடம் சொல்லி இரண்டு இடங்களில் வொலிபோல் விளையாடக் கூடியதாக ஆயத்தம் செய்து வையுங்க. கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள கட்டிடம் வெறுமையாகக் கிடக்கு அதை நான் கண்டனான். அதைத் துப்பரவாக்கி வையுங்க. அதில் ஒரு படிப்பகத்தைத் தொடங்குவம். பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்களும் வரும். நாளைக்குச் சந்திக்கிறன். வைக்கிறன்”. அருண் தொலை பேசி இணைப்பைத் துண்டித்தான்.

“மங்கை இஞ்ச வா. நல்ல சேதி. அருண் இப்ப கோல் எடுத்தவர். நாளைக்கு யூனிசெவ் வருதாம். சாரதாவைக் கூப்பிடு. முன்பள்ளியில படிப்பிக்கிற ஆசிரியர்களின் பெயர், சுயவிபரம். கல்வித்தகைமை எல்லாவற்றையும் தயாரிக்கச் சொல்லுங்க. அதே போல் பாடசாலைகளில் கற்பிக்கும் நமது தொண்டர் ஆசிரியர்களது விபரங்களையும் தயாரியுங்க. சாந்தனை இரண்டு 'வொலிபோல் கோட்' போடச் சொல்லுங்க. கோயிலுக்குப் பக்கத்தில இருக்கிற கட்டிடத்தைத் துப்பரவு செய்யச் சொல்லுங்க”, அடிக்கிக் கொண்டே சென்றாள். சாரதா ஓடிவந்து கயல்விழி சொல்லச் சொல்லக் குறிப்பெடுத்தாள். அதிபரைச் சந்திக்க வேணும். “சாரதா நீங்க இந்த ஒழுங்குகளச் செய்யுங்க. நாங்க அதிபரைச் சந்தித்து விசயங்களைச் சொல்லிவிட்டு வாறம். மங்கை வா போவம்.” சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்..

அதிபர் பாடசாலையில் இல்லை. அவர் பகல் உணவுக்குச் சென்றவர். இன்னும் திரும்பவில்லை. பாடங்கள் நடந்து கொண்டிருந்தன. இரண்டு வகுப்புக்களுக்கு ஆசிரியர்கள் வரவில்லை. ஆளுக்கொரு வகுப்பில் நுழைந்தார்கள். பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம். எப்பொழுதும் பாடத்தையே கற்பித்தால் பிள்ளைகளுக்கு அலுப்புத் தட்டும். அவர்களுக்கு விளையாட்டு மூலம் கற்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிக் கற்பார்கள். அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுவருவது ஆசிரியர்களின் கடமையாகும். நமது பிள்ளைகள் பாதிக்கப்பபட்டவர்கள். அவர்களது மனம் நொந்துபோய்க் கிடக்கிறது. கண்ணுக்குத் தெரியாத அந்தக் காயங்களை அவர்களிடம் இருந்து அகற்றுவதற்குரிய முறைகளைக் கையாள வேண்டும்.

சிலர் மனவடுக்களைப் போக்குவதாய் சொல்லிக் கொண்டு மக்களை மென்மேலும் துன்பத்துக்குள் ஆழ்த்துகிறார்கள். அவர்கள் மனம் விட்டு அழுதால் அந்தத் துயரம் நீங்கிவிடும் என்று நம்புகிறார்கள். ஆனால் அதனால் அவர்களது துன்பத்தைத் தூண்டிவிடுகிறார்கள். விளையாட்டு சிறந்த மருந்து. ஆடல்பாடல் அபிநயத்தல் போன்ற கலை நிகழ்வுகள் மக்களின் துயரங்களுக்கு வடிகால்களாக அமையும், அப்படிச் செய்தால் விரைவில் அவர்கள் தங்கள் துயரங்களை மறந்து விடுவார்கள். மனவடு மெல்ல மெல்ல நீங்கிவிடும். அடிக்கடி மங்கையுடன் இதனையிட்டு ஆராய்வாள். இருவரும் இவ்வகைச் செயற்பாடுகளைச் செய்து பார்த்துள்ளனர்.

கயல்விழியைக் கண்டதும் "ரீச்சர் விளையாட்டு ஒன்று சொல்லித் தாங்க" என்று குதூகலித்தார்கள். "சரி. ஒரு கொப்பியை எடுங்கள். சொன்னாள். பிள்ளைகள் தயங்கினார்கள். "எழுதுவதற்கு இல்ல. விளையாடத்தான். கொப்பியை எடுத்துக் குழல்போல் சுற்றிக் கொள்ளுங்கள். இப்படிச் செய்ய வேணும்". செய்து காட்டினாள். "சரி அப்படியே கொப்பிகளை மேசையில் வையுங்கள்." வைத்தார்கள். "இப்போது உங்கள் கைகள் இரண்டையும் விரித்து உங்கள் உள்ளங்கைகளில் ஓட்டை தெரிகிறதா என்று பாருங்கள்". சொன்னதும் பிள்ளைகள் செய்து பார்த்தார்கள். "தெரிகிறதா? கேட்டாள். சிலர் "ஓம் ரிச்சர்." என்றார்கள். பலர் "இல்லை" யென்று சொன்னார்கள். எனக்கும் தெரியவில்லை. எப்படி உங்களுக்குத் தெரியும்? என்றாள்.

"இப்ப சொல்லுங்கள். தெரிகிறதா"? எல்லோரையும் பார்த்துக் கேட்டாள். "இல்லை. இல்லை" என்ற பதில் வந்தது. "அப்படியென்றால் உங்கள் உள்ளங்கையில் வெட்டித் துளை போடுவோமா?" சிரிப்போடு கேட்டாள் "நோகும் ரீச்சர்." சத்தமிட்டார்கள். "சரி நோகாமல் துளை போடுவம். சரியா"? "சரி ரீச்சர்". பிள்ளைகள் ஒத்துக் கொண்டார்கள். என்னைப் பார்த்து நான் செய்வதுபோல் செய்ய வேண்டும். "தயாரா? கொப்பிய எடுங்கள். குழல்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுங்கள். இடது கையால் அதனைப் பிடியுங்கள். இடது கண்ணில் அதனை வைத்துப் பிடியுங்கள்''. என்றாள்.

சொன்னதுபோல் செய்தார்கள். "இப்போது வலது கையை விரித்து இடது கையில் இருக்கும் குழாயோடு இணைத்துப் பிடியுங்கள். இரண்டு கண்களையும் திறந்தபடியே குழாயூடாகப் பாருங்கள். உங்கள் உள்ளங்கையில் ஓட்டை தெரிகிறதா? அதற்கூடாக என்னைப் பாருங்கள். நான் தெரிகிறேனா? பார்த்துச் சொல்லுங்கள்''. என்றாள். "ஓம் ரீச்சர். ஓம் ரீச்சர்''. என்றார்கள். வகுப்புக் கலகலத்தது. அதிபர் வேடிக்கையாகப் பார்த்துச் சிரித்தார். "நமது பிள்ளைகளை நீங்கள் நல்லாப் புரிந்து வைத்திருக்கிறீர்கள். இதுதான் நமது மாணவர்களுக்குத் தேவை. அவர்களது மனங்களில் உள்ள உட்காயங்கள் ஆறுவதற்கு இப்படிப்பட்ட விசயங்கள் கட்டாயம் தேவை''. அதிபர் பாராட்டினார்.

## 16

அவர் அலுவலகத்துள் சென்றார். பின்னால் கயல்விழியும் சென்றாள். மங்கை வந்து சேர்ந்தாள். "என்ன ஏதும் விஷேசமா''? அதே புன்னகையோடு கேட்டார். "ஓம் சேர். நாளைக்கு நமது பாடசாலைக்கு யூனிசெவ் அலுவலர்கள் வருகிறார்கள். நமது புது ஆசிரியர்களின் விபரங்களை அவர்களிடம் நீங்கள் கொடுக்க வேண்டும். நாங்கள் எல்லாவற்றையும் தயாரித்து விட்டோம். யூனிசெவ் அவர்களுக்கு ஒரு கொடுப்பனவு செய்தாலும் செய்வார்கள். விளையாட்டுப் பொருட்களும், நூலகத்துக்குப் புத்தகங்களும் வரும். நீங்கள் நன்றாகக் கதைப்பீர்கள். சேர் அவர்களுக்குப் பகல் உணவு கொடுப்போமா''? கேட்டார்கள். "நமது ஊருக்கு வாறவர்களுக்கு விருந்து கொடுப்பது நமது பண்பாடு. அதை மறப்பேனா?, செய்வோம். உங்கள் முயற்சிக்கு நன்றி. தொடரட்டும் உங்கள் பணி''. வாழ்த்தி அனுப்பினார். வந்த பணிமுடிந்த சந்தோசத்தில் கோயிலடிக்குப் பறந்தார்கள்.

சாந்தனின் குழு கரப்பந்தாட்டத்துக்குரிய இடத்தினைத் தெரிவு செய்துவிட்டனர். நான்கு தென்னங்குற்றிகள் வந்தன. இரண்டை கோயிலடியில் நட்டார்கள். மற்றவைகளை பாடசாலைக்குப் பக்கத்தில் அளந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்டார்கள். "'வொலிபோல் கோட்' தயார்". சாந்தன் உற்சாகமாகச் சொன்னான். 'நெற்போல்' பற்றிய சிந்தனை கயல்விழிக்குத் தட்டியது. "மங்கை நெற்போல் விசயத்தை மறந்து விட்டோமே. என்ன செய்வது? அவளைப் பார்த்துக் கேட்டாள். "அதெல்லாம் தயார்". சிரித்துக் கொண்டே மங்கை பதிலளித்தாள். கயலுக்குச் சந்தோசமாக இருந்தது. ஒருகுழு படிப்பகத்துக்கான வேலைகளில் ஈடுபட்டது. பாடசாலையில் பாவிக்க முடியாத நிலையில் இருந்த தளபாடங்களை அதிபர் படிப்பகத்துக்குக் கொடுத்தார். அவை திருத்தப் பட்டுப் பாவிக்கக் கூடியதாக மாறிவிட்டதை கயல்விழி கண்டுகொண்டாள்.

ஊரில் நடைபெறும் வேலைகளுக்கு கட்டைபறிச்சானில் உள்ளவர்களுக்குக் கொடுக்கும் கட்டாய உத்தரவை பிரதேச செயலாளர் வழங்கி இருந்தார். அதிபர் வீட்டுத் தோட்டத்துக்கான நாற்றுக்களை வழங்கினார். தோட்டங்கள் வீடுகளில் உருவாகின. பாடசாலைகளில் கற்பித்தல் சிறப்பாக நடந்தது. கல்விக்குழு பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைக் கவனித்து அனுப்பி வைத்தது. மனிதனால் முடியாதது ஒன்றும் இல்லை. மனித மனங்களில் ஒரு துணிவை ஏற்படுத்தி உற்சாகத்தைக் கொடுத்தால். அது செயல்வடிவம் பெறுவதை அவதானித்தாள். நாளைய நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்கள். "சுயஉதவிக்குழுக்கள் நிலை என்ன? இதுவரை எத்தனை குழுக்கள் உருவாகியுள்ளன."? வினவினாள்.

"இதுவரை இருபத்தைந்து குழுக்கள் உருவாகிவிட்டன. ஒவ்வொரு குழுவிலும் பத்துப் பேர் உள்ளனர். ஒரு உறுப்பினர் ஒரு நாளைக்கு இரண்டு ரூபா வீதம் சேர்த்து வருகிறார். ஒருகிழமைக்கு ஒருவர் பதினைந்து ரூபாய் கட்டுறார். அவர்களே இதனைத் தீர்மானித்தார்கள். ஒரு மாதம் ஒருவர் அறுபது ரூபாய் கட்டுறார். ஒரு மாதத்தில் ஒருகுழுவுக்கு அறுநூறு ரூபாய் சேருது. நாங்கள் தொடங்கி இரண்டு மாதங்கள் ஆகின்றன. இதுவரை முப்பதாயிரம் ரூபாய் சேர்ந்துள்ளது. வங்கியில் சேமிப்புக்கணக்குத் தொடங்க வங்கி முகாமையாளரோடு கதைத்து விட்டோம். வங்கியில் இருந்து ஒரு அலுவலரை அனுப்புவதாக வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்." பொருளாளர் ராகினி விளக்கமாச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய உதவிக்குழுவினால் நமது கிராமம் தன்னிறைவு பெறும். இது நமது கனவு. மனிதர்கள் கனவு காணவேண்டும். அந்தக் கனவு எல்லோருக்கும் பயனுள்ளதாக அமையவேண்டும். அந்தக் கனவின் பொருளை நாம் அனுபவிக்க வேண்டும். நாம் நினைக்கும் பொருள் நம்மை நெருங்கி வரவேண்டும். நெருங்கின பொருள் கைப்படவும் வேண்டும். அதற்கு நமது விடா முயற்சிதான் முக்கியம். நமக்குள் எந்தப் பிரச்சினைகளும் தலைதூக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்." பெரிய பிரசங்கத்தைக் கயல்விழி செய்தாள். "இவ்வளவையும் இவள் எங்கே கற்றாள்."? மங்கை வியப்போடு மனதில் கேட்டுக் கொண்டாள்.

வீட்டுக்குப் போய் ஓய்வெடுக்கும் போது பத்தரை மணிக்கு மேலாகிவிட்டது. "பிள்ளையள் ஒரே வேலையென்று அலையாமல் உடலையும் பார்த்துக் கொள்ள வேணும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்". அம்மா சற்றுக் கடிந்து கொண்டார். அப்பா சிரித்துக் கொண்டார். தங்கம் அவங்க சின்னப் பிள்ளைகள் இல்ல. படித்த பட்டதாரிகள். அவங்களுக்குத் தெரியும். இந்த ஊர் மக்கள் நல்லாக இருக்க வேணும் என்றுதானே பாடுபடுதுகள். இப்ப நம்மட ஊர் எவ்வளவு சந்தோசமாக இருக்கு. எல்லோரும் எதோ தங்கள் வேலைகளையாவது செய்து கொண்டு இருக்குதுகள். அதற்கு யார் காரணம்.? நம்மட இந்த இரண்டு பிள்ளயளும்தானே?". அப்பா சொல்லிக் கொண்டு போனார். அம்மா கேட்டு ரசித்தார்.

மங்கையின் உள்ளம் உணர்ச்சியில் பொங்கியது. "என்னையும் தன் மகளாக மதித்துப் போற்றுகிறார்களே. நான் எவ்வளவு கொடுத்து வைத்தவள்". அவளது கண்கள் பனித்தன. "என்ன சென்டிமென்டா"? கயல்விழி கலகலத்தாள். "இது சென்டிமென்ற் இல்ல. உண்மை. எங்கட வீட்டில கிடைக்காத அன்பும் பாசமும் எனக்கு இங்க உன்னால கிடைக்குது. உன்னில் காட்டும் அதே அன்பை உன் அப்பா அம்மா என்மேல் காட்டுறாங்க. இதற்கு என்ன கைமாறு செய்யப் போறனோ தெரியாது". மீண்டும் கண்கலங்கினாள். "மங்கை வீணான கற்பனையில குழம்பாத. நமக்குத் தலைமேல வேலை கிடக்கு. அதைச் செய்து முடிக்கும் வழியைப் பார்ப்பம்". அவளைத் தேற்றினாள்.

நல்ல நிலவு காய்ந்தது. நிலவின் ஒளி ஆற்றில் பட்டு வளவெங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிச்சிட்டது. "வெளியில் கொஞ்சம் இருப்போமா? இந்த நிலவில் ஆற்றில் தோணியில் போய் ஒரு சுற்றுச் சுற்றி வந்தால் எப்படி இருக்கும்."? மங்கை கூறினாள். "திடீரென என்ன கற்பனை உனக்கு? இன்றைக்குப் போயா நாளில்லையே"? சிரித்துக் கொண்டே கயல்விழி கூறினாள். அப்பாவும் அம்மாவும் வந்தார்கள். ஆற்றிலிருந்து மீன்கள் துள்ளும் சத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. "இந்த மீன்கள் தூங்குவதில்லையா"? மங்கை கேட்டாள். "மீனின் வாழ்க்கை அற்புதமானது. மீன்களும் தண்ணீரில் நீந்தியவாறே உறங்கும். சுதந்திரமாக மீன்கள் நீந்தித் திரிவதாக நாம் நினைக்கிறோம். ஆனால் அவற்றுக்கு நிறையவே ஆபத்துக்கள் உண்டு. பெரிய மீன்கள் சிறிய மீன்களை வேட்டையாடி விடும். பறவைகள், மற்ற உயிரினங்களினால் உயிராபத்துக்கள் உண்டு. மனிதர்களின் அச்சுறுத்தல்தான் அதிகம். விளக்கம் கயல்விழி கொடுத்தாள்.

"நாளைக்கு என்னம்மா விஷேசம்"? அப்பா வினவினார். "நாளைக்கு யூனிசெவ் வருது. இன்னும் பல நிறுவனங்களும் வரலாம்." மங்கை விளக்கினாள். "ஏதோ ஊருக்கு நல்லது நடக்க வேணும். இந்தச் சனங்களின்ர கஸ்டம் தீரந்ததென்றால் எவ்வளவு நல்லது. ஆண்டவா நீதான் என்ர பிள்ளையளுக்கு உதவவேணும்". அவர் கடவுளை வேண்டினார். கொஞ்ச நேரம் கதைத்தார்கள். "அப்பா அவர்களுக்கு உணவு கொடுக்க வேணும். அதிபர் ஓமென்டவர். ஆனாலும் நாங்களும் ஆயத்தமாக இருந்தால் நல்லதில்லையா"? கயல்விழி கூறினாள். நான் நாளைக்குக் காலை அதிபரோடு கதைத்து ஒழுங்கு செய்யிறன். நீங்க நித்திரைக்குப் போங்க." அப்பா அவர்களை அனுப்பினார்.

வீதிகளில் பாடசாலைப் பிள்ளைகளின் ஊர்கோலம். கல்விக் குழுவினரின் வீதியுலா. பெற்றோரின் பரபரப்பு. பார்ப்பதற்கு இங்கிதமாக இருந்தது. மங்கை ஆசிரியர்களது சுயவிபரக் கோவைகளை எடுத்துக் கொண்டாள். வேண்டிய அறிவுறுத்தல்களை அவரவருக்கு வழங்கினாள். கயல்விழியோடு பாடசாலைக்கு விரைந்தாள். பாடசாலை தொடங்கி நடந்து கொண்டிருந்தது. "இன்னும் யூனிசெவ் வரல்லையே. அருண் ஏன் இன்னும் போன் எடுக்கல்ல." அவளது மனம் அடித்துக் கொண்டது. சரியாக பத்து மணி. கயல்விழியின் தொலை பேசியின் இசை ஒலித்தது. முடுக்கிவிட்டுக் காதில் வைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஹலோ” என்றாள். “கயல் நான் அருண். இதோ வந்து கொண்டிருக்கிறம். இன்னும் பத்து நிமிசத்தில பாடசாலைக்கு வந்திடுவம். சரியா”? சொல்லி முடிந்ததும் வைத்து விட்டான்.

சொன்னதுபோல் வாகனங்கள் வந்து நின்றன. பலர் இறங்கினார்கள். அதிபரின் அலுவலகத்துள் சென்றார்கள். அவர் எழுந்து வரவேற்றார். கதைத்தார்கள். அதிபருடன் வகுப்பறைகளைப் பார்வையிட்டார்கள். பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலைப் பார்த்தார்கள். இந்தக் கஸ்டமான நெருக்கடி நிலையிலும் இப்படியொரு பாடசாலையா? வியந்தார்கள்.

பாடசாலைத் தோட்டம் அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. காய்கறித் தோட்டம், பூந்தோட்டம் அவர்கள் கண்களைக் குளிரச் செய்தன. வகுப்புக்கள் கற்றல் கற்பித்தல் உபகரணங்களால் நிரம்பியிருந்தன. அத்தனை கற்றல் கற்பித்தல் உபகரணங்களும் மறுசீராக்கப் பொருட்களால் ஆனவை. வகுப்பறைகளுள் சென்றார்கள். பிள்ளைகள் பண்பாக வரவேற்றனர். வினாக்களையும் வினவினார்கள்.

“யார் உங்கள் ரீச்சர்?” விடைகளைப் பிள்ளைகள் சொன்னார்கள். குறித்துக் கொண்டார்கள். முன்பள்ளியினுள் சென்றார்கள். பிள்ளைகள் தரையில் இருப்பதைக் கண்டு வருந்தினார்கள். மீண்டும் அதிபரின் அலுவலகத்தினுள் வந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். உபசரிப்பில் நிரந்தர ஆசிரியர்களே பங்கு கொண்டார்கள். அதிபரின் மதியூகம் அப்படிச் செய்தார்கள். தேநீர் சிற்றுண்டி பரிமாறப் பட்டது. ஆசிரியர்களது கூட்டம் ஒன்றை அதிபர் ஒழுங்கு செய்திருந்தார். ஆசிரியர்கள் ஒன்று திரண்டிருந்தார்கள். அதிபரிடம் பல வினாக்களை வினாவினார்கள். ஆசிரியர்களோடும் உரையாடினார்கள். அவர்களது மனங்களில் வாழத்துடிக்கும் கிராம மக்களது ஏக்கங்கள் புகுந்து கொண்டன.

அதிபரிடம் ஆசிரியர்களது விபரங்களைக் கேட்டனர். ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்தனர். “நீங்கள் இந்தப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் கொண்ட கரிசனையைப் பாராட்டுகிறோம். எங்களாலான உதவிகளைச் செய்வோம்” உறுதியளித்தார்கள். தற்காலிகமாகத் தொண்டு அடிப்படையில் கஸ்டப்படும் ஆசிரியர்களின் விபரங்களை அதிபர் கொடுத்தார். யூனிசெவ் தொண்டு அடிப்படையில் சேவை செய்யும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஒரு தொகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியை ஊக்குவிப்பாகத் தரும். இங்குள்ள இரண்டு பாடசாலைகளிலும் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதற்காக மற்ற ஆசிரியர்களுக்கும் ஒரு ஊக்குவிப்புத் தரமுன்வந்துள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும். இங்குள்ள இரண்டு பாடசாலைகளுக்கும், முன்பள்ளிகளுக்கும் தளபாட வசதி செய்து தரப்படும். நூல்நிலையங்களுக்கு நூல்கள் வழங்கப் படும்'' யூனிசெவ் நிறுவனர் குலேந்திரன் உறுதியளித்தார். ஒரு தொகை உபகரணங்களையும் கொடுத்தார்.

யூனிசெவ் நிறுவனம் வந்த செய்தி பரவியது. சாரதா, ராகினி, சுலோச்சனா, சாந்தன் ஆயத்தமாக இருந்தார்கள். சாந்தன் ஓடி வந்தான். கயல்விழியிடம் சென்றான். "நாங்கள் தயாராய் இருக்கிறோம்.'' கூறிவிட்டுப் பறந்தான். "சேர், உணவு விசயம்.? கயல்விழி இழுத்தாள். "அதெல்லாம் ரெடி. நமது ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முதலில் இந்த வேலைகளைப் பார்ப்போம். ஒருமணிக்குச் சாப்பிடத் திரும்பி வரலாம். எல்லாத்தையும் அவர்களிடம் சொல்லி அனுமதியும் வாங்கிட்டன்." அதிபர் உற்சாகமாகச் சொன்னார்.

அதிபர் வந்தவர்களை ஊரைச் சுற்றிப் பார்க்க அழைத்தார். புறப்பட்டார்கள். கயல்விழியையும் மங்கையையும் கூடவே வரும்படி கேட்டுக் கொண்டார்கள். பிரதேசச் செயலாளர் கோயிலடியில் மக்களோடு கலந்துரையாடிக் கொண்டிருந்தார். சாரதா, ராகினி, சுலோச்சனா, சாந்தன் மற்றையத் தொண்டர்களும் உற்சாகமாகச் செயற்பட்டனர்.

## 17

மூன்று வாகனங்கள் நின்றன. அருண் முக்கியமான பாதைகளை சாரதியிடம் சொல்லியிருந்தான். யூனிசெவ் வாகனத்தில் அவன் ஏறிக்கொண்டான். அதில் கயலையும், மங்கையையும் ஏறும்படி குலேந்திரன் கேட்டுக் கொண்டார். வழியில் சந்தேகங்களைக் கேட்டறியும் நோக்கம் அவருக்கு. சில இடங்களில் வாகனங்கள் நின்றன. வீட்டுத் தோட்டங்களைப் பார்வையிட்டனர். மக்களோடு அளவளாவினார்கள். கோயிலடிக்குச் சென்றார்கள். பெருந்திரளான சனங்கள் நின்றார்கள்". ஊரைப்பார்க்க அழகாக இருக்கிறது. தெருக்கள் துப்பரவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. மிஸ். கயல்விழி உங்களப்போல ஒவ்வொரு ஊரிலும் சிலர் இருந்தால் மக்கள் பயனடைவார்கள். நீங்கள் இருவர் இங்கிருந்து எப்படி எல்லா மக்களையும் அணிதிரட்டினீர்கள்?" கேள்வியாகத் தொடுத்தார். அருணை ஓரவிழியால் பார்த்தாள்.

"உங்களைப் போல் சிலநல்ல உள்ளங்கள் இருந்து உற்சாகம் தருவார்கள் என்ற நம்பிக்கைதான் சேர்". சொல்லித் தலை கவிழ்ந்தாள். அவள் முகம் நாணத்தால் சிவந்து மலரந்தது. யூனிசெவ் நிறுவன வாகனத்துள் விவசாயப் பணிப்பாளரும் இருந்தார். கயல்விழிக்கு இது தெரியாது. "அடுத்த கட்ட நடவடிக்கையென்ன"?. வினவினர். "சேர் இங்கிருக்கும் இளைஞர் யுவதிகளை விவசாயத்தில் ஈடுபடுத்தப் போகிறோம். அவர்களுக்குத் தலா இரண்டு ஏக்கர் நிலத்தைப் பார்த்திருக்கிறோம். விவசாயப் பணிப்பாளரைச் சந்தித்து அவரது உதவியைப் பெறப் போகிறோம். எல்லாருக்கும் வேலையிருந்தால் பிரச்சினைகள் வராது. பொருளாதார வளர்ச்சி ஏற்படும். தங்கள் காலில் தாங்களே நிற்பார்கள்." விளக்கினாள்.

"விவசாயப் பணிப்பாளரிடம் எப்படியான உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள்?" விவசாயப் பணிப்பாளரே கேட்டார். "விவசாயப் பணிப்பாளர் நல்ல மனம் கொண்டவர் என்று கேள்விப்பட்டிருக்கிறம். இன்னும் சந்திக்கவில்லை". அருண் தனக்குள் சிரித்துக் கொண்டான். கயல்விழியின் வெகுளித் தனத்தை ரசித்தான். அவள் சொல்லத்தொடங்கினாள். "விவசாய சம்பந்தமான அறிவுரைகள், அடிக்கடி வயல்களையும் தோட்டங்களையும் பார்த்து, நோய் பீடைகள் இருந்தால் அதற்குரிய வழிகளைக் காட்டும்படி கேட்போம். இந்த நிலத்துக்குப் பொருத்தமான நல்ல விதைகளை அறிமுகம் செய்யும்படி கேட்க இருக்கிறோம். இந்த இளைஞர் யுவதிகளுக்கு விவசாயத்தில் பயிற்சிகளை வழங்கும்படியும், நல்ல பயன்தரக்கூடிய நாற்றுக்களையும், மரக்கன்றுகளையும் கேட்கவிருக்கிறோம். விவசாயப் பணிப்பாளரை விரைவில் சந்திக்க இருக்கிறோம்". அவள் அடுக்கிக் கொண்டு போனாள். அவர் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

வாகனங்கள் கோயிலடியில் தரித்தன. இறங்கிக் கொண்டார்கள். பிரதேச செயலாளர் அவர்களை வரவேற்றார். கூட்டம் கூடுவதற்கான ஏற்பாடுகளை சாந்தன் குழு செய்திருந்தது. வந்திருந்த அனைவரும் அந்த மக்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார்கள். பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட முகங்கள், ஓடியோடிக் களைத்து மெலிந்த உடல்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆவேசத்தோடு போராடும் துணிவுடன் நின்றார்கள். அவர்கள் மேல் அனைவருக்கும் அனுதாபம் ஏற்பட்டது. வசதியாக வாழ்ந்த மக்கள் இந்த நிலைக்கு ஆளாகி விட்டார்கள். அவர்களை வேலையில்லாப் பட்டதாரிகள் வழிநடத்துகிறார்கள்.

"அரசாங்க உத்தியோகத்தர் நாங்கள். எங்களால் ஒரு குறிப்பிட்ட உதவிகள்தான் செய்யலாம். உங்கள் ஒத்துழைப்புக் கிடைத்தால் அவற்றை இருமடங்காகச் செய்யலாம். உங்களுக்கும், எங்களுக்கும் பெருமைதரக்கூடிய செயல்களில் இந்த ஊர் இளைஞர்களும். யுவதிகளும் இயங்குகிறீர்கள். செல்வி. கயல்விழியும் அவரது குழுவும் இந்த ஊர் முன்னேற்றத்துக்கு எடுக்கும் முயற்சிகள் ஏராளம். அவர்கள் எல்லாவற்றையும் செயலில்தான் காட்டுகிறார்கள். இந்த ஊரின் தேவைகளை ஆவணப்படுத்தியுள்ளார்கள். எல்லாத்தரவுகளையும் வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் எவ்வாறு இயங்குவதென்று திட்டங்கள் வைத்திருக்கிறார்கள். அதில் முக்கியமாக இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று கல்வி, மற்றது சுயஉதவிக்குழுக்களின் பொருளாதார முன்னேற்றம். இளைஞர் யுவதிகளுக்குக் காணிகள் கேட்டுள்ளார்கள்". அவர் நிறுத்தினார். அவரது கண்கள் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்தன.

"நமது மாவட்டத்தில் உள்ள அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் உங்கள் நிலை பற்றி செல்வி. கயல்விழி எழுதியுள்ளார். அவற்றை எனது சிபார்சுடன் அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். இங்கே விவசாயப் பணிப்பாளர் இதோ வந்திருக்கிறார்" அவரைச் சுட்டிக் காட்டினார். கயல்விழியின் கண்கள் விவசாயப் பணிப்பாளரைத் தேடியது. அவளது கண்களை அவளால் நம்ப முடியவில்லை. அவரோடுதான் தான் கதைத்து வந்ததை நினைந்து கொண்டாள். "சே..தெரியாது போய்விட்டதே. இந்த அருணும் சொல்லவில்லையே". அவனைப் பார்த்தாள். அவன் தெரியாதது போல் சிரித்துக் கொண்டான். "காணிக்கு நான்தான் பொறுப்பு. அதனால் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்க சிபார்சு செய்து விட்டேன்". கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட இன்னொருவரையும் அறிமுகம் செய்கிறேன். அவர்தான் திரு.அருண். அவரது சிபார்சில்தான் இத்தனை நிறுவனங்களும் வந்துள்ளன". சொல்லிக் கொண்டு போனார். கயல்விழியின் கண்கள் அருணை வலம் வந்தன. நன்றியால் நனைந்தாள். "இன்று பகல் உணவுக்குப் பின் நாங்கள் அனைவரும் உங்களோடு இருந்து உங்கள் தேவைகளை நிறைவு செய்ய இருக்கிறோம். இப்போது நூலகத்தினை யூனிசெவ் நிறுவனர் திரு.குலேந்திரன் பார்வையிட்டு நூல்களை அன்பளிப்புச் செய்வார்.' பேச்சை நிறுத்தினார்.

குலேந்திரன் நூலக அறையை நோட்டம் விட்டார். கயல்விழியையும், மங்கையையும் அழைத்தார். "இந்த நூல்களை இவர்களிடம் ஒப்படைக்கின்றேன். பயன் பெறுவது உங்களது பொறுப்பாகும்." என்றார். நூல்களை வழங்கினார். "பூ..இவ்வளவுதானா"? சிலரின் வாய்களில் இருந்து வார்த்தைகள் வழுக்கி விழுந்தன. அங்கே பக்கத்தில் நின்ற லொறியைப் பார்த்தார். கையை அசைத்தார். பல பெட்டிகள் இறக்கப்பட்டன. சாந்தன் குழுவினர் புத்தகங்களை அறையினுள் கொண்டு சென்றார்கள். நீண்ட மேசைகள் ஐந்தும், கதிரைகளும் இறக்கப்பட்டன. "இவ்வளவும் நமக்கா?" அதே மக்கள் கூறினார்கள். புத்தகங்கள் வைப்பதற்கான அலுமாரிகள் ஐந்தும் இறக்கப்பட்டன. "இதற்குப் பொறுப்பாக சாந்தன் அவர்களை செல்வி கயல்விழி சிபார்சு செய்துள்ளார். அவர் பொறுப்பாக இருப்பார். அவருக்குத் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு யூனிசெவ் மாதாமாதம் நிதியுதவி செய்யும்". சாந்தனுடைய கைகளைக் குலேந்திரன் பிடித்து உயர்த்தியவாறு கூறினார். மக்கள் ஆரவாரித்தனர்.

'மக்களுக்காக' என்ற நிறுவனத்தின் வாகனங்கள் வந்தன. அந்த நிறுவனத்தின் முகாமையாளர் திரு. கங்காதரன் இறங்கி வந்தார். அருண் அவரை அழைத்து வந்தான். கயல்விழியை அழைத்தான். "நான் சொன்ன பெயரப்பட்டியல் இருக்கிறதா? எடுங்க பார்ப்பம்." என்றான். மங்கை "இதோ" என்று நீட்டினாள். "இரண்டு பேரும் ரெடியாகத்தான் இருக்கிறிங்க". சிரிப்போடு பெற்றுக் கொண்டான். அருண் கங்காதரனை அறிமுகம் செய்தான். உங்கள் கிராமத்தின் வளங்களை இனங்கண்டு எங்கள் நிறுவனத்திடம் உதவி கேட்டிருந்தீர்கள். அதனை பிரதேசச் செயலாளர் முன்னுரிமை கொடுத்துச் சிபார்சு செய்திருந்தார். மீன், இறால், நண்டு பிடிப்பதற்கான தோணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகளையும், அதற்கான பயிற்சிகளையும் தருவதற்காக வந்துள்ளோம். தோணிகள் வந்து கொண்டிருக்கின்றன. எப்படியும் இரண்டு மணியாகும். வந்தவுடன் நீங்கள் தந்த பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களுக்கு அவற்றைத் தருவோம்.'' என்றார். சனங்களுக்குச் சந்தோசம். கைதட்டி மகிழ்ந்தார்கள்.

பிரதேசச் செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்கி விளையாட்டு உபகரணப் பொதிகளை ஒரு நிறுவனம் வழங்கியது. பாடசாலைக்குரிய விளையாட்டுப் பொதிகளைப் பாடசாலையில் வழங்க முடிவெடுக்கப் பட்டது. அதிபரின் அழைப்பை ஏற்றுப் பாடசாலைக்குச் சென்றார்கள். கல்வித் திணைக்களத்தின் வாகனம் வந்தது. அதிபர் வாசலுக்குப் போய் கல்விப் பணிப்பாளரை "நீங்கள் சொன்னபடி வருவீர்கள் என்று தெரியும். வாங்க சேர்'' வரவேற்றார். ஒரு வகுப்பறையில் உணவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுந்தரத்தார் சுறுசுறுப்பாக இயங்கினார். ஆசிரியர்கள் இன்முகத்துடன் விருந்தினர்களை வரவேற்றார்கள். உயர்தர வகுப்பு மாணவர்களும், மாணவியரும் ஒத்துழைத்தார்கள். கயல்விழியும் மங்கையும் பகிர்தலில் ஈடுபட்டார்கள். ஏனைய ஆசிரியர்களும் பங்கு கொண்டார்கள்.

"நமக்காகத்தானே இவர்கள் வந்துள்ளார்கள். அவர்களை அன்போடு உபசரிப்பது நமது கடமை'' என்று ஊர்மக்கள் செயற்பட்டார்கள். அடிக்கடி அருணை கயலின் கண்கள் வட்டமிட்டன. அவளை அறியாமலேயே அவனைப் பார்க்க மனம் ஆவலாய் இருந்தது. உண்டு கொண்டே பாடசாலைத் தேவைகளை கல்விப் பணிப்பாளர் குலேந்திரனுக்கு விளக்கினார். குலேந்திரன் தான் எடுத்த முடிவுகளை விளக்கினார்.

"மூதூர் கிழக்கில் பதினைந்து பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளோம். அதுபற்றி நீங்கள்தானே சிபார்சு செய்திருந்தீர்கள். அதில் மேலதிகமாக வகுப்புக்களை நடத்தி இழந்த கல்வியை ஈடுசெய்யும் திட்டத்தை நடைமுறைப் படுத்த நிதிவசதியிருக்கிறது. அத்துடன் கட்டைபறிச்சானில் இரண்டு பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக் குறைபற்றி நீங்கள் சிபார்சு செய்ததைப் பார்த்தேன். அந்த வகையில் பத்து ஆசிரியர்களுக்கு இரண்டு வருடத்துக்கான கொடுப்பனவுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். ஆறு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவு வழங்கவுள்ளோம்.'' குலேந்திரன் விளக்கமாகச் சொன்னார். கல்விப்பணிப்பாளர் நன்றியைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலர்களோடு வந்த அனைவரையும் அழைத்து உணவு கொடுத்து உபசரித்தார்கள். "இந்த மக்கள் எவ்வளவு நன்றி விசுவாசம் உள்ளவர்கள். தங்களுக்கு இல்லாவிட்டாலும் தங்களை நாடிவருபவர்களுக்குக் கொடுக்கும் பண்பு கொண்டவர்கள்." வந்தவர்கள் தங்களுக்குள் கூறிக் கொண்டார்கள். உணவின் பின் அதிபர் அலுவலகத்தினுள் சென்றார்கள். குலேந்திரன் தொண்டர் ஆசிரியர்களது கடிதத்தில் கல்விப் பணிப்பாளரின் சிபார்சினைப் பெற்றுக் கொண்டார். பாடசாலைக்குரிய புத்தகங்களையும் விளையாட்டு உபகரணங்களையும் கொடுத்தார்கள். இரண்டரை மணிக்குக் கோயிலடிக்குச் சென்றார்கள்.

மீன்பிடி உபகரணங்கள் முப்பது பேர்களுக்கு வழங்கப்பட்டன. பதினைந்து பேருக்கு வியாபாரம் செய்வதற்கான பெட்டி, தராசு அடங்கிய சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அவரவர் தமது பெயர்களை அறிவித்ததும் வந்து பெற்றுக் கொண்டனர். "கிராம அபிவிருத்தி அலுவலர் என்ற வகையில் வந்திருக்கும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். சிறப்பாக எனக்கு வழிகாட்டும் பிரதேச செயலாளருக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். இதற்கெல்லாம் மூலகாரண சக்தியாக இருந்து இயக்கும் கயல்விழிக்கும் அவரது குழுவினருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்". அருண் கூறிமுடித்தான்.

கயல்விழி இருகரம் கூப்பினாள். "எனக்கு என்ன கூறுவதென்று தெரியாமல் தவிக்கிறேன். நான் பலருக்குக் கடமைப் பட்டுள்ளேன். முதலில் எனக்கு வலது கரமாக இருக்கும் திருமங்கை, சாரதா, ராகினி, சுலோச்சனா, தம்பி சாந்தன் மற்றும் எங்கள் குழுவினர் அனைவருக்கும் நன்றி சொல்லவேண்டும். அவர்கள் இல்லாவிட்டால் இவற்றைச் செய்திருக்க முடியாது. எங்கள் அதிபர் திறமைசாலி. எங்களை வழி நடத்திச் செல்வதில் வல்லவர். நாங்கள் மதிக்கும் ஒரு மாமனிதன் இருக்கிறார் என்றால் அவர் எங்கள் பிரதேசச் செயலாளர் சிவநாயகம்தான். அவர்தான் இந்தச் 'சேர்ந்து வாழ்' நிறுவனத்தை அமைப்பதற்கான வழிகாட்டி". கயல்விழியின் கண்கள் உணர்ச்சியினால் கலங்கின. அவள் தொடர்ந்தாள்.

"யூனிசெவ் நிறுவனத்துக்கு நாங்கள் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். அதேபோல் கல்விப்பணிப்பாளர், இங்கே வந்து பேருதவி செய்த அத்தனை நிறுவனர்களுக்கும் மனமார்ந்த நன்றி. எங்களுக்கு உதவுபவர் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார். நாங்கள் என்ன நினைக்கிறோமோ. அதனை அவர் உணர்ந்து செயலில் காட்டிவிடுகிறார். பிரதேச செயலாளரினால் அனுப்பட்ட எங்கள் கிராம அபிவிருத்தி அலுவலர் திரு.அருண் அவர்கள். அவருக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். எல்லோரையும் தொடர்ந்தும் அனர்த்தங்களால் அல்லல் உற்ற மக்களுக்குச் சேவையாற்ற அழைக்கிறோம்". பேசிமுடித்தாள்.

அனைவரும் விடைபெற்றார்கள். வாகனங்களில் ஏறிக் கொண்டார்கள். "அருண்! உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியாது. சொல்லாமலே பலவற்றைச் செய்திருக்கிறீங்க." அவள் உருகிநின்றாள். "கயல் உங்கள எனக்கு எப்பவோ தெரியும். நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது எனது கடமை. போகப் போகத் தெரியும். மனதைப் போட்டுக் குழப்பாமல் வேலையைக் கவனியுங்க. நான் நாளை மறுநாள் வாறன்." அவன் புறப்பட்டான். "போன் பண்ணுங்க". கூறினாள். வாகனங்கள் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

## 18

கட்டைபறிச்சான் புதுமெருகு பெற்றுவிடத் துடித்துக் கொண்டிருந்தது. மூதூர் வங்கியிலிருந்து முகாமையாளர் வந்தார். சுய உதவிக்குழுக்களைச் சந்தித்தார். கயல்விழி 'சேர்ந்து வாழ்' நிறுவனத்தின் பெயரில் பொதுவாகக் கணக்கைத் திறக்க ஏற்பாடு செய்திருந்தாள். அப்படிச் செய்வது மக்களுக்கு நல்லது. அவர்கள் மூதூருக்குப் போகவேண்டியதில்லை. பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி அலுவலர், அதிபர் ஆகியோரின் வழிகாட்டலில் வங்கியில் சேமிப்புக்கணக்குத் தொடங்கப்பட்டது. "முதற்தடவையில் அறுபதாயிரம் வைப்பில் இடப்பட்டது. இது பெருஞ்சாதனை". முகாமையாளர் புகழாரம் சூட்டினார். "ஒவ்வொரு குழுவும் தமது குழு உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கலாம். யாருக்கு அவசியமாகக் கடன் தேவைப் படுகிறதோ அவர் குழுவின் சிபார்சில் பெறலாம்." விளக்கினார்கள்.

அருண் போன் பண்ணவே இல்லை. அவன் சொன்னதுபோல் வரவுமில்லை. பகல் முழுவதும் பாடசாலையில் வேலை. மிகுதி நேரமெல்லாம் ஊரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்ற வேலை. ஓய்வில்லாது உழைத்தார்கள். பாடசாலையில் இருந்து களைத்து இருவரும் வந்தார்கள். சாந்தன் பின்னால் வந்தான். "அக்கா நாளைக்குப் பிரதேசச் செயலாளர் கட்டாயம் வரச்சொன்னவர். வரும்போது இளைஞர்களது பெயர்ப்பட்டியலைக் கொண்டு வரச்சொன்னவர்". என்றான். "எத்தனை மணிக்கு. கேட்டிங்களா? வினவினாள். "ஓம் அக்கா. காலை பத்து மணிக்கு வரச் சொன்னவர்".? "சரி நீங்க போங்க. நாளைக்குப் போவம்". கூறிவிட்டுப் படலையைத் திறந்து உள்ளே சென்றார்கள். "மங்கை! நாங்க இரண்டு பேரும் போகவேணும். அத்துடன் சாரதா, ராகினி, சுலோச்சனா, சாந்தனும் சேர்ந்து போகவேணும். அதிபரிடம் சொல்ல வேணும். முதலில் 'வயிற்றுக்குச் சோறிட வேணும்." பாடலாக இழுத்தாள்.

உணவின்பின் அதிபரிடம் சென்றார்கள். நாளையத் திட்டத்தை முன்கூட்டியே சொன்னார்கள். அதிபர் ஒரு புன்னகையை உதிரவிட்டு 'சென்று வாருங்கள்" என்றார். மாலை வகுப்புக்கள் நடந்தன. வகுப்புக்கள் முடிந்ததும் சிலர் தோட்டத்துக்கு தண்ணீர் இறைத்தார்கள். சிலர் விளையாடினார்கள். இரண்டு விளையாட்டுத் திடலிலும் 'வொலிபோல்' நடந்தது. பெண்பிள்ளைகள் வலைப்பந்து விளையாடினார்கள். 'சேர்ந்து வாழ்' நிறுவனத்தின் குழுவினர் அதன்பின்னர்தான் கூடினார்கள். அன்றைய வரவு செலவு பார்க்கப்பட்டது. அடுத்தநாள் பிரதேச செயலாளர் அலுவலகம் செல்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்தார்கள். முடிந்ததும் வீடுகளுக்குச் சென்றார்கள்.

சைக்கிள்கள் மூதூரை நோக்கிப் பறந்தன. கட்டைபறிச்சான் பாலத்தைக் கடந்து சென்றன. வீதியின் இருமருங்கிலும் நாணற்புல் வளர்ந்தோங்கி பூங்கொத்துக்களுடன் காற்றில் ஆடின. அற்புதமான காட்சியாக இருந்தது. பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் சொன்ன நேரத்துக்கு நின்றார்கள். தங்கள் வரவை அறிவித்துக் காத்து நின்றார்கள். அழைப்பு மணி கேட்டதும் உள்ளே சென்றார்கள். பல அதிகாரிகள் இருந்தார்கள். விவசாயப் பணிப்பாளரும் புன்னைகையோடு இருந்தார். " எல்லாருக்கும் வணக்கம் சேர்". மிக மரியாதையாகச் சொல்லி நின்றார்கள். "வணக்கம் வாங்க. இருங்க. இவர்கள் அனைவரும் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்கள். தொடங்குவோமா"? பிரதேசச் செயலாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி சேர்." கயல்விழி சொன்னாள். மிஸ்டர் டேவிட்! இவங்கதான் நான் சொன்ன 'சேர்ந்து வாழ்' நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். இவர் கயல்விழி, இவர் மங்கை, சாரதா, சுலோச்சனா, ராகினி, சாந்தன்" அறிமுகம் செய்தார். இவர்கள் மீள்குடியேற்றக் கிராமத்தில் இருந்து சேவை செய்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவைசெய்தாலும் இவர்களது இலக்குக்குழு இவர்களைப் போலுள்ள இளைஞர் யுவதிகள்தான். ஊர் மக்கள் அனைவரையும் அணிதிரட்டி வலுப்படுத்தி தங்களை உணரச் செய்துள்ளார்கள். சுமார் முன்னூறு இளைஞர் யுவதிகளுக்கு வாழ்வளிக்க நினைத்துள்ளார்கள். விவசாயம், சிறுகைத்தொழிலில் அவர்களை ஈடுபடுத்தி பொருளாதார மறுமலர்ச்சியைக் காணத்துடிக்கிறார்கள். நாங்கள் அரச காணிகளை நாளை கொடுக்கிறோம். ஒருவருக்கு ஒரு ஏக்கர் குடியிருப்பு நிலமும், இரண்டு ஏக்கர் விவசாய நிலமும் கொடுக்கிறோம்." அவர் விபரித்துக் கொண்டு சென்றார்.

அவசரமாக அருண் உள்நுழைந்தான். "சேர் எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன். நிலஅளவையாளர்கள் நாளைக் காலை கட்டைபறிச்சானில் நிற்பார்கள். ஏற்கனவே அளந்து கூனியடித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லைகளைக் காட்டுவார்கள். பட்டியலில் உள்ளவாறு கொடுக்கலாம்". விபரமாகச் சொன்னான். பிரதேசச் செயலாளர் டேவிட்டுக்கு அவனை அறிமுகம் செய்தார். "இவர் மிஸ்டர்.அருண். கிராம அபிவிருத்தி அலுவலர். கெட்டிக்காரர். கிராம முன்னேற்றத்தில் இவரது பங்கு அதிகம்". கூறிவிட்டுத் தொடர்ந்தார். அவனை அமரச்சொன்னார்.

"நமது கடமை இளைஞர்களை வழிநடத்துவதுதான். அவர்களின் ஆற்றலை நல்வழியில் பயன்படுத்த வேண்டும். உங்கள் முன்னே இருக்கிறவர்கள். எல்லோரும் பட்டதாரிகள். வேலைவேண்டும் என்று மறியற்போராட்டங்கள் நடத்துபவர்கள் மத்தியில் இவர்கள் வித்தியாசமானவர்கள். மனித வளத்தை முயற்சியில் மூலதனமிட்டு உழைப்பவர்கள். இவர்களுக்கு இப்போது நிதியுதவி தேவை. சிறிய முதல் கொடுத்தால் பெரிய பயனை அடையலாம். அதற்கு உங்கள் உதவியைக் கோருகிறார்கள். நீங்கள் அவர்களோடு சென்று இடங்களைப் பாருங்க. பிறகு முடிவெடுங்க". சொன்னார்.

டேவிட் கடுமையாக யோசித்தார். "நான் இவங்கட முன்மொழிவைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துத் தான் வந்தனான். நல்லதொரு திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முறையை நல்லாக விபரித்திருந்தாங்க. நான் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறன். "ஒரு ஆளுக்கு பத்தாயிரம் வீதம் முதற்கட்டமாகக் கொடுக்கலாம். பின்னர் ஐயாயிரம் கொடுப்போம். அந்த நிதியை இவர்களின் நிறுவனத்தில் வைப்பிலிடுவோம். எங்களுக்கு மாதாமாதம் முன்னேற்ற அறிக்கை தரவேண்டும். கணக்கறிக்கை வேறாகத் தரவேண்டும். எங்கள் நேரடி மேற்பார்வை இருக்கும். இதை மட்டுந்தான் இப்போது எங்களால் செய்ய முடியும். முதல்கட்ட நிதியை நான் கொழும்புக்குப் போனதும் இவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவேன். அந்த இடங்களைப் பார்த்தால் நல்லது. நாளை பார்க்கலாம் என்றிருக்கிறோம்". டேவிட் அழுத்தம் திருத்தமாக விபரித்தார். அருணை கயல்விழி பார்த்தாள். அவன் புன்னகையை மட்டும் உதிர்த்து விட்டு இருந்தான்.

"மிஸ் கயல்விழி அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுங்க. சரியாக பட்டியல் இருக்குதா? அதில் ஏதும் மாற்றங்கள் செய்ய வேண்டி வருமா?" விழிகளை உயர்த்தியவாறு கேட்டார். அப்போது அவரது நெற்றிசுருங்கி விரிந்தது. அதனைப் புரிந்து கொண்டாள். "சம்பூர் சனங்களும் இப்ப கட்டைபறிச்சானில்தான் முகாமில் இருக்கிறாங்க. அவர்களையும் இதில் சேர்க்கலாமா"? சாரதா கேட்டாள். பிரதேச செயலாளர் டேவிட்டைப் பார்த்தார். "நான் இருநூற்றி ஐம்பது பேருக்கு நிதியொதுக்கீடு செய்திருக்கிறன். போய்ப் பார்த்தபின்தான் சொல்லுவன். மீள்குடியேற்றம் என்றபடியால் பார்க்கலாம்" என்றார்.

"அருண்! நீங்க நாளைக்கு இவங்களோட போங்க. இதெல்லாம் உங்கட ஏற்பாடுதானே. அதனால் திருப்தியாகச் செய்ய வேண்டும்". "சேர் நீங்க சொன்னதை நான் நிறைவேற்றுறன். அவ்வளவுதான். இன்றையில் இருந்து ஒரு கிழமைக்கு கட்டைபறிச்சானில் தங்கி நிற்கப்போறன். நில அளவையாளர்கள் வாறாங்க. மிஸ்டர் டேவிட்டும் வாறார். இன்னும் சில நிறுவனங்களும் வரவிருக்கின்றன. சம்பூர் மக்களையும் கவனிக்க வேண்டும்தானே?" தனது திட்டத்தைச் சொன்னான். கயல்விழியின் கண்கள் மலர்ந்தன. அருண் போன் எடுக்காததற்கான காரணங்களைப் புரிந்து கொண்டாள். "அருண் ஒருக்கா இவங்களோட போயிருந்து அந்தப் பட்டியலைச் சரிபாருங்க. என்ன? அப்ப இவங்கள அனுப்புவம். கயல்விழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்க நல்ல திட்டங்களை முன்வைச்சிங்க. அதைச் செய்து முடிப்பது உங்கள் எல்லோருடைய கடமையுமாகும் வாறவங்கள நல்லாக் கவனிச்சு மக்களுக்குச் சேவை செய்யுங்க". கூறி விடைகொடுத்தார்.

மலர்ந்த முகங்களோடு வெளியில் வந்தார்கள். அருணுக்காகக் காத்திருந்தார்கள். அருண் வந்தான். "கயல்விழி எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு. ஒரு நாலு மணிபோல வாறன். பிறகு கதைப்பம்." சொல்லிவிட்டுச் சென்றான். சைக்கிள்கள் வந்தவழியே திரும்பின. நேரே பாடசாலைக்குச் சென்றார்கள். அதிபர் வகுப்பில் இருந்தார். அவர்களைக் கண்டதும் அலுவலகத்தினுள் சென்றார். "வாங்க இப்படி இருங்க. நல்லாக் களச்சிட்டிங்க. மங்களேஸ்! இங்க வாம்மா". ஒரு பிள்ளையை அழைத்தார். "இப்பதானே ரீ போட்டிங்க. எடுத்துட்டு வாங்க". அவள் போனாள். "போன விசயம் எப்படி"? விசாரித்தார்.

"சேர் உங்கட ஆசி எங்களுக்கு இருக்கு. நாளைக்கு காணிகளைக் கொடுக்க வாறாங்க. அதுமட்டுமல்ல, சேர், ஒரு ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் நிதியையும் ஒரு நிறுவனம் தருவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. நாங்க முதல் இருநூறு பேர்களைத்தான் குடுத்தம். பிரதேச செயலாளர் பட்டியலில் மாற்றங்கள் வருமா? என்று ஒரு சைகையோடு பார்த்தார். நல்ல வேளை. சாரதா கெட்டிக்காரி. சம்பூர் மக்களும் இருக்கிறார்கள். என்று சொன்னா. இருநூற்றைம்பது பேருக்கு நிதியுள்ளதாம். தான் நாளைக்கு வந்து பார்த்தபின் முடிவெடுப்பாராம். எங்களுக்கு வழி காட்டுங்க சேர்". கயல்விழி படபடத்தாள்.

"கயல்விழி நீங்க நம்மட ஊர், மக்கள் என்று சிந்தித்து அவங்கள ஒருவாறு அணிதிரட்டி இப்ப நீங்க என்ன சொன்னாலும் செய்யும் நிலையில் இருக்கிறாங்க. நிதி நமது நிறுவனத்துக்கு வருவது நல்லது. அதை எப்படிக் கையாள்வது என்று உங்களுக்கு நல்லாத் தெரியும். மங்கை, சாரதா, ராகினி. சுலோச்சனா. சாந்தன் எல்லாரும் உங்கட பக்கம் இருக்கிறார்கள். முழு ஊருமே உங்கட பக்கம் இருக்கு. நான் பக்கமலமாக இருப்பன். கவலப்படத் தேவையில்லை. எல்லாம் நல்லபடி நடக்கும்". அதிபரின் ஆசி கயல்விழியின் காதுகளில் வந்து விழுந்து இனித்தது. களைத்து வந்தவர்களுக்குச் சூடான ரீ புதுத் தெம்பைக் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனிசெவ் நிறுவனத்தின் வாகனம் வந்து நின்றது. குலேந்திரன் இறங்கி வந்தார். அதிபர் வரவேற்றார். வகுப்பறைகளைப் பார்வையிட்டார். கற்றல் பற்றி மாணவரிடம் விசாரித்தார். தாங்கள் சந்தோசமாகக் கற்பதாகச் சொன்னார்கள். சில பயிற்சிக் கொப்பிகளைப் பார்வையிட்டார். பாடசாலை நூலகத்தினுள் சென்றார். அதற்குப் பொறுப்பான ஆசிரியர் பதிவுகளை எடுத்துக் காட்டினார். ஒரு நாளைக்கு எத்தனைபேர் நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக பதிவுகளையும் வைத்திருந்தார். அதனைப் பார்த்துச் சந்தோசப்பட்டார். அலுவலகத்தினுள் சென்றதும் அதிபரோடு பேசினார். அதிபர் யூனிசெவ் நிறுவனம் உதவி செய்யும் ஆசிரியர்களை வரச் சொன்னார்.

## 19

குலேந்திரன் அதிபரிடம் ஒரு பெரிய உறையைக் கொடுத்தார். இது இந்த ஆசிரியர்களுக்கான உதவு தொகை. அவர்களிடம் கொடுங்கள். அதிபர் பெரிய உறையைத் திறந்தார். அதற்குள் ஆசிரியர்களின் பெயர்கள் எழுதிய சிறு உறைகள் இருந்தன. பெயரை வாசித்து அவர்களிடம் அதிபர் கையளித்தார். "சாந்தனுக்கு நூலகருக்கான உதவுதொகையும் இருக்கிறது". எடுத்துக் கொடுத்தார். அதற்குள் இருந்த படிவத்தையும் கொடுத்தார். படிவத்தில் கையெழுத்தை இட்டனர். "திறந்து பாருங்கள். இது இந்த மாணவருக்காக நீங்கள் செய்யும் சேவைக்கான யூனிசெவ் உதவுதொகை." அதிபர் புன்னகையுடன் சொன்னார். ஒவ்வொரு உறையுள்ளும் பத்தாயிரம் எட்டிப் பார்த்தது. நன்றி சொன்னார்கள்.

"நாங்க எல்லாருக்கும் ஒரேயளவான உதவிதொகை வழங்குவது உங்களுக்குள் சங்கடமாக இருக்கும். நீங்கள் உயர்கல்வி கற்றவர்கள். உங்களுக்கு நாங்கள் கொடுக்கும் உதவு தொகை போதாது. ஆனால் எங்களுக்கு வேறுவழி தெரியவில்லை. ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து தருகிறோம்." குலேந்திரன் விளக்கம் அளித்தார். "சேர் இதுவே எங்களுக்குப் பெரிய தொகை. இது போதும். இன்னும் உற்சாகமாகச் செய்வோம்". கயல்விழி நன்றியோடு சொன்னாள். மேலதிக வகுப்பில் கற்பிக்கும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விபுலானந்த வித்தியலயத்து ஆசிரியர்களும் வந்தார்கள். அவர்களுக்குரிய உதவு தொகையையும் கொடுத்தார். பெற்றதும் அவர்கள் பாடசாலைக்குப் போய்விட்டார்கள். அதிபர் சிற்றுண்டி வழங்கினார். குலேந்திரன் விடைபெற்றுச் சென்றார். அதிபருக்குச் சந்தோசம்.

"கயல்விழி உண்மையில் உங்களைப் பற்றிப் பெருமைப் படுகிறேனம்மா. நீங்க ஒரு புதுப்பிறவி. உங்களச் சுற்றி இருக்கும் இந்தக்கூட்டம் பெரிய ஆற்றல் கொண்டது. உங்களுக்குப் பின்னால நின்று படிப்பிக்கிறாங்க. ஊரை நிறுவனமாக்கி இயங்க வைக்கிறாங்க" அவர் அடுக்கிக் கொண்டு போனார். "சேர் எங்களப் புகழாதிங்க. புகழ் மனிதனை வீழ்த்திவிடும். எங்கள உற்சாகப்படுத்துங்க. அதுதான் எங்களுக்கு வேண்டும்." கயல்விழி இடையில் புகுந்து சொன்னாள். "அப்படி இல்லம்மா. நான் கண்ணால காண்பதைத்தான் சொல்லுறன். இன்றைக்கு உன் முயற்சி இல்லையென்றால் இந்த ஊர் விழிப்புற்றிருக்காது. சரி. அதவிடு. நாளைக்கு என்ன செய்யலாம்?" வினவினார்.

"நீங்க சொன்ன காணிப்பகுதிகளுக்குப் போகவேணும். எங்களுக்கு அது பற்றிய அறிவு இல்ல. நீங்களும் வந்தால் நல்லதாயிருக்கும்." மெதுவாக எடுத்துச் சொன்னாள். "நில அளவையாளரிடம் அதன் படம் இருக்கும். அவங்க சரியாக அடையாளம் காட்டுவாங்க. கிராம சேவையாளருக்கு நான் சொல்லுறன். அவரும் வருவார். சரி நானும் வாறன்." அவர் ஒத்துக் கொண்டார். கயல்விழிக்கு மனம் நிறைந்திருந்தது. ஒரு ஊரில் சேவை செய்வதன் வெற்றி அங்குள்ள அனைவரையும் அணைத்துக் கொள்வதில்தான் தங்கியுள்ளது. இதனை அனுபவத்தில் கண்டுகொண்டாள். பாடசாலை விட்டதும் வீட்டுக்குப் போனார்கள். இன்று சாரதா, ராகினி, சாந்தன் அத்தனை பேரும் படு சந்தோசத்தில் இருந்தார்கள்.

மங்கை வீட்டுக்குப் போனதும் அப்பாவைத் தேடினாள்." அம்மா, அப்பா எங்கே"? அம்மாவிடம் கேட்டாள். "அப்பா கிணற்றடியில் நிற்கிறார். கைகால் கழுவிற்று வருவார். வாங்க எல்லாரும் சாப்பிடுவம்". அம்மா ஆயத்தம் செய்தாள். அப்பா உள்ளே வந்தார். "அம்மா இப்படி வாங்க". அம்மாவின் கைகளைப் பிடித்து அப்பாவின் பக்கத்தில் நிறுத்தி "இப்படி நில்லுங்க."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக் கொண்டாள். அவர்கள் கைகளைப் பிடித்துத் தனது உதவுதொகை இருந்த உறையைத் திணித்துவிட்டுக் கால்களில் வீழ்ந்து வணங்கினாள். கயல்விழியின் கண்கள் பனித்தன. கயல்விழியும் பக்கத்தில் கிடந்தாள். அம்மா பதறிப்போனார். "எழும்புங்க பிள்ளையள். நீங்க நல்லா இருக்கணும். கடவுள் உங்களக் கைவிடமாட்டார்". வாழ்த்தினார். "சரி வாங்க சாப்பிடுவம்". சுந்தரத்தாரின் கண்கள் பனித்திருந்தன.

"அப்பா மங்கையின் உறையினுள் பத்து இருக்கு. என்ர உறையினுள் பத்து இருக்கு. என்னுடைய உறையிலிருந்து ஐந்தை எடுத்து பதினைந்தாக மங்கையின் அப்பாவுக்கு அனுப்பி விடுங்க. பாவம் அதுகள் கஸ்டப்படுதுகள். அவங்களுக்குக் கடன் தொல்லை. நான் சொன்னேன்தானே மங்கையின் கஸ்டநிலையை". விளக்கமாகச் சொன்னாள். "மங்கைக்குச் சொல்லவேண்டாம்" என்று கேட்டுக் கொண்டாள். "அப்பா இப்ப நாலுமணி போல அருண் வருவார். நாளைக்குக் காணி அளந்து கொடுக்க நிலஅளவையாளர்களை பிரதேசச் செயலாளர் அனுப்புகிறார். அருணை எங்க தங்க வைப்பம்"?. கேட்டாள்.

"அந்தா இருக்குது. நமது சிறிய ஏரிக்கரை வீடு. அது நல்லது. அதை வடிவாகத் திருத்திப் போட்டன். கட்டிலும் கிடக்கு. எல்லா வசதியும் இருக்கு. அவருக்குப் பொருத்தமான இடம். அதோட சாப்பாட்டுப் பிரச்சினையும் இருக்காது. எங்களோட சாப்பிடலாம்தானே. அருண் நல்லபிள்ள". அப்பாவின் பேச்சிலிருந்து அருணை அப்பாவுக்குப் பிடித்திருப்பதை உணர்ந்து கொண்டாள். அவளுக்கு மனதுக்குள் மத்தாப்பு விரிந்தது. அப்பாவை மனதுக்குள் போற்றிக் கொண்டாள். "மங்கை வா. அந்த வீட்டைத் துப்பரவு செய்வோம்." கயலின் உரையாடலை அப்பா கேட்டார். "மகள் அதெல்லாம் நான் துப்பரவாக்கி வைச்சிருக்கன். மூன்றுபேர் தங்கலாம். நீங்க உங்கட வேலையளப் பாருங்க". அப்பா சத்தமாகச் சொன்னார். "மங்கை சாந்தனை வரச் சொன்னனான். நாளைக்கு நில அளவையாளருக்குப் பகல் சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்ய வேணும். அப்பாட்டச் சொன்னா அவர் ஏதும் ஒழுங்கு செய்வார். சொல்லுவமா?" கயல்விழி கூறினாள். "கயல் ராகினிட்டச் சொல்லுவம். மற்றது மிஸ்டர் டேவிட்டும் வாறார். அவர நல்லாக் கவனிக்க வேணும். நல்ல மனிதர்". மங்கை தனது திட்டத்தைச் சொன்னாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா நாங்க பாடசாலைக்குப் போறம். அருண் வந்தால் அறையைத் திறந்துவிடுங்க. எங்களுக்குச் சொல்லி அனுப்புங்க". சொல்லிவிட்டுப் போனார்கள். வகுப்புக்கள் கலகலத்தன. ஆசிரியர்கள் அனைவரும் சந்தோசமாகப் பாடங்களை நடத்தினார்கள். மாலை நேர வகுப்புக்களுக்கும் பிள்ளைகள் தவறாது வந்தார்கள். இரண்டு வகுப்புக்களை நடத்தியதும் திரும்பினார்கள். நேரே கோயிலடிக்குச் சென்றார்கள். சாந்தன் விளையாட்டுத் திடலில் ஒழுங்குகளைக் கவனித்து விட்டுத் திரும்பினான். ராகினியும், சாரதாவும் சம்பூர் மக்கள் இருந்த முகாமுக்குப் போனார்கள். தகவல்களைச் சேகரித்தார்கள்.

சனங்கள் கூடியிருந்தார்கள். சுலோச்சனாவும் அவளது குழுவினரும் சுயஉதவிக் குழுக்களோடு கலந்தாலோசித்துக் கொண்டிருந்தனர். வீட்டுத்தோட்டங்கள் செழித்து வளர்ந்துள்ளதைத் தெரியப் படுத்தினார்கள். காய்கறி வகைகளை வேற்றாக்களுக்குக் கொடுப்பதில்லை என்று முடிவெடுத்தார்கள். வியாபாரம் செய்யச் சைக்கிள் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. பல இளைஞர்கள் தோணிகளைப் பயன் படுத்திப் போதுமான வருவாயைப் பெறுவதையும் சொன்னார்கள். பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போவதைக் கல்விக்குழு விபரித்தது. ஊரில் என்ன நடந்தாலும் மாலை கோயிலடியில் விவாதிக்கும் பழக்கம் வந்துவிட்டது. காணி கொடுபடும் விசயத்தைப் பரப்பிவிட்டார்கள். பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது.

சரியாக ஐந்து மணி அருண் வந்தான். நேராகக் கோயிலடிக்கே வந்தான். காணிவிசயத்தைக் கதைத்தார்கள். அருணைக் கண்டதும் எழுந்து மரியாதை செலுத்தினார்கள். ஒரு கதிரையை நகர்த்தி அவனை அமரும்படி கூறினார்கள். "நாளை காலை நாங்கள் மரவட்டகுளத்துக்குப் போகிறோம். துண்டு குலுக்கித் தெரிவு செய்து காணிகளைக் கொடுப்போம். காணிகளைத் துப்பரவாக்க வேண்டியது உங்களது கடமை. துப்பரவு செய்தவர்களது காணியை அளந்து அதற்கான கூலியைத் தருவோம். துப்பரவாக்காத காணிகளை வேறு ஆக்களுக்குக் கொடுப்பார்கள். இது இளைஞர்களுக்கான திட்டம். ஆனால் குடும்பத்தவர்கள் சேர்ந்து வெளியாக்கலாம். பயிரிடலாம்." அருண் விபரமாகச் சொன்னான். சாந்தன் தான் காணிகளைப் பார்த்து வந்ததாகச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நில அளவையாளர்கள் காலையில் வருவார்கள். அவர்கள் வருமுன் நாம் அங்கே நிக்கவேணும். நீங்க செய்யிற வேலையிலதான் உங்களுக்குரிய நிதியைத் தருவார்கள். அதனைப் பார்வையிட நாளை மிஸ்டர். டேவிட் வாறார். உங்கட கெட்டித்தனத்திலதான் எல்லாம் தங்கியிருக்கு. கயல்விழி நல்ல செயற்திட்டங்களை முன்மொழிவுகளாக அனுப்பிக் கொண்டே இருக்கிறா. காணி துப்பரவாக்க வேண்டிய ஆயுதங்களும் நாளைக்கு வரும். சரி நேரமாகிறது. எங்களுக்கும் நிறைய வேலைகள் இருக்கு". அவனுடைய பங்கினை நிறைவு செய்தான். சனங்கள் கலையத் தொடங்கினார்கள்.

"சாந்தன் பிறகு வாங்களன். கதைப்பம்". அருண் சாந்தனைப் பார்த்துக் கூறினான். "அருண் வாங்க வீட்டுக்குப் போவம். எல்லா ஏற்பாடும் செய்திருக்கு. வாங்க". அழைத்தபடி கயல்விழி நடந்தாள். "நீங்க நடங்க. நான் மோட்டார் சைக்கிளை எடுத்திட்டு வாறன்". சொல்லிக் கொண்டு மோட்டார் சைக்கிளை இயக்கினான். பின்னால் மெதுவாகப் போனான். கயல்விழி நேரே அருணுக்காக ஒழுங்கு செய்திருந்த வீட்டுக்குப் போனாள். கதவினைத் திறந்து வசதிகளைப் பார்த்தாள். எல்லா ஏற்பாடுகளையும் அப்பா செய்திருந்தார். கழிவறை துப்பரவாக இருந்தது. துவாய், பற்பசை, சோப், பௌடர் யாவும் தயாராய் இருந்தது. அருண் வந்ததும் அவனிடம் யாவையும் காட்டினாள். "குளியுங்க. நாங்களும் குளிச்சிட்டு வாறம். கதைப்பம்". சொல்லிக் கொண்டு சென்றாள்.

அந்தச் சூழலைக் கண்களால் துளாவினான். ஆற்றோரத்தில் அமைந்த வீடு. கண்டல்களில் மறைந்திருக்கும் பசுமை. கூடவே ஒளிந்திருக்கும் குளிர்மை. அமைதி. அற்புதமாக இருந்தது. பல்கலைக் கழகத்தில் கயல்விழியோடு எதனைக் கதைப்பது என்று மௌனமாய் இருந்த காலங்கள். எல்லாம் நிழலாய் வந்து போயின. "இதுவரை அவள்தான் தனது இதயக்கோயிலில் குடியிருக்கும் தேவதை என்பதை இதுவரை வெளியில் சொல்லவில்லை. என்மேல் அவள் வைத்திருக்கும் பிரியம் எப்படியானது? எனது எண்ணங்களைப் பற்றி ஒரு வார்த்தையாவது கேட்கவில்லையே. எப்படியும் இம்முறை அறியத்தான் வேணும்". நினைத்துக் கொண்டு குளித்தான்.

அருண் குளித்து உடைகளை மாற்றிக் கொண்டு வெளியில் கதிரைகளைப் போட்டு இருந்தான். காற்று வீசிச் சுகம் காட்டியது. ஆற்றின் குதூகலிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உள்ளத்தைத் தொட்டது. "சா...என்ன அருமையான இடம். வானில் பவனி வரும் நிலவின் நிழல் தண்ணீரில் பிரவாகித்தது. மீன்களின் துள்ளலால் எழும் சிற்றலைகளால் நிலவின் பிம்பம் அசைந்து கொண்டிருந்தது. தன்னிலை மறந்து இயற்கையோடு ஒன்றித்திருந்தான். அவன் இளைஞனல்லவா?. மனதில் கிளர்ச்சிகள் துளிர்விடத் தொடங்கின. கயல்விழி வந்ததையும் அவன் கவனிக்கவில்லை.

"என்ன சிந்தனை? தனிமையில் விட்டுப் போட்டு போய்விட்டாங்க என்ற யோசனையா"? குரல் கேட்டதும்தான் சுயநினைவுக்கு வந்தான். "அப்படி ஒன்றுமில்ல. இந்த அருமையான இடத்தைப் பார்த்து ரசித்தேன். வாங்க." வரவேற்றான். கதிரைகளில் இருந்தார்கள். "சாந்தனை வரச் சொன்னனான். அவர் வந்தால் நாளைய விசயங்களைப் பற்றிப் பேசலாம்". என்றான். "மங்கை எப்படி கட்டைபறிச்சான்? பிடிச்சிக் கொண்டதா"? மங்கையிடம் கேட்டான். "கயல்விழி எங்க இருக்கிறாவோ அங்க எனக்கும் பிடிக்கும். நான் இன்றைக்குச் சற்று நிம்மதியாக இருக்கிறதெண்டால் அதுக்குக் காரணம் இந்தக் கயல்விழிதான்." குலுங்கலோடு சொன்னாள். "மங்கை சும்மா ஐஸ் வைக்காதே. வேறு எதையாவது சொல்லு. கேட்கச் சந்தோசமாக இருக்கும்." கயல்விழி நாணத்தோடு சொன்னாள்.

"மங்கை! கவனம். கயல்விழி கனல்விழிகளாக மாறிவிடும். பிறகு புலிவேட்டையும் நடக்கலாம்.". கூறிக்கொண்டு அருண் சிரித்தான். கயலும் சிரித்தாள். இவன் இன்னும் அதை மறக்கல்லையே. தனக்குள் அந்த நினைவினை மீட்டுப் பார்த்தாள். "என்ன அருண். இன்னும் அதை நீங்க மறக்கல்லயா"? நாணத்தோடு கேட்டாள். 'எப்படி மறக்கமுடியும்.? அது அற்புதமான காட்சியல்லவா? எனக்கு இன்னும் அந்தக் கண்களை நினைத்தால் பயமாக இருக்கும்". சொல்லிவிட்டுச் சிரித்தான். அவளும் சிரித்தாள். மங்கைக்குப் புரியாத புதிராக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

சாந்தன் வந்தான். "வாங்க சாந்தன்". கூறிக் கொண்டு மங்கை கதிரையை எடுத்துக் கொடுத்தாள். சாந்தன் இருந்ததும் "நாளைக்கு எப்படி நமது நிகழ்ச்சிகள் இருக்கும்? சொல்லுங்க". அருண் தொடங்கினான். 'அக்காதான் சொல்லவேணும். அவ எப்பவும் திட்டம் போட்டுத்தான் செயற்படுவா. போட்ட திட்டங்கள் இதுவரை தோல்வியைச் சந்திக்க வில்லை". சாந்தன் தப்பிக் கொண்டான். சாந்தனுக்கு இப்போது இருபத்து மூன்று வயது. கயல்விழியின் வயதை ஒத்தவன். ஆனாலும் அவள்மேல் கொண்ட அன்பினால் அக்கா என்றே அழைப்பான். வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் படித்தவர்கள். "மங்கைதான் எங்கட நிறைவேற்று முகாமையாளர். அவர் சொல்வதுதான் சரி". கயல்விழி மங்கைமேல் தட்டிவிட்டாள். "அதெப்படி தலையிருக்க வாலாடுவது. கயல்விழிதான் சொல்ல வேணும்." அவள் தப்பிக்கொண்டாள்.

"என்ன இது? ஆளையாள் தட்டிக் கழிக்கிறீங்க. சரி நான் சொல்லுறன்." அவனே விளக்கினான். தான் போட்ட திட்டத்தை அப்படியே அவன் சொல்கிறானே. அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அடுத்த நாள் நிகழ்ச்சிகளை ஒன்று விடாது சொல்லி முடித்தான். "இதுதான் உங்களின் தலைவியின் திட்டம். என்ன அப்படித்தானே மங்கை" என்றான். "அது சரி எனக்குத் தெரிந்த அத்தனையும் உங்களுக்குத் தெரியுதே. ஆச்சரியமாய் இருக்கிறது". மங்கை கூறினாள். "இதைத்தானே அக்கா என்னிடமும் கூறினார். எப்படி உங்களுக்குத் தெரியும்"?சாந்தன் எடுத்து வைத்தான்.

"அதுதான். அப்படி வாங்க. எல்லாருக்கும் தெளிவாகச் சொல்லி, எல்லோரது ஒத்துழைப்புக்களையும் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதுதான் தலைமைத்துவம். ஒரு திட்டத்தை முன்வைக்கும் போது 'நடைமுறைப்படுத்துவது எப்படி' என்பதை விளக்க வேண்டும். அது ஒரு படிமுறையாக இருக்கும். கயல்விழி எழுதும் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திலும் நடைமுறை மிகத் தெளிவாக இருக்கும். எந்த நிறுவனமும் அதைப்படித்துத்தான் தீர்மானத்தை எடுக்கும். அதில இன்னொரு விசயமும் இருக்கு". சொல்லும்போது சாந்தன் "என்னது. சொல்லுங்க". குறுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான்.

"ஒரு திட்டத்தினால் ஏற்படும் குறுங்காலப் பயனும், நெடுங்காலப்பயனும். அத்துடன் அந்தத் திட்டத்தை தக்க வைப்பதற்கான வழிமுறைகளும் சரியாக இருக்கவேணும். கயல்விழியின் திட்டங்களைப் படித்தால் ஒரு இருபத்தைந்து வருடங்களுக்குப் பின் அந்தத்திட்டத்தினால் பெற்ற பயன் நம் கண்முன் வந்து நிற்கும். இதை நான் சொல்லவில்லை. பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏற்றுக் கொண்ட உண்மை. அதனால்தான் உங்களுக்கு உதவ எல்லாரும் ஓடி வாறாங்க". பெருமையாக விளக்கினான். கயல்விழி குனிந்த தலை நிமிராது இருந்தாள்.

"சரி.... மிகுதியை நாளைக்குப் பார்ப்போம். இப்போது சாப்பிடப் போவம் எழும்புங்க. வாங்க அம்மா தயாராய் காத்திருப்பா." கயல்விழி கூறிக் கொண்டு எழுந்தாள். "அக்கா நான் காலையில வாறன்." சாந்தன் புறப்பட்டான். அவனையும சாப்பிட அழைத்தார்கள். அவன் சாப்பிட்டாகிவிட்டது என்றான். அவனை வழியனுப்பி விட்டு வந்தாள். " நீங்க வாங்க" அழைத்து நடந்தாள். அருண் பின்னால் சென்றான்.

"இதற்குள் கைகளைக் கழுவுங்கள்". தண்ணீர்க் கிண்ணத்தை நீட்டினாள். "அம்மா! அப்பா எங்கே? சாப்பிட்டாரா"? கேட்டாள். "முதல்ல நீங்க சாப்பிடுங்க. பிறகு நாங்க சாப்பிடுறம்". அம்மா சாப்பாட்டு மேசையருகில் நின்றபடி "தம்பி வாங்க சாப்பிடுங்க." அழைத்தார். மேசையில் சாப்பாடு இருந்தது. மூன்று பேருக்கும் தானே பரிமாறினாள். மங்கை உதவினாள். கதைத்தவாறே உணவினை உண்டார்கள்.

சுந்தரத்தார் வந்தார். "அப்பா இவர்தான் அருண்." என்றாள். "தம்பியை எனக்கு நல்லாத் தெரியும். சாப்பிடுங்க." கூறிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றார். தயிர் இருக்கு. உங்களுக்குத் தயிர் விருப்பம் என்று தெரியும். ஒரு ரம்ளரில் அளவாகச் சீனிபோட்டுத் தயாரித்திருந்தாள். "வாங்க வெளி முற்றத்தில் இருந்து தயிர் சாப்பிடுவம். "மங்கை" அழைத்தாள். "நான் இங்க நிக்கிறன். வாங்க" முற்றத்தில் இருந்து மங்கை சத்தமிட்டாள். அவள் கதிரைகளோடு முற்றத்தில் நின்றாள். கயல்விழி "வாங்க" என்று குரல் கொடுத்துக் கொண்டு வெளியில் நடந்தாள். அவன் வந்ததும் தயிரைக் கொடுத்தாள். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தோடு பெற்றுக் கொண்டான். மூவரும் இருந்து ருசித்துச் சாப்பிட்டார்கள். "நல்ல ருசி. இப்படியான சூழலில் இருந்து கதைச்சிக்கொண்டு சாப்பிடுவது உண்மையில் சந்தோசம்தான்". சொல்லிக் கொண்டே சாப்பிட்டான்.

"தங்கம் சாப்பிடுவமா? சுந்தரத்தார் கூறிக்கொண்டே வந்தார். "நாங்க அங்க போவமா? கொஞ்ச நேரம் கதைச்சிட்டு ஒய்வெடுப்பம். வாங்க போவம்". கயல்விழி அழைத்தாள். "மங்கை வா". சொல்லிக் கொண்டு முன்னால் நடந்தாள். அந்த வீட்டினுள் நுழைந்து கட்டிலை ஒழுங்கு செய்தாள். படுக்கையை உதறி விரித்துத் தலையணையை சீராக்கி வைத்தாள். எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்பதைப் பார்த்தாள். வெளியே வந்து இருந்தாள். நிலவு முகங்களைத் தெளிவாகக் காட்டியது. "நிலவு அழகா அல்லது உன் முகம் அழகா" மனதுக்குள் கேட்டுக் கொண்டான். கயல்விழியின் முகத்தைப் பார்த்தான். அவள் நிலத்தைப் பார்த்தாள். மங்கை இரு உள்ளங்களின் தவிப்பைக் கண்டு கொண்டாள்.

"அப்பாவும் உங்களோடுதான் இங்கதான் இருப்பார். அவர் வந்ததும் நாங்க போவம். அதுவரை கதைப்பம்." கயல்விழி சொன்னாள். "எனக்குப் பயமில்லை. ஏன் எனக்குக் காவல். நான் ஓடமாட்டன்."? சொல்லிச் சிரித்தான். "அதுக்கில்லை. ஒரு துணை வேணும்தானே? அதுக்குத்தான்". என்றாள். "கயல் இருங்க. இந்தா வாறன்" சொல்லிவிட்டு மங்கை வெளியில் சென்றாள். கயல் பெரிய சங்கடத்தில் மாட்டிய உணர்வினைப் பெற்றுவிட்டாள். அருணுக்கு என்ன கதைப்பதென்றே தெரியவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்தார்கள்.

கயல்விழி துணிந்தாள். "அருண் பல்கலைக் கழகம் முடிந்ததும் என்ன செய்தீங்க"? கேட்டாள். "வேலைதேடியலைந்து கடைசியில் மனதுக்குப் பிடிச்சமாதிரி இல்லை என்டாலும் ஓரளவு திருப்தியோடு இந்த வேலை கிடைச்சிது. அம்மாவோடு இருக்கிறன். அம்மாவுக்கு நானும், எனக்கு அம்மாவுமாக இருக்கிறம்." சொன்னான். "நீங்க அம்மாவுக்குச் செல்லப்பிள்ளயென்று தெரியும். அம்மா எப்படி இருக்கிறாங்க"? கேட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல சுகமாயிருக்கிறா. அம்மா தனியத்தான் இருக்கிறா. அதுதான் எங்கயிருந்தாலும் இரவில் வெளியில தங்கிறதில்ல. உங்கட வேலயென்ட படியால்தான் வந்து நிக்கிறன். கட்டபறிச்சானில் உங்கட வீட்டிலதான் தங்குவன் என்று சொன்ன பிறகுதான் சம்மதித்தவ." ஒரு அர்த்ததோடு சொன்னான். "அம்மாக்கு என்னை எப்படித் தெரியும்?" கேட்டாள். "நான் உங்களைப் பற்றி அம்மாட்ட நிறையச் சொல்லியிருக்கிறன்" பெருமையாகக் கூறினான்.

"அம்மாவை ஒரு நாளைக்கு இங்க கூட்டிவாங்களன். ஒரு மாற்றமாக இருக்கும். இந்த இடம் அவருக்குப் புதுமையாக இருக்கும்". அவள் சொன்னாள். "அது நல்லதுதான். யோசிப்பம். கயல்விழி ஒரு பொருள் நமது பக்கத்தில் நெருங்கி இருந்தாலும் அது நமக்குக் கைப்பட வேணும். அப்பொழுதுதான் மனதில் இன்பமும் வாழ்க்கையின் அர்த்தமும் புரியும். வாழ்ந்ததற்கான நிறைவும் இருக்கும். இல்லையா?" வினாவாக விளக்கினான். "அது உண்மைதான். ஆனால் எது உண்மை. எது பொய் என்று சரியாக இனங்கண்டபின்தான் தீர்மானிக்க முடியும். இல்லையா?" வினாவாக முடித்தாள்.

"நாம் விரும்பிய பொருள் கைப்படுமா? படாதா என்பதை அறிவது சுலபமாக எனக்குப் படவில்லை." வானத்தைப் பார்த்தபடி கூறினான். அவளுக்கு இவன் என்ன சொல்கிறான். இவன் யாராலும் ஏமாற்றப்பட்டானா? என்பது புரியவில்லை. அவள் தவித்தாள். என்றாலும் பதிலுக்கு அவளும் ஏதும் சொல்ல வேண்டும். "நீங்க சொல்வது சரிதான். பாரதிகூட 'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்று பாடியிருக்கிறார். அப்போதுதான் நீங்க சொன்னதுபோல் வாழ்க்கையின் அர்த்தம் புரியும். வாழ்ந்ததுக்கான திருப்தியிருக்கும்." மனதில் பட்டதைச் சொன்னாள். "நான் என்ன நினைக்கிறேனோ அதை நீங்க சரியாகச் சொல்றீங்க. உங்களுக்கு 'மைண்ட் றீடிங்' மனதை அறிந்து சொல்லும் கலை தெரியுமா?" வேடிக்கையாகக் கேட்டான். அவள் கலகலத்தாள்.

"நீ சிரிக்கும் போதும் அழகுதான்" சொல்ல வாயெடுத்தான். சுந்தரத்தார் வரும் நிழல் அசைந்தது. "அப்பா வாறார். நாளைக்குச் சந்திப்பம். நல்லாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்குங்க. நாளைக்கு உங்களுக்குத்தான் அதிக வேலையிருக்கு. நான் வரட்டா'', சொன்னாள். ''வாங்க'' இரண்டு கருத்துப்படச் சொன்னான். அவள் போனாள். ''என்ன வரட்டா என்று போறீங்க.? சொல்லிச் சிரித்தான். அவளும் கூடவே சிரித்து அவன் உள்ளத்தைத் திருடிக் கொண்டு தனது உள்ளத்தை அவனிடம் விட்டுவிட்டுச் சென்றாள்.

''குட் மோர்னிங். இந்தாங்க தேநீர்''. கதவில் தட்டி ஓரமாகி நின்றாள். அவன் கதவைத் திறந்து வந்தான். அவனது கையில் தேநீரைக் கொடுத்துக் ''குடியுங்க'' என்றாள். குளித்து ஆயத்தமாகுங்க.. சாப்பாட்டுக்கு நான் வந்து கூப்பிடுறன்''. கொடுத்து விட்டுச் சென்றாள். அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். காலையிலேயே தேவதையாகக் காட்சி தந்தாள். எனக்கு 'நெருங்கின பொருள்' நீதான்.

''ஒரு சமுகசேவகி எனது மனைவியாகக் கிடைத்தால் எனது பிறவியின் பயனை அடைந்தவனாவேன்.'' மனதில் எண்ணிக்கொண்டான். கடமைகள் கண்முன்னால் நின்று அவனை விரட்டின. ஆயத்தமானான். கயல்விழி சாப்பாட்டு மேசையில் நின்றாள். மங்கை ''மயங்குகிறாள் ஒரு மாது'' இராகமிழுத்தாள். ''மங்கை என்ன குதூகலிப்பு. என்ன விஷேசம்.'' கயல்விழி ஒழுங்கு படுத்தியவாறே கேட்டாள். ''இல்ல பாட்டு வந்தது. பாடிப்பார்த்தேன்''. சிரித்தபடியே சொன்னாள். ''இன்றைக்கு நமது விசயமெல்லாம் நல்லபடி நிறைவேறிய பின் பாடு. உனக்கு முன்னால் இருந்து ரசித்துக் கேக்கிறன். அதுவரை கடவுள மன்றாடு''. கயல்விழி கடுகடுத்தாள்.

''எல்லாம் நல்லபடி நடக்கும். என்ர தோழியின் கனவுகள் பொய்க்காது. அதுக்காகத்தான் அவளுக்காகத் தினமும் மன்றாடி வாறன்''. மங்கையின் பதிலுக்குச் ''சா...கேக்கிறதுக்கு புளிப்பாக இருக்கு. வாவா விசயத்தக் கவனிப்பம்''. கயல்விழி கூறிக்கொண்டு போனாள். ''இவள் என்ன பிறவியோ தெரியாது. இவளை எப்படிப் புரியப் போறனோ தெரியாது''. அருணை அழைத்து வந்தாள் சாப்பாடு முடிந்ததும் பம்பரமானார்கள். பாடசாலை சென்று அதிபரோடு கதைத்தார்கள். அப்படியே மரவட்டகுளப் பகுதிக்குச் சென்றார்கள். சொன்னபடி இளைஞர் யுவதிகள் மரவட்ட குளப்பகுதியில் கூடியிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

வடக்குத் தெற்காக கிறேவல் வீதி நீண்டு கிடந்தது. வீதிக்குக் கிழக்காக நிலம் விரிந்து கிடந்தது. படிப்படியாக கீழ் நோக்கி இயற்கையாகச் சாய்ந்திருந்தது. நிலஅளவையாளர்கள் சுறுசுறுப்பானார்கள். அவர்கள் அளந்து கூனியடித்துச் சென்றார்கள். பிரதேசச் செயலாளரின் அலுவலர்கள் பெயர்ப்பட்டியலை எடுத்தார்கள். பயனாளிகளை வாசித்தார்கள். காணித்துண்டுகளுக்கு இலக்கமிட்டார்கள். இலக்கங்கள் எழுதிய துண்டுகளைக் குலுக்கல் முறையில் எடுக்கும்படி பணித்தார்கள். பயனாளிகள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் நின்று நெறிப்படுத்தினார்கள். அதிபர் ஆலோசனைகளை வழங்கினார். கிராமசேவையாளர் அறிவுறுத்தினார். மிஸ்டர். டேவிட் வந்து எல்லாவற்றையும் அவதானித்தார். அவர் பயனாளிகளைக் கவனித்தார். அவர்கள் அனைவரும் இளைஞர்களும் யுவதிளும்தான். அவருக்கு மிகத்திருப்தியாக இருந்தது.

இளைஞர்களின் கட்டுப்பாடும் ஒழுங்கும் டேவிட்டுக்குப் பிடித்துக் கொண்டது. குலுக்கல் முறை முடிந்ததும் பயனாளிகளுக்குக் காணிகளை அடையாளம் காட்டினார்கள். பயனாளிகள் தங்கள் காணிகளுக்குள் நின்றார்கள். லொறிகளில் காணிதுப்பரவு செய்வதற்கான உபகரணங்கள் வந்தன. அதனைச் சாந்தன் பெற்றான். அருண் உபகரணங்களைக் கொடுத்துதவிய நிறுவனத் தலைவரோடு உரையாடினான். அவர் சம்மதம் தெரிவித்தார். லொறி காணிகளை நோக்கிச் சென்றது. சாந்தன் அவர்களுக்கு ஒதுக்கியிருந்த உபகரணங்களை அவர்கள் நிற்கும் இடத்துக்குக் கொண்டு சென்று கொடுத்து வந்தான். விவசாயப் பணிப்பாளரும், பிரதேசச் செயலாளரும் வந்து பார்த்தார்கள். அவர்களுக்குச் சந்தோசம்.

“கயல்விழி! இந்தப் பிரதேசத்தில் இன்னும் ஒரு நூறு இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வோம். காணி இருக்கிறது. இளைஞர்களுக்கு வழியைக் காட்டினால் அவர்கள் சமுதாயத்தைத் தாங்கும் தூண்களாக மாறிவிடுவார்கள். அவர்களை யாரும் ஏமாற்ற முடியாது. அரசாங்க உத்தியோகம் செய்யவேணும் என்ற எண்ணங்களும் மறைந்து விடும். அருண் எல்லாவற்றையும் செய்வார்.” பிரதேசச் செயலாளர் சொல்லிக் கொண்டிருந்தார். “காணியை அளந்து விடுவார்கள். இந்தப் பிரதேசத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள படித்த இளைஞர் யுவதிகளைத் தெரிவு செய்வோம். அடுத்த கிழமை அவர்களை அழைத்துக் கொடுக்கலாம்''. சொல்லிக் கெண்டே விவசாயப் பணிப்பாளரைப் பார்த்தார். அவரும் அதனை ஆமோதித்தார். "நல்லயோசனை'' என்றார்.

காணியைப் பெற்றவர்கள் துப்பரவாக்கத் தொடங்கிவிட்டார்கள். கயல்விழி ஒரு இடத்தில் நின்று கொண்டே தனது தொண்டர்கள் சேவை செய்வதை அவதானித்துக் கொண்டிருந்தாள். மிஸ்டர் டேவிட் அருணை அழைத்தார். இருவரும் கயல்விழியிடம் சென்றார்கள். அவர்கள் தன்னிடம் வருவதற்குள் அவள் அவர்களை நோக்கி முன்னே வந்தாள். "மிஸ் கயல்விழி உங்கட வங்கிக்கணக்கு இலக்கம் தேவை தரமுடியுமா''? கேட்டார். மங்கை "இதோ'' என்று நீட்டினாள். டேவிட் அசந்து போனார். எள் என்று சொன்னால் எண்ணெய்யாக இயங்குகிறார்களே. எப்படி முடிகிறது? அதிசயித்தார்.

"எனக்கு நல்ல திருப்தி. இந்த நிதி வெளிநாட்டு அரசாங்கத்தின் உதவி. இதனை உதவியாக அளிக்கிறது. நீங்க திருப்பிக் கட்டத்தேவையில்லை. ஒரு நபருக்குப் பதினைந்தாயிரம் வீதம் மானியமாக இருநூற்றைம்பது நபர்களுக்கு உதவு தொகையாக நாளைக்கு உங்கட வங்கிக் கணக்கில வைப்பில் இடுவோம். மாதாமதம் நிதி அறிக்கையும், விவரண அறிக்கையும் அனுப்பி வைய்யுங்கள். அடிக்கடி எங்கள் நிறுவனம் வந்து வழிகாட்டும். இடையிடையே நானும் வருவேன். எனது வாழ்த்துக்கள்''. சொல்லி தனது சாரதிக்குக் கையைக் காட்டினார்.

வாகனம் வந்தது. அதிலிருந்து சாரதி ஒரு கோவையைக் கொண்டு வந்தார். அதனைப் பெற்றுச் சில பத்திரங்களை எடுத்தார். "இது உடன்படிக்கை. நீங்கள் கையெழுத்தைப் போட்டுத் தாங்க''. என்றார். மங்கை பக்கத்தில் நின்றாள். கயல்விழி ஒப்பமிட்டாள். மங்கை நிறுவனத்தின் றப்பர் முத்திரையை இட்டுத் திகதியையும் எழுதிக் கொடுத்தாள். டேவிட் ஒரு பிரதியை கயல்விழியிடம் கொடுத்தார். கைகுலுக்கினார். விடைபெற்றுச் சென்றார். கயல்விழி தனது ஒவ்வொரு செயலின் போதும் அருணைப் பார்த்து மெல்லப் புன்னகைப்பாள். ஒவ்வொரு திட்டமும் அவனால் செயலுருப் பெறுவதை அவள் மட்டும்தான் அறிவாள். 'எல்லாம் உங்களால்தான்' என மனதுள் நினைந்து கொள்வாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தன் நில அளவையில் ஈடுபட்டவர்களுக்கு உணவு வழங்கினான். சாரதா வந்திருந்த நிறுவனத்தினருக்கு உணவுவகைகளை எடுத்து வந்தாள். எல்லோரும் உணவினை மகிழ்ந்து உண்டார்கள். குளம் தூர்ந்து கிடந்தது. அதனைத் திருத்தினால் இரண்டாயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சல் செய்யலாம். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் முறையிட்டிருந்தாள். அவர்கள் உரிய செலவு மதிப்பீட்டைச் செய்திருந்தனர். ஆனால் அதற்குரிய நிதியைப் பெறமுடியாதுள்ளதை அறிவித்தனர். அதனை வைத்துக் கொண்டு பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தனது முன்மொழிவுகளை அனுப்பி யிருந்தாள்.

“இந்தக் குளத்தைத் திருத்திவிட்டால் நமது திட்டம் பூரணமாகும்”. மங்கையிடம் சொன்னாள். இரண்டு நிறுவனங்கள் இணைந்து குளத்தைத் திருத்தித் தருவதற்கு முன்வந்திருந்தன. “விரைவில் குளத்தைத் திருத்த உதவிகள் வரும்” மங்கை உறுதியாகச் சொன்னாள். “தொடர்ந்து வேலைகள் நடைபெறும். இரண்டு கிழமைகளுக்குள் வெளியாக்கி விடவேண்டும். இது நமது வேலை என்று எடுத்துக் கொண்டார்கள். “இன்றைய நாள் நமது மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் நாள்.” சொல்லிக் கொண்டார்கள். வேலைகளை முடித்து அனைவரும் சென்றார்கள்.

வீட்டை அடையும்போது இருட்டி விட்டிருந்தது. நல்ல களைப்பு. அருண் நன்றாகக் குளித்துவிட்டு முற்றத்தில் கதிரையில் சாய்ந்திருந்தான். கயல்விழியும் மங்கையும் வந்தார்கள். “இன்றைக்கு வேலைகளைப் பற்றிய கதை வேண்டாம். சந்தோசமாக ஏதாவது கதைப்பம். என்ன கதைக்கலாம்.” கயல்விழி தொடங்கினாள். அருண் அதிசயமாகப் பார்த்தான். “மங்கை இப்ப கட்டாயம் மழை பெய்யும்.” அருண் சிரிப்போடு சொன்னான். “வானத்தில் இருளைக் காணல்ல. வானம் தெளிவாய் இருக்கு. நிலவு ஆற்றுக்குள்ளும் வெளிச்சத்தைப் பாச்சுது. மழை இப்போதைக்கு இல்லை. மங்கையும் பொடிவைத்துப் பேசினாள். “என்ன இரண்டு பேரும் பேசுவது எனக்கும் விளங்கும்”. கயல்விழி சிணுங்கினாள்.

“கயல்விழி நாளைக்கு நான் மூதூர் போகவேணும். பிறகு திருகோணமலைக்குப் போகவேணும்.” சொல்லிக் கொண்டிருந்தான். அவள் பதறியடித்தாள். “என்ன அதற்குள்ளாகவா? வந்தவேலைகள் முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இரண்டு நாட்களாவது நில்லுங்க." படபடப்போடு உளறினாள். "என்ன வேலையிருக்கு? முக்கியமான வேலைகள் செய்தாச்சு. இனி உங்கட நிறுவன வேலைகள்தான். அதனை நீங்க செய்யலாம்." அவன் தொடர்ந்தான். "நாளைக்கு நமது விவசாயத் திட்டத்தில் உள்ளவர்களை ஒன்றிணைத்து அடுத்த திட்டம் பற்றிக் கதைக்க வேணும். அவர்களுக்கு எப்படி நிதியை வழங்குவது பற்றி விளக்க வேணும். குளம் திருத்துவதற்கான முதற்கட்டச் சிரமதானம் ஒழுங்கு செய்ய வேணும்". அடுக்கிக் கொண்டு போனாள்.

"அது சரி. இப்பதானே வேலைகள் பற்றிக் கதைக்கக் கூடாது என்று சொன்னிங்க. மறந்திட்டிங்களா"? சொல்லிக் கொண்டு சிரித்தான். அவள் உண்மையில் கொஞ்சம் சோர்ந்துதான் போனாள். அருணைப் பார்த்தாள். "நான் இயங்குவது உங்களால்தான். நீங்க இல்லாட்டி என்னால் இயங்க முடியாது. இதை உணரமாட்டிங்களா?" மனதில் உள்ளதைக் கண்களால் சொல்லிக் கொண்டாள். "கயல் நான் உனக்காகத்தானே தவங்கிடக்கிறன். நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லையா இன்னும்? அவன் தனது மனதுக்குள் கிடந்தவற்றை தன் பார்வையால் சொல்லிக் கொண்டான். இருவரது உள்ளங்களிலும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. "இவள் என்மேல் கொண்டிருப்பது நட்பா? என்னை நண்பனாகப் பார்த்துப் பழகுகிறாளா? புரியவில்லையே. நண்பானாகப் பழகிக் கொண்டிருக்கும் உரிமையில்தான் இப்படி பழகிக் கொண்டிருக்கிறாளா? இன்னும் சில நாட்களில் புரிந்து விடும்" கடும் யோசனையில் ஆழ்ந்தான்.

"என்ன யோசனை? அமைதியைக் கயல்விழி கலைத்தாள். "ஒன்றுமில்லை. நாளைய திட்டங்களை யோசித்தேன்". என்றான். "நாளைய திட்டங்களை நாளை பார்ப்போம். இப்ப அம்மாவைப் பற்றிச் சொல்லுங்க. அம்மா எப்படி இருக்கிறா"? கதையை மாற்றினாள். "அம்மா சுகமாக இருக்கிறா. அடுத்த முறை அம்மாவை ஒருக்கா இங்க கூட்டிவர யோசிக்கிறன்". தனது அடுத்த கட்ட நகர்வை முன்வைத்தான். "கட்டாயம் கூட்டி வாங்க. எனக்கும் அவவைப் பார்க்க ஆசையாக இருக்கு. அவவுக்கு இந்த இடம் நல்லாப் பிடிக்கும்". ஒரு துள்ளலோடு சொன்னாள். நேரம் போனது தெரியவில்லை. உணவின்பின் ஓய்வெடுத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண் தொடர்ந்து மூன்று நாட்கள் தங்கியிருந்து கிராம அபிவிருத்தி வேலைகளைக் கவனித்தான். அதிகமான காடுகள் அந்நிலங்களில் இருக்கவில்லை. அதிகமான காணிகள் வெளியாக்கப் பட்டன. வீதியோரமாக மேட்டு நிலமாக அமைந்திருந்தது. கொட்டில்களை அமைக்க இது வசதியாக இருந்தது. பலர் கொட்டில்களை அமைத்து விட்டார்கள். வீதியோரமாக புதிதாக ஒரேவரிசையில் கொட்டில்கள் இருந்தன. சிலவற்றைக் கிடுகினால் வேய்ந்தார்கள். பொதுவாக எல்லா இளைஞர் யுவதிகளும் தங்களை வேலையில் ஈடுபடுத்தி யிருந்தார்கள்.

மனிதர்களுக்கு ஏதாவது ஒரு வேலையிருந்தால் அதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். வேலை இல்லாதிருந்தால் மற்றவர்களுடைய விவகாரங்களில் தலையிட்டுத் தவித்த முயலடிப்பார்கள். கட்டைபறிச்சான் மாறியிருந்தது. எவரைப் பார்த்தாலும் கேட்டாலும் நேரமில்லை என்றுதான் சொன்னார்கள். அவரவர் வேலைகளில் மற்றவர்கள் தலையிட நேரமில்லாதிருந்தது. ஆனால் பொது வேலைகளுக்கு அனைவரும் சமூகம் கொடுத்தார்கள். பாடசாலைக்குப் பிள்ளைகள் போனார்கள். கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம் எற்பட்டது. சமய வழிபாடுகள் தொடர்ந்தன.

மரவட்டகுளப் பகுதி பெரிய கிராமமாகிவிட்டது. திடீரெனக் குளம் திருத்துவதற்கான நிறுவனங்கள் வந்திறங்கின. பிரதேசச் செயலாளரின் ஆலோசனையின்படி அருண் அதற்கான ஆயத்தங்களைச் செய்திருந்தான். நீர்ப்பாசன அமைச்சின் அனுசரணையுடன் பொறியியலாளர்களின் நேரடி மேற்பார்வையில் வேலைகள் துரிதமாகின. தொடக்க நாள் மக்களின் சிரமதானத்தோடு தொடங்கியது. பாடசாலைப் பிள்ளைகள் தொடக்கம் கிராமத்தின் பெரியவர்கள் வரை கலந்து கொண்டார்கள்.

கிராம மக்கள் தொழிலாளர்களாக இயங்கினார்கள். தங்கள் சொந்த வேலையாகச் செய்தார்கள். ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டார்கள். குளக்கட்டுக்களைப் புனரமைக்கும் வேலைகள் நடந்தன. கயல்விழி பாடசாலை, நிறுவன மேற்பார்வை என பம்பரமாய் இயங்கினாள். மங்கையிடம் கயல்விழி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அதனை படித்ததும் அவள் கண்களில் இருந்து ஆறாய்ப் பெருகியது. " மகள் ..நீ அனுப்பிய பதினைந்தாயிரம் ரூபாயும் கிடைத்தது. அப்படியே மாமாவின் கடனைக் கொடுத்து விட்டோம். நீ எப்படி இருக்கிறாய். கயல்விழிக்கும் அம்மா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுக்கும் சுகம் சொல்லு. பதில் அனுப்பு." என்றிருந்தது. "யார் அப்பாவுக்குப் பணம் அனுப்பியது." கயல்விழியை அப்படியே கட்டிப்பிடித்து அழுதாள். "கயல் எப்படி உனக்குக் கைமாறு செய்யப்போறன்.?" தேம்பினாள். "அடி பைத்தியமே நீ என்ர உயிர்த்தோழியடி. சரி உன்ர வேலையைக் கவனி" கூறிவிட்டு வேலையில் ஈடுபட்டாள்.

## 22

இளைஞர் வீட்டுத் திட்டத்தை அரசாங்கம் அறிவித்திருந்தது. பிரதேசச் செயலாளரின் உதவியைக் கயல்விழி நாடினாள். அவரின் பெருமுயற்சியினால் இளைஞர் வீட்டுத்திட்டமும் கிடைத்து விட்டது. புதிய காணிகளில் புத்தம் புதிய வீடுகள் முளைத்தன. முன்னூறு இளைஞர்கள் முழுநேர விவசாயிகளாக மாறியிருந்தனர். அரசாங்கத்தின் முழுக்கவனமும் கட்டைபறிச்சான் பக்கம் திரும்பியிருந்தது. அருண் வீட்டுக்குப் போயிருந்தான். அந்த நாட்கள் கயல்விழியின் வேகம் குறைந்திருந்ததை மங்கை கவனித்தாள். வகுப்புக்களிலும் கலகலப்பு இல்லை."கயல்விழி நீ எனது உயிர் தோழிதானே?" மங்கை கேட்டாள். " என்னடி சந்தேகம்"? நெற்றியைச் சுருக்கியவாறே கயல் கேட்டாள்.

" கயல் எனக்கு ஒரு உண்மையைச் சொல்ல வேணும். அது எனக்கு விளங்குது. ஆனால் நீ என்னிடம் மட்டுமல்ல சம்பந்தப்பட்டவர்களுக்கும் மறைக்கிறாய். ஏன்? சொல்?" அவளைப் பார்த்தபடியே கேட்டாள். " நீ என்ன கேட்கிறாய்? எனக்கு விளங்கவில்லை." எங்கேயோ பார்த்தபடி கூறினாள்.

"கயல்விழி என்னட்ட மறைக்காத. உன்ர மனதைக் கேள். உன்ர மனதுக்குள்ள என்ன இருக்குது என்று பார்." மங்கை ஆற்றைப் பார்த்தவாறு கேட்டாள். "கயல்விழி நானும் இவ்வளவு காலமும் பழகியிருக்கிறன். இப்பதான் உன்ர முகத்தில ஒரு மாற்றத்தைக் கண்டிருக்கிறன். அதற்கான காரணத்தையும் தெரிந்திருக்கிறன். ஆனால் நீ பிடிபடாமல் நடிக்கிறாய்?" மங்கை விடுவதாயில்லை.

"சரி நேரடியாகக் கேட்கிறன். நீ அருணைப் பற்றி என்ன நினைக்கிறாய்.?" மங்கை கேட்டாள். கயல்விழி திடுக்குற்றாள். சற்றுத் தடுமாறித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாள். யோசித்தாள். "அருண் மிக நல்ல நண்பர். அவர்மேல் எனக்கு மரியாதை இருக்கு." இழுத்து இழுத்துக் கூறினாள். "அருண் மிக நல்ல இளைஞன். உனக்கு ஏற்றவர். நீ அவரைக் காதலிக்கிறாய். ஆனால் போலியாய் நடிக்கிறாய்." சற்று ஆவேசமாய்ப் பேசினாள். "மங்கை காதல் என்பது புனிதமானது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இல்லறத்தில் இறங்கவேண்டும். எனக்கு அந்தப் பக்குவம் இன்னும் வரல்ல. அந்த நிலைக்கு நான் வருவதற்கு நாளெடுக்கும். என்னை அருண் விரும்புவதை நான் அறியவில்லை. அவர் அன்பாக நமக்கு எவ்வளவோ செய்கிறார். அதனால் என்னை காதலிக்கிறார் என்று நான் எப்படிச் சொல்லமுடியும்? சரி இதை இப்படியே விடு".அவள் கதையை நிறுத்தினாள்.

சுந்தரத்தார் ஏதோ வேலையாக வந்தவர் இவர்கள் பேசியதைக் காதில் வாங்கிக்கொண்டார். தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். அருண் வேலை நிமித்தம் வருவதும் போவதுமாக இருந்தான். உண்மையில் அவனுக்கு அதிகமான வேலைகள் இருந்தன. நாட்கள் வாரங்களாகி, மாதங்களாக விரைந்து ஓடின. சாந்தன், ராகினி, சுலோச்சனா, மங்கை ஆகியோரின் ஒத்தாசையோடு அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்தது. மரவட்டக்குளம் 'இன்பபுரி'யாக மாற்றம் பெற்றுவிட்டது. குளத்து வேலைகள் முடிவுற்றன. குளத்தின் திருத்த வேலைகளை விரைவில் செய்ய உதவியமைக்காக மக்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் நன்றி தெரிவித்தது. சிறப்பாக கயல்விழியைப் பாராட்டியது.

மாலையாகி வந்தது. வழமைபோல் ஆற்றங்கரையைப் பார்த்தவாறு கயல்விழி இருந்தாள். அவளது மனத்திரையில் பழைய கட்டைபறிச்சானின் பசுமை எட்டிப்பார்த்தது. அப்பா சொன்னவைகளை அசைபோட்டுப் பார்த்தாள். அவளை மறந்து சிலையாகி நின்றாள். கட்டைபறிச்சான் துறை கிருஸ்ணபிள்ளையின் அதிகாரத்தில் இருந்தது. அப்போது பாலம் இல்லை. ஒரு படகுப்பாதை இருந்தது. இரண்டு கரையையும் இணைத்துத் தடித்த கயிற்றால் கட்டியிருப்பார்கள். அந்தக் கயிற்றில் படகுப் பாதையை இணைத்திருப்பார்கள். படகில் பயணிப்பவர்கள் கயிற்றை இழுத்தால் படகு அசைந்து போகும். கரையின் இருபுறமும் சிறிய தேநீர்க் கடைகள் இருக்கும். பயணிகளுக்கு அவை ஆறுதல் அளித்தன. வைகாசி, புரட்டாசி மாதங்களில் கிராமங்களில் கும்பம் வைத்து அம்மன் வழிபாடு நடக்கும். ஐந்து அல்லது ஏழு நாட்களுக்கு நடைபெறும். கட்டைபறிச்சானிலும் அதனைச் சூழ்ந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களிலும் நடக்கும்.

இச்சடங்கு முறை மக்களை சமூகமயப்படுத்தியது. அனைவரும் ஒன்று பட்டுழைப்பார்கள். ஒத்தாசைகளைச் செய்வார்கள். கும்பம் வைப்பதற்கான செலவுகளை மக்களே பொறுப்பெடுத்து பங்களிப்புச் செய்வார்கள். நாட்பூசைகளையும் தாங்களே ஏற்று நடத்துவார்கள். இளைஞர்கள் பெரிதும் பங்கேற்கும் விழாவாக விளங்கும். கட்டைபறிச்சான் கிராமம் மந்திர தந்திரங்களில் முன்னணியில் இருந்தது. இளைஞர்கள் தமக்குள் மந்திரங்களை மனப்பாடம் செய்து பரீட்சிக்கும் களமாக கும்பத்து மால் நிகழ்ச்சிகள் இருக்கும்.

ஒவ்வொரு இரவும் ஊர் கலகலக்கும். பூசைநேரத்தில் சாமி ஆடிக் கட்டுச்சொல்வது சுவையான நிகழ்ச்சியாக இருக்கும். பூசாரியார் கும்பம் தொடங்கிய நாளில் இருந்து கும்பத்து மாலில் பயபக்தியாக இருப்பார். அந்தச் சடங்கு முறை இப்போது அருகிவிட்டது. பூசை தொடங்கியதும் பூசாரியின் உடுக்கும், மந்திரமும் பார்த்திருக்கும் பலரை நடுங்க வைக்கும். சிலர் தங்களை அறியாமல் உடல் குலுங்க நடுங்கி அலறியும் விடுவார்கள். அத்துடன் பறைமேளம் அதிரும். சாமியாடி வருபவர்கள் பறை மேளகாரரின் பக்கம் செல்வார்கள். சாமியாடி பக்கத்தில் வந்தால் மேளம் அடிக்கிறவர்களுக்கும் கொண்டாட்டம். உரத்து மேளம் அடிப்பார்கள். சாமி தாளத்துக்கு ஏற்ப ஆடும். நல்ல வேடிக்கையாக இருக்கும். சாமி ஆட்டம் நடக்கும். சாமியாடும் போது அவர்களின் உடல் குலுங்கும் முறை வித்தியாசமானது. அவர்களது கண்கள் அரைவிழி மூடியிருக்கும். இதனை நம்புவதா? நம்பாமல் இருப்பதா? பெரிய சங்கடமாக இருக்கும்.

நிறைவு நாள் உற்சாகமாக இருக்கும். கும்பங்களைத் தூக்கி வருபவர்கள் அதற்கான ஆடையணிந்து வருவார்கள். அந்தி மாலைப்பொழுதில் கும்பம் ஊர்வலம் வரும். இளைஞர்கள் வீதிகளில் நிற்பார்கள். கும்பம் வரும்போது வீதிகளுக்குக் குறுக்கே மந்திரித்துக் கோடுகள் வரைந்து திருநீறு கைகளில் ஏந்தி மந்திரம் சொல்லி நிற்பார்கள். அவர்களது உடல் நடுங்கியவாறே இருக்கும். மந்திரம் கனலாகப் பறக்கும். இந்த மந்திரங்களைப் பாடமாக்கும் நமது இளைஞர்கள், தங்கள் பாடங்களைப் படித்தால் பரீட்சைகளில் சித்தியடைந்து பெரிய பதவிகளில் வரலாம் என்று அன்று கற்பித்த ஆசிரியர்கள் சொன்னதையும் நினைந்து கொண்டாள். அந்த மந்திரங்களை விரும்பிக் கற்கும் மாணவர்கள் பாடங்களை விரும்பிக் கற்பதில்லை. காரணத்தைத் தேடினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிக்குக் குறுக்கேயுள்ள கோட்டுக்கு அண்மையில் வந்ததும் சாமியாடி வருபவர்கள் அதைத் தாண்டி போகமுடியாமல் திணறுவார்கள். ஒருகுழு போகமுடியாதவாறு மந்திரிப்பார்கள். சாமியாடியவர்கள் தொப் தொப்பென்று விழுவார்கள். இன்னுமொரு குழு அதற்கெதிரான மந்திரங்களை சொல்லி காய் வெட்டுவார்கள். வீழ்ந்து விட்ட சாமிகளைத் தூக்கி நிறுத்தி அவர்களுக்கு உருவேற்றுவதில் இன்னுமொரு குழு செயற்படும். இவர்களால் முடியாதவற்றைப் பூசாரியார் வந்து மந்திரித்துத் தண்ணீர் தெளித்தால் கட்டு உடைந்து சாமி போகும். சில சாமிகள் பூசாரியாரிடமிருந்து சாட்டையைப் பெற்று வரும். மந்திரம் தெரிந்த இளைஞரிடம் கொடுத்து ஒரு கையை நீட்டி நிற்கும். இளைஞர் சாட்டையைத் தன் இரு கைகளிலும் ஏந்திப்பிடித்து மந்திரம் சொல்லி சாட்டையால் சாமிக்கு அடிப்பார். முடிந்ததும் மஞ்சள் தண்ணீரால் கழுவி சாட்டையைச் சாமியின் கழுத்தில் அணிந்து விடுவார்.

நாட்டுப் பிரச்சினைகள் பூதாகாரமாக வளர்ந்தன. பழையன கழிந்து புதியன புகுந்து விட்டன. ஒற்றுமையும் ஒத்துழைப்பும் சிதறிவிட்டன. அகதி வாழ்வு சிறைப்படுத்தி விட்டது. சிறுதெய்வ வழிபாடு தொலைந்து விட்டது. “கயல்விழி.. இஞ்ச வந்து பார்..கெதியா வா.” அம்மாவின் சத்தம் கேட்டுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். அம்மாவிடம் போனாள். அவளது கண்களை அவளால் நம்ப முடியவில்லை. சிலையானாள். “அருண் வந்திருக்கார். அம்மாவும் வந்திருக்கா” அம்மா சொன்னதும்தான் தன்னையுணர்ந்தாள். முகம் மலர்ந்தது. விழிகள் ஒளிவீசின.

முன் ஓடிச் சென்று வரவேற்றாள். “வாங்க.. வாங்க. அம்மா சுகம் எப்படி,? பலநாட் பழகியதுபோல் பக்கத்தில் சென்று அவரை கதிரையில் அமரச் செய்தாள். அருணைப் பார்த்து “நீங்க இப்படி இருங்க”. இருக்கையைக் கொடுத்தாள். “அம்மா நான் தேநீர் போட்டு வாறன்.” துடித்து நின்றாள். அவளுக்குக் கையும் ஓடல்லக் காலும் ஓடல்ல. “கயல் நான் எல்லாம் செய்யிறன். நீ அவங்களோட கதச்சிக் கொண்டிரு”. அம்மா குசினிக்குள் போனாள்.

அருண் தனது வீட்டுக்குப் போய் இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டிருந்தது. அவனைத் திடீரெண்டு திருகோணமலையிலும் கடமை செய்யும்படி தற்காலிகக் கடமைப் பட்டியல் கொடுத்திருந்தார்களாம். அதனால் அவன் கட்டைபறிச்சானுக்கு வரச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போது அது முடிந்ததும் கட்டைபறிச்சானில் கடமையாற்ற வந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா நான் உங்களிட்ட சொன்ன சமூகசேவகி இவதான். பெயர் கயல்விழி. ஆனால் கனல் விழியாகத்தான் எனக்குத் தெரியுது." வழமைபோல் தமாசாகச் சென்னான். "டேய் அருண்..நீ எங்கயும் இப்படித்தான் பேசுவியா? பாவம்டா அந்தப் பிள்ள அப்படியா இருக்கா". சிரிப்போடு சொன்னார். "அம்மா பார்த்த உடனே எடைபோடாதிங்க. இவட தோழி மங்கை இருக்கிறா. இந்த இரண்டும் சேர்ந்து இந்த ஊரைப்போட்டுப் படுத்திற பாடு சொல்லேலா. அதுக்குள்ள என்னையும் சேர்த்து தொடர்ந்து இங்கேயே வேலை செய்ய வேண்டும் என்று பிரதேசச் செயலாளரிடம் சொல்லி, இங்கேயே இருக்க வெச்சிட்டா. பாவம் அம்மா சனங்கள்". பல உண்மைகளை எப்படி நாசூக்காகச் சொல்லுறான். அவளுக்குச் சொல்லமுடியாத சந்தோசம்.

மனித வாழ்விலும் இன்ப துன்பங்கள் மாறி மாறி வந்து போகும். அப்போதுதான் வாழ்க்கை சுவைக்கும். அருணைக் கண்டதும் அவளை அறியாமல் உள்ளம் துள்ளுவதேன்?. அவன் போனதும் வாடி வதங்கிப் போவதுமேன்? மங்கை சொன்னது சரிதானா? நான் என்னை ஏமாற்றுகிறேனா? அல்லது எனது அகம்பாவமா? ஒன்றுமே விளங்கவில்லை. அம்மா தேநீர் கொண்டு வந்தார். கொடுத்தார். குடித்தார்கள். மங்கை வந்ததும் சந்தோசப்பட்டாள். "அம்மா நான் சொன்ன மங்கை இவதான்" அருண் முந்திக் கொண்டான். வணக்கம் சொன்னாள். "நல்ல பிள்ளயள்." பாராட்டினார்.

"கயல் எல்லா வசதியையும் செய்து குடு." தங்கம் மகளுக்குச் சொன்னார். மங்கை அவர்களது உடமைகளை எடுத்துக் கொண்டு போனாள். அருண் அம்மாவுடன் சென்றான். "அம்மா இந்த ஆற்றிலதான் இவங்க குளிக்கிறவங்க. நீங்களும் அவங்களோட சேர்ந்து நீச்சல் பழகலாம்" அம்மா கேட்டுக் குலுங்கிச் சிரித்தார். "இவன் இப்படித்தானம்மா. ஏதாவது சொல்லிச் சிரிக்க வைப்பான்". கயல் சேர்ந்து குலுங்கிச் சிரித்தாள். "இன்றைக்குத்தான் கயல் குலுங்கிச் சிரிக்கிறா." மங்கை சொல்லித்தானும் சிரித்தாள். கயல் அறையினைத் துப்பரவாக்கினாள். அழகாக அடுக்கி வைத்தாள். வேண்டிய பொருட்களை ஆயத்தம் செய்து வைத்தாள். "அம்மா குளிக்க வசதியிருக்கு. பின்பக்கம் சுடுதண்ணி வைச்சிருக்கிறன். சோப் துவாய் எல்லாம் இருக்கு. போய்க் குளியுங்க. பிரயாணக்களைப்புப் பறந்து விடும். படபடவெனக் கூறினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் குளிச்சிட்டு வாங்க. நல்லா நேரம் போயிற்று. அம்மாக்குப் பசிக்கும் நாங்க சாப்பாட்டத் தயார் செய்திட்டு வாறம்." சொல்லிவிட்டுப் பின்னால் போனாள். "அம்மா ஏதாவது தேவையா?" கேட்டாள். "இல்லம்மா நான் குளிச்சிட்டு வாறன்''. அவர் குளிக்கத் தொடங்கினார். "இவனுக்கு ஏற்ற பிள்ளைதான்." பார்த்த பார்வையிலேயே தீர்மானித்து விட்டார். "இப்படியான ஒரு பிள்ளயத்தான் நான் தேடிக் கொண்டிருந்தன். இறைவனாகப் பார்த்து நான் நினத்ததைத் தந்திருக்கிறார். என்ர எண்ணம் நிறைவேறினால் நான் பாக்கிய சாலிதான்." மனதினில் நினைத்து கொண்டே குளித்து முடித்தார்.

அருண் கிணற்றடியில் குளித்து வந்தான். அவர்கள் உடைகளை மாற்றி வந்து வெளியில் இருந்தார்கள். "அருண் நீ சொன்னமாதிரி அழகான இடம்தான். என்னமாதிரிக் காற்று வீசுது." மெய்மறந்து பேசினார். "அருண் இனியும் என்னால் பொறுக்கமுடியாது. எனக்குப் பிடிச்சிக் கொண்டுது. நான் இனி அவங்களோட கதைக்கப் போறன்." அம்மா முடிவோடு இருந்தார். "அம்மா இன்றைக்குத்தானே வந்திருக்கிறீங்க. முதலில் கயல்விழியின் விருப்பத்தை அறியுங்க. ஆறுதலாய் கதையுங்க. இப்ப என்ன அவசரம்?" அம்மாவைப் பொறுமை காக்க வைத்தான்.

கயல்விழியும் மங்கையும் வந்தார்கள். கயல்விழி நின்றிருந்தாள். "கயல் வாம்மா. கதிரையில் வந்திருங்க. அம்மா அழைத்தார். "பரவாயில்லை. நான் இப்படி நிக்கிறன். இப்ப அம்மா கூப்பிடுவா. சாப்பிடப் போவம். அம்மா இறால் சாப்பிடுவிங்கதானே? சும்மாதான் கேட்டாள். "என்ர அம்மா என்னப்போலதான். எதையும் சாப்பிடுவா, அம்மா கயல்விழியின் அம்மா இறால்கறி சமைத்தால் சா..சொல்லி வேலையில்ல. அப்படி ருசியாக இருக்கும்." ஒரு போடுபோட்டான். "மங்கை..! வரச் சொல்லுங்க. அப்பாவும் வந்திற்றார்''. தங்கம் கூப்பிட்டார்.

சாப்பாட்டுக்காகச் சென்றார்கள். மேசையில் எல்லாம் தயாராய் இருந்தது. சுந்தரத்தார் "வாங்க" வரவேற்றார். அவருக்கு அருண் தனது அம்மாவை அழைத்து வந்தது நல்ல சந்தோசம். மங்கை கைகழுவக் கிண்ணத்தில் தண்ணீர் கொடுத்தாள். மங்கை பீங்கான் கோப்பைகளில் உணவினைப் பரிமாறினாள். "சாப்பிடுங்க" என்றாள். "அண்ணே நீங்களும் வாங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவம். சந்தோசமாக இருக்கும்." அருணின் அம்மா அழைத்தார். யாராலும் தட்டமுடியவில்லை. சுற்றியிருந்து உண்டார்கள். அடிக்கடி கயல் எழுந்து பரிமாறினாள். சாப்பிடும் போது அவளது விழிகள் அருணைப் பார்க்கத் தவறவில்லை. மங்கையின் கண்கள் மிகக் கவனமாகச் சுழன்றன.

குடும்பங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக் கொண்டார்கள். நாட்டு நடப்புக்களைப் பற்றிக் கதைத்தார்கள். அருணைப் பற்றிப் பேசினார்கள். இங்கு நடக்கும் வேலைத் திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடினார்கள். "இன்றைக்கு எனது மனம் நிறைந்து இருக்கிறது. உங்களோட இருந்து இப்படி சாப்பிட்டுறதற்குக் கொடுத்து வைத்திருக்கவேணும்". நன்றியோடு அருணின் அம்மா கூறினார். "இது நிலைக்க வேணும்." சொல்லிக் கொண்டு எழும்பினார். எழும்பி வேறுகதிரைகளில் இருந்து கதைத்தார்கள். "ஏரிக்கரை' வீட்டுக்குப் போவோமா? நான் கோயிலடிவரை நடந்து போய்வாறன்". சொல்லிவிட்டுச் சுந்தரத்தார் நடந்தார்.

## 23

நல்ல நிலவு வீசிக் கொண்டிருந்தது. சுற்றிவரக் கதிரைகள் போடப்பட்டிருந்தன. கயல்விழி பாயோடு வந்தாள். சில கதிரைகளை நகர்த்திவிட்டுப் பாயை விரித்தாள். மங்கையும் கயலும் பாயில் இருந்தார்கள். "எப்படி அம்மா கட்டைபறிச்சான்? பிடிச்சிருக்கா"? மங்கை தொடங்கினாள். "நான் முதல் கட்டைபறிச்சான் வந்திருக்கிறன். நாகதம்பிரான் திருவிழாவுக்கு வந்தனான். நல்ல ஊர். நல்ல மனங்கள் கொண்ட மக்கள்." அவர் சொல்லிக்கொண்டிருந்தார். அருண் நிலத்தைப் பார்த்தபடி இருந்தான். சுந்தரத்தாரும் வந்தார். அருண் மெதுவாக எழுந்து அறைக்குள் சென்றான்.

கொஞ்சநேரம் கதைத்தார்கள். உறக்கம் வந்து கண்களைத் தாலாட்டியது. "அம்மா பயணக்களைப்பு. உங்களுக்கும் அலுப்பாக இருக்கும். நாளைக்கு எங்களுக்கு நிறைய வேலையிருக்கு". மங்கை சொன்னதும் "அப்படி என்ன வேலை"? அருணின் அம்மா கேட்டார். "அம்மா காலையில நானும் கயல்விழியும் பாடசாலைக்குப் போவம். அங்கிருந்து ஊர் விசயங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப் போவம். அந்த வேலைகளையும் கவனிக்க வேணும். இப்படி எக்கச்செக்கமான வேலை. ஓய்வெடுக்க ஏலாது. நாங்க ஓய்வெடுத்தா எல்லாம் ஓய்ந்துவிடும். மங்கை வளவளத்தாள். சுந்தரத்தார் மங்கையின் துணிச்சலான பேச்சைக் கண்டு சிரித்தார்.

“மங்கை நீ இஞ்ச அம்மாவோடு உறங்கலாமே? அம்மாவத் தனிய விடலாமா? சுந்தரத்தார் கேட்டார். “எனக்கு என்ன தனி. என்ர பிள்ளயும் இருக்கிறான். மங்கை நீங்க போய் தூங்குங்க. நாளைக்குக் கதைப்பம்.” அருணின் அம்மா கூறினார். “இல்லயம்மா நானும் உங்களோட வாறன்.” மங்கை போய் தனது படுக்கையை எடுத்து வந்தாள். அம்மாவுக்காக ஒதுக்கிய அறையில் தனது படுக்கையையும் விரித்தாள். “கயல் நாளைக்குச் சந்திப்பம். நாங்க ஓய்வெடுக்கப் போறம்.” சொல்லிக் கொண்டு அறையினுள் சென்றாள். கயல்விழியோடு சுந்தரத்தார் பின்னால் சென்றார். தங்கம் பின் தொடர்ந்து சென்றார்.

நல்ல காற்று. நுளம்புத் தொல்லையும் இல்லை. இருவரும் படுக்கையில் சாய்ந்தார்கள். “அம்மா ஒன்று சொல்லுவன் கோவிக்கக் கூடாது. சொல்லட்டா”? மங்கை தொடங்கினாள். “நான் ஏன் கோவிக்கிறன். சொல்லுங்க”. பதிலளித்தார். “அம்மா எங்கட கயல்விழியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க”? கேள்வியாகக் கேட்டாள். “நல்ல பிள்ளைபோல்தான் தெரியுது. அவளுக்கென்ன”? விசாரித்தார். அவளைப்பற்றி அறியும் ஆவலில் மனதைக் கட்டுப்படுத்தி உசாரானார். “கயல்விழி தங்கமான பிள்ள. அவமேல அருணுக்கும் விருப்பமிருக்குப் போல் தெரியுது. கயலுக்கும் விருப்பம் இருக்கு. ஆனால் இருவரும் தாங்கள் விரும்புவதை வெளியில் காட்டுறாங்க இல்லை. அம்மா இந்த இரண்டு பேரையும் ஒன்று சேர்த்து வையுங்கம்மா”. கெஞ்சினாள். “நல்ல விசயத்தைச் சொல்லுறாளே”. அவருக்குச் சந்தோசம்.

“மங்கை! அருணுக்கு கயல்விழி மேல் அன்பு இருக்கிறது. அவன் பல்கலைக் கழகத்தை விட்டு வந்ததுமே கயல்விழியைத்தான் மணம் முடிப்பேன் என்று இன்றுவரை காத்திருக்கிறான். அவனுக்காகத்தான் நான் வந்திருக்கிறன். நாங்க எல்லாரும் சேர்ந்து நல்லபடியாக செய்து வைப்பம்.” அம்மா இப்படிக் கூறுவார் என்று அவள் எதிர்பார்க்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசத்தில் மிதந்து உறங்கிவிட்டாள். கயல்விழிக்கு உறக்கம் வரமறுத்தது. அப்பா வந்ததும் அருண் ஏன் அறைக்குள் போனார். பிடிக்கவில்லையா? அல்லது மரியாதையா? மனதைப் போட்டுக் குளப்பிக் கொண்டிருந்தாள். எப்படியோ உறங்கிவிட்டாள்.

எப்படித்தான் பிந்தி உறங்கினாலும் விடியாலா சத்தத்தில் கயல்விழி எழுந்து விடுவாள். தனது கடமைகளை முடித்துக் கொண்டு தேநீரோடு ஏரிக்கரை வீட்டு வாசலில் கதவைத் தட்டியபடி நின்றாள். அம்மா எழும்பியாச்சா? இந்தாங்க தேநீர். கொடுத்தாள். சின்னம்மா உனக்கும் தேநீர் இந்தாங்க பிடியுங்க" ஒரு நையாண்டியுடன் கொடுத்தாள். "ஆமா சொல்லுவீங்க. தெரியும் உங்கட லெவெல்." கொடுப்புள் சிரித்த வண்ணமே தேநீரை வாங்கினாள். அருணின் அறைக் கதவைத் தட்டிக் காத்திருந்தாள். அவன் கதவைத் திறந்ததும் "குட் மோனிங். தேநீர். இந்தாங்க". ஒரு புன்னகையை வீசியவாறு கொடுத்தாள். அந்தக் காலைப்பொழுதில் முழுநிலவாய் ஜொலித்தாள். முகம் மலர்ந்து தேநீரைப் பெற்றுக் கொண்டான்.

இன்பபுரி, நகராக படிப்படியாக மாறிக் கொண்டிருந்தது. நாட்கள் நகரத் தொடங்கின. பசி, பட்டினி பஞ்சம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. குழுக்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வலுவூட்டப்பட்டது. வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது, கணக்குப் பேணும் வழிமுறைகள். வங்கியில் பணமெடுத்தல், வைப்பில் இடுதல், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், முதலுதவிப் பயிற்சிகள், அனர்த்த முகாமைத்துவம் பற்றிய பயிற்சிகளில் தேறியவர்களாக மக்கள் மாறிவிட்டனர். உற்பத்தியைப் பெருக்கும் வழிவகைகளைத் தெரிந்திருந்தனர். சுய உதவிக்குழுக்கள் தமக்குள்ளேயே தேவைகளைக் கண்டறியும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். அதற்கேற்ப தேவைகளை நிறைவேற்றும் தீர்மானங்களை எடுக்கவும் பழகிவிட்டனர்.

காணிகளில் பயிர்கள் வளர்ந்து காற்றிலாடி அசைந்தன. அந்த மாலைப்பொழுது அழகாக இருந்தது. இளைஞர்கள் குழுமி இருந்தனர். இன்று சுய உதவிக்குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை தாங்க வேண்டும். வழமையான கூட்ட நடைமுறைகளைப் பின்பற்றி நீங்களே தீர்மானங்களை பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டும். நாங்கள் பார்வையாளர்களாக இருப்போம் அவசியம் ஏற்படும்போது நாங்கள் உதவுவோம். கயல்விழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக் கொண்டாள். முப்பது சுய உதவிக்குழுக்கள் சமுகம் கொடுத்திருந்தன. அவர்களுக்குள்ளேயே மற்றக்குழுக்களும் இருந்தனர்.

“நாகேஸ்வரன் தலைமை தாங்குவார்.” ஏகோபித்த முடிவாக எழுந்தது. நாகேஸ்வரன் தலைமை தாங்கினார். குழுக்கள் தங்கள் செயற்பாடுகளை விளக்கினார்கள். தங்கள் தேவைகளை முன்வைத்தார்கள். “நமது முக்கிய தேவையாக இருப்பது சிறிய அரிசி ஆலை. அந்த ஆலையை பொதுவான இடத்தில் வைக்கவேண்டும். அதனால் பலவசதிகள் ஏற்படும். மக்கள் மூதூருக்கு எடுத்துச் செல்லும் கஸ்டம் நீங்கும். அந்த மெசினில் நெல்மட்டுல்ல மா, மிளகாய்த்தூள் எல்லாம் அரைக்கலாம். அப்படி அரிசி ஆலையைத் தொடங்கினால் நமது குழுக்களுக்கு லாபம். நமது பணம் நமக்கே பயன்படும். இரண்டு பேர் வேலைவாய்ப்புப் பெறலாம். தவிடு கால்நடைகளுக்குத் தீனியாகும். இதற்குரிய பணத்தினை குழுவில் இருந்து பெற்று அதற்குரிய வட்டியையும் குழுவுக்குக் கட்டலாம். விவாதித்தார்கள். நல்ல பயனுள்ள விசயம். இதனை உடனடியாக நடைமுறைப் படுத்துவோம். உரிய விலை மனுக்களைக் கோரி நிறைவேற்றும் தீர்மானம் முடிவாகியது. நமது பிரதேசத்தில் கால்நடைகள் உள்ளன. நல்ல இனப்பசுக்கள் இல்லை. பொலநறுவை அல்லது கந்தளாய் பண்ணைகளில் இருந்து இளம் காளைகளை வாங்கினால் எதிர்காலத்தில் பயனைப் பெறலாம். நீண்ட காலப்பயனுள்ளதாக இருக்கும். நாகேஸ்வரன் தொடர்ந்தான்.

“நமது மக்கள் பாலைச் சேகரித்து வைப்பதற்குரிய வசதிகள் இல்லாமல் பாலைச் சேகரித்துப் பயன்பெறத் தெரியாமல் உள்ளார்கள். அதேவேளை பால்மா பக்கற்றுக்களை வாங்கிப் பாவிக்கிறார்கள். நமது கட்டாக்காலி மாடுகளைக் கட்டி பால் கறந்து பயன்பெற வற்புறுத்த வேண்டும். பால் சேகரித்து பால்சபைக்கு அறிவித்து அவர்களை இங்கு வந்து பாலை எடுத்துச் செல்ல வழிசெய்யவேண்டும்.” குழுக்கள் நல்ல செயற்திட்டங்களை முன்வைத்தார்கள். “கிராம முன்னேற்ற அபிவிருத்தி அலுவலர் என்ற வகையில் சிலவற்றைச் சொல்ல வேண்டும். நீங்கள் சொன்ன அத்தனை திட்டங்களையும் எற்கனவே உங்கள் 'சேர்ந்து வாழ்' நிறுவனத் தலைவி உரிய இடங்களுக்கு அனுப்பிவிட்டார். அதனை அவரது நிறைவேற்று முகாமையாளர் விளக்குவார்” அருண் மங்கையை இழுத்து விட்டான்.

“அரிசி ஆலை வேலைகள் முடிந்து விட்டன. உரிய இயந்திரம் நாளை வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குரிய வேலைகளை பொருளாளர் ராகினி செய்து விட்டார். கோயிலடியில் நூலகத்துக்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் நாளை மாலை இதே நேரம் திறக்கலாம். உங்கள் எல்லோரையும் அழைக்கிறோம்.” குழுக்கள் ஆரவாரித்தார்கள்.” பால் சேகரிக்கும் விசயம் தொடர்பாக பால்சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அதிகமாக அடுத்த கிழமை நிறைவேறிவிடும். ஆனால் நீங்கள் மனம் வைத்தால்தான் பால்மா பக்கற் விவகாரம் இல்லாது போகும்”. ராகினி விளக்கினார்.

‘

குழுக்களே தீர்மானம் எடுத்தார்கள். “மாடு உள்ளவர்கள் தங்கள் மாடுகளைத் தேடிப் பாதுகாக்க வேண்டும். அவற்றைக் கட்டிப் பால்கறந்து தந்தால் உங்கள் பாலை நாங்கள் வாங்கிப் பால்சபைக்குக் கொடுப்போம். உரிய பணத்தினை உங்களுக்கு வழங்குவோம். இதனை நடைமுறைப் படுத்துங்கள்.” ஒரு வேண்டுகோளாக விடுத்தார்கள். “கல்விக் குழு எப்படி இயங்குகிறது.”? ஒருகுழு வினாவியது. கல்விக்குழுதான் சரியாக இயங்குகிறது. வீடுகளில் பிள்ளைகள் படிக்கிறார்கள். பெற்றோர் தங்களாலான முயற்சிகளை எடுக்கிறார்கள். பாடங்கள் நல்ல முறையில் நடைபெறுகின்றன. இரண்டு பாடசாலைகளும். முன்பள்ளிகளும் சேர்ந்து விளையாட்டுப் போட்டிகளையும், கலைவிழாவையும் நடத்த ஒழுங்குகளையும் செய்கிறோம். கல்விக்குழு செயற்பாடுகளை விளக்கியது. இவற்றை எல்லாம் கண்ணால் கண்டு, களிப்போடு நின்றாள் கயல்விழி.

## 24

மரவட்டக்குளத்தில் தண்ணீர் போதாதிருந்தது. குடியிருப்புக்களில் மலசல கூடங்கள் வீட்டுத்திட்டத்தோடு கட்டப்பட்டன. கிணறுகள் தேவைப்பட்டன. படிப்படியாக அவை நிறைவேறி வந்தன. முன்னூறு இளைஞர்களில் பல பட்டதாரிகள் இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் ஏதோ ஒரு வகையில் 'சேர்ந்து வாழ்' நிறுவனம் தொழில் வசதிகளை அளித்தது. பொது வேலைகளில் படித்த இளைஞர் யுவதிகள் இணைந்து கொண்டனர். வீட்டில் பெண்கள் சுயதொழில்களில் ஈடுபட்டனர். கோழி வளர்ப்பில் பலர் ஈடுபட்டனர். மரவள்ளிக் கிழங்கைச் சீவி பொரித்துச் சிறு பொதிகளில் அடைத்தார்கள். தள்ளுவண்டியில் சிற்றுண்டிகளை வைத்துத் தெருக்களில் விற்றார்கள். அவர்களுக்கு நிதியுதவியினை சுய உதவிக் குழுக்களே உதவின. 'சேர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்' நிறுவனத்திடம் நிதி சேர்ந்து விட்டது. முன்னூறு இளைஞர்களும் அந்த நிதியின் உதவியினால் தங்கள் காணிகளைத் திருத்தி விட்டனர். நிறுவனச் சேமிப்பு சுழற்சிமுறைக் கடன்களைக் கொடுக்க உதவியாக இருந்தது.

கயல்விழி தனிமையில் இருந்தாள். அவளது மனம் இருண்டு கிடந்தது. ஒரு இனந்தெரியாத தனிமையை உணர்ந்தாள். இந்த மனமே இப்படித்தான். சற்றுநேரம் துள்ளிக்குதிக்கும், பின் தடார் என்று கீழே விழுந்து தவிக்கும் இதைத்தான் குரங்கு மனம் என்றார்களோ? அவளது இருண்ட மனதைப்போல் வானமும் இருண்டு கிடந்தது. வானில் நட்சத்திரப் பூக்களைக் காணவில்லை. கருமேகக் கூட்டத்தின் பவனி. மழைக்கான முன்னாயத்தம். காற்றுச் சில்லிட்டது. இடையிடையே சிறியதான மின்னல் கீற்றின் விளையாட்டு. தூரத்துக் கடலில் முழக்கத்தின் ஒலி. ஊர்மனையில் வாழமுடியாத சூழ்நிலை ஒரு காலத்தில் இருந்தது. ஏன் அந்த நிலை உருவாகியது? யார் இதற்கெல்லாம் காரணம்? அவள் மனம் வினாக்களின் விளைநிலமாகி, விடையை நோக்கிய பயணத்தில் இருந்தாள்.

திடீரென மழை பெய்யத்தொடங்கியது. அவளது சிந்தனை கலைந்தது. நல்ல வேளை வேலைகளை முடித்து ஓய்வாக இருக்கும்போது மழை பெய்தது. தங்கமும் அருணின் அம்மாவும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சுந்தரத்தார் ஏரிக்கரை வீட்டுக்கு வந்தார். அருண், கயல்விழி, சாந்தன், ராகினி, சுலோச்சனா முக்கிய விடயங்களை ஆராய்ந்தனர். மங்கை தேநீரோடு வந்து சேர்ந்தாள். தேநீரை எல்லாருக்கும் கொடுத்தாள். குடித்துக் கொண்டே கதைத்தார்கள். மங்கை எப்போது அருண் கயல்விழி கதையை எடுப்பார்கள் என்று எதிர்பார்த்தாள். அவர்கள் பல கதைகளைக் கதைத்தார்களே தவிர இதைப்பற்றிக் கதைக்கவில்லை.

"என்ன அம்மா இந்தக் கயல்விழி எப்ப பார்த்தாலும் ஊர், மக்கள் என்று திரியிறா. ஒருக்கா கண்டிக்கக் கூடாதா"? அருணின் அம்மாவுக்குச் சாடை காட்டினாள். "ஓம் பிள்ள. நான் அதுபற்றிக் கதைக்கத்தான் வந்தனான். அண்ணரும் வரட்டும் என்றுதான் இருந்தன். இப்ப மங்கை நினைவு காட்டினது நல்லதாய் போச்சு". அவர் தொடங்கினார். சுந்தரத்தாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. திடீரென்று மகளை மாட்டிவிடப் பார்க்கிறாள் போலத் தெரியுது. யோசித்தார். அமைதியாய் இருந்தார். "அண்ணன் அருண் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே கயல்விழியை விரும்பி இருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவுக்கும் விருப்பம் இருக்குது. ஆனால் இரண்டு பேரும் அதைப்பற்றிப் பேசல்ல." தொடங்கினார்.

"யார் முதல் சொல்வது என்ற தயக்கத்தில இருக்கிறாங்க. அருண் கலியாணம் செய்தால் கயல்விழியைத்தான் செய்வன் என்று பிடிவாதமாயிருக்கிறான். அவங்கட போக்கைப் பார்த்து முடிவுக்கு வரத்தான் வந்தனான். எனக்கு கயல்விழியில நல்ல விருப்பம். இந்த மங்கை ஓரேயடியாய் அம்மா கதையுங்க, கதையுங்க என்று முன்னும் பின்னும் அலையுது. உங்கட சம்மதத்த நான் அறிய வேணும். சம்மதம் என்றால் எப்பவும் அதை முடிச்சுப் போடலாம்." முற்றுப்புள்ளி வைத்தார். தங்கத்துக்கு கொள்ளை மகிழ்ச்சி. "தங்கச்சி அருணை நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கன். உண்மையாகச் சொன்னால் அருணை மருமகனாக அடைவதற்கு நாங்க குடுத்து வைச்சநாங்க". உணர்ச்சி பொங்கச் சொன்னார்.

"எங்களுக்கு இரண்டு மகள். ஒன்று கயல்விழி. மற்றது இவள் மங்கை. இவளுக்கும் நல்ல இடத்தில பாத்திருக்கன். அவளுக்கும் தெரியும். அந்தப் பொடியன் நல்ல பிள்ள". அவர் சொல்லும்போது மங்கை தனது நாக்கைக் கடித்துக் கொண்டாள். "இந்த அப்பா எப்படிக் கண்டு பிடித்தார். சரியான உளவாளிபோல் தெரிகிறது." தன்னுடைய குட்டு அம்பலமாகி விட்டதே. அப்படியே குந்தியிருந்தாள். "கயல்விழி என்னிடம் ஒருநாள் சொன்னாள். அப்பா உங்களுக்கு இரண்டு பிள்ளயள். ஒன்று நான். மற்றது மங்கை. மங்கை சாந்தனை விரும்புறா, சாந்தனும் விரும்புறான். சாந்தனிடம் கயல்விழி கேட்டிருக்கிறாள். அவன் ஓமென்று சொல்லிப் போட்டான். இதுதான் இவங்க இரண்டு பேருக்கும் உள்ள ஒற்றுமை" அவர் சொல்லிக் கொண்டே போனார். மங்கை அப்படியே தான் கீழே விழுவதை உணர்ந்தாள். அருணின் அம்மா குலுங்கிச் சிரித்தார்.

கலந்துரையாடல் முடிந்து அருண் வந்து கொண்டிருந்தான். அம்மா சந்தோசமாகச் சிரித்து மகிழ்வதை இன்றுதான் கண்டிருக்கிறான். அவனுக்குச் சந்தோசம். "அம்மா இன்றைக்குத்தான் நீங்க சிரித்துச் சந்தோசமாய் இருப்பதைப் பார்க்கிறன்." அவனும் சிரித்தான். "கயல்விழி எங்க"? மங்கை கேட்டாள். "இப்பதான் பொக்கற்றில இருந்து இறக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுட்டு வாறன்". சிரிப்போடு சொன்னான். "இவன் இப்படித்தான். ஒரே தமாசாய் பேசுவான்." அருணைப்பற்றி அம்மா சொன்னார். "இன்றைக்கு நல்ல மழை பெய்திருக்கு. குளத்தில் தண்ணீர் பிடித்திருக்கும். எல்லாம் சந்தோசமான செய்திதான்". மங்கை சொல்லிக் கொண்டு கயல்விழியிடம் ஓடினாள்.

"மங்கை நாளைக்கு முதல்வேலை மரவட்டக் குளத்தைப் பாரக்கணும். எவ்வளவு தண்ணீர் பிடிச்சிருக்கும். எனக்குச் சந்தோசமாயிருக்கு". கயல்விழி குதூகலித்தாள். "என்ர தோழிக்குச் சந்தோசம் என்றால் எனக்கும் சந்தோசம்தான். "கயல்விழி குழைந்தாள்" இன்றைக்குச் சரியான சந்தோசம்தான்". மங்கை சிரித்தபடியே சொன்னாள். அருண் குளித்தான். உடையை மாற்றி வந்தான். சுந்தரத்தார் சாப்பிட அழைத்தார். புறப்பட்டார்கள். சாப்பாட்டு மேசையை தோழிகள் சேர்ந்து தயார்ப் படுத்தினார்கள். "சாப்பிடுவமா பிள்ளயள்'. அப்பா குரல் கொடுத்தபடி வந்தார். "வாங்க எல்லாம் தயார். சாப்பிடுவம்." கயல்விழி அழைத்தாள்.

"ஒன்றாக இருந்து சாப்பிடுவம்" மங்கையின் கட்டளை. "என்ன விஷேசம்"? அருணின் வினா. "நல்ல மழைபெய்திருக்கு". கயலின் விடை. சுந்தரத்தார் சிரித்தார். "எல்லாம் நல்லபடி நடக்கும். அருணின் அம்மா ஜானகி சொன்னார். "நாங்க பல்கலைக் கழகத்தில் இப்படித்தான் சுற்றியிருந்து சாப்பிடுவம்." மங்கை கூறினாள். "ஆனால் ஒன்று. ஆண்கள் வேறு பெண்கள் வேறாக இருந்து சாப்பிடுவம்". அருண் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தான். "பல்கலைக் கழக வாழ்க்கை மறக்கமுடியாதது. அது ஒரு தனி உலகம். இளைஞர்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்தி சுயமாக முடிவை எடுக்கும் காலம். எப்ப படிப்பை முடித்து வெளியில வாறமோ அன்று எங்களுக்கு நாங்களே விலங்கை மாட்டிக் கொண்டு வாறம். அதுவரை எதைப்பற்றியும் கவலைப் படுவது கிடையாது." மங்கை விவாதித்தாள்.

"மங்கை இன்றைக்கு உனக்கு என்ன நடந்தது."? கயல்விழி கேட்டாள். "ஒன்றுமில்லை. வழமையாகத்தான் இருக்கிறன். ஏன்? எதும் வித்தியாசமாய் இருக்கிறேனா"? கள்ளச்சிரிப்போடு கேட்டாள். "ஏதோ எனக்கெண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமாத்தான் தெரியுது. ஒருக்கா மரவட்ட குளத்துக்கு அனுப்பியெடுத்தால் சரிவரலாம்.” கயல்விழி புன்னகையோட சொன்னாள். “பல்கலைக் கழக ராக்கிங்கை விட இது பொல்லாததா”? சாப்பிட்டுக் கொண்டே சொன்னாள். ராக்கிங் என்றதும் அருண் கயல்விழியைப் பார்த்தான். அவனுக்குப் பழைய நினைவு வந்தது. சிரிப்பை அடக்கிக் கொண்டான். அவளுக்கு வெக்கமாயிருந்தது.

அவள் கதையை மாற்றினாள். “அப்பா அடுத்த கிழமை விளையாட்டுப் போட்டியும், கலைவிழாவும் நடக்கப் போகுது. இந்த முறை நல்லாகச் செய்யவேண்டும் என்று அதிபர், ஆசிரியர்கள், பெற்றார் எல்லாரும் ஆர்வமாய் இருக்கிறார்கள். ஆயத்தங்கள் நடக்குது. மங்கை சொல்லலையோ?” கயல்விழி கேட்டாள். “மங்கைக்கு எங்க நேரம் இருக்கு. அவள் உனக்குப் பின்னாலதானே திரியுறா.” சுந்தரத்தார் சொன்னார். நாளைய திட்டங்களை கயல்விழி கூறினாள். சாப்பாடு முடிந்து ஓய்வெடுத்தார்கள்.

மரவட்டக்குளத்தில் தண்ணீர் நிறைந்துள்ள செய்தியைச் சுந்தரத்தார் சொன்னார். கயல்விழி துள்ளிக் குதித்தாள். இன்பபுரியில் பிரதேச செயலாளர் பத்து ஏக்கர் நிலத்தை 'சேர்ந்து வாழ்' நிறுவனத்துக்கு வழங்கியிருந்தார். நிலத்தைப் பண்படுத்தி கூட்டுப்பண்ணையாக உருவாக்கியிருந்தார்கள். சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டார்கள். கயல்விழி அடிக்கடி பண்ணையைப் பாரக்கப் போவாள். மாட்டுத் தொழுவம் இருந்தது. ஆட்டுப்பட்டி ஒருபுறம் இருந்தது. கோழிப்பண்ணை இன்னொரு புறம் இருந்தது. மரக்கறித் தோட்டம் செழித்திருந்தது. வேளாண்மை விளைந்து கிடந்தது. பண்ணையைப் பட்டதாரிகள் பராமரித்தார்கள்.

கயல்விழி பண்ணையில் உலா வந்தாள். பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தன. அவளைக் கண்டதும் அவை மகிழ்ந்து சரசரத்தன. அவற்றை அளைந்து மகிழ்ந்தாள். படித்த இளைஞர்களின் முயற்சியாகப் பண்ணை காட்சி தந்தது. இன்பபுரி விவசாயக் குடியிருப்பாக மாறிவிட்டது. பால் சேகரிக்கும் நிலையத்தில் பலர் வேலை செய்தார்கள். அரிசி ஆலை நெல்குற்றுவதிலிருந்து எல்லாவற்றையும் அரைக்கும் ஆலையாகவும் இயங்கியது. பலர் தொழில் வாய்ப்பைப் பெற்றனர். ஒவ்வொருவரும் தத்தம் இயலுமைக்கேற்ற தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். மது ஒழிப்பு வலுப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை ஒழிந்திருந்தது. சேமிப்பு அதிகரித்திருந்தது.

கட்டைபறிச்சான் கிராமம் குதூகலிப்பில் ஆழ்ந்திருந்தது. பாடசாலை இரண்டும் ஒன்றாக விளையாட்டு விழாவை நடத்தின. மாவட்டத்தில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் வந்திருந்து வாழ்த்தினார்கள். மாலை ஊீர் விழாக் கோலம் பூண்டிருந்தது. பாடசாலை விளையாட்டுத் திடல் பந்தலால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. பாலர் முதல் பாட்டி பாட்டாவரை அனைவரும் சந்தோசத்தில் இருந்தார்கள். கிராமியக் கலைகள் அரங்கங்களை நிறைத்தன. இசையரங்கு மனங்களைக் கொள்ளை கொண்டன. கவிதையரங்கு கட்டைபறிச்சான் கனகசிங்கத்தின் தலைமையில் நடந்தது. இளைஞர்கள் கவிமழை பொழிந்தனர். யுவதிகளின் கும்மி. கோலாட்டம், கண்கவர் நடனங்கள் மெய்மறக்க வைத்தன.

நிறைவு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. பிரதேச செயலாளர் தலைமை தாங்கினார். அவர் தனது நிறைவுரையை நிகழ்த்தினார். "இங்கு இந்தக் கிராமத்துக்கு வந்திருக்கும் பெரியவர்களைப் பார்க்கிறேன். சகல திணைக்களத் தலைவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள். உங்களது உழைப்பு அவர்களை இங்கே அழைத்திருக்கிறது. கல்வியில் நீங்கள் காட்டும் அக்கறை தெளிவானது. சுயஉதவிக்குழுக்களின் சேவை மகத்தானது. ஒரு நாட்டின் பொருளாதாரத் தன்னிறைவை சுய உதவிக் குழுக்களால் முழுமை பெற வைக்கலாம் என்பதற்கு முன்னுதாரணமாக நீங்கள் இருக்கிறீர்கள். படித்தவர்கள் எல்லாரும் அரசாங்க உத்தியோகம் பார்க்கவேணும் என்ற நிலை உங்களால் மாறியிருக்கிறது". மக்கள் ஆரவாரித்தனர்.

"ஒரு புரட்சிகர மாற்றத்தை இந்தக் கிராமம் செய்துள்ளது. இங்கு படித்த பட்டதாரிகளின் உழைப்பு மகத்தான மாற்றத்தை உருவாக்கி விட்டிருக்கிறது. கல்வி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அந்தச் சிந்தனை கட்டைபறிச்சான் கிராமத்தில் செயல்வடிவம் பெற்றுள்ளது. ஒரு கயல்விழி தனது பலத்தையும் பலவீனத்தையும் சீர்தூக்கி, பலவீனத்தையும் பயனுள்ளதாக்கி தன்னைப் போன்றவர்களைத் தன்னோடு இணைத்து மகத்தான செயற்திட்டத்தை வெற்றி பெறவைத்துள்ளார். அவரது கனவு நிறைவேறியுள்ளது. இன்றையப் பிரச்சினைகளில் பலியாக்கப் படுபவர்கள் இளைஞர்கள்தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவர்களையே தங்களது அழிவுத் திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். இன்றைய நாசகாரச் செயல்களைப் புரிவதற்கு இளைஞர்களே துணைபோகிறார்கள். அவர்கள் விரும்பிப் போவதில்லை. அவர்களை வழிநடத்தக் கூடியவர்கள் இல்லை. அதனால் அவர்களைத் தீயசக்திகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். இளைஞர்கள் வெறும் தண்டச்சோறு என்பதை கயல்விழியும், அவரது சகபாடிகளும் உடைத்தெறிந்து உள்ளார்கள். அவர்களால் சாதிக்க முடியாததை எவையும் இல்லை என்பதனைக் காட்டியுள்ளார்கள். ஒவ்வொரு அரசாங்க அலுவலரும் தான் மக்களில் ஒருவர் என்று நினைக்க வேண்டும்”. ஆணித்தரமான கருத்தை முன்வைத்தார்.

“அந்த மக்களுக்காகச் சேவை செய்ய வேண்டும். இந்த வைபவத்தில் ஒரு அரசியல்வாதிகளையும் காணவில்லை. உங்களுக்காக உங்களோடு தோள்கொடுத்து உழைத்தவர் எங்கள் கிராம அபிவிருத்தி அலுவலர் திரு.அருண். அவரது அயரா முயற்சியின் பயனால் பலநன்மைகள் கிடைத்துள்ளன. அவரையும் இயக்கி, உங்களையும் இயக்கி, இந்த கிராமத்தை புரட்சிகர மாற்றத்துக்குக் கொண்டுவந்த சக்தியாக செல்வி. கயல்விழியைப் பாரக்கிறேன். அத்துடன் சாந்தன், மங்கை. சாரதா, ராகினி, சுலோச்சனா, நாகேஸ்வரன் அவர்களது குழுவினர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.” பிரதேச செயலாளர் வாழ்த்தினார்.

இந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்குப் பல நிறுவனங்கள் பலவகைகளில் உதவிகளை வழங்கியுள்ளன. 'சேர்ந்துவாழ்' நிறுவனம் இன்று பெரியதொரு நிறுவனமாகப் பல வளங்களைக் கொண்டுள்ளது. அதற்கென வாகன வசதிகள் உண்டு. கிராம மருத்துவ மனைக்கு அம்புலன்ஸ் வண்டியை அன்பளிப்புச் செய்துள்ளதைப் பாராட்டுகிறேன். செல்வி. கயல்விழி, சூழவுள்ள கிராமங்களுக்கும் தனது நிறுவன சேவையை விரிவுபடுத்தி வருகிறார். உங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்” தனது நிறைவுரையை முடித்தார்.

பெருவிழாவாக நடந்து முடிந்தது. ஊர்மக்கள் சந்தோசப் பட்டார்கள். பார்வையாளர்களாக வந்தவர்களுக்கு விருந்தளித்து வழியனுப்பி வைத்தார்கள். வீடுபோய் உடைமாற்றி ஆறுதலாக ஏரிக்கரை வீட்டின் முன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். சுந்தரத்தார் ஜானகியிடம் அதனைக் கொடுத்தார். "மங்கை அந்த வெளிச்சத்தைக் கொண்டுவா பிள்ள. குரல் கொடுத்தார். மங்கை மின்குமிழைப் போட்டுப் பற்ற வைத்தாள். சுந்தரத்தார் கொடுத்த பேப்பரைப் படித்தார். "அண்ணன் எப்பகுடுக்கப் போறிங்க"? கேட்டார். "குடுத்திட்டன். பிழைதிருத்தம் பார்க்க எடுத்து வந்தனான். அதுதான் தந்தனான். நல்லா இருக்கா. பார்த்துச் சொல்லுங்க." சுந்தரத்தார் கேட்டார். "நல்லா இருக்கு. இரண்டையும் ஒன்றாகச் செய்தால் நல்லது" ஜானகி சொன்னார். "அப்படித்தான் போட்டிருக்கிறன்". ஒரு சிரிப்போடு சொன்னார். "மங்கை என்ன நடக்குது. ஒன்றும் விளங்கல்ல. பார்த்துச் சொல்லு"? கயல்விழி மங்கையை உசார்படுத்தினாள். "அவர்கள் இருவரும் என்ன கதைக்கிறார்கள்"? மங்கைக்கு ஒன்றும் விளங்க வில்லை. தங்கம் பேசாதிருந்தார்.

"என்ன மங்கை! வேவு பார்க்கிறமாதிரித் தெரியுது? இது பெரியவங்க பார்க்கிற விசயங்கள். நீங்க உங்கட பாட்டப் பாருங்க." அலுத்துக் கொண்டது போல் ஜானகி பாசாங்கு செய்தார். "என்னம்மா கோவத்தோட சொல்லுற மாதிரியிருக்கு. என்ன பிழை செய்தனாங்க"? மங்கை அழுவதுபோல் சொன்னாள். "செய்வதெல்லாம் செய்துபோட்டு இப்ப கேட்கிறிங்க. சரி இந்தாங்க. இதக் கொண்டு போய் படிச்சிப் போட்டுச் சொல்லுங்க." இரண்டு துண்டுகளைக் கொடுத்தார். மங்கை அதிர்ந்து விட்டாள். கயல்விழிக்கும் பதட்டமாக இருந்தது. "மங்கை இஞ்ச கொண்டுவா. பார்ப்பம்". கயல் கூறிக்கொண்டு எழுந்தாள்.

இருவரும் வெளிச்சத்தில் அத்துண்டுகளை விரித்தார்கள். உள்ளமெல்லாம் படபடத்தது. படித்தார்கள். அவர்கள் இந்த உலகத்தில் இல்லை. ஆகாயத்தில் பறந்து திரிந்தார்கள். இருவரும் திகைத்தார்கள். அம்மா அப்பா கால்களில் விழுந்தார்கள். அவர்கள் பிள்ளைகளைத் தூக்கி ஆசிர்வதித்தார்கள். அப்படியே ஜானகியின் கால்களில் வீழ்ந்து வணங்கினார்கள். அருண் அக்காட்சியைப் பாரத்து வேர்த்தான். செய்தி ஊரெங்கும் பரவியது."அருமையான முடிவு". சனங்கள் ஆரவாரித்தார்கள். மங்கை சாந்தனோடு சல்லாபித்திருந்தாள். அருணின் மார்பில் கயல்விழி சாய்ந்திருந்தாள். மங்கை மெதுவாக கயல்விழியின் அருகில் வந்தாள். அவளது கைகளைப் பிடித்தாள். "தோழி நான் அன்றும் சொன்னன். இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறன். உன்னை என் தோழியாய் அடைந்ததற்கு உண்மையில் முற்பிறவியில் தவம் செய்திருக்க வேண்டும். என்ர கடனையெல்லாம் எனக்குத் தெரியாமல் அடைச்சிப் போட்டாய். சாந்தனையும் என்னையும் ஒன்று சேர்த்து வைத்தாய். இப்போதும் என்னை வாழவைத்துக் கொண்டிருக்கிறாய்''. சொல்லிக்கொண்டு கண்ணீர் சிந்தினாள். “நீ மட்டும் என்னவாம். எனக்காக எவ்வளவு போராடி யிருக்கிறாய். கஸ்டங்கள் வந்தபோது நீ என்னுடன் பக்கபலமாக நின்றாய். நானும் உன்னைப் போலதான். உன்னைத் தோழியாக அடைஞ்சது நான் செய்த தவப்பயன்தான்''. கலங்கியவாறு சொன்னாள்.

“வாழ்க்கை ஒரு போராட்டம். போராடியவர் வெற்றி பெறுவார். ஒரு நல்ல இலட்சியத்தை முன்வைத்து உழைக்க வேண்டும். 'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்' என்று அயராது உழைத்தால் அது கைப்படும்''. அருண் சிரித்தபடி கூறிக்கொண்டான். “ பாரதி என்ன பாடினான்? மங்கை கேட்டாள். “நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்'' என்று பாடினான். கயல்விழி பதிலளித்தாள். இன்பபுரி மக்களுக்கு இன்பத்தை வாரி வழங்குகிறது.

நிறைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | இன்பக் கனிகள் | - | சிறுவர் பாடல் |
| 2. | பாட்டுப் பாடுவோம் | - | சிறுவர் பாடல் |
| 3. | காகமும் தம்பியும் | - | சிறுவர் பாடல் |
| 4. | பாடி ஆடுவோம் | - | சிறுவர் பாடல் |
| 5. | கடலும் காவிரியும் | - | சிறுவர் பாடல் |
| 6. | சின்னச் சின்ன பாட்டு | - | சிறுவர் பாடல் |
| 7. | மனதுக்கினிய பாட்டு | - | சிறுவர் பாடல் |
| 8. | ஆனந்தமான பாட்டு | - | சிறுவர் பாடல் |
| 9. | சகோதரராய் வாழ்வோம் | - | சிறுவர் பாடல் |
| 10. | இசையோடு அசைவோம் | - | சிறுவர் பாடல் |
| 11. | தம்பிக்கொரு பாட்டு | - | சிறுவர் பாடல் |
| 12. | அறிவைத் தரும் பாடல்கள் | - | சிறுவர் பாடல் |
| 13. | ஆடி மகிழ்வோம் | - | சிறுவர் ஆடலும் பாடலும் |
| 14. | பூஞ்சிட்டுக்கள் | - | சிறுவர் கதைகள் |
| 15. | சின்னத் தேவதைகள் | - | சிறுவர் கதைகள் |
| 16. | கண்ணனும் இராமனும் | - | சிறுவர் கதைகள் |
| 17. | தங்க மாம்பழம் | - | சிறுவர் கதைகள் |
| 18. | சிறகு வைத்த கதைகள் | - | சிறுவர் கதைகள் |
| 19. | சாதனையாளர் | - | சிறுவர் கதைகள் |
| 20. | அற்புதமான வானம் | - | சிறுவர் கதைகள் |
| 21. | பேனாவினால் பேசுவோம் | - | சிறுவர் கதைகள் |
| 22. | சின்னச் சின்ன சிறுவர் கதைகள் | | சிறுவர் கதைகள் |
| 23. | பளிங்குத் தீவு | - | சிறுவர் நாவல் |
| 24. | பயங்கொள்ளலாகாது பாப்பா | | சிறுவர் நாவல் |
| 25. | காட்டில் கலவரம் | - | சிறுவர் நாவல் |
| 26. | உல்லாசப் பயணம் | - | சிறுவர் நாவல் |
| 27. | மனதில் உறுதி வேண்டும் | - | சிறுவர் நாவல் |
| 28. | அந்த மாணவர் உலகம் | - | சிறுவர் நாவல் |
| 29. | துணிச்சல் மிக்க சுந்தரி | - | சிறுவர் நாவல் |
| 30. | சுனாமி தந்த உறவு | - | சிறுவர் நாவல் |
| 31. | அந்த ஆவணி ஆறு | - | சிறுகதைகள் - தொகுதி |
| 32. | வம்மிப் பூ | - | சிறுகதைகள் - தொகுதி |
| 33. | கேணிப்பித்தன் கதைகள் | - | சிறுகதைகள் - தொகுதி |
| 34. | ஏன் வந்தாய்? | - | சிறுகதைகள் - தொகுதி |
| 35. | வாக்கினிலே இனிமை வேண்டும் | | நாவல் |
| 36. | கனவு மெய்ப்பட வேண்டும் நாவல் | | |
| 37. | நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் நாவல் | | |
| 38. | கேணிப்பித்தன் கவிதைகள்கவிதைத் தொகுதி | | |
| 39. | அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ ஆய்வு | | |
| 40. | கும்பத்துமால் | - | சிறுகதைகள் - தொகுதி |
| 41. | வித்தகன் விபுலானந்தன் | - | சிறுவர் இலக்கியம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர்.....



கலாபூஷணம் கலாநிதி கேணிப்பித்தன் ச.அருளானந்தம் நாடறிந்த எழுத்தாளர். ஆசிரியராகக் கடமையாற்றும்போதே எனக்குத் தெரிந்தவர். அவரை மாணவர் உலகம் சூழ்ந்து கொள்ளும். மாணவர் உளவியலைப் புரிந்தவர். ஏழை மாணவர்களுக்கு இரங்கி உதவுபவர். நாடகத்தின்பால் அவருக்கு நாட்டம் அதிகம். திரு.பாலசுகுமார் போன்றோரை நாடக உலகுக்கு அறிமுகம் செய்த பெருமை இவரையே சாரும். கவிதை, கட்டுரை என மாணவருக்கு எழுதி உதவுபவர். கவிதை அவருக்குக் கைவந்த கலை. தினபதி கவிதா மண்டலத்தின் ஊடாகப்பல மாணவர்களைக் கவிதை உலகினுக்கு அறிமுகம் செய்தவர்.

தினபதி, சிந்தாமணி பத்திரிகையின் ஆசிரியர் அமரர் சிவநாயகத்தினால் "கேணிப்பித்தன்" எனும் புனைபெயரைப் பெற்றவர். ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், தமிழ், புவியியல் பாடங்களைக் கற்பிப்பதில் வல்லவர். பழகுவதற்கு இனிமையானவர். அதிபராகவும், கல்வி நிர்வாக சேவையில் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பிரிவு அலகினதும், மாகாண அச்சகப்பிரிவின் பணிப்பாளராகவும் சேவை செய்து ஓய்வு பெற்றவர். தொடர்ந்து பலநிறுவனங்களில் கடமையாற்றிய திரு.ச.அருளானந்தம் இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறார். இதுவரை சுமார் 40 நூல்களை எழுதியுள்ளார். 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற நாவல் பரிசினைப் பெற்றுள்ளது. அத்துடன் சிங்களத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 2010 ல் அகில இலங்கைச் சாகித்திய விழாவில் இறுதிச் சுற்றில் மூன்று நாவல்களைத் தேர்வாளர்கள் தேர்ந்தெடுத்தனர். அதிலொன்று இவரது 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற நாவலாகும். அண்மையில் கல்வி அமைச்சின் நூலபிவிருத்திச் சபை இவரது 'நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்" எனும் நூலினைச் சிறந்த ஆக்கமாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இவரது ஆக்கங்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

கவிஞர் ச.தவராசா (ஈச்சையூர்த் தவா)
முன்னாள் அதிபர்
ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயம்
திருகோணமலை

ISBN : 978-955-52086-8-0
Price : Rs. 200/-

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org